
சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது

150 வது ஆண்டு

# நினைவு மலர்



JPL
C6873


தொகுப்பாசிரியர்

இ. சிறிஸ்கந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA JPL

6873 CC

சுன்னாகம்

குமாரசுவாமிப் புலவரது

150 வது ஆண்டு

# நினைவு மலர்

**1855 - 2005**

153296

தொகுப்பாசிரியர்

**இ.சிறிஸ்கந்தராசா**

153296CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதியின் விலை : 125.00 ரூபா

2/920

ஈழவியல்

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது 150வது ஆண்டு நினைவு விழா மலர் |
| தொகுப்பாசிரியர் | : | இராமசாமி சிறிஸ்கந்தராசா |
| முகவரி | : | 93, பீட்டர்ஸன் லேன்,<br>E 15, பீட்டர்ஸன் தொடர்மாடி,<br>வெள்ளவத்தை.<br>தொலைபேசி : 011-5343073 |
| முதற்பதிப்பு | : | 12.02.2005 |
| அச்சகம் | : | ரெக்னோ பிரின்டர்ஸ்,<br>வெள்ளவத்தை.<br>077- 7301920 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL

# நல்வாசிகள்

சுன்னாகம் மைலணி ஸ்ரீமான் குமாரசுவாமிப்புலவர் அவர்களின் 150வது பிறந்த தினவிழா கோலாகலமாகக் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறுவதையிட்டு மகிழ்வுறுகிறேன். இவ்விழா புலவர் அவர்களின் பூட்டன் திரு. இ. சிறிஸ்கந்தராஜா அவர்களின் பெரு முயற்சியால் நடைபெறுகின்றது. அவ்வகையில் அவர்களது வீட்டிற்கு அயலவன் என்றபடியால் நானும் இவ்விழாவில் பங்கு கொண்டு ஆசி கூறுதல் சாலப் பொருத்தமானது.


தமிழ் உலகிற்கு அருந்தொண்டாற்றிய எமது புலவர் அவர்களின் கற்பித்தல், நூல் எழுதி வெளியிடுதல் என்பன அவரின் மகத்தான தொண்டுகளாகும். புலவர் அவர்களிடம் படித்துப் பயனுற்ற மாணவர் பலராகும். அந்நோக்கில் இன்றும் புலவர் அவர்களின் பாரம்பரியம் நின்று நிலைத்து வருகின்றது. ஸ்ரீமதி மங்கயற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் புலவர் அவர்களின் பேத்தி. அவர் புலவர் அவர்களின் தமிழ் சைவப் பணிகளில் ஈடுபட்டுவருவது சிறப்பானது.

எமது சுன்னாகம் மயிலணி குமார சுவாமிப்புவலர் அவர்களின் 150வது ஆண்டு விழா நன்றே நடைபெறுவதாக!

சி. குஞ்சிதபாதக் குருக்கள்
மயிலணி, சுன்னாகம்.
பிரதம சிவாச்சாரியார்.
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம குருக்களின் ஆசியுரை

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள சுன்னாகம் மயிலணிப்பதி என்றுமே அறிவாற்றல் செழித்த பதியாக விளங்குகின்றது. இதற்கு என்றும் எடுத்துக்காட்டாக இங்கு கோயில் கொண்டு உறைகின்ற தமிழ்த்தெய்வம் முருகனும் மூத்த தமிழ்ப் புலவரான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் திகழ்கின்றனர். சிறந்த நற்பண்புகள் நிரம்பப் பெற்ற சைவ வேளாண் குலத்தில் 1855 ஆம் ஆண்டு புலவரவர்கள் பிறந்து யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த புலவர்களுள் ஒருவராகத் திகழ்ந்து இயற்கை யெய்தி, பல நூறு வருடங்கள் சென்றாலும் தமிழ் உலகில் என்றுமே நீங்கா இடம் பெற்றுள்ளார்.

புலவர் என்ற சொற்பதமானது பகுபடும் போது புலமை + அர் என்ற விகுதி அடிப்படியில் வகுக்கப்படுகிறது அத்தகு புலமை சான்றவர்களுள் குறிப்பிடத்-தக்கவரான எமது குமாரசாமிப் புலவர் பல்வேறு தமிழ் நூல்களை எழுதி, வெளியிட்டதோடு சிறந்த பல மாணவர்களை உருவாக்கியும் உள்ளார். ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் சமய, தமிழ் இலக்கண சம்பந்தமான சொற்பொழிவுகள், புராணபடனங்களுக்குப் பொழிப்புரை விளக்கங்கள் போன்றவற்றையெல்லாம் எடுத்தியம்பிய வல்லுனராவார். ஈழத்து ஆறுமுகநாவலர் மற்றும் இந்திய முது பெரும் புலவர்கள் பலராலும் போற்றிப் பாராட்டப் பெற்று மயிலணிப் பதிக்கே பெருமை தேடித் தந்த பெரியார் ஆவார்.

இத்தகு பெரும் புலவரைப் பற்றி அவரது பேரனான ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மலர் வெளியீடு செய்கின்றார் என்றால் சாலவும் பொருத்தமானதே! அவர் இதற்கு முன்பும் பல நூல்களை வெளியிட்ட, நாடறிந்த எழுத்தாளராவார். தொடர்ந்து அவரது பணி வளர்ச்சியடைந்து தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்று முத்தமிழ்த் தெய்வமாம் கலியுகவரதக் கந்தப் பெருமானைப் போற்றிப் பணிந்து நல்லாசிகளை வழங்குகின்றேன். சுபம்!

**ச. ஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்**
பிரதம குரு
அருள்மிகு மயிலணி கந்தசாமி கோவில், சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒப்புயர்வு இல்லாப் பெரும்புலவர்

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமிழுலகில் ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்து ஒளிர்கின்றார். இஃது உயர்வு நவிற்சியன்று.

நூல்களைப் பதித்தல், செய்யுளியற்றல், உரை எழுதல் உரை நடை நூல்களாக்குதல் வரலாறு எழுதல், இலக்கண நூல்கள் எழுதல், அகராதி ஆக்குதல், பாடஞ் சொல்லுதல், ஆசிரியராகப் பணியாற்றல் முதலிய யாவற்றிலும் அவர் தம் புலமை வண்ணத்தையும் அயராத உழைப்பையும் நன்கு புலப்படுத்தியுள்ளர். இவ்வாறுபல்துறைப் பணிகளில் ஈடுபட்டு உழைத்த பெருமை வேறெவருக்குமில்லை எனலாம்.

பல் துறைகளில் அளப்பரிய பணிகளைச் செய்த பெரும் புலவருக்குரிய நன்றிக் கடனைச் செய்யத் தமிழர்கள் முனையவில்லை.

எனவே, இனிமேலாகுதல் அவருடைய ஒப்புயர்வில்லாப் புலமை-யையும் பல்வகைப் பணிகளையும் பாராட்டி அவருக்கு அவர் பிறந்த ஊரான சுன்னாகத்தில் ஒரு நினைவு மண்டபத்தை கட்டியவருடைய சிலையை நிறுவி அவருடைய ஆக்கங்களைச் சேர்த்து ஒரு நூல் நிலையத்தையும் உருவாக்குதல் தமிழ் மக்களின் தலையான கடமையாகும்.

"சுன்னைக் குமாரசாமிப் புலவர்" எனத் தம்மைக் குறிப்பிட்ட அவரைப் போற்றுதலில் முன்னணியில் நின்று உழைக்க வேண்டிய கடப்பாடு சுன்னாக மக்களுக்குரியது.

முனைவர் கா.பொ. இரத்தினம்
தலைவர்,
உலகத் தமிழ்மறைக் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

ஈழத்துப்பூதன்தேவனார் தொடக்கம் தனித்துவமும், ஆழமும்கொண்ட ஈழத்து அறிஞர் பரம்பரை ஒன்று எமது நாட்டிற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் தொடர்ந்து கொண்டுள்ளது.

இப்பரம்பரையில் காலத்துக்குக்காலம் தோன்றும், இறை ஆசீர்வாதம் பெற்ற சில பெரியார்கள் தம் பன்முக ஆளுமையால் தமிழன்னைக்கு மிகப்பெரியளவில் வளம் சேர்த்து உதவியுள்ளார்கள். அத்தகையோருள் 19 ஆம் நூற்றாண்டின் தவப்புதல்வராய் கருதப்படக் கூடிய ஆறுமுகநாவலர் தலையாயவர்.

மிகப்பெரிய ஆதிக்க சக்தியை, அரசியல் பலமில்லாத நிலையிலும் தன்னுடைய ஆளுமையாலும், புலமையாலும் சான்றாண்மைமிக்க வாழ்வாலும் மக்கள் ஆதரவாலும் வென்று சைவசமயமும், தமிழ்மொழியும் நின்று நிலவ பெருந்தொண்டாற்றியவர் அவர்.

இத்தகைய பெருஞ்சாதனையை அவர் நிகழ்த்துவதற்கு அவருக்கு வாய்த்த அருமை நண்பர்களும் நற்பண்புடை மாணவர்களும் மிகச் சிறந்தளவில் ஒத்துழைப்பு நல்கினார்கள். சிலர் நாவலர் அவர்களுடைய மறைவிற்குப் பின்னரும் அவருடைய பணிகளை தம் வாழ்நாள் பணிகளாகக்கருதி செவ்வனே நிறைவேற்றிச் சிறந்தார்கள். அவ்வாறு தன் வாழ்நாள் முழுதும் மொழிப்பணியும், சமயப்பணியுமாற்றி ஈழத்துப்புலவர் மரபிற்பு சிறப்புத்தேடித்தந்த ஒருவரே சுன்னாகம் குமாரசுவாமிப்புலவராவர்.

முருகேச பண்டிதரிடம் முறைப்படி கற்றுத்தெளிந்த புலவர் ஏழாலையில் சி.வை. தாமோதரம்பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியாசாலையிலும், ஆறுமுகநாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் தலைமையாசிரியராக விளங்கி எண்ணிறந்த தமிழ் மாணவர்களை அறிவுலகில் உருவாக்கி விட்டவர்.

சுன்னாகத்திலிருந்து வண்ணார்பண்ணைக்கு கால்நடையாக நடந்து வந்து கற்பித்த புலவரவர்கள் வருகின்றபொழுதும் செல்கின்ற பொழுதும் வீதியில் பலரும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தபடி அவரோடு உடன் உரையாடி வருவார்கள் என்கின்ற செய்தியை என் ஆசிரியர் இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர் பல தடவையும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

உரைநூல்கள், இலக்கண நூல்கள், செய்யுள் நூல்கள், சிறுவர் பாட நூல்கள் என்று பல்வகைப்பட்ட நூல்கள் பலவற்றையும் அளித்து மொழிவளத்துக்கு பெருமானின் நினைவாக இன்று ஒருநூல் வெளிவருகிறது. தமிழ்மொழியின் சிறப்புக்காக அனைவரும் பாடுபட்டுழைக்கும் இக்காலகட்டத்தில் தமிழ்மொழிக்காவலரான புலவர் பெருமான் நினைவுகூரப்படுவது பெரும் பொருத்தமேயாகும்.

மலர் சிறக்கவும் இத்தகைய வெளியீட்டு முயற்சிகள் பயன்செய்யவும் பரம்பொருளைப் பணிந்து வாழ்த்துகிறேன்.

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**
ஸ்தாபகர், கம்பன் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கும் தமிழியல் வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் ஆவார். அவரது நினைவைக் கொண்டாடுவது தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தைப் பேணி முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உற்சாகமளிப்பதாகும்.

தமிழோடு வடமொழியையும் அறிந்தவரும் இலக்கிய, இலக்கணங்களைத் துறைபோகக் கற்றவருமான குமாரசுவாமிப் புலவர், தாம் பெற்ற அறிவு பிறர்க்கும் பயன்படவேண்டும் என்றும் சமூகத்திற் சுவறவேண்டுமென்றும் விழைந்தார். அதனால், பல செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் கட்டுரைகளையும் உரைகளையும் கண்டனங்களையும் எழுதினார். பதிப்பு முயற்சிகளிலும் தொகுப்பு முயற்சிகளிலும் அகராதிப் பணிகளிலும் ஈடுபட்டார். பிரசங்கங்கள் நிகழ்த்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக, சிறந்த ஒரு தலைமையாசிரியராகத் திகழ்ந்து ஏராளமான மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கினார். அவர்கள் ஒழுக்கமும் சமய உணர்வும் இலக்கிய, இலக்கண விளக்கமும் உடையவர்களாக மிளிரவேண்டுமென்பது அவரது வேணவாவாக இருந்தது. குமாரசுவாமிப் புலவரின் பெறுமானத்தையும் புலமையையும் அறிந்த பாண்டித்துரைத்தேவர் தாம் நிறுவிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வித்துவ உறுப்பினராக அவரை அழைத்துத் தழுவிக்கொண்டார்.

தெளிவுபெற அறிவதிலும், தெளிவுதர மொழிவதிலும், பெற்ற கல்வியைப் பிறரோடு பகிர்ந்துகொள்வதிலும், எடுத்த கருமத்தைச் செவ்வனே முடிப்பதிலும், பிழைகள் வராதவாறு நூல்களை வெளியிடுவதிலும் ஆர்வமீதூரப் பெற்றவரான குமாரசுவாமிப் புலவர் ஆடம்பரத்தை விரும்பாதவர்; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றை விலக்கியவர்.

தன் ஊருக்கும் நாட்டுக்கும் இனத்துக்கும் பெருமை தேடித் தந்தவரான குமாரசுவாமிப் புலவரின் 150ஆவது பிறந்தநாட் கொண்டாட்டம் சிறப்பாய் அமைந்து நற்பயன் விளைக்கவேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**

ஆலோசகர், தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் 150வது பிறந்த தினவிழாவை-யிட்டு, வெளியிடப்பட இருக்கும் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். 1870ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டுவரை உள்ள ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதல் அரை நூற்றாண்டு குமாரசுவாமிப் புலவர் காலம் என இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

புலவர் அவர்கள், தமிழ்மொழி, வடமொழி, இந்து சமயம், என்பவற்றில் நிறைந்த புலமை உடையவர். யாழ்ப்பாணம் ஏழாலை சைவப்பிரகாச வித்தியா-சாலையிலும், வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் இதன் அங்கமாய் விளங்கிய காவிய பாடசாலையிலும் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிப் பல மாணவர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயம் திரிபறக் கற்பித்தவர். ஆசிரியத் தொழிலை அவர் ஊதியத்திற்காகச் செய்யாது, அதை ஒரு சேவையாக மதித்துத் தனது வாழ் நாள் முழுவதும் செயற்பட்ட ஒரு தமிழ் ஆசானாகவே நான் இவரைக் காண்கின்றேன். கிரேக்க தத்துவஞானி சோக்கிறறீஸ், அவர்களது உள்ளமும், அவரது மாணவர் பிளேற்ரோவின் உள்ளமும் ஒன்றுபட்டதால் தத்துவஞானிகள் பரம்பரை ஒன்று உருவாகக் காரணமாக இருந்ததுபோன்று, குமாரசுவாமிப்புலவரும், அவரது மாணாக்கர்-களான, வித்துவ சிரோன்மணி சி. கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்-பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, முதலியவர்களின் உள்ளங்கள் ஒன்றிணைந்ததால் சிறந்த ஒரு மாணவர் பரம்பரை ஈழநாட்டில் உருவாகியது.

புலவர் அவர்கள் ஒரு சங்கப்பலகை. இவரது புலமையை, தமிழ் நாட்டில் உள்ள அறிஞர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இவர் இயற்றிய செய்யுள் நூல்கள், இலக்கண உரை நூல்கள், இலக்கண ஆராய்ச்சி நூல்கள், பதிப்பு நூல்கள், தொகுப்பு நூல்கள், அகராதி, சொற்பொழிவுகள் என்பன புலவர் ஐயாவின், தமிழ் இலக்கிய இலக்கண அறிவிற்கும், செய்யுள் இயற்றும் திறமைக்கும் உரைகல்லாய் விளங்குகின்றன.

சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றிய புலவர் அவர்களின் நினைவாக வெளியிடப்படவுள்ள நினைவுமலர் சிறப்பாக அமைய வேண்டும் என நான் உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க அவர் தம் தமிழ்ப் பணி.

பெ. விஜயரத்தினம்
தலைவர்.
கொழும்புத் தமிழ்ச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

சுன்னாகம், குமாரசாமிப் புலவரின் 150வது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவுமலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த நூற்றாண்டில் ஈழத்திற் தோன்றிய பல புலவர் பெருமக்கள், தமிழ் இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் அரிய தொண்டாற்றியுள்ளனர். அத்தகைய புலவர்களுள், சுன்னாகம், குமாரசாமிப் புலவர், முதன்மை வரிசையில் வைத்துக் கணிக்கத்தக்கவராவார்.

சுன்னாகம், மயிலணியில் 1854ம் ஆண்டு பிறந்த புலவர் அவர்கள், இளமையிலேயே தமிழ் இலக்கிய, இலக்கணத் துறைகளிலும், வடமொழி இலக்கியங்களிலும் பெரும் ஆர்வம் மிக்கவராக விளங்கியவர். புலவர் அவர்கள் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் அமைத்த பள்ளியிலும், ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் தாபித்த பள்ளியிலும் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து பல புலவர்கள் உருவாகத் துணைபுரிந்தவர்.

நாவலர் பெருமானுக்குப் பின்னர் அவர் தொடக்கிய சமய, தமிழ்ப் பணிகளை முன்னெடுத்த புலவர் அவர்கள், சமயமும், தமிழும் வளர அருந் தொண்டாற்றினார். அவரது பணிகள் பல்துறைப் பரிமாணங்களைக் கொண்டவையாக விளங்கின. செய்யுள், பாக்கள் இயற்றல், நூல்களை அச்சுப்பதித்தல், நூல் ஆய்வு, சமயப்பிரசாரம், கண்டன வெளியீடுகள், அகராதித்தொகுப்பு, வடமொழிப்பயிற்சி என அவரது பணிகள் விரிவு பெற்றன.

புலவர் அவர்களின் மாணாக்கர்களாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவசிரோன்மணி கணேசையர் போன்றோர் அமைந்தமை அவரது வித்துவப் புலமைக்குச் சிறந்த சான்றாகும். அன்னார் பல நூல்களை ஆக்கியும், தொகுத்தும், மொழிபெயர்த்தும் வெளியிட்டவர். அவற்றுள் தமிழ்ப் புலவர் சரித்திரம், இலக்கியச் சொல்லகராதி, வினைப்பகுபத விளக்கம், சிசுபாலசரித்திரம் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

இங்ஙனம் பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்த புலவர் அவர்கள், தமிழகத்திலும் மிகவும் சிறப்புப் பெற்றவராக விளங்கினார். தமிழக இலக்கிய இதழான "செந்தமிழ்" அவரது பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுப் பெருமை செய்தது. திருவாவடுதுறை ஆதீனம் அன்னாரைப் போற்றிக் கௌரவித்தது.

ஈழத்தின் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் பிறந்த புலவர் அவர்கள், தமது தமிழ் இலக்கண, இலக்கியப் புலமையினால் "செந்தமிழ்ச் சிரோன்மணி" எனப் போற்றப்பட்டார். அன்னாரின் 150 ஆவது ஆண்டு நினைவு மலர் அவரது பல்துறை ஆற்றல்களையும் உணர்த்தும் சிறப்பு மலராக வெளிவரும் என நம்புகின்றேன். புலவர் பெருமகனைப் போற்றுவது நாம் தமிழைப் போற்றுவதாகும். இவ்விழாவை ஏற்பாடு செய்து நடத்துகின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்

பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

தொகுப்பாசிரியர் இ.சிறிஸ்கந்தராசா

உலக வரலாற்றில் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு சமூகத்திலும், காலத்தின் தேவைக் கேற்ப மகான்கள் அவதரித்து மனித குலம் முழுவதற்கும் வழிகாட்டிகளாக வாழ்ந்து வந்துள்ளதை நாம் அறிவோம்.

யாழ்ப்பாணத்தின் பழமை மிக்க செந்தமிழ் பண்ணைகளுள் சுன்னாகம் ஒன்று. அங்கு பரம்பரை பரம்பரையாக புலமை பெற்றிருந்த அம்பலவாணருடைய புதல்வராக 1855ல் பிறந்தவர் குமார சுவாமிப்புலவர் அவர்கள். அவர் அவதரித்து 150 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

புலவரவர்கள் வடமொழி, தமிழ் மொழி இலக்கிய இலக்கணங்களில் புலமையுடையவராய், ஆசிரியராக, உரைகள், அரும்பதவுரைகள், புத்துரைகள் எழுதிய உரையாசிரியராகவும், பிரபந்தங்கள் இயற்றிய செய்யுளாசிரியராகவும் அத்துடன் பாடபேத ஆய்வு, கண்டனந் தீட்டல் அகராதி தயாரித்தல், மொழி பெயர்த்தல், புராண படனஞ் செய்தல், பிரசங்கம் செய்தல் முதலாம் பலதுறைகளில் வல்லுநராய் நடமாடும் கலைக்களஞ்சியம் எனவும் நடமாடும் பல்கலைக்கழகம் என்றும் உலகத்தார் பாராட்ட உலவியவர்.

தம் அறிவாற்றல் புலப்பட செந்தமிழ் சஞ்சிகை முதலானவற்றில் எழுதிய கட்டுரைகளாலும் தனது பிற நூல்களாலும் தமிழகத்தை தென் திசை நோக்க வைத்தவர். சைவத்தையும் தமிழையும் இரு கண் எனக் கருதும் நாவலர் நெறியை தன் வாழ்க்கை நெறியாகக் கொண்டு இறுதி மூச்சு வரை அயராது உழைத்தவர். வித்துவ சிரோண்மணி கணேசையர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை மட்டு நகர் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை முதலான புகழாளர் போற்றும் ஆசிரியராக திகழ்ந்தவர் புலவர்கள்

அவர் சிறந்த கல்வியாளன், தமிழியலாளன், மனிதநேயமிக்க மாமனிதன். அவரது 150 ஆண்டுகளை நினைவு கூறவும், மதிப்பளிக்கவும், அவரது சிறப்பான பணிகளையும் பெருமைகளையும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வெளிப்படுத்தவும், இன்றைய தலைமுறையினரின் இதயங்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு ஆவணமாக வரலாற்று களஞ்சியமாக இம் 150வது ஆண்டு நினைவு மலரை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரை வெளியிடுவதுடன் நில்லாது புலவரது பணிகளை மேலும் பல விடயங்களாக செயற்படுத்த ஆவலாக உள்ளேன். அவையாவன.

1. புலவரது நூல்களை மறுபதிப்பு செய்தல்
2. தமிழகத்தில் வெளியான செந்தமிழ் சஞ்சிகையில் புலவரவர்கள் எழுதிய பல கட்டுரைகளை தொகுத்து நூலாக வெளியிடுதல்
3. புலவர் அவர்களை நினைவு கூறும் வகையில் அரசாங்கத்திடம் அவர் உருவம் பொறித்த தபால் தலை வெளியிட ஆவண செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆண்டு தோறும் புலவரவர்கள் பிறந்த தினத்தில் நாடாளவிய ரீதியில் மாணவர்களிடையே, கட்டுரை பேச்சுப் போட்டிகளை நடாத்துதல் என்பனவாகும்.

புலவரது 150 ஆண்டு சிறப்பு நினைவு மலருக்கு

1. ஆசியுரை, வாழ்த்துச் செய்திகள் மனமுவந்து அளித்த ஆலய பிரதம சிவாச்சாரியார் களுக்கும் மற்றும் தமிழ் அறிஞர் பெருமக்களுக்கும்
2. புலவரின் பலதரப்பட்ட தகவல்களை சேகரித்து தந்து உதவிய புலவரின் பேத்தியான மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கட்கும்
3. விழா மலருக்கு லண்டன் மாநகரிலிருந்து பூட்டப்பிள்ளையான ஜெகசோதி சந்திரமோகன் அனுப்பிய கவிதைகள் மற்றும் பல தரப்பட்ட தகவல்களுக்கும்
4. மலரை தயாரிக்க பல வகைகளில் ஒத்துழைப்பு, ஆலோசனை நல்கிய ஓய்வு பெற்ற மேலதிகச் செயலாளர் சண்முகலிங்கம், விமர்சகர் மதிசூதன், மற்றும் புலவரின் பேரன் மு. குமாரசுவாமி அவர்கட்கும்.
5. மலருக்கு கட்டுரைகள் ஆய்வுரைகள் மனமுவந்து நல்கிய பல்கலைக்கழக பேராசிரியர்-கட்கும்
6. மலருக்கு விளம்பரம் நல்கிய தொழில் அதிபர்களுக்கும், நிதி அன்பளிப்பு நல்கிய பிரமுகர்கட்கும்
7. கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றிய பாடசாலை மாணவர்கட்கும்
8. 150 ஆண்டு நினைவு விழாவையும் மலர் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்தி பலவகைகளிலும் ஆலோசனையும் உதவிகளையும் நல்கிய ஓய்வு பெற்ற அரச அலுவலகர் திரு. ஞானம், திரு. திருலிங்கநாதன். அவர்கட்கும் மற்று அணைவருக்கும் அன்பு கலந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகும்.

மலரின் மூலப்பிரதியுடன் அச்சுப்பிரதியை சரிபார்த்தும், மலர் சிறப்புற பலவகையிலும் உதவிய எனது துணைவியார் பரமேஸ்வரி சிறிஸ்கந்தராசா அவர்கட்கும் இச்சிறப்பு மலரை கற்பவர் கண்ணுக்கும் கருத்துக்கும் கவரும் வண்ணம் அழகுற அச்சு பதிவு செய்த ரெக்னோ பிரின்டர்ஸ் அதிபர் தியாகராசா கேசவனுக்கும் நன்றிகள். பாராட்டுக்கள்.

இம்மலரிதழ் பல்வேறு வகையில் புலவரவர்களின் பணிகளை அலசி ஆராய்ந்து ஓரளவு முடிவு காணும் ஆய்விதழாக தொகுக்கப்பட்டிருக்கின்றது.

நூல் நயம் கண்டு மகிழ நுழைவாயிலில் நிற்கும் உங்களை மகிழ்ச்சியுடன் உள்ளே அழைத்துச் செல்கிறேன்.

**தொகுப்பாசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தொண்டே தலையாய தொண்டு என

இறுதி மூச்சுவரை மேற்கொண்ட

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரது

## 150வது ஆண்டு நினைவு விழா

சிறப்பாக நடைபெற எமது இனிய வாழ்த்துக்கள்



# இந்தியன் ஓவசீஸ் வங்கி

139, பிரதான வீதி,


கொழும்பு — 11,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"
என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க
தீந்தமிழ் நாதம் திக்கெட்டும் பரவத்
தங்கத் தமிழ் ஓசை தரணி எங்கும் ஒலிக்க
சைவமும் தமிழும் இறுதி மூச்சே எனச் செயற்பட்ட
குமாரசுவாமிப் புலவரது

# 150 வது ஆண்டு நினைவு விழா

இனிது நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்



லண்டன் மாநகரிலிருந்து புலவரது பேரன்
வைத்திய கலாநிதி

## செல்லப்பா சண்முகநாதன் குடும்பம்

அறங்காவலர்,
அருள் மிகு இராஜ இராஜேஸ்வரி அம்மன்
தேவஸ்தானம்
மயிலணி சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தழைக்க வித்திட்டாய்
தரணிதனில் உமது பெயர்
என்றென்றும் நிலைத்து நிற்கும்
உங்கள் எண்ணக் கருவூலங்களை
இன்றும் என்றும் ஏற்றிப் போற்றுவோம்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது

# 150 வது ஆண்டு நினைவு விழா

இனிது நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்



## SHANTHINILAYAM PROPERTY DEVELOPERS (PVT) LTD


MANAGING DIRECTOR
**S. NITSINGAM B.Sc**

**7/5, HAMERS AVENUE**
**WELLAWATTE. COLOMBO -06**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தந்தையார்

கு.அம்பலவாணர்
புலவரது மூத்த புதல்வனும்.
ஓய்வு பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரியரும்



கு.அம்பலவாணர்
புலவரது மூத்த புதல்வன்

பெருமை, புகழ் முதலியவற்றை மனிதர் தேடி அடைகின்றனர். இவைகள் சிலபோது சில மனிதர்களை தாமே தேடிச் சென்றும் அடைகின்றன. இவற்றை இறைவனே இயல்பாகவே நிறையப்பெற்றிருப்பவன். இதனாலன்றோ அப்பர் சுவாமிகள் 'சென்றடையாத திருவுடையானை' என்றும், 'கருதுவார் இதயத்துக் கமலத்தூறும் தேனவன் காண், சென்றடையாச் செல்வன்றான் காண்' என்றுந் தமது அருட்பாக்களில் துதித்து நின்றனர். மனிதன் எப்படிப் பெருமையை அடைகின்றான் என்பது மிக அற்புதமானதொன்று. மனிதனில் மறைந்து கிடக்கும் ஆத்மசக்தியின் அற்புத நிலையை அளந்தறிந்துரைக்க வல்லார் யாரோ? அபூர்வமாய் எவர்க்கும் விசித்திரமாய்த் தோன்றும் உலகம் நம்முன்னே அமைந்து கிடப்பது. அதை நன்கு தெளிந்து ஓர்ந்தறியும் பேராற்றல் எல்லார்க்கும் உண்டோவெனின் அப்படியன்று.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று?' என்றார் வள்ளுவர். புகழின்றி மக்களாய்ப் பிறத்தலிலும் மாக்களாய்ப் பிறந்து இகழ்ச்சியைப் பெறாது இரக்கத்தைப் பெறலாமென்று கருதினார் போலும். புகழோடு தோற்றுவதும் எவர்க்கும் கொடுத்து வைத்த பாக்கியமன்று. மெய்ஞ்ஞானிகளாகும் அவதார புருடர்களைப் போலவே புலவர்களும், உலகிடைத் தோன்றி இருட்படலங்களைப் பீறிப் பிரகாசத்தையளித்துச் செல்லும் பேராற்றல் மிக்கவர்கள். அக் காலணத்தாலன்றோ உண்மைப் புலவர்கள் உலகுக்கு அளித்துச் சென்ற கல்விச் செல்வங்கள் காலதேச செயல் முறைகளாற் பாதிக்கப்படாது என்றும் ஒரே தன்மையதாய் மிளிர்ந்து கொண்டிருப்பன. மெய்ஞ்ஞானப் பிரகாச வள்ளல்களாய் விளங்கிய எத்தனையோ கவிசிரேட்டரின் அருள் வாக்குகள் முக்காலத்துக்கும் மூவா மருந்தாய உண்மைகளை எடுத்துரைத்து மக்கள் வாழ்க்கைக்கெல்லாம் மலையிலக்காய் நின்று வழிகாட்டுவன.

நூல்களைக் கற்றறிந்தவுடன் மாத்திரம் ஒருவன் புலமையைப் பெற்றுப் புலவனாவதல்ல. காலத்தைக் கருத்துடன் நோக்கி மக்கள் மனநிலையை உள்ளபடி யுணர்ந்து சிந்தைக்கு வேண்டிய உணர்ச்சி உணவுகளை வழங்கவல்ல ஆற்றலும் புலவனுக்கு இன்றியமையாத விலக்கணமாகும். அப்படியாகப் புத்துணர்ச்சிகளைப் புதுவிருந்தாகப் புத்தம் புதிய முறையில் எடுத்து உலகுக்கு அளித்துச் சென்ற புலவர்களே என்றும் அழியாப் பெருமையும் புகழும் பெற்று நிலைபெறுபவர்.

மனிதனது பிறப்புக்கு மூலகாரணமாகவுள்ளது பேராசை. நன்மைக்கோ தீமைக்கோ நம்மை நடத்திச் செல்வது அப்பேராசையே. பொதுவாக ஆசை மனிதனுடைய புனிதத்தைப் பாழ்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே தள்ளிவிடுவது. காரணமின்றி எல்லாங் கடந்த பொருள்மீது கொள்ளும் தூய ஆசைதான் மகத்தானது. அது கிடைத்துவிட்டால் மனிதன் பெறவேண்டியது வேறெதுவுமில்லை. புலவர்கள் தாமறிந்தவர்களை எப்படியாயினும் உலகுக்கு அளித்துச் செல்ல வேண்டுமென்ற வேணாவாவுடையவர்கள். உலகமுய்யப் பகட்டின்றிப் பணிவுடன் பணியாற்றிச் சென்ற புலவர்களின் நாமங்கள் என்றுமழியாப் பெருமையுடைத்தாய் விளங்குவனவன்றோ.

## இளமையும் கல்வியும்

தாம் கற்றனவற்றையும் அறிந்தனவற்றையும் மற்றையோரும் அறியவேண்டுமென்ற பேராசையுடையராய்க் கடைசிவரையும் தமிழ்த் தொண்டினைப் புரிந்து வந்த என் தந்தையார் - குமாரசுவாமிப் புலவர் - குணமாண்புகளை, வாழ்க்கை விசேடங்களை, இலட்சியப் பண்பாடுகளை அறிந்த வரையில் எழுதுமாறு நண்பர்கள் சிலர் தூண்டியமையால் இம்முயற்சியிற் புகுந்தாம். எமது தந்தையார் காலஞ் சென்று 35 வருடங்களாகின்றன. இன்றைய சந்ததியார் அவரை அறியமாட்டார். என்றாலும் அவரிடம் கல்வி பயின்றவர்களும் அவரை நேரே கண்டு பழகியவர்களும் சிலர் இன்றும் உளர். இவர்கள் அவரைப்பற்றி ஓரளவுக்கு நன்கறிவார்கள். அவர்களுக்கு நாம் கூறப்புகுவன புதுமைகளாகா. என்றாலும், அவரை அறியாதோர் அவரைப் பற்றி ஒரு படத்தை மனதில் உருவகப்படுத்திக் கொள்ள அவை உதவியாகுமென்பது தெளிவு.

இவர் இளமையிலேயே தமிழையும் வடமொழியையும் அத்திபாரமாகத் தக்க பண்டிதரிடம் கற்கும் வசதியைப் பெற்றிருந்தனர். கல்வியில் இவருக்கிருந்த ஊக்கம் அந்நிய காலம் வரையும் எட்டுணையும் அருகிற்றன்று. கற்றதுடன் அடங்காது மேலும் மேலும் நூல்களைப் புதிது புதிதாகத் தேடிக் கற்றுவந்தனர். எந்நூலையும் உள்ளார்ந்து நுண்மாணுழைபுலனுடன் ஆராய்ந்து கற்பவர். நூல்களைக் கற்கும் போது புதிய பல விஷயங்களையறிந்துவிடுவார். அறியவியலாதனவற்றைக் குறித்துக் கொள்வார். தெரிந்தவரிடம் இடர்களை முட்டறுத்துக் கொள்வதிலும் தயங்கமாட்டார். பிழைகளையுமவதானித்துக் கொள்வார். ஒரு முறை ஒருநூலைக் கற்றால் அந்த நூலில் உள்ளன அப்படியே படமெடுத்தாற்போல் மனதிற் படிந்துவிடும். அளப்பரும் ஞாபக சக்தியுடையவர். கம்பராமாயணம், பாரதம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலியன திருக்குறள், புறநானூறு முதலிய சங்க நூல்கள் என்பன எல்லாம் அவர் மனக்கண்முன் நிற்பன. தேவைக்குத் தேவை வந்து வந்து உதவுவன.

## சொற் பிரபஞ்சமே வடிவம்

இவர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழுலகில் மிக்க பெருமையடைந்த புலவர்கள் பலர் வாழ்ந்ததுண்டு. ஆனாற் சொற்களையும் அவற்றின் உண்மையான ஆற்றலையும் உள்ளபடியறிந்து அவைகளைப் பிழையின்றி இவரைப் போல் உபயோகித்து வந்தவர் மிகச் சிலரேயாவர். சொற்களின் உண்மை வடிவத்தையும் ஆற்றலையும் அவர் அறிதற்கு உசாத்துணையாகவிருந்தவைகள் இவரின் பரந்த தமிழ்நூற் பயிற்சியும் வடமொழியறிவுமேயாகும். சொற்களை வரையறுத்து நிச்சயமாகக் கூறிவந்த வன்மையை நோக்கி இவர் மாணவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையவர்கள் தமது பாட்டொன்றில் சொற் பிரபஞ்சமே யொருவடிவெடுத்தாற் போன்றவரெனக் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் வெளியாகும் கட்டுரைகளில், வெளியீடுகளில், செய்யுள்களில் தமிழ்ச்சொற்கள் ஆற்றல் நோக்கப்படாது. உபயோகிக்கப்படுகின்றன. அவைகளில் எழுத்துப் பிழைகள் எத்தனை? கருத்துப் பிழைகள் எத்தனை? அரைகுறைச் சொற்கள் எத்தனை? அக்காலத்தில் எத்தனையோ நூல்களிற் சொற்கள் சொருபத்திலும் நற்பொருளிலும் மாறுபட்டதைக் கண்டபோது இவர் அவைகளைக் கண்டித்து வந்தனர். நிகண்டுகள் அந்தாதிகள், கலம்பகங்கள் என்பனவற்றைப் பெருக்கமாகக் கற்று மனனம் செய்வதாலேயே ஒருவர் வியுற்பத்தியடைகின்றனரென்றும், சொற்களை வழுவடையாது சுயரூபத்துடன் ஆற்றல்பெற எழுதப் பேசும் வன்மைப்பாட்டைப் பெறுகின்றாரென்றும் இவர் அபிப்பிராயங் கொண்டிருந்தனர். நித்தியத்துவம் கேட்க நினைத்த கும்பகன்னன் சொற் சோர்வினாலன்றோ நித்திரைப் பேற்றையடைந்தான். சொல்லாராய்ச்சியின் பொருட்டு இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செலவிட்ட காலம் இம்மட்டன்று. சொற்களின் உண்மையான ஆற்றல், வடிவம் என்பனவற்றை அநேகர் இவர் துணைக் கொண்டே நிச்சயப்படுத்திக் கொண்டனர்.

### பிழைகாணல்

பிறர் வெளியிடும் நூல்களில் வரும் பிழைகளைக் காண்பதில் இவர்போல் வன்மை படைத்தவரைக் காணவியலாது. புதிய ஒரு நூலை நோக்கியவுடன் எத்தனையோ விதமான பிழைகள் இவர் கண்முன் தோன்றவாரம்பித்து விடும். சாதாரணமாகக் கண்களுக்குத் தோற்றாத அணுப்போன்ற கிருமிகளை உருப்பெருக்கிக் கண்ணாடியைக் கொண்டு பார்த்தறிவதுபோல், இவர் கண்களும் உருப்பெருக்கிக் கண்ணாடிபோல் மற்றையோர் கண்களுக்குத் தோன்றாத எத்தனையோ பிழைகளை உடனுக்குடன் காணும் வன்மையுடையனவென்று திரு.த.கைலாசபிள்ளையவர்கள் ஒருகாற் குறிப்பிட்டதுண்டு. பிறர் நூல்களிற் பிழை கண்டு வந்தமையால் தாம் இயற்றும் நூல்களிற் பிழைகள் ஏற்படாதிருப்பதில் அவதானம் செலுத்துவர். நூல்களைப் புதிதாக இயற்றுபவர்களும் இவர் நட்பினைப் பெற்றுத் தமது நூல்களைப் பரிசோதனை செய்விப்பதுண்டு. இவரது புத்தகசாலையிலுள்ள நூல்களை விரித்து நோக்கின் வரிகளுக்குக் கீழ் கோடுகள், கேள்வியடையாளங்கள், திருத்தங்கள் என்பன இடப்பட்டிருக்கக் காணலாம். இவரிடம் நூல்களைக் கற்கும் மாணாக்கர்களுக்குத் துண்டுப் பத்திரங்கள், வெளியீடுகள், நூல்கள் என்பனவற்றிற்றோன்றும் பிழைகளைத் திருத்துவதும் ஒரு பாடமாகும்.

### நாவலர் மீது அபிமானம்

ஆறுமுகநாவலர் காலஞ்சென்ற போது இவருக்கு வயது இருபத்தைந்தாகும். தமிழை யிளம் வயதிலேயே நன்கு கற்று ஓரளவுக்கு வியுற்பத்தியை அடைந்த என் தந்தையாருக்கு நாவலர்களிடத்து இருந்த அன்புக்கும் அபிமானத்துக்கும் அளவேயில்லை. நேரே மாணவராகவிருந்து நாவலரவர்களிடம் கல்வி கற்காதிருந்தும் அவரின் இறுகிய நட்பினைத் தாராளமாகப் பெற்றிருந்தனர். கல்வி விஷயமாகத் தமக்கேற்பட்ட சந்தேக விபரீதங்களை அவரிடம் கேட்டுத் தெளிந்துவந்தனர். நாவலரின் சற்பிரசங்கங்களைத் தவறவிடுவதேயில்லை. எவ்விஷயத்துக்கும் நாவலரவர்களே இவரின் உரைகல். வீட்டிலிருக்கும் போதென்ன, சென்ற விடங்களிலென்ன, நாவலரவர்களின் தூய வாழ்க்கை, கல்விச் சிறப்பு, குண மாண்புகள், பிரசங்க வன்மை என்பனவற்றைப் பாராட்டி மகிழ்வதில் விருப்புடையவர். நாவலர் அவர்கள் காலஞ்சென்ற பின்னும் அவர் வழி நின்று அவர் தொண்டுகளை விருத்தி செய்வதில் ஊக்கங் கொண்டிருந்தனர். நாவலருக்கு எதிராகப் பேசுவோர் எழுதுவோர்களையும் சும்மா விடமாட்டார். நாவலர்மீதுள்ள அபிமானத் தடிப்புக் காரணமாக அவருக்கு மாறாக எழுந்த வாதங்களிற் சிற்சிலபோது வலிந்து வல்லடி வழக்குப் பேசியதாகச் சிலர் கூறியதுண்டு. என் தந்தையாரவர்களின் கல்விப் பெருமையையும் நாவலர் பெருமான் மீது கொண்ட அபிமானத்தையும் நோக்கித் திரு.த.கைலாசபிள்ளையவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இவரை நியமித்தனர். அக்கடமையை மிகத் திறம்பட இருபது வருடங்களுக்கு மேலாக இறக்கும்வரையும் ஆற்றிவந்தனர். நாவலரின் வித்தியாசாலையை இடமாகக் கொண்டு தமிழ்த் தொண்டு புரியத் தமக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டதையிட்டு இவரடைந்த திருப்தி இம்மட்டன்று. தாம் பெறும் வேதனத்தை இவர் என்றும் பெரிதாக மதித்தவரல்லர். மரியாதையுடன் தம்மை உள்ளபடியறிந்து மதிப்பவரிடமிருந்து பணியாற்றுவதையே பெரிதாகக் கருதினர். தாம் பெறும் வேதனத்திலும் ஐந்தாறு மடங்கு கூடிய



கு.முத்துக்குமாரசுவாமி பிள்ளை
புலவரது இளைய புதல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை வழங்கலாமெனப் பல கல்லூரித் தலைவர்கள் வலிந்தழைத்தும் அவர்கள் எத்தனங்களுக்கு இடங்கொடுத்தாரில்லை.

## பாட புத்தகங்கள்

தமிழ் வித்தியாசாலைகளிற் கற்பிக்கப்படும் பாட புத்தகங்கள் பிழைகள் மலிந்து விளங்கியதைக் குறித்தும், பாடசாலை வித்தியாதரிசிகள் அநேகர் தமது கடமையைச் செய்து முடிக்கத் தகுதியில்லா திருப்பதைக் குறித்தும் ஒரு விண்ணப்பப்பத்திரம் யாழ்ப்பாணம் செந்தமிழ்ப் பரிபாலன சபையினர் வித்தியாகர்த்தருக்கு அனுப்பியிருந்தனர். பாட புத்தகங்களிலுள்ள பிழைகள் வினாப்பத்திரங்கள் பரீட்சை முறைகளிலுள்ள ஊழல்கள் என்பனவும் அத்துடன் அனுப்பப்பட்டிருந்தன. இவ்விஷயமாகக் கலந்து பேசுவதற்குத் தம்மை யாழ்ப்பாணக் கோட்டையின் கண்ணுள்ள 'பங்களா'வில் வந்து சந்திக்கும்படி வித்தியாகர்த்தர் திரு.இ.பி.டென்ஹாம் அறிவித்திருந்தனர். வித்தியாகர்த்தரைச் சென்று தரிசிக்க நியமிக்கப்பெற்ற மூவர் கொண்ட குழுவில் தந்தையாரும் ஒருவர். மற்றையவர்கள் திரு.த.கைலாசபிள்ளையும் நாவலர் கோட்டம் திரு.ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையுமாவர். பிற்காட்டிய இருவரும் ஆங்கில அறிவுமுடையவர். சட்டை தலைப்பாகையுடன் செல்லும் வழக்கமுடையவர். சட்டை தலைப்பாகைகளையணிந்தறியாதிருந்த தந்தையாருக்கு ஏற்பட்ட இட்டுமுட்டு இம்மட்டமன்று. ஒரு வெள்ளையர்முன் - அதுவும் உயர்ந்த உத்தியோகத்தர் முன் -வெற்றுடம்புடன் செல்வதை அவர்கள் விரும்பவில்லை. சட்டையொன்று புதிதாகத் தைத்து மாட்டிக் கொள்வது கஷ்டமன்று. அதனுள் நுழைவதும், காட்சியளிப்பதும், பின் அதன்வெளியே வருவதுந்தான் சங்கடமாகவிருந்தன. தாம் ஒருபோதும் கையாளாதிருந்தவோர் பழக்கத்தை ஒருவருக்காக மேற்கொள்வதும் மனப்பீடையை உண்டு பண்ணியது. ஒருபடி சட்டையிடுவதாக முடிவு செய்யப்பட்டது. சட்டைக்குட் புகச்செய்து ஆளையழைத்துக் கொண்டு சென்றனர்.திரு. டென்ஹாம் துரையும் இந்த வடிவத்தைக்கண்டு என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தாம் சென்ற விஷயத்தைத் தெளிவாக வித்தியாகர்த்தருக்கு எடுத்துக்காட்டினர். ஆவன செய்வதாக அவருங் கூறினர். திரும்பி வரும் வழியிற் சட்டைக்கு வெளியே வந்து விட்டனர். முட்டுந் தீர்ந்தது. குறித்த காரியமாக டென்ஹாம் துரை முயன்று முயன்று பார்த்தனர் தான். விஷயமப்படியே இழுபட்டு வந்தது. வித்தியாபகுதிப் புலிகள் சும்மாவிருக்குமா?

## நண்பர்கள்

கல்வியை நன்கு கற்றவர்கள், கற்பதில் ஆர்வமுடையவர்களே தந்தையாருடன் அதிகமாக நட்பும் தொடர்பும் பூண்டுவந்தனர். இவர்களுடன் கல்வி விஷயமாகச் சம்பாஷித்தல், நகைச்சுவை-யாகப் பேசுதல், நூல்களை ஆராய்தல் என்பன இடைவிடாது இவரில்லத்தில் நிகழ்வன. அக்காலத்தில் ஆஙகிலம், தமிழ்? சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் மிக்க பாண்டித்தியமடைந்த பெருமக்கள் பலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்தனர். அவர்களுட் சிலர், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளை, திருவாங்கூர் உயர்தர நீதிமன்ற நீதியரசர் தா.செல்லப்பாபிள்ளை, அவர் சகோதரர் தா. பொன்னம்பலபிள்ளை என்போராவர். அதிகமாக இவர்களைச்சென்று சந்தித்துக் கல்வி சம்பந்தமான கருத்துக்கள் அறிவதும் சந்தேகங்கள் தெளிவதும் வழக்கம். திரு. செல்லப்பாபிள்ளையவர்கள் வடமொழி அறிவுமுடையவர்: தகப்பனார்க்குக் கற்கும்பொருட்டு வியாசபாரதம்நாற்பது பாகங்கள் கல்கத்தாவிலிருந்து தருவித்துக் கொடுத்தனர். நீதிபதி கதிரைவேற்பிள்ளையவர்களுடன் நீண்டகாலமாகக் கூடவிருந்து அகராதியெழுதுவதில் உதவிபுரிந்து வந்தவர். அவருடைய அடக்கம், பொறுமை,கோபமின்மை, நடுநிலைமை, சுற்றந்தழுவல் முதலிய குணமாண்புகளை என்றும் மெச்சிப்பாராட்டுவர். இவர்களுடைய சேர்க்கையால் ஆங்கிலமறியாத நமது தந்தையாருக்குப் புதிதாக அறியவேண்டிய அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் நூல்கள் கட்டுரைகள் என்பன காலத்துக்கேற்ப எம்முறையில் இயற்றப்பட வேண்டுமெனவும் தேர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பங் கிடைத்ததெனலாம். சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தம்முடைய ஏழாலைச் சைவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாலையில் இவரை ஆசிரியராகக் கொண்டு நடத்தி வந்ததுமன்றி தமது தமிழ் நூற்பதிப்புகளுக்கும் இவரின் துணையைப்பெற்று வந்தனர். சென்னையில் வசித்துவந்த பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோதெல்லாம் இவருடன் சேர்ந்து நூலாராய்ச்சிகள் செய்வார்கள்.

### மாணாக்கர்கள்

தந்தையவர்கள் தாம் ஆவலுடன் கற்று வந்ததுபோல் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவதிலும் மிக்க ஆவலுடையவராயிருந்தனர். தாம் அறிந்தனவற்றை மற்றையோரும் அறியவேண்டுமென்னும் விருப்புடையர். அவரொரு நல்லாசிரியராயிருந்தமையாற்றான் அவரின் தமிழறிவு மிக்க தெளிவும் உரமுமுடைத்தாய் அவருக்கு மிக்க மதிப்பினையும் புகழையும் ஈட்டி வந்தது. 1884 ஆம் வருடந்தொடக்கம் சிவபதமடையும் வரையும்(1922) கல்வி கற்பித்தலையே தமது தொண்டாகக் கொண்டிருந்தார். அவர் மனதுக்கு என்றும் களைப்பாவது வெறுப்பாவது உண்டாக்காத வேலையொன்றுளதேல் அது நன்மாணாக்கருக்குக் கல்வி கற்பித்தலே. மேலுங் கல்வி கற்பதில் விசேட ஊக்கமும் தீவிர விவேகமும் வாய்ந்த மாணவர்கள் வந்து வாய்த்துவிடின் அவருக்குண்டாகும் உள்ளக் களிப்புக்கும் ஊக்கத்துக்கும் எல்லையில்லை. ஆரம்பத்தில் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களால் தாபிக்கப்பெற்ற ஏழாலைச் சைவ வித்தியாசாலையில் தலைமையாசிரியராக 18 வருடங்கள் வரையிற் கடமையாற்றி வந்தனர். அப்போது எத்தனையோ இடங்களிலிருந்து மாணவர்கள் தொகையாக வந்து கல்வி பயின்றனர். இங்கு கல்விகற்றுப் பெருமையும் மதிப்பும் அடைந்தவர்களில் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் தெல்லிப்பழை வித்துவான் சிவாநந்தையர், அவ்வூர் இ. பாலசுப்பிரமணிய ஐயர், மாவிட்டபுரம் ச. விசுவநாத முதலியார், சுன்னாகம் க. மாணிக்கத் தியாகராசா பண்டிதர், ஏழாலை வே. தம்பையா உபாத்தியாயர், அவ்வூர் வைத்தியர். ஐ பொன்னையா கட்டுவன் நொத்தாரிஸ் க. மயில்வாகனம் என்பவர்கள். இவர்களில் அபூர்வ விவேகமும் ஞாபக சக்தியுமுடையராய் மிக்க புகழையீட்டி வந்தவர் சிவாநந்தையரவர்களே. வடமொழிப் புலமையுங் கைவரப்பெற்று அநேக நூல்களும் இவர் இயற்றியளித்தவர். இவர் புலமையை நாட்டவர் உரியமுறையிற் பயன்படுத்திக்கொள்ள முன்னர் இளம் வயதிலேயே இவர் காலஞ்சென்றது பெரு நட்டமாகும். 1902 ஆம் ஆண்டு தொடக்கம் வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகக் கடமையேற்றுச் சிவபதமடையும் வரையும் அதை எவ்வித குறையுமின்றி நடத்திவந்தனர். இங்கும் அநேக மாணவர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வெளியூர்களிலுமிருந்து வந்து கல்வி பயின்றனர். இவ் வித்தியாசாலையில் தமிழேயன்றி வடமொழியுங் கற்றுக்கொடுத்தற்கும் ஏற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இங்கு கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்தோரும் பலர். அவருட் சிலர் இருபாலை மு. வேதாரணிய தேசிகர், உடுவில் பண்டிதர் வ.மு. இரத்தினேஸ்வர ஐயர், காரைநகர் வேலுப்பிள்ளை, அவ்வூர் ச. பஞ்சாட்சர ஐயர், கொக்குவில் சீ. முருகேசையர், தாவடி மு. பொன்னையா பிள்ளை, நீர்வேலி மயில்வாகனம்பிள்ளை, தெல்லிப்பழை சி.கதிரிப்பிள்ளை, வேதாரணியம் தி. அருணாசல தேசிகர், சிறுப்பிட்டி த. கார்த்திகேசபிள்ளை, மட்டுவில் பண்டிதமணிசி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்போர். இவர்களில் ஈற்றிற் காட்டப்பட்ட இருவரும் மேற்படி வித்தியாசலையிலன்றி தந்தையார் வாதநோயாற் பீடிக்கப்பட்டிருந்த காலத்து இல்லத்திலும் வந்து தொடர்ச்சியாகக் கற்றவர்கள்: தகப்பனாரின் அன்புக்கும் உரியராக விருந்தவர்கள். தவிர வித்தியாசாலை விடுமுறை நாட்களிலும் சாயந்தரங்களிலும் அவரது இல்லத்தில் வந்து கற்றவர்களும் பலராவர். அவர்களில் விசேடமாகக் குறிப்பிடக்கூடியவர் வித்துவசிரோமணி சி. கணேசையரவர்களும் தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளையவர்களுமாவர். இவர்கள் இருவரும் இன்றும் தமிழ்த்தொண்டு புரிந்துவருவது தமிழின் பாக்கியமேயாகும். மேலும், தந்தையார் வித்தியாசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போதும் வழியிற் சந்தித்துத் தமிழ் நூல்களிலே தமக்குள்ள சந்தேக விபரீதங்களைத் தீர்த்துக்கொள்வாரும் பலர்.தமக்கு விளங்காவொன்றை விளங்கியதாக நடிக்குங் குணம் இவரிடத்திற் சிறிதும் கிடையாது. மாணவர்கள் இவரை விரும்பி நேசித்துவந்தமைக்கு இதுவுமொருகாரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை அழைப்பு

சென்னையரசினர் ஆதரவில் அங்குள்ள பல்கலைக் கழகத்தினர் பெருந்தொகைப் பணச் செலவுடன் தமிழ்ப் பேரகராதி யொன்று எழுதுவித்து வெளியிடப் போவதாக விளம்பரஞ் செய்து அறிஞர்களின் அபிப்பிராயங்களைக் கோரினர். அப்போது யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிற் குறித்த அகராதி விஷயமாகப் புதியயோசனைகளைக் கொண்ட பிரேரணைகள் பலவற்றையெழுதி அனுப்பும் சந்தர்ப்பம் தகப்பனாருக்குக் கிடைத்தது: அகராதி விஷயங்களில் நீண்டகாலத் தொடர்பும் அனுபவமுடைய எம் தந்தையாருக்கு இது விஷயமாக நுண்ணிய வாராய்ச்சி யறிவுண்டு. இப்பிரேரணைகள் அகராதிச்சபையினரின் திட்டங்களிற் திருத்தங்களையும் மாற்றங்களையும் உண்டாக்கின. எனவே இவ்வகராதி விஷயம் மேலும் ஆராயவேண்டியதாயிற்று. அவ்வகராதிச் சபையின் தலைவராகவிருந்த அமெரிக்கப் பாதிரியார் கனம் ஜே.எஸ். சான்டலர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து தமிழ்ச் சங்கத்தாருடன்கலந்து பல நாட்களாக யோசனை நடத்தினர். அகராதி எப்படியாக என்ன முறையில் எழுதவேண்டும், செய்யவேண்டிய ஆரம்ப எத்தனங்கள் யாவை, சொற்களின் ஆட்சிக்கு இலக்கியங்களில் எடுத்துக்காட்டு குறித்தல் என்பன போன்ற பல விஷயங்களை எடுத்துக் காட்டியபோது சாண்டலர் துரை அவைகளை நன்கு ஆலோசித்து ஏற்றதுமன்றிச் சங்கத்தினர் உதவியையும் இவ்வேளையிற் கோரினர். தகப்பனாரைச் சென்னைக்குச் சென்று அகராதி வேலையில் துணிபுரியும்படியும் உயர்ந்த சம்பளம் வழங்கலாமென்றும் ஆவலுடன் கேட்டனர். தகப்பனாரோ நாவலர் வித்தியாசாலையை விட்டுச் செல்ல விரும்புபவரல்லர்: உயர்ந்த வேதனம் அவருக்குப் பெரிதாகத் தோற்றவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்தே வேண்டிய உதவி புரிவதாகக் கனம் சான்டலர் துரைக்குக் கூறியதுமன்றித் தாம் அகராதிக்குபயோகமாக எழுதிவைத்திருந்த அரிய கையெழுத்துப் புத்தகமொன்றையும் அவரிடங் கொடுத்துதவினர். பின்னர் இவ்வகராதி ஆரம்பிக்கப்பட்டபோது மாதிரிப் பிரதிகளைத் தகப்பனாருக்கு அகராதிச் சபையினர் அனுப்பி வைத்தனர். தமது கருத்துக்களையும் திருத்தங்களையும் எழுத்து மூலமாகத் தெரிவித்து வந்தனர். அகராதிச் சபையினரும் வந்தனத்துடன் அவைகளை ஏற்று நன்றி பாராட்டினர்.

## கடைசி நாட்கள்

விறுவிறுப்பாக அளவுகடந்த ஆர்வத்துடன் தமது கடமையென நினைத்துப் பல வழியிலும் தமிழ்மொழிக்குத் தொண்டு புரிந்த தந்தையாரவர்கள் உலக நிலையை நோக்கி மிக்க துயரடைந்தும் வந்தனர். தமிழும் சைவமும் மிக்க கீழ்நிலையடைந்து போவதாகவும் எண்ணினர். இவர் மாத்திரமல்ல. இவர் வரிசையில் வைத்துக் கணிக்கப்படற்குரிய திரு. த. கைலாசபிள்ளை போன்ற அறிஞர்களும் அப்படியே நினைத்து மனப்பீடையடைந்து வந்தனர். நாவலர் அவர்கள் வகுத்த ஒழுங்குகள் கல்விமுறைகள் என்பன அநேகரால் முற்றாகக் கையாளப்படாதிருந்தமையே இவர்களின் கவலைக்குக் காரணம், இன்னும் சில காலத்துள் தமது சமயமும்மொழியும் என்ன கதியடையுமோவென்றும் வியாகுலங் கொண்டிருந்தனர். தமிழை முறையாகக் கற்போர் தொகை அருகிவிட்டது: பிழை நிறைந்த நூல்கள் மலிந்துகொண்டு வருகின்றன: பழைய முறையிற் கற்றுத்தேறிய பண்டிதர்களுக்குக்கணிசம் குறைந்து விட்டது என்பன போன்ற குறைகள் தாம் இவர்கள் வாய்களிலிருந்து இடைவிடாது எழுந்துகொண்டிருந்தன. ஆனால், எல்லாத் துறைகளிலும் பெரும் மாற்றத்தைக்காணும் உலகில் கல்வித்துறையிலும் அற்புதமான மாற்றங்கள் ஏற்படாது போகுமா? தமிழ்மொழியும் காலத்துக்கேற்ப முன்னேற்றமடைதற்கு வேண்டிய புதிய முறைகளைப் புறம்போக்கி நிற்பது எப்படிப்பொருந்துமோ? அக்காலத்தில் யாவரும் விரும்பியேற்கக்கூடிய முறையில் பல்வேறு சீர்திருத்தங்களை மொழி, சமயமென்னுந் துறைகளிற் கொண்டு வந்து அழியாப் புகழும், பெருமையும் அடைந்த நாவலர் பெருமான் மறுபடி இன்று அவதரிக்க நேரின் மனவிழுக்காடடைவாரா அல்லது நிலையை நோக்கி யதற்கிசையத் திருத்தங்கள் வகுப்பாரா? இதைக் குறித்து நாமெதுவுங் கூறவரவில்லை. தமிழ் உலகந்தான் பதில் கூறவேண்டும்.

(நன்றி — ஈழகேசரி வெள்ளிவிழா மலர் 1956)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் குமாரசுவாமிப் புலவரும்

ச. அம்பிகைபாகன்

முன்னாள் அதிபர். யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்

நாவலருக்கும், குமாரசுவாமிப் புலவருக்குமிருந்த உறவை ஆராயமுன் குமாரசுவாமிப்புலவரின் தோற்றம், கல்வி முதலியவற்றைக்கவனிப்பது பொருத்தமாக இருக்கும். குமாரசுவாமிப் புலவர் முத்துக்குமாரக் கவிராயரின் தம்பியாரின் பேரனாகச் சுன்னாகத்தில் 18-1-1854 ல் தோன்றினார். சுன்னாகம் தொன்றுதொட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்கும்பண்ணையாக விளங்கிவந்தது. அங்கு சிறந்த புலவர்களும், முப்பொழுதும் திருமேனி தீண்டும் அந்தணர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். அங்கு பெரும் கல்லூரிகள் இல்லாவிட்டாலும் சைவ மணம் கமழும் மயிலணிச் சைவ வித்தியாசாலை என்னும் பாடசாலை இயங்கி வந்தது. சிவானுபூதிச் செல்வரான செல்லாச்சி அம்மையாரும் சுன்னாகத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

முத்துக்குமாரக் கவிராயர் சிறந்த புலவராக விளங்கியதோடு கிறிஸ்தவமதக் கண்டனத்தில் நாவலருக்கு முன்னோடியாக விளங்கினார். கவிராயர் இயற்றிய ஞானக் கும்மி, யேசுமதபரிகாரம் முதலிய நூல்களை நாவலர் இருமுறை பிரசுரம் செய்வித்தார். முத்துக்குமாரக்கவிராயர் சி.வை. தாமோதரம்பிள்ளையின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

புலவர் பிறக்கும் பொழுது நாவலருக்கு வயது முப்பத்திரண்டு. புலவர் சிறுவனாக இருக்கும்பொழுது நாவலர் பெரும்பாலும் இந்தியாவில் இருந்தபடியால் அவரைச் சந்திப்பதற்கோ அவரிடம் கல்வி கற்பதற்கோ வாய்ப்புக் கிடைக்கவில்லை.

புலவர் ஆரம்பத்தில் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்றுவந்தார். ஆனால் புலவரின் தகப்பனார் இவர் ஆங்கிலம் கற்பதை விரும்பாத படியால் நான்காம் வகுப்போடு ஆங்கிலக் கல்வியை நிறுத்திக் கொண்டார். இதன் பின் தமிழ்க் கல்வியைச் சுன்னாகம் முருகேச பண்டிதரிடம் பெற்றுக் கொண்டார். முருகேசு பண்டிதர் இலக்கணத்தில் பெரும்புலமை பெற்றிருந்தபடியால் அவரை இலக்கணக் கொட்டர் என மக்கள் அழைத்தனர். புலவரின் சிறந்த இலக்கணப் புலமைக்கு வித்திட்டவர் முருகேசு பண்டிதரே. பண்டிதரிடம் புலவருடன் கல்வி கற்றவர்களில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஊரெழு சரவணமுத்துப் புலவர், சுன்னாகம் வைத்தியநாதபிள்ளை என்பவர்கள் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர்கள். இவர்கள் புலவரின் சினேகிதர்களாக விளங்கியதோடு நாவலரின் பாரம்பரியத்தை வளர்ப்பதில் புலவரைப்போல் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் சமஸ்கிருதத்தைச் சுன்னாகவாசியும், புலவரின் உறவினரும், வட்டுக்கோட்டை செமினரியில் கற்றுத் தேறியவருமான நாகநாத பண்டிதரிடம் கற்றுக் கொண்டார். நாகநாதபண்டிதர் தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் வல்லுநராக விளங்கினார். சமஸ்கிருத நூல்களைத் தமிழில்மொழி பெயர்ப்பதற்குப் புலவருக்கு வழிகாட்டியாக விருந்தார். மயிலணி சுப்பிரமணிய சுவாமிகோயில் வீதியில் இருந்த மடத்தில் வசித்து வந்த வேதாரணிய சைவக் குருக்கள் நமசிவாய தேசிகரிடம் சமயக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். மேற்கூறிய மூவரிடத்திலும் தாம் கல்வி கற்றதை மேகதூதக் காரிகை குருவணக்கத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

தூய மயிலணிச் சுப்ர மணியனைத் தூநமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாக நாத சபாமணியைக்
காய மொழியமனஞ் சேர்த்துதும் நம்கண் மணிகளன்று.

## முதற் சந்திப்பு

நாவலர் இந்தியாவில் பல வருடங்கள் கழித்தபின் 1870 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பினர். அப்பொழுது அவருக்குப் பண்ணையில் மகத்தான ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பின்போதே புலவர் நாவலரை முதன் முதல் கண்டனர். அப்பொழுது புலவருக்கு வயது பதினைந்து. இதன் பின்னர் நாவலர் யாழ்ப்பாணத்தில் எங்கு பிரசங்கம் செய்தாலும் அதனைத் தவறாது கேட்டு வந்தனர். நாவலரின் சிவப்பொலிவினாலும் நாவன்மையினாலும் வசீகரிக்கப்பட்டு அவரை நேரில் காணவேண்டும் என்னும் அவா ஏற்பட்டது. நாவலரைச் சந்திப்பதற்கு வசதி செய்து கொடுத்தவர் இவரின் சகமாணவரான சரவணமுத்துப் புலவர் ஆவர். புலவர் முத்துக்குமாரக் கவிராயரின் பேரன் என்பதை அறிந்ததும் அவரை அன்போடு வரவேற்றார். புலவருக்குக் கல்வியில் இருக்கும் ஆர்வத்தைக் கண்ட நாவலர் தம்மிடம் வந்து இலக்கண இலக்கியங்களிலுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றனர். இதன் பின்னர் நாவலர் சிவபதம் அடையும்வரைக்கும் அவரிடம் காலத்துக்குக்காலம் சென்று தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டதோடு தமது கவிதைகள், கட்டுரைகள், கண்டனங்கள் முதலியவற்றை அவருக்குக் காண்பித்து வந்தனர். அவற்றின் சிறப்பைக் கண்ட நாவலர் புலவரைப் பாராட்டி வந்தனர். இது பற்றிப் புலவர் நாவலர் மறைந்த பொழுது பாடிய பாட்டொன்றில் பின்வருமாறு கூறுகின்றார்.

என்கவிதை என் கடிதம்யார்க்கும் இனிதென்று
நன்குறவே பாராட்டும் நாவலனார் - எங்கேயோ
கங்கைமுடிச் சங்கரன்பொற் கஞ்சமலர்ச் செஞ்
இங்குவர வுங்கருத்தோ என். (சரண்விட்(டு)

நாவலர் முன்மாதிரியாலும் அவர்களின் பிரசாரத்தினாலும் யாழ்ப்பாணத்தில் புராணபடனம் புத்துயிர் பெற்றது. புலவர்கள், பண்டிதர்கள் எல்லோரும் புராணபடனத்தில் பங்குபற்றினர். கந்தபுராணத்தில் தெய்வானையம்மை திருமணப்படலமும், பெரியபுராணத்தில் வெள்ளையானைச் சுருக்கமும் விசேஷ பகுதியாகக் கருதப்பட்டன. இப்பகுதிகள் படிக்கப்படும் இடங்கள் புலவர் அவைகளாக மாறி விடும். வாதப் பிரதிவாதங்களும் நடப்பதுண்டு.

நாவலர் தமது நீண்டகால அனுபவத்தையும், அறிவையும் கொண்டு புராணபடனத்தில் ஈடுபடுவோர் கவனிக்கவேண்டியவிதிகளைத் தாம் பதிப்பித்த கந்தபுராணத்தில் கூறியுள்ளார். பொருள் சொல்லுவோர் எப்படிப் பொருள் சொல்ல வேண்டுமென்று கூறியிருப்பது பின்வருமாறு இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையா இடங்களில் விரிவாகவும் பொருள் சொல்ல வேண்டும்.ஆனால் பொருள் சொல்வோரில் பெரும்பாலோர் நாவலரின் பொன்மொழிகளைக் கவனியாது தமது பாண்டித்தியத்தைக் காட்டி மக்களை மயங்க வைத்தனர். இதனை அவதானித்து வந்த புலவர், இலங்கைநேசன் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினார். அக் கடிதத்தின் சிலபகுதிகள் நோக்கத்தக்கவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராண வள்ளியம்மை திருமணப் படலத்துக்கு விருத்தியுரை பேசும் உரையாசிரியர்களே! நீங்கள் எத்தனையோ ஆண் சனங்களும் பெண் சனங்களும் புராணம் கேட்டற்கண் நம்பிக்கையோடு வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க, நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களை யெல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்லுகிறீர். "பூ" என்பதற்கு "வீ" என்கிறீர்கள், "மறைந்து போனார்" என்பதற்கு "அந்தர்த்தமாயின" என்கிறீர்கள். சித்தியாரில் சில செய்யுட்களையும் அவற்றின் கடினவாக்கியமாய் அமைந்த வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள். சில கவிகளுக்கு வேதாந்த சித்தாந்தப் பிரசங்கம் செய்கிறீர்கள்.

உங்கள் விருத்தியுரையில் சில இடங்களில் "செந்தினை இடியுந் தேனும்" என்னும் பாட்டுரை வைகறை விடியல் செல்ல மற்ற நாளிலும் மத்தியானம் ஆகிறதே. இப்படி விருத்தியுரை கூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலிற்காவது இப்படலத்துக்காவது உரையெழுதி வெளிப்படுத்தலாமே. அங்ஙனம் செய்யாத காரணம் என்னையோ? உரையெழுதி வெளிப்படுத்தினால் பொருளும் புகழும் ஒருங்கு சித்திக்கும்.

மேற்படி புலவரின் கடிதத்துக்குப் பல உரையாசிரியர்கள் பல மறுப்புக் கடிதங்கள் எழுதினர், இக்கடிதங்களுக்கு விடை எழுதத் தகுதிவாய்ந்தவர் நாவலரே எனக் கருதி அவரைக் கொண்டு ஒரு விடை எழுதுவித்துஅதேபத்திரிகையில் வெளியிட்டார் (இலங்கை நேசன்). அக்கடிதம் பின்வருமாறு:-


## கடிதர்க்குத்தரம்

கடிதர்களே,

பல ஊர்களிலுள்ள பலரையும் பொதுப்படக் கண்டித்த கண்டனத்தை நீங்கள் உங்கள்மேல் இட்டுக் கோவிப்பது நீதியன்று. புராணப்பிரசங்கச்சபையிலே வந்து இருக்கிறவர்களுக்குள்ளே சிலர் ஒழிய மற்றவர்கள் எல்லாரும் கல்வி இல்லாதவர்களே.

ஆகையால் மிக வெளிப்படையாகிய நடையிலே பிரசங்கிப்பதே முறை, அங்கே இலக்கணங்கள் எடுத்துச் சொல்வது தகுதியன்று. உங்கள் பிரசங்கங்கள் தங்களுக்கு விளங்கவில்லையென்றே வெகுசனங்கள் குறை சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். சிவபுராண விதியிலே 27 ஆம் பிரிவைப் பாருங்கள்.

சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த நூல்கள் படித்தற்குரியோர் இவர் என்பது திருக்கோவையார் உரை இறுதியிலுள்ள தமிழ்ப்புலமையிலே 15 ஆம் பிரிவிலும், சைவ வினாவிடையிலும் கண்டு கொள்ளக்கடவீர். எங்காயினும் இன்றியமையாத இடத்தில் ஒரு துண்டுவாக்கியம் உதாகரிப்பது தகுதி.


ச. அம்பிகைபாகன்

புலவர் நாவலர் நெறிநின்றே சைவ சமயப் பிரசாரமும், கிறிஸ்தவமதக் கண்டனமும் செய்தார். நாவலர் நெறி வைதிக சைவ நெறி. வைதிக சைவ நெறிக்கு வேதாகமங்களும், அவற்றின் வழிவந்த திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் பிரமாண நூல்களாகும். புலவர் தாம் செய்த பிரசங்கமொன்றில் - பின்னர் அது கட்டுரையாக வெளிவந்தது - வைதிக சைவ சமயத்தை நன்கு விளக்கியுள்ளார். இப் பிரசங்கத்தில் சைவத்தின் வளர்ச்சிக்குச் செய்த தொண்டைப் பின்வருமாறு கூறியுள்ளார். "இக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வைதிக சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரங்களைப் பரிசோதித்து அச்சிட்டும், வைதிக சாஸ்திரப் பொருட்களை எவர்க்கும் இலகுவாக அறியும்படி செந்தமிழிலே சிறந்த வசன ரூபமாகப் பல புத்தகங்களை அச்சிட்டும், ஆங்காங்கு சைவப்பிரசங்கங்கள் செய்தும், பல வித்தியாசாலைகளைத் தாபித்தும்,கற்பித்தும் பலவாறாக வைதிக சைவ பரி பாலனத்திலே கண்ணாக இருந்தார்."

புலவர் செய்த கண்டனங்கள் எல்லாம் நாவலர் பாணியில் அமைந்துள்ளன. அவர் விடும் சொல் அம்புகளெல்லாம் எதிரியின் உள்ளத்தைத் தைக்கக்கூடிய முறையில் விடப்பட்டன. அவர் எழுதிய கிறிஸ்தவ மதக் கண்டனத்தின் ஒரு பகுதியைக் கீழே காண்க.

உன் சைவ கண்டனம் கண்டனம். ஒருவரியேனும் பிழையற எழுத அறியாது, சைவ நூலும் அறியாது தாபர் நீமர் முதலிய சொல்விளம்பி விட்டுக் கொண்டு வெளிப்பட்ட நீயா சைவ தூஷணம் செய்யத் துணிந்தாய். உன் பத்திரிகையில் உள்ள பொய், குறளை, கடுஞ்சொல் முதலிய இழிமொழிகளே உன் யோக்கியதையை யாவருக்கும் இனிது விளக்கிவிட்டன.

இருடிகள் சாபத்தால் இலிங்கம் அழுகி விழுந்த கதை, எந்தச் சாத்திரத்திலே, எந்தப் பாகத்திலே, எந்த ஆப்தராலே சொல்லப்பட்டிருக்கின்றது. இன்ன சாஸ்திரத்திலே, இன்ன இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று காட்டு. அஃது இயலாதாயின் வாய் மூடு.

சைவர் சிவன் ஒருவரே பரமபதி யெனக் கொண்டு வணங்குகின்றார்களே யன்றி, நீ சொல்லியவாறு பலரைப் பரமபதியாக வணங்கவில்லை. இந்த உண்மையை நாவலர் எழுதிய "சைவசமயம்" "கல்வி" என்னும் பத்திரிகைகளாலும், பேர்சிவல் பாதிரியார் எழுதிய லான்றோவ்வேட் என்னும் புத்தகத்தினாலும், சைவமகத்துவம் முதலிய நூல்களாலும் துணிந்துகொள்ளக்கடவாய்.

விக்கிரக ஆராதனைக்கு எதிராக ஒருவர் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். அதனைக் கண்டித்துப் புலவர்1899 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இந்துசாதனத்தில் வெளியிட்டார்.

இந்நாளிலே "விக்கிரகாராதனைச் சமாதான கிராகிருது" என்னும் நாமத்தோடு பகிரங்கப்பட்ட சஞ்சிகை ஒன்று ஒருவர் தர வாசித்தேன்.அது செய்தவர் இன்னாரெனப் புலப்படவில்லை. ஆயினும் ஒரு மாயாவாதி என்று அனுமித்ததற்கு ஞாயமுண்டு. அவர் அச் சஞ்சிகையிலே. நிலை பெறுமா றெண்ணுதியே என்பது முதலிய அருட்பாக்கள் விக்கிரக ஆராதனையைக் குறிக்கவில்லை யென்றும்,சமய குரவரும் பிறரும் விக்கிரக வணக்கம் கருதினார் அல்ல என்றும், அவற்றின் பொருள் வேறென்றும் தட்டுளுப்புற்றுக் கூறுவாராயினர். தேவாரம் முதலிய அருட்பாக்களிலும் பிறவற்றிலும் விக்கிரகாராதனை விசிட்டமாகக் கூறியிருத்தல் ஆபால கோபால நியாயமாகவும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் தேவார திருவாசகங்களையும் பெரிய புராணத்தையும் கிரமமாகப் பார்த்து விக்கிரகாராதனை விசிட்டத்தையும் அதனால் முத்தியடைந்த மெய்ம்மையையும் அறியக் கடவர். தேவாரத்துக்குக் கோழம்பப் பொருள் கொள்ளுதல் நீதியன்று.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை

சுன்னாகம்,

விளம்பு வருஷ, தைமீ 15உ

(மேலே கொடுக்கப்பட்ட கடிதத்தில் புலவர் சில அரும்பதங்களை உபயோகித்துள்ளார். அவற்றின் பொருளைப் பின்வருமாறு கொள்ளலாம் பஞ்சிகை - துண்டுப் பத்திரிகை, தட்டுளுப்புற்று - தடுமாற்றப்பட்டு, கோழம்பப் பொருள் - குழப்பமான பொருள், ஆபால கோபால - எல்லோருமறிந்த.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தொண்டு

தமிழ் வள்ளலும் நாவலரின் பேராபிமானத்துக்கு உரியவருமான சி.வை. தாமோதரம்பிள்ளை என்பவரால் ஏழாலையில் 1876 ஆம் ஆண்டு ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை தாபிக்கப்பட்டது. அப்பாடசாலைக்கு முதல் வருடத்தில் முருகேச பண்டிதரும், அவரைத் தொடர்ந்து இருபது வருடங்களுக்குமேல் தலைமை ஆசிரியராகப் புலவரும் இருந்தனர். புலவர் அங்கு செய்த அருந்தொண்டினை அவ்வித்தியாசாலை மாணவரைப் பரீட்சித்தவர்களின் அறிக்கைகளிலிருந்து அறியலாம். 1877 ஆம் ஆண்டு அப்பாடசாலையைப் பரீட்சித்த முருகேச பண்டிதரின் அறிக்கையின் ஒரு பகுதி பின்வருமாறு:

"இவ்வித்தியாசாலையில் முதற் பரீட்சை சென்றவருடத்து மார்கழிக்கடையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களாலும், இரண்டாம் பரீட்சை இந்த மாதம் இரண்டாம் திகதி எம்மாலும் நடத்தப்பட்டன. முதற் பரீட்சையில் காணப்பட்ட பிள்ளையின் தொகை நூறு. நோயின். கலக்கத்தாலும் பஞ்சத்தின் வருத்தத்தினாலும் பிள்ளைகள் முந்திய தொகையில் சுருங்கி இருந்தாராயினும், இண்டாம் பரீட்சையிலும் அறுபதிற்கு குறையாமல் இருந்தார்கள். இவ்வளவு பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர் ஒருவரே ஆகவும், இலக்கணம் முதலிய பாடங்களில் வினவிய குறுக்குக் கேள்வியில் எல்லாவற்றிற்கும் பிள்ளைகள் தவறாமல் விடை சொன்னார்கள்."

1882 ஆம் ஆண்டு சபாரத்தின முதலியார் நடத்திய பரீட்சையின் அறிக்கை வருமாறு:

"உபாத்தியாரின் இடையறா முயற்சிக்குப் பிள்ளைளே சாட்சியாக இருக்கின்றனர். கல்வித்திறமை உடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் பிள்ளையவர்கள் பல புத்தகங்களைப் பரிசாகக் கொடுத்தார்கள். இதனாலே கல்வியைத் தாம் எவ்வளவாக மதிக்கிறார்கள் என்பதனைச் செய்கையாற் காட்டுகிறார். இவரைப்போல் ஏனைய உத்தியோகத்தர்களும் செய்வார்களாயின் தமிழ்க்கல்வி எவ்வளவாக விருத்தியடையும்."

1891 ஆம் ஆண்டு பாடசாலையைப் பரீட்சித்த வித்துவசிரோமணி ச.பொன்னம்பலபிள்ளையின் அறிக்கையின் ஒரு பகுதி பின்வருமாறு:

"மேல் வகுப்பு மாணவர்கள் படிக்கும் பாடங்களாவன: தொல்காப்பியம், நன்னூல், திருவள்ளுவர் குறள், முல்லை அந்தாதி, கம்பர் அந்தாதி, தணிகைப் புராணம், இரகுவம்சம் என்னும் இவைகளாம். இவைகளுள் எவ்வெப்பகுதிகளிலும் வினவிய வினாக்களுக்கெல்லாம் மாணாக்கர்கள் தக்க விடை அளித்தார்கள். இத்துணைச் சாமர்த்தியராக அதி பிரயாசத்தோடு கற்பித்த உபாத்தியாயர் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவருடைய வித்தகம் எவராலும் வியக்கற்பாலது."

புலவர் ஒரே ஆசிரியராக இருந்து கொண்டு அறுபதிற்கும் நூற்றுக்குமிடையிலுள்ள மாணவர்களுக்கு எப்படிக் கல்வி பயிற்றினார் என்ற கேள்வி எழுகின்றது. உயர்வகுப்பு மாணவர்களைக் கீழ்வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கப் பயன்படுத்தியதினாலேயே இது முடிந்திருக்கவேண்டுமென்று எண்ண இடமுண்டு. இம்முறையைச் சட்டாம்பிள்ளை முறையெனக் (Monitorial System) கூறப்பட்டது. இப்படிக் கற்பிப்பதனால் மேல் வகுப்பு மாணவர்களுக்குத் தாம் கற்றதில் தேர்ச்சியும் தெளிவும் ஏற்படும். நாவலர் அவர்கள் மேல் வகுப்பில் படித்துக்கொண்டு இருக்கும்பொழுது கீழ்வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தார் என்பதை அவர் சரித்திரத்திலிருந்து அறியலாம்.

புலவரிடம் ஏழாலையில் நூற்றுக்கணக்கான மாணவர் கற்றுத்தேறினர். அவர்களில் தெல்லிப்பழை சிவானந்தையர், சுன்னாகம் மாணிக்கத் தியாகராஜ பண்டிதர், ஏழாலை தம்பையா உபாத்தியாயர் முதலியோர் சிலர் ஆவர். சிவானந்தையர் புலியூர்ப் புராணம், புலியூர் அந்தாதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிதுதி முதலிய நூல்களை இயற்றினார். மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் கதாப்பிரசங்கம் செய்வதில் வல்லுநராக விளங்கினார். தம்பையா உபாத்தியாயர் புராணங்களுக்குப் பொருள் சொல்வதில் சிறந்து விளங்கினார்.

புவலரும் நாவலரைப்போல் பல நூல்களை வெளியிட்டார். ஏழாலை சைவ வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்த காலத்தில் பல பிரபந்தங்களையும்,மேக தூதக் காரிகை போன்ற மொழிபெயர்ப்பு நூல்களையும், இலக்கண சந்திரிகை போன்ற இலக்கண நூல்களையும் இயற்றினர். இக்காலத்தில் இவரின் வடமொழி ஆசிரியர் நாகநாத பண்டிதர் மொழிபெயர்த்த இதோபதேசம் என்னும் நூலையும் பதிப்பித்தார். இதற்கு நியாயவாதி பிறிட்டோ என்பவரும், வண்ணார்பண்ணை த. செல்லப்பாபிள்ளை என்பவரும் முகவுரைகள் வழங்கினர்.

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

1898 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் தாபிக்கப்பட்டதோடு புலவருக்கும் நாவலர் சைவ வித்தியாசாலைக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இச் சங்கத்திற்கு மேற்படி வித்தியாசாலை முகாமையாளர் த. கைலாசபிள்ளை தலைவராகவும், அதன் தலைமை ஆசிரியர் மா. வைத்திலிங்கம் பிள்ளை காரியதரிசியாகவும் இருந்தனர். அதன் வித்துவ சபையில் முன் கூறப்பட்ட இரு உத்தியோகத்தரோடு பின்வருவோர் அங்கத்தவராக இருந்தனர் - அ. குமாரசுவாமிப் பிள்ளை, க. வேலுப்பிள்ளை ஆசிரியர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. சிதம்பரப்பிள்ளை, சு. சரவணமுத்துப்பிள்ளை, சிறிமத் சு. ஏரம்பையர், அ. அருணாசல சாத்திரியார், மு. கணேச பண்டிதர்.

இச்சங்கம் பிரவேச பாலபண்டிதப் பரீட்சைகளை நடாத்திவந்ததோடு, இப்பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்வோருக்கு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் வகுப்புக்களும் நடத்தி வந்தது. இப்பரீட்சைகளை நடத்தும் சபையில் புலவர் முக்கிய அங்கத்தவராக இருந்தார்.

மேற் கூறப்பட்ட வித்துவ சபையில் அங்கத்தவராக இருந்தவர்களில் பெரும்பாலோர் நாவலரின் மாணவர் என்பதைக் குறிப்பிடவேண்டும். இவர்கள் நாவலர் ஆரம்பித்து வைத்த தமிழ்ப் பணியை இச்சங்கம் மூலம் தொடர்ந்து செய்து வந்தனர்.

யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கத்தில் கிறிஸ்தவ மதத்தவர்களும் அங்கத்தவர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1899 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பட்டமளிப்பு விழாவுக்கு வைமன் கதிரவேலுப்பிள்ளை தலைமை தாங்கினார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் நெவின்ஸ் செல்வத்துரை குறிப்புரை கூறினார்.

இச்சங்கம் நெடுங்காலம் சிறந்த தொண்டாற்றி வந்தது. 1906 ஆம் ஆண்டு கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி யாழ்ப்பாணத்துக்கு வந்தபொழுது இச்சங்கம் அவருக்கு ஒரு வரவேற்பு அளித்ததோடு வித்தியா வினோதன் என்னும் பட்டத்தையும் அவருக்கு வழங்கியது.

சென்னை அரசாங்கம் 1913 ஆம் ஆண்டு ஒரு தமிழ்அகராதியை (Lexicon) தொகுத்தற்கு வண. யேஸ் சாண்ட்லர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக்குழு தயாரித்த மாதிரிப்பிரதி ஒன்றை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பியது. அப்பிரதியைச் சங்கம் புலவரிடம் கொடுத்து அதைப்பற்றி ஓரறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டது. புலவரும் அப்பிரதியில் காணப்படும் குறைகளைக் கொண்ட ஓர் அறிக்கையைச் சங்கத்திற்குச் சமர்ப்பித்தார். சங்கமும் அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து சாண்ட்லருக்கு அனுப்பியது. அவ்வறிக்கையைப் பார்வையிட்ட சாண்ட்லர் யாழ்ப்பாணம் வந்து சங்கத்தோடும் புலவரோடும் ஆலோசனை நடத்தினார். புலவரைச் சென்னைவந்து அகராதிவேலையில் உதவி செய்யும்படி கேட்டார். புலவர் நாவலர் வித்தியாசாலையை விட்டுப்போக விரும்பாதபடியால் அவ் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார். 1898 ஆம் ஆண்டு தொடக்கம் நெடுங்காலம் சிறந்த பணியாற்றிய யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நடைபெற வேண்டியது அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

புலவர் 1898 ஆம் ஆண்டு ஏழாலைச் சைவ வித்தியாசாலை மூடப்பட்டபின். 1902 ஆம் ஆண்டு நாவலர் வித்தியாசாலையைச் சேரும் வரைக்கும் வீட்டிலேயே பாடம் சொல்லிவந்தனர். இக்காலத்தில் அவரிடம் படித்தவர்களில் தென்கோவைக் கந்தையாபிள்ளையும்மகாவித்துவான் கணேச ஐயரும் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இக்காலத்தில் சூடாமணி நிகண்டு இரண்டாம் தொகுதி, யாப்பருங்கலக் காரிகையுரை, திருவாதவூரர் புராண மூலம், கண்ணகி கதை முதலிய நூல்களை வெளியிட்டார்.

## புலவரும் மதுரைத் தமிழ்ச்சங்கமும்

மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901 ஆம் ஆண்டில் பாலவந்தனம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவரின் பெருமுயற்சியால் தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தைத் தாபிப்பதற்கு 1898 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட யாழ்ப்பாணச் சங்கத்தின் அமைப்பு முறை, படாவிதானங்கள் முதலியன பேருதவியாக இருந்தன. இவற்றை நெடுங்காலம் தமிழ்நாட்டில் வசித்துவந்தவரும் யாழ்ப்பாணச் சங்க ஸ்தாபகருள் ஒருவருமான ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை மூலம் பாண்டித்துரைத் தேவர் பெற்றுக் கொண்டார். மேலும் புலவரின் பெரும் புலமையைக் கேள்விப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரான பாண்டித்துரைத் தேவர் சங்கத்தின் வித்துவ அங்கத்துவராக இருக்கும்படி கேட்டுப் பின்வரும் கடிதத்தை எழுதினர்.

6873 CC

மதுரைத் தமிழ்ச் சங்கம்
17-10-1903.

ஐயா,

1901 ஆம் வருடம் மே மாதம், இம்மதுரை மாநகரின் கண்ணே ஒரு தமிழ்ச்சங்கம் ஸ்தாபனமாய் நடைபெற்று வருவதைப் பத்திரிகை வாயிலாகத் தாங்கள் அறிந்திருக்கலாம். அதன்விபரம் இத்துடன் அனுப்பியுள்ள பிரகடனப்பத்திரத்தால் நன்கு விளங்கும். தாங்கள் அச்சங்கத்தின் வித்துவ அங்கத்தவருள் சிறந்த வித்துவானாக அமர்ந்திருந்து வேண்டியவற்றைச் செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
பொ. பாண்டித்துரை

புலவரும் இதற்கு இசைந்து கொண்டார். பின்னர் தேவர் சங்கப் பத்திரிகையான செந்தமிழுக்குக் கட்டுரைகள் எழுதும் படி கேட்டு பின்வரும் கடிதம் எழுதினார்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

ஐயா,

நம் சங்கத்தினின்றும் செந்தமிழ் எனப்பேரிய ஒரு மாதாந்தப் பத்திரிகை வெளிப்படுத்தலாமென முன்னரே அறிவித்துள்ளபடி வெளியிடற்கு அப் பத்திரிகைக்குத் தாங்கள் அருமையிற் கற்ற கல்வியானாய விஷயதானங்கள் இன்றியமையாதன வாய்ச் சிறப்புடையவாதலின் தங்கள் நுண் அறிவுக்கெட்டிய அரும் பெரும்விடயங்கள் யாவும் செந்தமிழ்ப் பத்திரிகை தன்னிடங்கொண்டு இத் தமிழுலகிற்கு நன்மை புரியுமாறு செய்விக்கத் தங்களை வணக்கமாகவேண்டுகிறேன்.

தங்களன்பன்
பாண்டித்துரை

தேவர் கேட்டுக்கொண்டபடி புலவர் ஆரம்பத்திலிருந்தே செந்தமிழுக்குக் கட்டுரைகள் எழுதினர். பின்னர் 1922 ஆம் ஆண்டில் இறக்கும் வரைக்கும் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தனர். இப்படிப் புலவர் செந்தமிழுக்கு நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். இவை தமிழ் கற்கும் மாணவருக்கு அரிய பொக்கிஷமாகும். ஆகவே இவற்றைத் தொகுத்து வெளியிட வேண்டியது அவசியமாகும். இது எப்போ கைகூடுமோ தெரியாது.

153296



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டித்துரைத் தேவருக்குப் பின் தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவராயிருந்த இராஜராசேஸ்வர சேதுபதியும் புலவரிடத்துப் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார். புலவர் தாமியற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரத்தைச் சேதுபதிக்கு அர்ப்பணம் செய்தார். சேதுபதியும் சன்மானமாக ஒரு தொகைப் பணத்தை வழங்கினார். சேதுபதி சமஸ்தானத்தைச் சேர்ந்தவரும் பாண்டித்துரைத்தேவரின் தகப்பனாருமான பொன்னுச்சாமித்தேவர் திருக்குறள், திருக்கோவையார், சேதுபுராணம் முதலிய நூல்களை நாவலரைக் கொண்டு பரிசோதிப்பித்து வெளிவரச் செய்ததுசெய்த சேது பதியைப் பாராட்டி சில பாக்கள் யாத்து தமிழ்ப்புலவர் சரித்திரத்துக்கு எழுதிய முன்னுரையில் சேர்த்துக் கொண்டார். அதிலொரு பாட்டுப் பின்வருமாறு:

சீதை காவல னாதியி னாட்டிய
　　தேவ ராலயம் போற்றிடுங் காவலன்
நீதி காவலன் தொன்னெறிக் காவலன்
　　நீடு முன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன் பாவலர் காவலன்
　　பழைய வைதிக சைவர்கள் காவலன்
சேது காவலன் செந்தமிழ்க் காவலன்
　　சீர்த்தி ராஜரா சேர மன்னனே.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குப் புலவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி மு. இராகவையங்கார் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

"தாங்கள் செந்தமிழுக்கு எழுதி அனுப்பும் விஷயங்கள் தமிழக முழுவதும் பாராட்டப்படத்தக்கனவாய் ஒளிர்கின்றன. நம் செந்தமிழ்ப் பெருமையை வளர்த்தற் கண் தாங்கள் கொண்டுள்ள முயற்சி அளவு வேறெவரும் கொண்டிலர் என்பது இந்நாட்டின் பொது அபிப்பிராயம்."

1902 ஆம் ஆண்டில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியரானார். நாவலரின் இலட்சியங்களை நன்கறிந்தவரும், சிறந்த தமிழ்ப்புலவரும் ஆசிரியத் தொழிலில் நிரம்பிய அனுபவம் பெற்றவருமான ஒருவர் நாவலர் வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராகக் கிடைத்தது ஒரு பெரும் பாக்கியமாகும், புலவருக்கும் பல அறிஞர்கள் கூடும் அவைகளமாக விளங்கிய அவ்வித்தியாசாலைக்கு தலைமையாசிரியராக இருக்கக்கிடைத்த பேறு பெரும் பேறாகும். இதனால் தகுதி வாய்ந்த இடத்துக்குத் தகுதியான ஒருவர் கிடைத்தார்என்று கூற வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நாவலர் வித்தியாசாலையில் தோன்றி அங்கேயே நடைபெற்று வந்தது. அந்தச் சங்க மூலம் புலவர்செய்த பணிகளையும் மதுரைத் தமிழ்ச்சங்க மூலம் செய்த பணிகளையும் முன்பு கவனித்தோம். இனி நாவலர் வித்தியாசாலை மூலம் செய்த பணியைக் கவனிப்பாம்.

புலவர் ஆரம்பத்தில் கால் நடையிலேயே வித்தியாசாலைக்குச் சென்று கால் நடையிலேயே வீடு திரும்பினர். வீட்டுக்கும் வித்தியாசாலைக்கும் உள்ள தூரம் ஆறுமைல். புகை வண்டி வந்த பின்னர் காலையில் புகை வண்டி மூலம் சென்று மாலையில் நடந்து வந்தார். வித்தியாசாலை காலை ஒன்பது மணிக்கும் மாலை நான்கு மணிவரைக்கும் நடைபெறும். ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் மிடையில் இடைவேளையில் சிவன் கோயில் வடக்கு வீதியில் வசித்து வந்த புலோலி. வ. குமாரசாமிப்புலவரைத் தினசரிசந்தித்து உரையாடுவர். காலையில் வித்தியாசாலைக்கு முன்பாக நாவலர் கோட்டத்தில் வசித்துவந்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையைத் தவறாது சந்திப்பார்.

புலவர் பாடம் சொல்லுவது வகுப்போடு நின்று விடாது. வீடுதிரும்பும்போது பலருக்கு வழிநெடுகே பாடம் சொல்லிக் கொண்டு போவார். புலவர் இப்படி நடந்துகொண்டே பாடம் சொல்வதைக் கண்ட மக்கள் அவரை நடமாடும் கலைக் களஞ்சியமென்று அழைத்தனர். நான் சுன்னாகத்தில் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தவன். ஆதலால், முதுகில் புத்தகக் கட்டுத் தூங்க மாணவர் புடைசூழ புலவர் வீடு திரும்புவதைப் பலமுறை கண்டுள்ளேன்.

வீடு திரும்பியதும் படுத்துக்கொண்டு நண்பருடன் உரையாடுவர். புலவருக்கு எந்நேரமும் கல்வி பற்றிய சிந்தனையே. அவருக்கு உலக விவகாரங்களில் ஈடுபாடு கிடையாது. இவருடைய போக்கு மேல் நாட்டுச் சிறந்த பேராசிரியர்களின் (dons) போக்கை ஒத்திருந்தது.

புலவர் நாவலர் வித்தியாசாலையில் கல்வி கற்பித்தபொழுது அவரிடம் பல சிறந்த மாணவர் கல்வி கற்றனர், அவர்களில் உடுவில் இரத்தினேஸ்வர ஐயர், பன்னாலை பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை, மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலியோரைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். இரத்தினேஸ்வர ஐயர் இலங்கையிலும் இந்தியாவிலும் ஆசிரியராக இருந்தவர். இவர் கட்டுரை எழுதுவதிலும், கவி பாடுவதிலும், பிரசங்கம் செய்வதிலும் வல்லுநராக விளங்கினர். பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை பன்னாலை சேர் அம்பலவாணர் கனகசபை வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராக இருந்து இளைப்பாறியுள்ளார். புலவர் புராணங்களுக்குப் பொருள் சொல்லுமிடங்களில் இவரே புராணங்களை வாசிக்கும் பேறு பெற்றவர். மட்டக்களப்புப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை கவி இயற்றுவதில் சிறந்து விளங்கியதோடு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவிருந்து அருந்தொண்டாற்றினார்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை புலவரிடம் கற்று மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையில் சித்தியெய்தியவர். திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் நெடுங்காலம் விரிவுரையாளராக விருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்குத் தமிழ்ச்சுவை ஊட்டியவர். அக்காலத்தில் தனிப்பட்ட முறையில் ஒரு காவிய பாடசாலையை நடாத்திய பல தமிழ்ப் பண்டிதர்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தவர். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்களின் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களின் பெருமையை உலகறியச் செய்தவர். இவர் கல்விக்குச் செய்தசேவையைப் பாராட்டி இலங்கைச் சர்வகலாசாலை இலக்கிய கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கியது. நோய் முதுமை முதலிய இன்னல்களைப் பொருட்படுத்தாது இப்பொழுதும் தமிழ், சைவப் பணியாற்றி நாவலர், புலவர் பாரம் பரியத்தைக் காப்பாற்றி வருகிறார்.

புலவர் நாவலர் வித்தியாசாலையில் இருந்த காலத்தில் சாணக்கிய நீதிவெண்பா, இராமோதந்தம் முதலிய செய்யுள் நூல்களையும் திருவாதவூரர் புராண உரை, கம்பராமாயண பாலகாண்ட உரை, தண்டி அலங்காரப் புத்துரை முதலிய உரை நூல்களையும் தமிழ்ப்புலவர் சரித்திரம், இதோபதேசம், சிசுபால சரிதம், இரகுவம்ச சரிதாமிர்தம் முதலிய வசன நூல்களையும் இயற்றினார். இவர் இக்காலத்தில் இயற்றிய வினைப்பகுபத விளக்கம் என்னும் சிறு நூல் இவரின் இலக்கணப் புலமைக்கும் தனித்துவமான ஆராய்ச்சித் திறனுக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

புலவர் ஆசிரியராக இருந்து பெற்ற சம்பளத்தை அறிந்தால் இக்கால ஆசிரியர் அதிர்ச்சி-யடைவர். ஏழாலைச் சைவ வித்தியாசாலையில் இருந்த இருபது வருட காலமும் சம்பளமாக மாதம் பத்து ரூபாய் பெற்றார். நாவலர் வித்தியாசாலையில் பத்து ரூபாயோடு ஆரம்பித்து ஈற்றில் இரு பத்திரண்டு ரூபாய் பெற்றார். பரமேஸ்வராக் கல்லூரியை சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆரம்பித்தபொழுது அங்கு பண்டிதராக வரும்படியும் உயர்ந்த சம்பளம் தருவதாகவும் கூறினார். ஆனால் புலவர் தமக்குப் பல்லாற்றானும் உகந்த தாய் இருந்த நாவலர் வித்தியாசாலையை விட்டுப்போக விரும்பவில்லை.

நாவலர் சமயம், கல்வி, அரசியல், சமூகம், பொருளாதாரம் என்னும் பல துறைகளில் பணியாற்றினார். புலவரின் பணி சமயம் கல்வி என்னும் இருதுறைகளிலும்அமைந்திருந்தது எனலாம். ஆனால் இவ்விருதுறைகளிலும் ஆற்றிய பணிகள் மூலம் அழியாப் புகழை ஈட்டிக்கொண்டார். சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் அம்பலவாணர் கனகசபை, டபிள்யூ துரைசாமி போன்ற அரசியல் தலைவர்களும், த. கைலாசபிள்ளை, நெவின்செல்லத்துரை, ஜே.கே. சண்முகம், அலன் ஏப்பிரகாம் போன்ற கல்விமான்களும், சீ. அருளம்பலம், கே. தம்பையா போன்ற வழக்கறிஞர்களும் சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் தமிழ்மொழிக்கு ஆற்றிய சேவையை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டி 1920 ஆம் ஆண்டில் அரச சன்மானம் பெற்றுக்கொடுத்தனர்.இது பெற்று இருவருடங்களுக்குள் அதாவது 9-3-1922 இல் அவர் காலமானார். புலவரை நன்கு அறிந்த முதுபெரும் புலவரான வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் இவர் மீது பாடிய செய்யுள் ஒன்றை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்பாம்.

என்றுமுள தென்மொழியில் வடமொழியில்
இலக்கியத்தில் இலக்க ணத்தில்
நன்றுபயில் மாணாக்கர்க் குயர்குருவாய்
நூல்கள் பல நயக்கத் தந்தோன்
துன்றெழில்கூர் சுன்னாகக் குமாரசுவா
மிப்புலவர் தூய சீர்த்தி
நின்றிலக விவ்வுலகை நீங்கினான்
அறிஞர்மனம் நீங்கி லானே.

## சான்றாதாரங்கள்


1. *முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு., குமாரசுவாமிப்புலவர் வரலாறு (யாழ்ப்பாணம் - 1970).*
2. குமாரசுவாமிப்புலவர், த., தமிழ்ப்புலவர் சரித்திரம், இரண்டாம் பதிப்பு (யாழ்ப்பாணம் - 1951).
3. இந்துசாதனம் - Hindu Organ - 1897, 1898, 1899.
4. செந்தமிழ், மதுரைத் தமிழ்ச் சங்கம் - *1902, 1922.*


## குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

### *சி.வை. தாமோதரம்பிள்ளை (1838 — 1901)*

நன்னிரு பங்கண்டு னென்னலென்
றன்மனம் நெக்குருகித்
தன்னிற் கரைந்தது தானென்சொல்
கேனெத்துந் தாங்குமொரு
வன்நெஞ்ச னேனெனு மாற்றம் பொய்
யானது மல்வை நன்நாட்(டு)
இன்ன மிலருளைப் போற்குமார
சாமி யெனக்கன்பரே.
சேரும் நிவேதனத்தைச் ஸ்ரீகுமாரசுவாமிதர
நேரில்வரைந் துதுயர் நீக்கு.

இங்ஙனம்
*அன்பன் சி.வை. தாமோதரம்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வாழ்க்கையும் பணிகளும்

*பேராசிரியர் சி.தில்லைநாதன்*

*முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,*

*பேராதனைப் பல்கலைக் கழகம்*

மயிலணி சைவ மகா வித்தியாலயம் எண்பதாவது ஆண்டு தாண்டும் இவ்வேளையில், குமாரசுவாமிப் புலவரின் ஆளுமையினையும் பணிகளையும்பற்றி எண்ணிப்பார்த்தல் பொருத்த-முடையதாகும். அது, அப்புலவர் அயலின் வாழ்ந்தவர் என்பதனால் மட்டுன்று. இன்று, கருத்துக்-களைச் செவ்வனே பரிமாறிக்கொள்ளத்தக்க மொழியாற்றலையும், மானிடவாழ்வு சமூகமாய் அமைய உதவும் ஒழுக்க நெறிகளையும், மேற்கொள்ளும் கருமங்களில் நேர்மையான முயற்சியுடைமை-யையும் மாணவர் மத்தியில் வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து அதிகமாகப் பேசப்படுகிறது. அவை குறித்த ஆர்வமும் அறிவும் துலங்குவதற்கும் குமாரசுவாமிப் புலவரின் வாழ்வும் பணிகளும் பற்றிய சிந்தனை உதவும் என்பதில் ஐயமில்லை.

இன்று யாம் இலங்கைத்தமிழ் வரலாற்றைப் பற்றியும் ஈழத் தமிழிலக்கிய வரலாற்றைப்பற்றியும் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பற்றியும் பெருமையோடு பேசமுடிகிறதென்றால் அதற்கு உறுதியளித்தவர்கள், சிறப்பாகச்சென்ற நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றிய பேரறிஞர்களே ஆவார்கள். அவர்களுள் விதந்து குறிப்பிடத்தக்க ஒருவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆவார்.

1854 ஆம் ஆண்டு சுன்னாகம் என்ற கிராமத்திலே தோன்றி 1922 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டவர் குமாரசுவாமிப் புலவர். தமிழ் மறுமலர்ச்சிக்கும் சைவ மறுமலர்ச்சிக்கும் தீர்க்கமான பெரும் பணிகளையாற்றிய ஆறுமுகநாவலருடனும்சி.வை. தாமோதரம்பிள்ளையுடனும் பழகும் பேறு பெற்றவரான குமாரசுவாமிப் புலவர், அவர்களுடைய பணிகளைத் தொடர்ந்து வளர்த்து அவற்றின் பயனை உறுதிப்படுத்தினார். நாவலர், தாமோதரம்பிள்ளை ஆகியோர் பயணியிற் பெரும் பகுதி தமிழ் நாட்டிலே நடைபெற்றது. புலவரது தொண்டு ஈழத்திற் பெரிதும் நிகழ்ந்தது.

தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் வடமொழியினையும் துறைபோகக் கற்ற புலவரின் பணி பல துறைகளைச் சார்ந்ததும் பெரும் பரிமாணங்களைக் கொண்டதுமாகும். அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை அவர் இயற்றியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

வதுளைச் கதிரேசன் பதிகம், வதுளைக் கதிரேசன் சிந்து, நகுலேசுரர் ஊஞ்சல், மிலேச்சமத விகற்பக் கும்மி, மாவையிரட்டை மணிமாலை, கைலாயபிள்ளையார் ஊஞ்சல், சாணக்கிய நீதி வெண்பா முதலிய பல செய்யுள் நூல்கள் புலவருடைய செய்யுள் திறனையும், சமயப்பற்றையும், ஒழுக்க ஆர்வத்தையும் காட்டுவனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரைசைப் புராணப் பொழிப்புரை, மறைசையந்தாதி அரும்பதவுரை, திருவாதவூரர் புராணப்புத்துரை, கல்வளையந்தாதி பதவுரை, முத்தகபஞ்சவிஞ்சதி குறிப்புரை முதலிய உரைநூல்கள் புலவரது பரந்துபட்ட இலக்கிய ஆர்வத்தையும் புலமையையும் மட்டுமன்றி ஆழ ஆராய்ந்து நுணுக்கமாக உரை கூறும் திறனையும் காட்டுவனவாகும்.

யாப்பருங்கலப் பொழிப்புரை, அகப்பொருள் விளக்கப்புத்துரை, தண்டியலங்காரப்புத்துரை முதலிய இலக்கண உரைகளும் இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் ஆகிய இலக்கண ஆய்வு நூல்களும் புலவருக்குத் தமிழ் இலக்கணத்திலும் யாப்பிலும் அணியிலும் இருந்த உன்னதமான புலமையினை வெளிப்படுத்துவனவாகும் ஈழத்தவர்கள் பண்டைமொழி மரபுகளையும் இலக்கண வரம்புகளையும் பேணுவதில் விசேட ஆர்வம் காட்டுவதற்குக் குமாரசுவாமிப் புலவர் போன்றவர்கள் அமைத்த அடித்தளமே காரணமாதல் வேண்டும்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எமது நாட்டில் நடைபெற்ற காரசாரமான மரபுப் போராட்டத்தைத் தமிழிலக்கிய இலக்கண ஆர்வலர்கள் மறந்திருக்கமாட்டார்கள். புதிய மாறுதல்களுக்கு எதிரான ஒரு பண்டிதர் பரம்பரையே சினமுற்று எழுந்தது. காலகதியிலேற்படும் மாற்றங்களை அப்பண்டிதர் ஒப்பமறுப்பது கண்டு அவர்களைக் கடிந்தவர்கள் கூட, அப்பண்டிதர்களின் இலக்கண ஆர்வத்தையும் பழமைப்பற்றையும் சந்தேகிக்கவில்லை. குமாரசுவாமிப்புலவர் போன்றவர்களால் வளர்க்கப்பட்ட அந்த ஆர்வமும் பற்றும் தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வி ஆழவேரூன்றவும் வல்லமையோடு வளரவும் காலானமையினை மறுத்தல் சாலாது.

குமாரசுவாமிப் புலவரது யாப்பிலக்கணப் புலமையினையும் பற்றினையும் பற்றி விதந்து பேசும் வேளையிலும் சாதாரண மக்களைக் கவனத்திற் கொண்டு கும்மிப்பாடல்களையும் சைவ நூல்களையும் இயற்றிய அவரது காலப்பிரக்ஞையினையும் மனதிற் கொள்வது அவசியமாகும்.

வசனநடை கைவந்த வல்லாளரான ஆறுமுக நாவலர் மரபில் நின்ற குமாரசுவாமிப் புலவரும், கண்ணகி கதை, தமிழ்ப் புலவர் சரித்திரம், சிசுபால சரிதம் முதலிய வசன நூல்களை இயற்றி வெளியிட்டார். வினைப் பகுபத விளக்கம் என்ற நூலில் புலவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "பாரத ராமாயணாதிகளிலும் பண்டைச் சான்றோர் பனுவல்களிலும் பகுபதங்களுள் வைத்துப் பலபாகுபாடுகள் புலப்படும். வழக்கிற்கண்டு வழூஉ எனக் கொண்ட சிலவற்றின் இழுக்கறவும் புலப்படும். தழூஉ எனக் கொண்ட சிலவற்றின் ஏக்கறவும் புலப்படும். மரூஉ எனக் கொள்ளுமாறு முதனிலைகளின் இடுக்கறவும் புலப்படும். முதனிலைகளின் முதனிலைகளும் புலப்படும். சிலவாவன, சிறக்கணித்தல், உலோவல், ஆமிடை தறுகண் முதலியன"

குமாரசுவாமிப் புலவர் எழுதிய இந்தப்பகுதி இலக்கணக் கல்விநாடும் பண்டிதர்களுக்கென எழுதப்பட்ட நூலிலே சற்றுக் கடினமான செந்தமிழ் நடையில் அமைந்தது. சாதாரண மக்களுக்கெனப் புலவர் எழுதிய கண்ணகி கதை இலகுவான நடையில் அமைந்துள்ளது. பின்வரும் பகுதி அந்நூலிற் காணப்படுவதாகும்.

> "சோழ மண்டலத்திலே காவிரிப்பூம்பட்டினம் என்னும் நகரத்திலே மாநாய்கன் என்னும் பெயருடைய செட்டியொருவன் இருந்தான். அச்செட்டியின் மகளாகிய கண்ணகி என்பவள் பொற்பினால் இலக்குமி என்றும் கற்பினால் அருந்ததி என்றும் கண்டோரெல்லாங் கொண்டாடிக் கைகுவித்து வணங்கத்தக்க மிக்கமேன்மையும், நற்குண நற்செய்கைகளும் பெற்றவளாய்ச் சிறப்புற்று வளர்ந்து பன்னிரண்டாம் வயசென்னும் பருவத்தையடைந்தாள். இவளுக்குத் தேவந்தி என்னும் பிராமணப் பெண்ணும் பாங்கியாக விளங்கினாள்"

குமாரசுவாமிப் புலவரின் இப்பகுதி எளிதிற் பொருள் விளங்கத் தக்கதாய் ஆற்றொழுக்குப் போன்ற நடையிற் அமைந்தது. தேவைக்கு ஏற்ற உரைநடையினைச் சிறப்பாய் ஆளும் திறன் கைவந்தவராய்ப் புலவர் விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரக்கோவை, நான்மணிக் கடிகை, நகுலமலைக் குறவஞ்சி நாடகம், உரிச்சொனிகண்டு முதலிய பல நூல்களைப் பதிப்பித்த புலவர் சில தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். பண்டைக் கால இலக்கியங்களைப் பயில்வோருக்குப் பயன்படும் வகையில் இலக்கியச் சொல்லதிகார ஒன்றினையும்அவர் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுள்ள கோயில்களிலும் பாடசாலைகளிலும் புலவர் சமயசம்பந்தமாகவும் கல்வி சம்பந்தமாகவும் ஆற்றிய சொற்பொழிவுகள் பொதுமக்கள் மத்தியிற் சமய ஒழுக்கத்தையும் கல்வியறிவையும் வளர்ப்பதில் அவர் கொண்டிருந்த பேரார்வத்தைக் காட்டுவனவாய் அமைந்தன.

உதயதாரகை, இலங்கைநேசன், உதயபானு, இந்துசாதனம் முதலான ஈழத்துப் பத்திரிகைகளிலும், செந்தமிழ், ஸ்ரீலோகரஞ்சனி, ஞானசாகரம், வைசிய மித்திரன், தமிழ்மகவு முதலிய தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் புலவர் எழுதிய ஏராளமான கட்டுரைகள் இலக்கிய, இலக்கண, சமய, வரலாற்றுத்துறை விடயங்கள் பலவற்றை அலசுவனவாய் அமைந்தன. அத்துறைகளில் ஆர்வமுடையாருக்கு இன்றும் சுவைபயப்பனவாய் இருநூற்றுக்கு மேற்பட்ட அக்கட்டுரைகள் உள்ளன.

கண்டனமெழுதுவதிலும் புலவர் மிகக் கெட்டிக்காரராயிருந்தார். ஆறுமுகநாவலர், முருகேசபண்டிதர், சங்கரபண்டிதர் ஆகியோரிடம் அக்கலையினைக் கைவரக் கற்ற புலவர் சமய, இலக்கிய, இலக்கணத் துறைகளிற் போலிக் கல்விமான்களையும் போலிக் கொள்கைகளையும் காரசாரமாகக் கண்டித்தார். சபாபதி நாவலர், உ.வே.சாமிநாதையர் போன்றோரும் அவரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

அத்தனைக்கும், கர்வமோ தெரியாததைத் தெரிந்ததாகப் பாவனை பண்ணும் மனப்பான்மையோ புலவருக்குக் கிஞ்சித்தும் கிடையாது. சந்தேகங்களைத் தீர்க்க ஏனைய அறிஞர்களையும் பத்திரிகைகளையும் நாடிய அவரது சிறப்பு விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் தாபித்த ஏழாலைத் தமிழ் வித்தியாசாலையிலும், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையிலும் நாற்பத்திரண்டு ஆண்டுகளாகத் தலைமையாசிரியராகப் பணிபுரிந்த புலவர் பல சிறந்த மாணவர்களை உருவாக்கி எங்கள் நாட்டிற் சைவமும் தமிழும் வளர்க்க வழிகோலியிருக்கிறார். அன்னாருடைய மாணவருட் குறிப்பிடத்தக்க பலருட் சிலர் மகாவித்துவான் சி.கணேசையர், வித்துவான் சிவானந்தையர், தென்கோவை பண்டிதர் ச.கந்தையாபிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை ஆகியோராவர்.

குமாரசுவாமிப் புலவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும் வித்துவ அங்கத்தினராய் விளங்கினார். 1920 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் செந்தமிழ்ப் பரிபாலன சங்கத்தின் பரிந்துரையின் விளைவாய்ப் புலவருக்கு அரசு சன்மானமும் கிடைத்தது. அவர் மறைந்தபோது இந்தியாவிலும் இலங்கையிலும் பலபெருமக்களும் பேரறிஞர்களும் கலங்கினர். அத்துணைப் பெருமைகளுக்கும் உரியராய்த் திகழ்ந்த குமாரசுவாமிப் புலவர் மிக எளிமையான மனிதர். துன்பப்பட்டுக் கற்றுத் துன்பங்களோடு பழகி வாழ்ந்தவர். பத்து ரூபாய் சம்பளத்தோடு ஆசிரியராகிய புலவர் இறுதிக்காலத்தில் பெற்றதும் இருபத்திரண்டே ரூபாய்களைத்தான்.

அவ்வளவு குறைந்த வருமானத்தோடு சிக்கனமாகக் குடும்பம் நடாத்திய குமாரசுவாமிப் புலவர் தன்மானமிக்கவர், கடன்கேட்க விரும்பாதவர், இலக்கிய, இலக்கண, சமய, கல்விப் பணிகளை எத்தகைய நெருக்கடிகளிலும் சாய விடாதவர். வெறும் வாயுபசார வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காதவர் புலவருக்கு அரச சன்மானம் கிடைத்தபோது பாராட்டுவிழா நடாத்தி மேளதாளங்களோடு குதிரைவண்டியில் அவரை வீட்டுக்கழைத்துச் செல்ல நண்பர்கள் விரும்பினர். ஆனால், பலவேலைகள் வீட்டிலிருக்க இரண்டு மூன்று மணி நேரம் முகமன் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்க இயலாதென்றும், ஆறுமைல் தூரத்துள்ள பாடசாலைக்குத் தினமும் நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்பவனை ஒருநாளைக்குக் குதிரை வண்டியில் ஏற்றியிறக்குவதால் ஒன்றும் நடந்து விடாதென்றும் கூறிய புலவர் பாராட்டுவிழா பற்றிய யோசனைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

வருமானத்தைப் பெருக்கவும், விளம்பரம் தேடவும், கவர்ச்சி அரசியலுக்குப் பொருந்தவும் பேயாய் அலையும் கலையுலகினரைப் பார்த்தவர்களும் பார்க்கிறவர்களும், குமாரசுவாமிப் புலவர் வாழ்ந்த வாழ்க்கையினையும் ஆற்றிய அளப்பரிய பணிகளையும் எண்ணிப் பார்ப்பதும் பிறருக்கு, எடுத்துச் சொல்ல வேண்டியதும் காலத்தின் தேவை என்பதனை உணர்வர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் புலவரைப் பற்றி ஈழகேசரியிலே எழுதிய ஒரு கட்டுரையில் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மேல்வருமாறு கூறியுள்ளார்.

> "காவி வேட்டியினால் கிளம்புகிற சாமிகள் மாதிரி, தமிழ்ப் பாஷையின் பேரால் புகழ் சம்பாதிக்கிற எண்ணம் புலவருக்குக் கிடையாது. தமக்குத் தாழ்வு வந்த போதும் தம்மாலே தமிழுக்குத் தாழ்வு வராமற் பாதுகாப்பதே புலவரவர்கள் வாழ்க்கையின் நோக்கமாயிருந்தது. செல்வாக்குள்ளவர்கள் தமிழுக்குச் செய்யுந் துரோகங்களுக்குப் புலவர் அவர்களின் தலை ஒன்றே ஒன்று தான் தமிழ்நாடு முழுவதிலும் சாய்ந்து கொடாதது"

## குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

### தி.த. கனகசுந்தரம்பிள்ளை (1863 — 1928)

ஐயா!

தங்கள் கார்த்திகை மாதம் 5ம் தேதி எழுதிய கடிதம் கிடைத்தது. அகராதி நடத்துவதற்கு மதுரையிலுள்ள சாண்டலர் என்னும் பாதிரி (Rev. J.S. Chandler) ஏற்பட்டிருக்கிறார், அவர் ஒன்றும் செய்யப்போகிறதில்லை. சம்பளம் மாசம் ஐந்நூறு போட்டிருக்கிறார். பண்டிதர்களை வைத்து வேலை நடத்துவிப்பார். பண்டிதர்களுக்கு இன்ன சம்பளம் என்பது இன்னும் தெரியவில்லை. தெரிந்த பின் எழுதுவேன். இலங்கையிலுள்ள (Rev. A.C. Clayton) கிளெயிற்றன் பாதிரியும் அகராதிசெய்ய ஏற்படுத்திய கொம்மிற்றியில் ஒருவர். கவண்மென்டார் ஒரு லட்சம் ரூபா கொடுக்கின்றார்கள். இந்தப் பணம் வீணாகப் போய்விடுமோ என்று அஞ்சுகிறேன் - மாசம் நூறுரூபாவுக்குக் குறையக் கொடுத்தால் நீங்கள் இங்கே வருவதில் பயனில்லை. கிளெயிற்றன் பாதிரி உங்கே உங்களை விசாரித்தால் நூறு ரூபாவிற்குக் குறையாமற் கேளுங்கள்.

நீங்கள் செய்திருக்கும் சிற்றகராதியை அச்சிடுவது நலமே. இத்தருணத்தில் அச்சிட்டால் பேரகராதி செய்வோருக்கு நாம் கைம்மாறு கருதாது உதவிசெய்தது போலாகும். ஆயினும் அதற்காக நாம் நமது புத்தகத்தை வெளியிடாது தாமதம் செய்யப்படாது. என்னால் இயன்ற உதவி செய்கிறேன்.

நான் வருகிற சித்திரை மாசம் எப்படியாவது ஊருக்கு வருவேன். அயோத்தியா காண்டம் திருத்துவதற்கு ஏடுகள் இன்னும் வேண்டுமோ - வேண்டுமானாற் சொல்லுங்கள் அனுப்புகிறேன்.

இங்ஙனம்
தங்கள் அன்பின்
தி.த.க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவசிரோமணி கணேச ஐயரும் புலவரும்

கு.அம்பலவாணர்

புலவரது மூத்த புதல்வனும்,
ஓய்வு பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரியரும்

## தோற்றுவாய்



பிரமஸ்ரீ சி. கணேசையர்

செந்தமிழணங்குசெய் பெருந்தவப் பயனாய்த் தோன்றி நீடித்து மொழித் தொண்டாற்றிப் பின் அண்மையில் அரனடி மேவிய வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் பேரால் ஒரு நினைவுமலர் வெளியிட விருப்பதாகவும் அதற்கோர் கட்டுரை வரைந்து வழங்கும்படியும் அம்மலர்த் தொண்டினை அன்புடன் கையேற்ற கலைப்புலவர் திரு.க. நவரத்தினமவர்கள் எமக்குப் பணித்தனர். அத்துடனில்லாது எழுதப்படுங் கட்டுரை ஐயரவர்களின் ஆசிரியராகிய குமாரசுவாமிப் புலவரையுந் தொடர்புபடுத்தி யெழுதப்படுவது நலமாயிருக்குமெனவுங் குறிப்பிட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் ஆசிரியர் மற்றையவர் அவர் மாணாக்கர். நீண்டகாலந் நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் நன்கறிந்து பரஸ்பர விசுவாசத்துடன் வாழ்ந்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவரையுங் குறித்துத் தனித் தனி வெவ்வேறு கட்டுரைகள் எழுதுவது சிரமமன்று. ஆனால், இவர்கள் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்களைத் தொடர்புபடுத்திப் பிணைத்துக் குண மாண்புகளையும் செயற் றிறங்களையும் ஒப்பநோக்கி ஒரு கட்டுரை சிறப்பாக எழுதி முடிப்பதென்பது இலகுவிற் சாலுவதொன்றன்று. ஒருகால், ஐயரவர்களுடன் சேர்ந்து புலவரிடஞ் சென்று கல்வி கற்றவர் ஒருவர் முயன்றால் சித்தியடைய வியலும். புலவரவர்களின் புத்திரன் என்ற காரணத்தால் ஐயரவர்கள் மாணவராயிருந்த காலத்திலும், பின்னும் சம்பவங்களை நேரே கண்டுங் கேட்டும் இருக்கலாமென்று கருதிப்போலும் அவர் இவ்விஷயத்தை எழுதும்படி என்னைப் பணித்தனர். அப்பணியையேற்று இயன்றவரையில் எழுதத் துணியலானேன். அதில் எவ்வளவுக்குச் சித்தியடைந்துளனென்பதை வாசகர்களே ஆராய்ந்து முடிவு செய்யக்கடவர்கள்.

ஐயரவர்கள் பரம்பரையாகத் தமிழறிவிற் பெருமையும் புகழும் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தமிழை நன்கு கற்று எத்தனையோ மாணவர்க்கு ஆசிரியராயிருந்தவரும் ஐயரவர்களின் பெரிய தந்தையாருமாகிய பிரமஸ்ரீ கதிர்காமையரவர்கள் தமிழார்வமுடையோரால் நன்கறியப்பட்ட ஒருவர். குமாரசுவாமிப் புலவருடன் நெருங்கிய நட்புரிமையுடையவர். காசிவாசி செந்திநாதையரவர்களோ மொழி, சமயம் என்பனவற்றில் அபிமானமுடையவர் யாவராலும் நன்கறியப்பட்டவர். இவரும் பிரமஸ்ரீ கணேசையரவர்களுடைய நெருங்கிய உறவினர். ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் முதலிய கிராமங்கள் சுன்னாகத்துக்கு அயலிலுள்ளவைகள். இக்கிராமங்களிலுள்ள அறிஞர்களுடன் சேர்ந்து புலவரும் தமிழ்த் துறையிலுஞ் சமயத்துறையிலும் நெருங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து தொண்டாற்றி வந்தனர். அக்காலத்தில் செந்திநாதையரவர்கள் புலவரிலும் பார்க்க வயதிலும் கல்வியறிவிலுங் கூடியவர். நாவலரவர்களது ஆங்கில, தமிழ் வித்தியாசாலைகளிற் பல்லாண்டுகளாகச் சிறந்த ஆசிரியராக விருந்து அவர் மதிப்பினை நன்கு பெற்றவர். செந்தி-நாதையருடன் புலவருங் கூடிச் சென்று நாவலரவர்களைக் காண்பதுண்டு. நாவரவர்களது பிரசங்கங்கள், புராணபடனங்களையும் இவர்கள் தவற விடுவதில்லை. கணேசையரவர்களின் தந்தையார் பிரமஸ்ரீ சிந்நையரும் புலவரின் நெருங்கிய நண்பராவர்.

### கல்வி கற்றல்

ஆரம்பத்தில் வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களிடங் கல்வி கற்றுவந்த ஐயரவர்கள், மேற்படி பிள்ளையவர்கள் காலஞ்சென்ற பின்னர், தமது தந்தையார் விருப்பப்படி புலவரவர்களிடங் கல்வி கற்பாராயினர். பொன்னம்பலப்பிள்ளையவர்கள் சிவகதி யடைந்தபோது ஐயரவர்களுக்கு வயது பத்தொன்பதேயாகும். புலவரவர்களிடம் அக்காலத்தில் ஐயரவர்கள் மாத்திரமன்றி வேறும் பல மாணவர்களும் கல்வி பயின்று வந்தனர். அவர்களுட் சிலர்: தென்கோவை ச. கந்தையபிள்ளை, கந்தரோடை அ. கந்தையா உபாத்தியாயர், இளவாலை ந. சங்கரப்பிள்ளை முதலியோராவர். ஐயரவர்கள் அக்காலந் தொடக்கம் - தொடர்ச்சியாக இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக - புலவரவர்கள் சிவகதியடையும் வரைக்கும், இடைவிடாது அவரின் அன்புக்குரிய மாணவராக விருந்துவந்தனர். காலஞ் செல்லச் செல்ல மாணவராக மாத்திரமன்றி நெருங்கிய நண்பராகவுங் காட்சியளித்தனர்.

அக்காலத்திலே தமிழறிஞர்கள், என்றுந் தம்மை மாணவராகக் கருதி வாழ்ந்தது உண்மையேயாகும். இதுவும் தமிழ் மரபுக்குத் தொன்றுதொட்டிருந்து வந்த பண்பாடென்பாம். தாங்கற்றுப் பெற்ற சிறிய அறிவுடன் இறுமாப்புந் தலையெடுப்புங் கொண்டு தலை தடுமாறும் இக்காலத்துச் சில பண்டிதர்கள் போலன்றி, அக்காலத்துப் பண்டிதர்கள் தாங் கற்றது கைம்மண்ணளவேயென்றும், தம்மறிவு எத்துணைத்தென்றும் தாழ்ந்த சிந்தையுடன் மேலும் மேலும் நூல்களைத் தேடி வாழ்நாள் முழுவதுங் கற்பது வழக்கம். இவர்கள் என்றுந் தம்மை முற்றுணர்ந்த பேரறிஞராகக் கருதியதில்லை. நீண்ட காலமாக ஐயரவர்கள் தம்மை மாணவராகவே மதித்துப் புலவரவர்களிடம் ஊக்கமாகக் கல்வி பயின்றுவந்தனர். வயது முதிர்ந்து விவாகஞ் செய்த பின்னரும் நாலைந்து மைல்களுக்கு மேல் நடந்து சென்று கல்வி கற்று வந்தனர். கல்லுகள், முள்ளுகள், காடுகள் என்பனவற்றைத் தாண்டி, மழை வெயில் முதலியவற்றைப் பொருட்படுத்தாது, வெள்ளைக் குடையுடனும் புத்தகங்களுடனுட் இவர் கல்வி பயிலச் செல்வதை நேரே கண்டவர்களே இக்காட்சியை நன்கு உருவகப்படுத்த வியலும். புலவரவர்களிடம் ஏழாலைச் சைவ வித்தியா-சாலையிலும் வீட்டிலுங் கல்வி கற்ற எத்தனையோ பிராமணோத்தமர்களும் வேறு பலரும் வாழ்க்கையிற் புகுந்து பெரும் பொருள் வருவாயுடன் தொழில்களை நடத்தி யின்பமாக வாழ, இவர் மாத்திரம் கங்கு கரையின்றி, ஏதோ கற்கிறதாக நீடித்து அலைந்துலைகின்றார் என்று எண்ணி அவர்கள் எள்ளி நகையாடாரா? இதுவுமோர் அற்புதக் கோலமென்று கருதியிருப்பாரல்லவா? அன்று மிக்க பொறுமையுடன் அரிதின் முயன்று அநேக கஷ்டங்களைச் சகித்து இவர் கல்வியை இனிது கற்றமையாலன்றோ பிற்காலத்தில் ஐயரவர்கள் கல்வியுலகிற் றனிப் பெரும் உன்னத நிலையை யடைந்து பெரும் புகழைச் சம்பாதித்தனர். அவதிப்படாது அடக்கமாக வாழ்ந்து சந்தேக விபரீதங்களைத் தீர்த்து நிச்சயப்படுத்தி முறையே கல்வி கற்போர் அடையும் உன்னத நிலையைப் பற்றிச் சந்தேகமேன்? ஐயரவர்கள் பெரிய தமிழ் மேதையாய் எல்லோரது மதிப்பினையும் பாராட்டினையுந் தாராளமாகப் பெற்றனரே யென்பது அதிசயமாகுமா?

### புலவர் மதிப்பு

புலவரவர்கள் ஐயரவர்களை மிக்க கணிசத்துடன் நடத்தி வந்தனர். ஐயவர்களை நெருங்கிய நண்பராகவே கருதினர். தொல்காப்பியம், இராமாயணம், இரகுவமிசம், தணிகைப்புராணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம் முதலிய நூல்களை நன்காராய்ந்து கற்றுக்கொடுத்தனர். தமிழ் நூல்களேயன்றிச் சாகுந்தலம், குமாரசம்பவம், நளோபாக்கியானம், மாகம், வடமொழியிரகுவம்சம் முதலிய சம்ஸ்கிருத நூல்களையும் ஐயரவர்கள் புலவரவர்களிடங் கற்ற துண்டு. வடமொழிப் பயிற்சியால் ஐயரவர்களின் தமிழறிவும் அதன்மேலுள்ள ஆர்வமும் பன்மடங்கு விருத்தியடைந்ததென்பாம். அதிகமாகச் சனி ஞாயிறு வாரங்களிலும் மற்றைய ஓய்வு நாட்களிலும் ஐயரவர்களை நிச்சயமாக புலவரவர்களின் இல்லத்தில் காணலாம். ஐயரவர்களைக் கண்டு விட்டால் புலவரவர்களுக்குத் தன்னையறியாமல் ஒரு பெருமகிழ்ச்சி. தமிழ்க் கல்வி விஷயமாகக் கலந்துரையாட, அபிப்பிராயங்கூற, மற்றைய தமிழறிஞர்களின் எண்ணங்கள் கோலங்களை எடுத்துக்காட்ட, ஒருவர் கிடைத்து விட்டால் அச்சந்தர்ப்பத்தை எவர் தான் தவறவிடுவார்? மேலும் ஐயரவர்கள் மாட்டுப் புலவரவர்களுக்கு அளவுகடந்த நம்பிக்கையும் பற்றுமுண்டு. தாம் புதிதாக எழுதும் நூல்கள், கட்டுரைகள், கண்டனங்கள் என்பன பற்றி ஐயவர்களின் அபிப்பிராயம் புலவரால் விரும்பி நாடப்படுவது வழக்கம். கற்றாரைக் கற்றாரே காமுறுவ ரென்பதும் கருத்தில்லா வாக்கன்று. இவர்களிருவருக்குமிடையில் என்றாவது அபிப்பிராயபேதம் அல்லது வெறுப்பு என்பன ஏற்பட்டதில்லை. ஒத்த பண்பாடும், கல்விமரபும், ஒழுக்கமுறையும் கைவரப் பெற்ற இவர்களின் வாழ்க்கைநோக்கும் வித்தியாசப்படக் காரணமில்லை ஒரே தன்மையதாகவே யிருந்தது. நாவலரவர்கள் வகுத்த கல்விமுறையும் சமயாசாரமுமே இவர்கள் குறிக்கோள்கள். அவைகளைப் பூர்வாங்கமாகக் கொண்டு ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கல்வித்தொண்டு, சமயத்தொண்டு என்பவைகளைச் சிறப்பாக இயற்றிவந்தனர்.

ஐயரவர்கள் தமிழிலக்கண இலக்கிய நூல்களை மாத்திரமன்றிச் சமய சம்பந்தமான சாஸ்திரங்களையும் புலவரவர்களிடங் கற்றுக்கொண்டதுண்டு. சிவஞானபோதம், சிவஞான-சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாஸ்திரங்களை முறையாகப் பாடங்கேட்டவர். எனவே, கல்வியறிவுடன் சமயவறிவும் பெற்று அவைகளுக்கேற்ப ஒழுக்க விழுப்பமுடையராய் ஐயரவர்கள் வாழ்ந்து வந்தனர். இவ்வாறாகப் பலவகையாலுஞ் சிறந்து நிரம்பிய அறிவுடையவோர் மாணவர் தமக்கு வந்து வாய்த்தமையைக் கருதிப் புலவருளங் களிப்புற்றுப் பெருமையையடைய, ஐயரவர்களின் உள்ளமுந் தமக்குப் பண்பாடுடையராய் எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய கல்விச் சிறப்புடன் சகல குண மாண்புகளும் பொருந்தப்பெற்ற ஆசிரியரொருவர் கிடைத்தனரேயென்று நினைந்து மிக்க மனப்பூரிப்படைந்தது. சிற்சிலபோது மாணவரடைந்த உயர் நிலையைக் கொண்டு ஆசிரியருக்குப் புகழ் வந்து சேர்வதும், வேறு சிலபோது ஆசிரியரின் உயர்ந்த பண்பாட்டினையும் கல்வி நிலையையுங் கொண்டு மாணவரின் மதிப்புப் பெருமையடைவதும் இயல்பு. இங்கேயோவெனில் இருவருந் தந்தமக்கு மாண்பு கிடைத்ததெனக் கருதிக் கொண்டமை குறிப்பிடவேண்டியதொன்று.

புலவலவர்கள் சிவபதமடைந்தபோது ஐயரவர்கள் அடைந்த கவலையும் மனத்துருயரும் இம்மட்டன்று. கல்வி விஷயமாக நீடித்து ஐயரவர்களுக்குக் களைகணாயிருந்து வந்தவரைச் சடுதியில் இழக்க நேரிட்டது மிக்க மன விழுக்காட்டினை யுண்டுபண்ணாதிருப்ப தெப்படி? புலவரின் பிரிவாற்றலைச் சகிக்க வியலாதிருந்தும் ஒரு படி மனதினை யாற்றிக்கொண்டனர். நன்றியறிதலாக அவர் மீது பல கவிகள் இயற்றி அச்சிட்டு வெளியிட்டதுமன்றித் தாமே முன்வந்து அவர் சீவிய சரித்திரத்தைத் திறம்பட விபரமாக எழுதி அறிஞர்களின் பாராட்டுரைகள், இரங்கற்பாக்கள் என்பனவற்றுடன் வெளியிட்டனர். ஐயரவர்கள் கடைசிவரையும் புலவரவர்களை மறந்தாரல்லர். காலம் வாய்க்குந்தோறெல்லாம் அவரைப் புகழ்ந்து நன்றி பாராட்டி வருவாராயினர்.

## உரையெழுதுதல்

நூல்கள் பலவற்றைக் கற்றுச் சிறந்த வறிவைப் பெற்றிருப்பினும், அவ்வறிவினைத் துணைக்கொண்டு உலக நன்மைக்காகச் சிறந்த புதிய நூல்கள், கட்டுரைகள், அல்லது பழைய காடினிய நூல்களுக்கு உரைகள் என்பன எழுதி வெளியிட்டபோதுதான் ஒருவர் தாம் கற்றுப் பெற்றுக்கொண்ட அறிவினை நிச்சயமாகப் பூரணப்படுத்திக்கொள்ளல் இயலும். இவ்வழியிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவைத் துணிவுடன் பயன்படுத்துபவர்களே தாம் சிறந்த எழுத்தாளர்களாகவும், நூலாசிரியர்களாகவும் காலவடைவில் திகழக்கூடியவராவர்கள். அப்போதுதான் சொல்லாட்சியும், ஆற்றல் பிறழாது அவைகளை இடம் நோக்கித் திறம்படப் பிரயோகிக்கும் வன்மையும் பெறவியலும். ஐயரவர்கள் கல்வி கற்பதோடு மாத்திரம் நில்லாது புலவரவர்களின் விருப்பப்படி பத்திரிகைகளிற் கட்டுரைகளும் கண்டனங்களும் எழுதி வந்தனர். புலவரவர்களுக்கு இரகுவமிசம், தணிகைப் புராணம், இராமாயணம் என்னும் நூல்களிற் பரந்த பழக்கமும் ஆட்சியுமுண்டு. அந்நூல்களைத் தமது மாணவர்களுக்கு நன்கு பயிற்றுவதிலும் விருப்பமுந் திறமையு முடையவர்கள். இரகுவமிசம் யாழ்ப்பாணத்தின் பெருமைக்குரியவோர் நூல். அது யாழ்ப்பாணத்தை ஒருகால் அரசாண்ட பரராஜசேகர மன்னனது மருகர் அரசகேசரி என்னும் புலவரால் இயற்றப்பட்டதாகும். முன்னதாகவே புலவரவர்கள் இந்நூலிலுள்ள அருங் கவிகளுக்கு உரையெழுதி "இரகுவமிசக் கருப்பொருள் விளக்கம்" என்ற பெயருடன் ஒரு நூல் வெளியிட்டதுண்டு. கடிய நடையில் ஆக்கப்பட்ட இந்நூலுக்குப் பூரணமாக உரை யெழுதப்படல் வேண்டுமென்ற வேணவா புலவருக்கு நீடித்திருந்தது. புலவர் விருப்பப்படியே ஐயரவர்கள் இரகுவமிசத்துக்கு விரிந்தவுரையெழுதி வெளியிட்டனர். புலவரவர்கள் பார்வையின் பின் வெளியிடப்பெற்ற இந்நூல், மேற்கோள்கள், இலக்கண முடிபுகள், உரைவிளக்-கங்கள் என்பனவற்றைக் கொண்டதாக வுள்ளது. ஐயரவர்களின் ஆழ்ந்த கல்வியறிவு எத்தகைய தென வறிதற்கு இந்நூல் சகாயமாயிற்று. இதுபோலத் தணிகைப் புராணத்துக்கும் ஓர் உரை யெழுதும் பொருட்டுப் புலவரவர்கள் விருப்பப்படியே அவர் மாணவர் தென்கோவை ச. கந்தையா பிள்ளை-யவர்கள் ஆரம்பித்த முயற்சி முடிவடையாதுபோனது பெருந்துக்கமே. ஐயரவர்கள் 'செந்தமிழ்' முதலிய பத்திரிகைகளுக்கு எழுதிவந்த இலக்கிக் கட்டுரைகளும் இரகுவம்ச உரையுமே தொடக்கத்தில் இவர் அறிவின் வன்மையைத் தமிழுலகம் அறியச் செய்தனவென்பாம்.

## விவாதங்கள்

தமிழ் மேதையாகவிருந்த ஐயரவர்களிடம் ஆசிரிய தராதரப் பத்திரமுமொன்று இருந்தது. ஆரம்ப வித்தியாசாலைகளில் தலைமையாசிரியராகக் கடமையாற்ற இப்பத்திரம் இடங்கொடுக்கக்கூடியது. எப்படியாக இப் பத்திரத்தைத் தேடிப் பெற்றுக்கொண்டாரோ தெரியவில்லை. இதைக் கொண்டு தையிட்டி, மல்லாகம், நயினாதீவு முதலிய பலவிடங்களிலுள்ள தமிழ் வித்தயாசாலைகளின் தலைமையாசிரியராகக் கடமையாற்றியதுண்டு. நயினாதீவிலுள்ள தில்லையம்பல வித்தியாசாலையில் விசேடமாக உயர்ந்த இலக்கண இலக்கிய வகுப்புகள் வகுப்புகள் வைத்து நடத்தியதாக அறிகின்றோம். இவ் வித்தியாசாலையினது முகாமைக்காரராக விருந்தவர் கந்தரோடை வாசியும் வழக்கறிஞருமாகும் காலஞ்சென்ற திரு. வே. சி. பொன்னம்பலமவர்கள். திரு. பொன்னம்பலமவர்கள், புலவரவர்களையும் அழைத்துக்கொண்டு தோணியேறி நயினாதீவுக்குப் போய்த் தமது வித்தியாசாலையைப் பார்வையிடுவதுமுண்டு. அங்கு உயர்ந்த கல்வி கற்கும் மாணவர்களைப் புலவரவர்கள் பரீட்சித்துப் பார்ப்பார்கள். ஐந்து வருடங்களுக்குமேலாக ஐயரவர்கள் அங்கு வசித்து மாணவர்களுக்குக் கல்வி பயிற்றி வந்ததுடன் தானும் மிக்க மனவமைதியுடன் வாழ்ந்து தமிழாராய்ச்சி செய்து வந்தனர். இவ்வாறாக ஐயரவர்களின் கல்விப் பணி பலவழியிற் பயனளித்து வருவதாயிற்று.

புலவரவர்களுடன் மிக நெருங்கிய தொடர்புடைய ஐயரவர்களுக்கு மற்றையோர் நூல்களில், கட்டுரைகளிற் பிழை காணும் வன்மைப்பாடும் கைவரப்பெற்றிருந்தது. இவ் விஷயமாக ஏற்படுஞ் சந்தேகங்களைப் புலவரை நாடித் தீர்த்துக்கொள்வதுமுண்டு. இலக்கியவிலக்கண விஷயமாகச் சில வாத விஷயங்கள் செந்தமிழ் என்னும் பத்திரிகையில் இவரால் வெளியிடப்பட்டதுண்டு. அதி தீவிர விவேகமும் நுண்மாணுழை புலமையுங் கைவரப்பெற்ற சோழவந்தான் வித்துவான் அரசஞ்சண்முக-னாருடன் ஆகுபெயர் அன்மொழித்தொகை விஷயமாக நீடித்து நடத்திய வாதம் ஈற்றில் ஐயரவர்கள் பட்சிக்கே பெலமான ஆதரவுடன் ஜெயமேற்பட்டது யாவருமறிந்ததொன்று. நாவலர் பெருமானில் அழுக்காறுகொண்டு அவரை அவமதித்து நின்ற சென்னை அருள் நெறிச் சங்கத்தலைவர்க்கு மாறாக எழுதிய கண்டனங்களும் ஐயரவர்கள் பெயரை விலாசப்படுத்தியனவாகும். மேற்படி சங்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் செய்வதாகவிருந்த சொற்பொழிவு விளம்பரங்களைப் பீடிகையாகக் கொண்டு ஐயரவர்கள் வெளியிட்ட கண்டனங்கள் மிக்க கிளர்ச்சியையுண்டாக்கின. ஐயரவர்களது கண்டனங்களுக்கு மறுப்புக்கள் எழுந்தனவாயினும் ஐயரவர்கள் அவைகளுக்குத் தக்க பதிலிறுத்துத் தமது பக்கத்தை நிலைநாட்டப் பின்னிற்கவில்லை.

## பிராசீனபாடசாலை

சுன்னாகம் பிராசீன பாடசாலை 1920 ஆம் வருடமளவில் வித்தியாதரிசகர் பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்களின் அரிய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு உயர்ந்த இலக்கிய விலக்கணங்கள் ஆரியம் திராவிடமாகிய இருமொழிகளிலுங் கற்றுக்கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. அத்துடன் வேதமோதல், தேவார பாராயணம் முதலியனவும் மாணவர்களுக்குப் பயிற்றுவது இவ்வித்தியாசாலையின் நோக்கமாகவிருந்தது. இப்பாடசாலையின் தலைமையாசிரியராக முதன் முதலாகத் தெரிந்து நியமிக்கப்பட்டவர் பிரமஸ்ரீ கணேசையரவர்களே. சம்ஸ்கிருதம் கற்பிப்பதற்கு இந்தியாவில் பாலைக்காட்டிலிருந்து வேதவிசாரதர் பிரமஸ்ரீ வி. சிதம்பரசாஸ் திரியாரவர்களும் வரவழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர். பத்தாண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலை மிகத் திறமையாக நடந்து வந்தது. இப்பாடசாலையிலிருந்து மாணவர்கள் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பண்டிதர், பால பண்டித, பிரவேச பண்டித பரீட்சைகளுக்கு அனுப்பப்பட்டும் வந்தனர். இங்கு கல்வி கற்றுப் பண்டிதரானோர் பலராவர். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து மாணவர் தொகையாக வந்து இங்கு உயர்ந்த கல்வி கற்பாரயினர். இவ் வித்தியாசாலையிற் பயின்று சித்தியடைந்தவர்களில் ஐயரவர்களாற் பெரிதும் பாராட்டப்பட்ட மாணவர், கரணவாய் திரு. செவ்வந்திநாத தேசிகரவர்களே. இவர் மிக்க தீவிர விவேகமும் கூரிய நுண்மதியுமுடைவர். வடமொழி தென்மொழிகளில் மிக்க பாண்டித்தியமடைந்து யாவர் மதிப்பையும் பெற்றுவந்தனர்.இளம்வயதில் இவர் காலஞ் சென்றமை ஐயரவர்களுக்கு மிக்க மனத்துயரை வருவித்தது எனலாம்.

## தொல்காப்பிய ஆராய்ச்சி

ஐயரவர்கள் தாங் கற்றறிந்த கல்வியை நன்கு முறையே பயன்படுத்த இப்பாடசாலை சிறந்த நிலைக்களமாயிற்று. மீண்டும் மீண்டும் மாணவர்களுக்கு இலக்கிய விலக்கணங்களைக் கற்பித்துவந்தமையால் இவருடைய தமிழறிவு பன்மடங்கு வளர்ச்சியடைந்ததுடன், தொடர்ந்து ஆராய்ச்சி காரணமாக உண்மையான பொருளை அறிந்து நிச்சயப்படுத்திக்கொள்ளவும் வசதிபெற்றதென்பாம். புலவரவர்களின் சொந்தவூரின் கண்ணே இப்பாடசாலை அமைக்கப் பெற்றிருந்தமையால் ஐயரவர்கள் வேண்டியபோதெல்லாம் புலவரவர்களைச் சந்திக்கவும், கல்வி விஷயமாகக் கலந்துரையாடவும் வசதியுண்டாயிற்று. புலவர்களும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இங்கு சென்று ஐயரவர்களையும் சாஸ்திரியாரவர்களையுஞ் சந்திப்பதுண்டு சிற்சிலபோது ஐயரவர்கள் விருப்பப்படி மாணவர்களை அவர்கள் கற்கும் பாடங்களிற் கேள்வி கேட்பது வழக்கம். ஐயரவர்கள் தமது சம்ஸ்கிருத அறிவை விருத்திசெய்யும் விஷயத்தில் சாஸ்திரியாரவர்களும் மிக்க துணையாயினர்.

இப்பாடசாலையிற் கல்வி கற்பித்துவந்த காலமே ஐயரவர்கள் வாழ்க்கையில் முக்கியமானதாக கருதப்படல் வேண்டும். தாம் முன்னர்க் கற்றனவற்றைப் பீடிகையாகக்கொண்டு விசேடமாக இலக்கணத்துறையில் ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து வந்தனர். ஆசிரியராகவிருந்தமையால் தொல்காப்பியம், இலக்கண விளக்கம், வீரசோழியம் முதலிய புராதன இலக்கண நூல்களை மேன்மேலும் ஆராய்ந்து மிகத் திறமையாக மாணவர்களுக்குக் கற்பித்து வந்தனர். தொல்காப்பியத்துக்குப் பல்வேறு ஆசிரியர்கள் கண்ட உரைகளையெல்லாம் நன்கு ஒப்புநோக்கி யாராய்ந்ததன் பேறாக எத்தனையோ புதிய விளக்கங்கள், திருத்தங்கள், பாடபேதங்கள் என்பனவற்றைக் கண்டுகொள்ளக்கூடியவராயினர். இவைகள் யாவும் இந்நூலைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்போர்க்கெல்லாம் மிக்க உசாத்துணையாகக்கூடியன. இவரது எழுத்ததிகாரச் சொல்லதிகாரப் பதிப்புக்கள் வெளியான பின்னரே தமிழ்நாட்டறிஞர்கள் ஐயரவர்களின் அறிவின் பெருமையையும் ஆற்றலையும் உள்ளவா றுணர்ந்து மதிக்கலாயினர். புலவரவர்களுக்குப் பின் யாழ்ப்பாணத்தின் புகழைக் குன்றவிடாதும் நாவலர் மரபுநெறி பிறழாதும் பாதுகாத்து விளங்கச் செய்துவந்தவர் ஐயரவர்களே யென்பது எவரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். இப்பாடசாலையில் ஆசிரியராக-விருந்த காலத்திலே தான், புலவரவர்களின் செய்யு ளூலாகிய மேகதூதக்காரிகைக்குக் கல்வி பயிலும் மாணவர் பொருட்டு உரையும் விளக்கங்களுந் தெளிவாக எழுதிய வெளியிட்டனர். இவரது தொல்காப்பியப் பதிப்புக்கள் சிறந்த முறையில் நன்கு அச்சிடப்பெற்று வெளியாவதற்கு மிக்க உபகாரராயிருந்தவர் ஈழகேசரியின் அதிபர் திரு.நா. பொன்னையா அவர்களே. பெரும் பொருட் செலவுடன் இப்பதிப்புக்களைத் தமிழுலகுக்களித்த திரு. பொன்னையா அவர்களின் பெரும்பணியும் தமிழ் மக்களால் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியது.

## பொற்கிழிவிழா

சுயநலங்கருதாது ஐயரவர்கள் தமிழன்னைக்குச் செய்துவந்த தொண்டுகளின் பெருமையை நோக்கியும், அவர் தாமேற்ற அரிய முயற்சியைத் தளப்படியின்றி நீடித்து நடத்தும் பொருட்டாகவும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் அவருக்கு ஒரு பொற்கிழியளிப்பு விழா 1938ம் ஆண்டு ஐப்பசி மீ 5உ நடத்தப்பட்டது. இவ் விழாவை இனிது நடத்த அமைக்கப்பெற்ற சபைக்குத் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் ச. அம்பிகைபாகனவர்களும், பண்டிதமணி சி.கணபதிப்-பிள்ளையவர்களும் இணைச்செயலாளர்களாகவும், ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் தனாதிகாரியாகவுங் கடமையாற்றினார்கள். இவ்விதமான சிறந்த விழா யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முன்னர் அறியப்படாத தொன்று. அன்று யாழ்ப்பாணப் பெருமக்கள் ஐயரவர்களை வண்ணைச் சிவன்கோவிலினின்று ஊர்வலமாக வீதிவழியே யழைத்துச் சென்று மிக்க மங்களகரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் பல்லாயிர மக்கள் குழுமிய பேரவையில், வரிசை வரிசையாகப் புலவர்களும் அறிஞர்களுங் காட்சியளித்த மேடையின் மீது நடுவணாக விருக்கச்செய்து அளித்தவுபசாரம், கண்டோர் யாவர்க்கும் உள மகிழ்ச்சியையும் இறும்பூதினையும் அடையச் செய்தது. இப்பெரிய விழாவில் ஆர்வத்துடன் பங்கு பற்றாத அறிஞர்கள் இலரெனலாம். இவ் விழாவைத் தலைமை வகித்து நடத்தியவர் அக்கால அரசாங்கசபைத் தலைவராக விருந்த கௌரவ சேர் வை. துரைசுவாமியவர்களாவர். நடுநாயகமாக வீற்றிருந்த ஐயரவர்களுக்கு ஒருபால் திரு. சு. நடேச பிள்ளை, பகுதி வித்தியாதரிசி முகாந்திரம் எஸ். கந்தையா, வியாகரணமகோ பாத்தியாயர் பிரமஸ்ரீ வை. இராமசுவாமிசர்மா என்பவர்களும், மற்றைய பக்கத்தில் சுவாமி விபுலாநந்த அடிகள், வண. சுவாமி ஞானப்பிரகாசர், திரு.வே. மகாலிங்கசிவம் என்பவர்களும் வீற்றிருந்து அளித்த காட்சி இன்றும் சமுகமளித்தோர் சிந்தையை விட்டு அகலுவதன்று. தலைவரவர்கள் எழுந்து ஐயரவர்கள் தமிழ்த் தொண்டின் திறங்களையும் குணமாண்புகளையும் பாராட்டி மேலும் பல்லாண்டுகளுக்கு அவர் வாழவேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்தி ஈராயிரம் ரூபா கொண்ட பொற்கிழியொன்றைச் சபையோரின் கரகோஷத்தினிடையே வழங்கினர். அதன் பின்னர் மேற்குறித்த அறிஞர்கள் ஒவ்வொருவராக வெழுந்து ஐயரவர்களின் கல்வியறிவு, ஆராய்ச்சித்திறமை, குணமாண்புகள். என்பவற்றை மிக வுருக்கமாக வியந்து பாராட்டினர். ஐயரவர்கள் தொல்காப்பியப் பதிப்புக்களிலுள்ள நயங்களையும் அத்தொண்டின் அருமை பெருமைகளையும் விளக்கமாக உரைத்தனர். இவ்விழாவிற் சமுகமளித்ததுபோன்ற புலவர்குழாமும், மேலும் அவர்கள் ஒருங்கு சேர்ந்து உண்மையான மன விசுவாசத்துடன் ஒருவரைப் பாராட்டிக் கௌரவித்ததும் யாழ்ப்பாணத்தின் வைபவத்தில் முன்னர் ஒருபோதும் கண்டறியாத காட்சிகளாகும். பின்னும் என்றாவது இப்படியான காட்சி கிடைக்குமாவென்பதுஞ் சந்தேகந்தான். சபையோரும் இக்கண்கொளாக் காட்சியைக் கண்டு அற்புதவசத்தராயினர். இதனை எவரும் என்றும் மறக்கவியலாது. ஐயரவர்கள் கடைசியாகத் தமது பதிலுரையில் தாம் கல்வி கற்ற வரலாறுகளையும் தமது ஆசிரியர்களின் பெருமைகளையும், வேறு வாழ்க்கை வரலாற்றம்சங்களையும் விபரமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். தமக்கு அன்று செய்த உபசாரத்துக்கும் வழங்கிய பொற்கிழிக்கும் நன்றி கூறினர்.

பின்னரும் ஐயரவர்கள் தொடர்ந்து ஊக்கமாக வேலை செய்து தொல்காப்பியம் பொருளாதிகாரத்தை நன்காராய்ந்து விளக்கங்கள் திருத்தங்களுடன் இருபாகங்களாக வெளிவரச் செய்தனர். சென்னை இந்துப் பத்திரிகையில் ஐயரவர்களின் தொல்காப்பியப் பிரசுரங்களை விமர்சனஞ் செய்த பிரமஸ்ரீ P. சுப்பிரமணிய சாஸ்திரியாவர்கள் எழுதிய கட்டுரைகள் ஐயரவர்களின் ஆழ்ந்த அறிவு, ஆராய்ச்சித்திறமை, நுண்ணிய விளக்கம் என்பனவற்றிற்கு மிக்க சான்று பகருந் தகையன. இவ்வேலைகளுக்கிடையில் ஈழநாட்டில் வசித்த புலவர்களின் வரலாறுகளை மிக விபரமாகச் சிறந்தமுறையில் எழுதி. ஈழநாட்டுப் புலவர் சரிதம் என்ற பெயருடன் வெளியிட்டனர். இத்துறையில் மிகச் சிறப்பாக எழுதப்பெற்ற நூல் இதுவொன்றேயாகும்.

## மனமாற்றம்

இப்படியாகத் தமிழ்த்தொண்டாற்றி வந்த ஐயரவர்கள் மாட்டுப் பிற்காலத்திற் பெரியவோர் மனமாற்றம் சடுதியாக ஏற்படுவதாயிற்று. அது ஐயரவர்களின் வாழ்க்கையை மிகப் பாதித்ததெனலாம். மொழியைக் கற்பதனால் அறிவு வளர்ச்சியடைகின்றது அவ்வறிவை வளர்ச்சி செய்வதற்கு உணவாயிருப்பது பல்வேறு கலைகளே. சிலர் மொழியைக் கற்பதோடு திருப்தியடைகின்றனர். சிலர் அத்துடன் கலைகளையுங் கற்று அதிற் றிளைத்து அமிழ்ந்தி விடுகின்றனர். அப்பாற் செல்பவர் மிக அரியர் என்பாம். ஆனால், பொருளையறிந்து - அப்பொருளாற் பெறும் பயனையடைந்து உறுதிப்பேறு பெற்றோர் சிலரினுஞ் சிலரே. மொழியைக் கற்று அறிவைப் பெற்று கலைகளைத் தேர்ந்தும் தாகம் நீங்காநிலை மாட்டு ஏற்படுகின்றது. அறிவோ தன்னாற்றல் முழுவதையும் பயன்படுத்தி மொழியாற் சுட்டப்பெற்ற அந்த அறியாப்பொருளை இடைவிடாது அறிய முயன்றும் சித்தியடையாது மிக இளைத்து அலுப்படைந்து அந்த அறியாப்பொருளின் அடியில் வீழ்ந்து செயலற்றுக் கிடக்கின்றது. தனது வன்மை இவ்வளவுதானே யென்று கண்டு துயரமடைகின்றது. அப்போதுதான் கற்ற கல்வியும், பெற்றவறிவும் எத்துணைத்தென மனம் வீழ்ச்சியடைகின்றது. "என்செயலாலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே எல்லாம் உன் செயலே" யென்று பணிவுடன் அப்பரம்பொருளை யறிய அதன் அருளையே ஆதரவுடன் நாடுகின்றது. ஐயரவர்கள் வாழ்க்கையும் பிற்காலத்தில் 10 வருடங்களுக்கு மேலாக இப்படியாக மாற்றமடைந்தமை அறியப்படலாம். இதுவரையும் தாம் அரிதின் முயன்று கற்றனவும், அதன்பேறாக அறிந்த அறிவும், அதைக்கண்டு உலகினர் செய்த கௌரவமும் பாசத்தொடர்பினை மேன்மேலும் வன்மையடையச் செய்தனவேயன்றி, உண்மையான பேற்றினைத் தாமடைய உதவவில்லையேயென் றிரங்கினர். கற்றளவு மினி யமையுமென வெண்ணி மொழிப்பயிற்சியையும் கலைத்தேர்ச்சியையும் புறத்தே விட்டு இவைகளுக்காப்பாலுள்ள இறையுணர்ச்சியை நாடிச் சென்றது இவருள்ளம். சிந்திப்பரியதும், சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதும், முத்தி கொடுப்பது மாயுள்ள இறைவன் திருவடிக் கமலத்தையே தஞ்சமெனக் கொண்டது. பெருந்தமிழ்க் கடலாயுள்ள ஐயரவர்களது உள்ளம் அருட்கடலாகிய பரம்பொருளை நாடியது. ஆழ்ந்த தமிழறிவினையுடைய ஐயரவர்களிடம் ஆயிரக்கணக்கான நூல்களையுடைய நூல்நிலையம் இருக்க வேண்டாமா? அதுவே யொரு கல்விக் களஞ்சியமாகத் தோற்றமளிக்குமே. இதற்கு நேர்விரோதமாகப் பிற்காலத்தில் ஐயரவர்களிடம் ஒரு நூல் தானுங் கிடையாது. தமது நூல்கள் யாவற்றினையும் கல்வி கற்கும் மாணவர்களுக்கே இலவசமாகக் கொடுத்துள்ளார். நூல்கள் மாத்திரமா? வேறெந்தப் பொருள்களுங்கூடக் கிடையா. காணி பூமிதானுமில்லை. இருந்த சிறு துண்டுக் காணியையும் அவர் குலதெய்வமாகும் வருத்தலை மருதடி விநாயகப் பெருமானுக்கே ஒப்படைத்து விட்டனர். நூல்களும் மற்றைய பொருள்களும் உள்பொருளை நாடித்தாஞ் செய்யுந் தவமுயற்சிக்கு ஊறு விளைக்குமென வெண்ணினர் போலும்! ஆகவே, உலக வின்பங்கள், ஆசைகளைப் புறத்தேவிட்டு இறைவன் திருவடி நிழலையே அல்லும் பகலுஞ் சிந்தை செய்து நின்றனர்.

இப்படியாக ஐயரவர்கள் உலகத்தைப் புறத்தேவிட்டு நின்ற காலத்திற் சிற்சிலபோது மொழியைச் சார்ந்த கட்டுரைகள் எழுதி வந்ததும் சந்தேகங்கள் தெளிய வந்தோர்க்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிபுரிந்துவந்ததும் உண்மைதான். எனினும், தனது இலக்கில் -இறையன்பில் -கண்ணுங் கருத்துமாக விருந்தனர். வருத்தலை மருதடி விநாயகப் பெருமான் மீது இரட்டைமணிமாலை முதலிய பிரபந்தங்கள் பாடிவெளியிட்டுள்ளார். நயினை நாகபூஷணியம்மன் மீதும் கவிகள் யாத்ததுண்டு. பிற்காலத்தில் ஐயரவர்கள் இயற்றிய கவிகள் சொன்னயம் பொருணயத்துடன் தெய்வகளை நிறைந்தனவாய்ப் படிப்போர்க்கு மிக்க இன்பமும் பக்தியும் விளைப்பனவாயுள்ளன. இக்காலத்தில் கூடியளவு உலக வியவகாரங்களினின்று விலகி வாழ்ந்து வந்தனர்.

## பொன்னாடை போர்த்தல்

ஐயரவர்கள் இப்படியாக வாழ்ந்து வந்த காலத்தில் இன்னொரு சம்பவம் யாழ்ப்பாணத்தில் நிகழ்வதாயிற்று. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் நடத்தப்படும் 4ஆவது தமிழ்விழா 1951 ஆம் வருடம் சித்திரைத் திங்களில் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரக் கல்லூரி முன்றிலில் அமைக்கப்பெற்ற பெரிய பந்தரில் நடைபெற்றது. ஈழநாட்டின் பல பாகங்களிலிருந்து மாத்திரமன்றி தென்னிந்தியாவிலிருந்தும் நூற்றுக்கணக்காகத் தமிழறிஞர்களும் தமிழபிமானிகளும் சமுகமளித்து விழாவைச் சிறப்பித்தனர். கௌரவங்கள் பாராட்டுகளைத் துறந்திருந்த ஐயரவர்களுக்கு இவ்விழாவின் கடைசித்தினத்தன்று பொன்னாடை போர்த்து உபசரித்தனர். தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞராய் ஈழநாட்டின் பெருமையைத் துலங்கச் செய்து வந்த ஐயரவர்களுக்குச் செய்த இக்கௌரவம் அவ்விழா வைபவத்துக்கு மகுடம் வைத்தாற்போலிருந்தது. விழாப் பந்தரில் அறிஞர்கள் பன்னூற்றுவர் வீற்றிருந்த விசாலமான மேடையில் ஐயரவர்களுக்கு ஒருசார், சொல்லின் செல்வர் R.P. சேதுப்பிள்ளையும், பன்மொழிப் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் நிற்க மற்றையசாரில் விழாத் தலைவரும் சுதேசமித்திரன் பத்திராதிபருமாகும் C.R. ஸ்ரீநிவாசனவர்களும் விழா உபசரணைச் சங்கத் தலைவர் சு. நடேசபிள்ளையும் நிற்க,நடுநாயகமாக ஐயரவர்களை நிற்க வைத்து, பெலத்த கரகோஷங்கள் ஆர்ப்பாட்டங்களிடையே உலகப் புகழ்பெற்ற பௌதிக விஞ்ஞான நிபுணர் டாக்டர் K.S. கிருஷ்ணன் F.R.S. அவர்கள் பொன்னாடை போர்த்த காட்சி எவராலும் மறக்கவொண்ணாததொன்று. இச்சம்பவம் நிகழ்ந்திராவிடின் இவ் விழா பூரண பெருமையை யடைந்திருக்க மாட்டாது. ஆசைகளைத் துறந்திருந்த ஐயரவர்களை இவ்விழாவில் சமுகமளிக்கும்படி அவரை இணங்கச் செய்த முயற்சியிற் பெரும்பங்கு, கலைப்புலவர் க. நவரத்தினமவர்களையே சேரல் வேண்டும். ஐயரவர்களுக்கு இவ்விஷயம் வேண்டா வெறுப்பா-யிருப்பினும் ஈழத்துப் பெருமக்கள் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டாதிருப்பதெப்படி? இப்படியாகப் பின்னரும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரும், புலவர்மணி, பண்டிதமணி, வித்துவசிரோமணி முதலிய சில பட்டங்களைத் தமிழறிஞர் சிலருக்கு வழங்கியபோது, ஐயரவர்கள் பட்டமளிப்பு விழாவுக்குச் சமுகமளிக்கவில்லை. பட்டங்களைத் தான் விரும்பவில்லையென்றுந் தெரிவித்தனர். ஆசைகளைத் துறந்து வயதும் முதிர்ந்து இறைவன் திருவடியில் மனதினைச் செலுத்தி வந்த ஐயரவர்களுக்குப் பட்டம் என்ன சாந்தியை அளிக்குமோ? என்றாலும், மேற்படி சங்கத்தினர் தாமாகவே ஐயரவர்களின் இல்லமடைந்து "வித்வசிரோமணி" என்ற பட்டத்தை யளித்துத் தமது சங்கத்துக்குக் கௌரவத்தை ஈட்டிக்கொண்டனர். எப்படியாயினும் இச்சம்பவங்கள் ஈழவளநாட்டின் கல்விச் சிறப்பினை உலகில் நிலைநாட்டுவனவன்றோ.

## புலவர் வாழ்க்கை

ஐயரவர்களின் நிலை யிப்படியாக, புலவரவர்கள் வாழ்க்கையில் இவ்வித சம்பவங்கள் எத்தகைத்தாயினவென்று சிலர் கருதல் கூடும். புலவரவர்கள் இவ்வித வரவேற்புகள் உபசாரங்-களைக் கண்டறியார். இயல்பாகவே பாராட்டு விழாக்களை விரும்பியறியாத புலவரவர்களின் காலம் முழுவதும் தமிழாராய்ச்சிலும் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவதிலுமே செலவிடப்பட்டதாகும். தாங் கற்ற கல்வி, தாம் செய்த தொண்டுகள் என்பன, எத்துணைத்தென்று கருதி மேலும் மேலும் மொழியாராய்ச்சியிற் றொடர்ந்து உழைத்து வந்தனர். 1921 ஆம் வருடம் இலங்கையரசினர் தமிழ்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களை ஊக்கப்படுத்துவதற்காக ஒரு தொகைப் பணம் சிலர்க்குச் சந்மானஞ் செய்தனா. புலவரவர்களுக்கும் அது கிடைத்தது. இந்த வைபவத்தையொட்டி ஒரு வரவேற்பு நிகழ்ச்சியை நடத்த வித்தியாதரிசி பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்களும் வேறு அநேகரும் ஆரம்பித்த முயற்சிக்கு புலவரவர்கள் இணங்கவில்லை. அரசினர் சந்மானத்தைத் தாம் பெற்றதுபற்றிப் புலவரவர்கள் பின்னர் துக்கப்பட்டதுண்டு. தம்முடைய தராரத்தை நன்கறிந்து அரசினர் சந்மானம் வழங்கியதாகப் புலவருக்குத் தோன்றவில்லை. அப்படியே தமிழைக் கற்றவர்கள் சிலரும், கல்லாதவர் பலருமாகக் கூடிச் செய்யும் உபசாரங்கள் போலியாகத் தோற்றாதாவென்றும்எண்ணினர். மேலும், புலவரவர்கள் சிந்தை அந்தியகாலத்தில் ஐயரவர்களடைந்தது போன்ற சாந்திநிலையை அடைந்திலது. இன்னும் எத்தனையோ புதிய நூல்கள் இயற்றல் வேண்டும், விளக்கப்படாதிருந்த அநேக விஷயங்கள் கட்டுரைகள் மூலம் உலகறியச் செய்தல் வேண்டும், சொல்லாராய்ச்சி மேலும் நடந்து செல்லல்வேண்டும், இலக்கண இலக்கிய விஷயமாக அறியப்பட வேண்டியன பலவுள, என்றெல்லாம் அல்லும் பகலுஞ் சிந்தித்துக் காலத்தோடு பந்தயமோடித் தமிழ்த் தொண்டு புரிவாராயினர். இலக்கண வரம்புடைய தமிழ் மொழிக்கு என்ன ஆபத்து வருமோவென்ற அச்சம் நாவலர் மரபுக்கு இடையூறு வருமோ என்ற கவலை பிழையான நூல்களைக் கண்டிப்பாரில்லையே யென்ற இரக்கம் வருங்காலத்திலே தமிழை மரபு தவறாது மக்கள் கற்பாரா என்ற ஏக்கம், என்பன வெல்லாம் புலவரவர்கள் மனதை வியாகுலப்படுத்தின. இவ்விதமான நினைவுகள் அந்தியகாலத்தில் ஐயரவர்களுக்குக் கிடையா. புலவரவர்களுக்குத் தமது நூல்களிலிருந்த நாட்டம் இம்மட்டன்று. அந்நூல்களை அட்டவணைப்படுத்தி ஓர் இடாப்பிற் பதிந்து வைத்தனர். அவைகளை மிக்க அவதானமாகப் பாதுகாத்தும் வந்தனர். தமக்குப்பின் அந்நூல்கள் நிலை யாதாகுமோ என்ற கவலையும் ஒருபக்கம். இப்படியாகச் சொல்லாராய்ச்சியிலும் மொழிவிருத்தியிலும் பணியாற்றி வந்த புலவரவர்களை இறுதியிற் காலவெள்ளம். விழுங்குவதாயிற்று.

## இறுவாய்

ஆனால், ஐயரவர்கள் ஏற்ற காலத்திலேயே தமது மனநிலையை இறையுணர்ச்சியில் வழிப்படுத்திக் கொண்டனர். காலங் கடந்த அப் பரம்பொருளை அறியுந்துறையை நாடி நின்றது அவர்கள் சிந்தை. தாம் கற்ற கல்வியுங் கேட்ட கேள்வியும் எத்துணைப் பயனை உலகுக் களித்த தென்பது பற்றிய கவலையும் அவருக்குக் கிடையாது. இறுதிக் காலத்திலே ஐயரவர்களைக் கண்டோர் ஒரு தமிழ் முனிவரைக் கண்டதாகவே கருதினர். நிற்க இறுதிக்காலத்தில் ஐயரவர்கள் பொருட்கஷ்டமடைந்தார் உதவி புரிவாரில்லாது மனத் துயரடைந்தார் என்றெல்லாம் அறியாமை காரணமாகச் சிலர் பேசவும் எழுதவுந் தொடங்கினர். இவைகளுக்குச் சிறிதும் ஆதாரமே கிடையாது. ஐயரவர்களுக்குப் பொருளாசை அற்றிருந்தமை ஒருவாறாக, அவருக்கு வேண்டிய வேண்டிய உதவிகளை ஈழகேசரி நிலையத்தினர் குறிப்பறிந்து வழங்கி வந்தனரென்பதை இங்கு அவசியங் குறிப்பிடல் வேண்டும். அவருடைய உறவினரும் மாணவர்களும் அவருக்கு வேண்டிய சரீர வுதவிகளைத் தாராளமாக வழங்கி வந்தனர். அவருக்கு எவ்வித கவலையுங் கிடையாது. கடைசித் தினத்தன்று தானும் அவருடம்பில் எவ்வித வேற்றுமையுந் தோன்றவில்லை. அதிகாலை யெழுந்து காலைக் கடனை முடித்துக் கொண்டு தமது ஆச்சிரமத்துக்குச் சென்று படுக்கையிற் படுத்தது தான். தெரியும். அவ்வளவுதான். நாடோறும் உன் பாத தாமரைகளே தஞ்ச மென்று வணங்கித் துதித்துத் தியானித்து வந்த வருத்தலை மருதடி விநாயகப் பெருமானின் பாதநீழலை அவருடைய ஆத்மாவானது அடைந்து சாந்தியெய்திற்று. நீண்ட காலமாகத் தமிழ்த் தொண்டாற்றிய ஐயரவர்கள் பெருமையும், புனித வாழ்க்கையும், இறையன்பும் என்றும் யாவராலும் போற்றிக் கொண்டாடற்குரியன வென்பாம்.

தமிழிலக்கிய இலக்கண வரம்பு வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிஞராய் விளங்கிப் பெருந் தொண்டாற்றியவர்

வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம்

**யா**ழ்ப்பாணத்தின் பழமைமிக்க செந்தமிழ்ப் பண்ணைகளுள் சுன்னாகமும் ஒன்று. அங்கு பரம்பரை பரம்பரையாகப் புலமை பெற்றிருந்த ஒரு குடும்பத்திற் பிறந்தவர், முத்துக்குமார கவிராயர் என்னும் புலவர் பெருமானாவார். அவருடைய தம்பி, சின்னத்தம்பிப் பிள்ளை என்பவரும் பெரும்புலவரே. அவருடைய மகனான அம்பலவாணப் புலவருக்கு 1854 ஆம் ஆண்டு பிறந்தவர் குமாரசுவாமிப் புலவராவார்.

தமது தந்தையாரிடம் ஆரம்பக்கல்வியைப் பெற்றுக்கொண்ட புலவர், ஆங்கிலங் கற்பதற்காக மல்லாகம் ஆங்கில பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஓரளவு ஆங்கில அறிவைப் பெற்றுக் கொண்டதும், தமிழ் இலக்கண இலக்கியங்களை பூ. முருகேச பண்டிதர், அ. நாகநாத பண்டிதர் ஆகியோரிடமும் கற்றுத் தேர்ந்தார். அளவெட்டி கனகசபைப் புலவரிடமும் சிற்சில இலக்கண நூல்களைப் பாடங்கேட்டதோடு, தருக்கமும் கற்றுக்கொண்டார். தமது பதினாறு வயதிலே, வண்ணார் பண்ணையில் வசித்து வந்த ஆறுமுக நாவலரிடம் இலக்கண, இலக்கியங்களில் தமக்கேற்பட்ட ஐயங்களைக் கேட்டு தெளிந்து கொண்டார். இவ்வாறு அறிஞர்கள் பலரிடம் கற்ற குமாரசுவாமிப் புலவர், ஆழமான அறிவைப் பெற்றுக்கொண்டதோடு, இயல்பாகவே அமைந்திருந்த புலமையையும் வளர்த்துக்கொண்டார்.

அறிவு நிரம்பப்பெற்ற புலவருக்கு ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1878 ஆம் ஆண்டு ஆசிரியப்பணி நியமனம் கிடைத்தது. அவ்வித்தியாசாலையானது, நாவலர் காட்டிய வழியில், சி.வை. தாமோதரம்பிள்ளையால் 1876 இல் நிறுவப்பட்டதாகும். அதன் தலைமை ஆசிரியரான முருகேச பண்டிதராவார். முருகேச பண்டிதர் 1884 இல் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, புலவரே தலைமை ஆசிரியராக நியமிக்கப்படலானார்.

தாமோதரம்பிள்ளை அவர்கள் நோயுற்றதனால், அவ்வித்தியாசாலையைத் தொடர்ந்து நடத்த முடியாதநிலை ஏற்பட அஃது 1898 இல் மூடப்பட வேண்டியதாயிற்று. அதுவரையும் அங்கு கடமையாற்றி வந்த புலவர், பின்னர் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். அவ்வித்தியாசாலையின் அங்கமாகப் பிற்காலத்தில் நிறுவப்பட்ட காவிய பாடசாலையின் ஆசிரியராகவும் புலவர் பணியாற்ற வேண்டியதாயிற்று. இவ்விரு கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து கல்விப்பணி ஆற்றிவந்த புலவர், வாதநோயால் பீடிக்கப்பட்டு நடக்கமுடியாத நிலை ஏற்படவே 1919 இல் ஆசிரிய பதவியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு கன்னாகத்திலிருந்த தமது வீட்டிலேயே தங்கிவிட்டார். பேரறிஞராய் விளங்கிப் பெருந்தொண்டாற்றிய குமாரசுவாமிப் புலவர் தமது அறுபத்தெட்டாவது வயதில், 1922 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## ஆசிரியராக இருந்து ஆற்றிய அருந்தொண்டுகள்

குமாரசுவாமிப்புலவர் ஆசிரியராகவும், உரைகள், புத்துரைகள், அரும்பதவுரைகள் எழுதிய உரையாசிரியராவும் நூற்பதிப்பாசிரியராகவும், பிரபந்தங்கள் இயற்றிய செய்யுளாசிரியராகவும், வசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் ஆக்கிய வசனநடை ஆசிரியராகவும், நூல்களியற்றிய நூலாசிரியராகவும், அகராதி தொகுத்த பேராசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளார்.

ஏழாலை சைவப்பிரகாச - வித்தியாசாலையில் முதலில் ஆசிரியராகவும், பின்னர் தலைமை-யாசிரியராகவும், தமிழ்வளர்த்த தாமோதரனாரால் நியமிக்கப்பட்ட புலவர், ஆங்கு இருபது ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளார். நன்னூல், தொல்காப்பியம், முல்லையந்தாதி, கம்பரந்தாதி, தணிகைப்புராணம், கந்தபுராணம், இரகுவம்சம் முதலிய நூல்களை ஆழமாகவும் அகலமாகவும் அர்ப்பணிப்புணர்வுடன் அவர் கற்பித்து வந்ததால், அங்கு கற்ற மாணாக்கர் பிற்காலத்தில் புகழ்பெற்ற தமிழறிஞர்களாக விளங்கினார்கள்.

வித்துவசிரோமணி சி. கணேசையர், சுன்னாகம் பண்டிதர் மாணிக்க தியாகராசா, தெல்லிப்பழை பாலசுப்பிரமணிய ஐயர், பன்னாலை வித்துவான் சிவானந்த ஐயர் ஆகியோரின் பெயர்களை உதாரணமாகக் காட்டலாம். ஏழாலை வித்தியாலயத்தில் கடமை ஆற்றிய இறுதிக்காலத்தில் பல மாதங்களாக வேதனம் பெறாது குமாரசுவாமிப் புலவர் பணியாற்றினார் என்பதை அறியும்போது, அவரின் உயர்வு உணரப்படுகிறதல்லவா?

ஏழாலையிலிருந்து வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரிய நியமனம் பெற்று வந்த புலவர், அங்கும் சிறந்த முறையில் போதித்து வந்தார். நாவலரால் 1848 இல் நிறுவப்பட்ட அந்த வித்தியாசாலையை, நாவலருக்குப் பிறகு உயர் கல்விப்பீடமாக வளர்தெடுத்தவர் புலவர்தானென்று போற்றப்படுகிறார்.

சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஓர் அங்கமாக நிறுவப்பட்ட காவிய பாடசாலையும் புலவரால் தமிழ் மரபுக் கல்வியின் உறைவிடமாக வளர்க்கப்பட்டது. மாணாக்கர்கள் ஆங்கு ஆசிரியர்களுடன் ஒன்றாக உண்டு, உறைந்து மரபு முறையான கல்வியைப் பெற்றுக்கொண்டனர். யாவும் இலவசமாக வழங்கப்பட்ட காவிய பாடசாலையிலே, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் மட்டுமன்றி, மட்டக்களப்பு வவுனியா முதலிய ஏனைய தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்தோரும் அனுமதிக்கப்பட்டுப் பயனடைந்துள்ளனர். காவிய பாடசாலையிலே புலவரிடம் பாடங்கேட்ட பலர் பிற்காலத்தில் பேரறிஞர்களாய்த் திகழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்டிதர் இரத்தினேஸ்வர ஐயர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் மருதையனார் ஆகியோரையும், மட்டக்களப்பைச் சேர்ந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வவுனியாவைச் சேர்ந்த பண்டிதர் இராசையனார் ஆகியோரையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தனிப்பட்ட வகையில், புலவரிடம் பாடங்கேட்டோரும், தமது ஐயங்களைப் போக்கிக் கொண்டோரும் மிகப்பலர். அவர்களுள், பண்டிதரான வித்தகம் கந்தையாபிள்ளை, மகாவித்துவான் கணேசையர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வாதநோயாற் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையில் இருந்த நிலையிற்கூட, தம்மிடம் வந்த மாணாக்கருக்கு உயர்தர இலக்கண இலக்கிய நூல்களையும், சமஸ்கிருதத்தையும் புலவர் கற்றுக் கொடுத்தாரென்பதை அறியும்போது அவருடைய ஒப்பற்ற தமிழ்த்தொண்டைப் போற்றாதிருக்க முடியுமா?

## உரைநடையில் முன்னோடி

புலவரவர்கள் தமது நண்பராகிய திருகோணமலை அகிலேச பிள்ளை, பழைய ஏடுகளைப் பரிசோதித்து கையெழுத்துப் பிரதியாகத் தயாரித்த திருக்கரசைப் புராணத்துக்கு அரியதோர் ஆராய்ச்சி உரை எழுதிக் கொடுத்துள்ளார். அந்நூல் யாழ்ப்பாணம் மயிலிட்டி அச்சியந்திர சாலையில் 1893 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிடப்பட்டது. திருவாதவூரடிகள் புராணத்தின் மூலத்தைத் திருத்திப் பதிப்பித்த புலவர், பின்னர் அதனை உரையுடனும் பதிப்பித்துள்ளார். குணசாகரரால் இயற்றப்பட்ட யாப்பருங்காலத்தையும், குணவீர பண்டிதரால் ஆக்கப்பட்ட வெண்பாப் பாட்டியலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் எழுதிய பொழிப்புரைகளுடன் 1900 ஆம் ஆண்டில் புலவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். குமரகுருபர தேசிகரின் நீதிநெறி விளக்கத்துக்கு உரை எழுதிய புலவர் அதனை 1902 இல் வெளியிட்டுள்ளார். தண்டி அலங்காரத்துக்கு புத்துரை கண்ட புலவர் அதனை 1903 இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்ட மறைசை அந்தாதிக்கு மிகச்சிறந்த உரையெழுதிய புலவர் அதனை 1911 இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவ்வாறே தணிகைப் புராணத்தைத் தமது ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் புலவர் 1929 இல் பதிப்பித்துள்ளார்.

தொண்டை நாட்டிலுள்ள செங்கற்பேட்டையைச் சேர்ந்த காங்கேயர் என்பாரால் வெண்பா யாப்பிற் பாடப்பட்ட 200 செய்யுள்களைக் கொண்ட உரிச்சொல் நிகண்டின் பன்னிரு தொகுதிகளையும் புலவர் 1905 இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

புலவரும் திருகோணமலை கனகசுந்தரம் பிள்ளையும் சேர்ந்து களவியல் எனப்படும் நம்பியகப் பொருளுக்கு புத்துரை ஒன்றை எழுதி வெளியிட்டதோடு, கம்பராமாயணம் பாலகாண்டத்துக்கு அரும்பத விளக்கவுரை ஒன்றினை எழுதியும் வெளியிட்டுள்ளனர். பாலகாண்ட விளக்கவுரையானது பாலகாண்டத்தை கற்போருக்கு சந்தேகம் எழும்போதெல்லாம் அவற்றைப் போக்கி, உண்மைப் பொருளை உணர்ந்து கற்றிட பேருதவியாக அமைந்துள்ளது. அவ்வாறான அரும்பத விளக்க-வுரையை கம்பராமாயணம் முழுவதற்கும் எழுதவேண்டுமென அவர்களிருவரும் கொண்டிருந்த விருப்பம் நிறைவேறிட முன்னர் அவர்கள் இறைபதமடைந்து விட்டனர்.

## அகராதி தந்த அறிஞருக்கு அயராது உதவி செய்தவர்

எந்த யாப்பு வகையிலும் செய்யுளியற்றும் ஆற்றல் கைவரப் பெற்றிருந்த குமாரசுவாமிப் புலவர், மாவை இரட்டை மணிமாலை, மாவைப்பதிகம், துனுவைப்பதிகம், அத்தியடி விநாயகரூஞ்சல், மிலேச்சமத விகற்பக்கும்மி, அமராபதிபூதூர் பாலவிநாயகர் பதிகம் முதலிய பல பிரபந்தங்களையும், தனிச்செய்யுள்கள் பலவற்றையும் ஆக்கியுள்ளார். சொற்சுவையும், பொருட்சுவையும் மிக்க செய்யுள்கள் யாவும் புலவரின் புலமையைப் புலப்படுத்துவனவாயிருக்கின்றன.

புலவரால் இயற்றப்பட்ட சிசுபாலசரிதம், கண்ணகி கதை என்பனவும், அவரால் வெளியிடப்பட்ட நூல்களுக்கு எழுதியுள்ள உரைகளும், செந்தமிழ், தமிழ்ப் பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்த இலக்கிய இலக்கணம் தொடர்பான அவருடைய ஏராளமான கட்டுரைகளும் அவரது சிறந்த உரைநடையை விளக்குவனவாய் இருக்கின்றன.

நன்னூலார் வகுத்துக்கூறிய நட, வா, மடி, சீ முதலிய வினைப்பகுபதங்களுக்கும், பகுதி விகுதி முதலிய உறுப்புகளை பகுத்துக்காட்டி, "வினைப்பகுபத விளக்கம்" என்னும் நூலினை ஆக்கிய புலவர் அதனை 1913 இல் வெளியிட்டுள்ளார். அந்நூல் பிரசுரமாகி ஒரு சில ஆண்டுகளில் அதன் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டமை அதன் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது. "இலக்கணச் சந்திரிகை' என்னும் பிறிதொரு நூலையும் புலவர் இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் நன்னூல் கற்போருக்குப் பேருதவியாக அமைந்துள்ளனவென அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

'அகராதி தந்த அறிஞர்' எனப் பாராட்டப்படும் வைமன் கதிரவேற்பிள்ளை என்பார், செந்தமிழ் அகராதி ஒள்றினைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டபோது அவருக்கு உதவிய அறிஞர்களுள் குமார சுவாமிப் புலவரும் ஒருவர். அகராதி வேலை முற்றுப்பெற முன்னர் எதிர்பாராத நிலையில் கதிரவேற்பிள்ளை இயற்கை எய்திய போதிலும், அந்த அகராதி நூலானது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால், "கதிரவேற் பிள்ளை அகராதி" என்ற பெயரோடு 1910 இல் வெளியிடப்படலாயிற்று. 'இலக்கியச் சொல்லகராதி என்னும் பெயரில் புலவரால் 1924 இல் வெளியிடப்பட்ட நூலானது, சங்க இலக்கியங்களைக் கற்போருக்குப் பயனுள்ளதாக இருப்பதோடு, அகராதி வளர்ச்சியில் சிறப்பான ஓர் இடத்தையும் பெறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## தமிழ்ப் புலவர்களின் சரித்திரம் தந்தவர்

சமஸ்கிருதமொழியில் மிகுந்த ஆற்றல் கொண்டிருந்த புலவர், அம்மொழியிலிருந்த சிறந்த சில படைப்புகளை சாணக்கிய நீதிவெண்பா, இராமோதந்தம், மேகதூதக் காரிகை, இதோபதேசம் எனத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். புலவரின் மொழிபெயர்ப்பை அறிஞர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். சாணக்கிய நீதிவெண்பாவிலிருந்து ஒரு செய்யுளை உதாரணமாகப் பார்க்கலாம்:-

"யாசகத்தால் மானம்போம் யார்க்கும் இசைவற்ற
போசனத்தால் மேற்குலமும் போகுங்காண் - பேசுசெல்வம்
இன்மையாற் புத்திபோம் எச்செயலும் சோம்புபெறுந்
தன்மையால் போயொளிக்கும் தான்."

குமாரசுவாமிப் புலவரின் பிறிதொரு தமிழ்த்தொண்டு, 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலினை ஆக்கி வெளியிட்டமையாகும். இந்நூலானது தமிழ்ப் புலவர் வரலாற்றைக் கூறுவதற்கென இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களுள் மூன்றாவதாகும். முதலாவது நூல், புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி என்பவரால் "தமிழ் புளூட்டாக்" (Tamil Plutarch) என்னும் பெயரில் ஆங்கில மொழியில் எழுதப்பட்டு 1859 இல் வெளியிடப்பட்டது. அந்த நூலில் 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இரண்டாவது நூல், யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த, ஆர்ணல்ட் சதாசிவம் பிள்ளை என்பவரால் 'பாவலர் சரித்திர தீபகம்" என்னும் பெயரில் எழுதப்பட்டு 1886 இல் வெளியிடப்பட்டது. அந்த நூலில் 411 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. மூன்றாவது நூல் குமாரசுவாமிப் புலவரால் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் பெயரில் எழுதப்பட்டு 1916இல் வெளியிடப்பட்டது. அந்நூலில் 182 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. புலவர் எழுதிய மேற்படி நூலின் இரண்டாவது பதிப்பு, மேலும் 26 புலவர்களின் வரலாற்றையும் சேர்த்து புலவரின் மகனாரான முத்துக்குமார சுவாமிப்பிள்ளை என்பவரால் 1951 இல் வெளியிடப்பட்டுள்ளது.

புலவர் தாம் எழுதி வெளியிட்ட தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் "உபக்கிரக மணிகை" என்னும் தலைப்பில் எழுதிய நீண்ட முகவுரையில், தமிழ்ப் புலவர்களுக்குரிய இலக்கணத்தை,

"தமிழ்மொழிக்கண் உள்ள இலக்கிய இலக்கணங்களை களங்கமறக் கற்றுத் தெளிந்த மெய்யுணர்வும், பிரபந்தஞ் செய்யும் வலிவுமுடையவர்களே புலவர்களென", வரையறை செய்து கூறியுள்ளார். 'புலவர்' என்னும் சொல்லை விளக்கும்போது, அறிவைக்குறிக்கும் 'புலம்' என்பதைப் பகுதியாகவும் 'அர்' என்பதை விகுதியாகவும் கொண்டுள்ள 'புலவர்' என்னும் சொல், அறிஞர் என்று பொருள் தருமெனவும் குறிப்பிட்டுள்ளார். நிகண்டு நூலிலே, "புலவரானவர், இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழும் முறையே பயின்று, ஐந்திலக்கண நெறிகளும் தழுவி, கருங்கவி (ஆசுகவி), இன்பகவி (மதுரகவி), அருங்கவி (சித்திரகவி), பெருங்கவி (வித்தாரகவி) என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் வலியமைந்த அறிஞர்" எனக் கூறப்பட்டுள்ள கருத்தை அடியொற்றியதாகவே புலவரின் கூற்று அமைந்திருக்கக் காண்கிறோம்.

புலவர் தமது காலத்திலே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான, சி.வை. தாமோதரம் பிள்ளை, த. கைலாசபிள்ளை, வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளை, ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை, புலோலி குமாரசுவாமிப் புலவர், சபாரத்தின முதலியார், பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதியார் முதலியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவ்வாறே மட்டக்களப்பைச் சேர்ந்த வித்துவான் பூபாலபிள்ளை, பண்டிதர் மயில்வாகனன் (சுவாமி விபுலாநந்தா), ஆகியோருடனும், திருகோணமலையைச் சேர்ந்த வே. அகிலேசபிள்ளை, தி.த. கனகசுந்தரம்பிள்ளை ஆகியோருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் உ.வே. சாமிநாதையர், மகாவித்துவான் ரா. ராகவையங்கார், இராமநாதபுர ஜமீந்தாரான பாண்டித்துரை முதலிய அறிஞர்கள் பலரோடு புலவர் தொடர்பு கொண்டிருந்தார். மேற்படி தொடர்புகள் யாவும் அவரின் சீரிய தொண்டுக்கு உதவுவனவாயமைந்தன.

153296


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ்க் கல்வியை முன்னெடுத்துச் சென்றவர்

நாவலரின் தமையனாரின் மகனாரும் அறிஞருமான கைலாசபிள்ளை, நாவலர் காட்டிய வழியிலே தமிழ்மொழியை விருத்தி செய்வதையும், அதற்கான உயர் வகுப்புகளை நடத்தி பட்டங்களும் பரிசில்களும் வழங்குவதையும் நோக்கங்களாகக் கொண்டு 1898 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களுள் ஒருவராகவும், 1902 ஆம் ஆண்டிலிருந்து அதன் செயலாளராகவும் பெரும்பணியாற்றிய புலவர் அதன் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

1901 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் தலைவராக விளங்கிய இராமநாதபுர ஜமீன்தாரான பாண்டித்துரைத்தேவர், பரீட்சைகள் நடத்துவது பற்றியும், பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்கள் பற்றியும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த தமிழ்ச் சங்கத்திடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டதாக அறிகிறோம். அவ்வாறான ஆலோசனைகளை வழங்கியவர்களுள் குமாரசுவாமிப் புலவர் குறிப்பிடத்தக்கவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சைகள் நடைபெறத் தொடங்கியதும், பண்டித பரீட்சைக்குரிய தமிழ்மொழி, தமிழ் இலக்கணம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சகர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட புலவரே, பரீட்சகர் பட்டியலில் முதல் இடத்தையும் பெற்றிருந்தார். அத்துடன் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை, மதுரைத் தமிழ்ச் சங்க மாத இதழான செந்தமிழுக்கு அனுப்பி வைக்குமாறும் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் புலவர் கேட்கப்பட்டிருந்தார் என்பதையும் அறிய முடிகிறது.

தமிழ்க்கல்வியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் கல்வித்திணைக்களத்தின் அங்கீகாரத்தோடு, யாழ்ப்பாணத்தில், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை 1921 இல் நிறுவும் பணியில் சுன்னாகம் சதாசிவ ஐயரோடு, பண்டிதர் மயில்வாகனன் (சுவாமி விபுலாநந்தா), குமாரசுவாமிப் புலவர், பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் ஆகிய அறிஞர்களும் முக்கிய பங்கு வகித்தனர். பாடத்திட்டங்களை அமைப்பதிலும், பரீட்சைகளை நடத்துவதிலும் புலவர் ஆற்றியபணி குறிப்பிடத்தக்கது.

புலவரவர்களின் ஆண்மக்களாகிய அம்பலவாண பிள்ளை, முத்துக்குமார சுவாமிப்பிள்ளை ஆகியோர், தந்தை காட்டிய வழியில் தங்களாலான தொண்டுகளைச் செய்துள்ளனர். அம்பலவாணப்பிள்ளை, "குமாரசுவாமிப் புலவர்" என்ற நூலை ஆக்கியுள்ளார். முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, புலவரால் இயற்றப்பட்ட தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார்.

தமது கடைசி மூச்சுவரை தமிழ்ப்பணியாற்றித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மிகச்சிறந்ததோர் இடத்தைப்பெற்று இறைவனடி சேர்ந்த குமாரசுவாமிப் புலவர் என்றென்றும் தமிழ் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பார்.

நன்றி — "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாட்டனார்

**திருமதி சிவசோதி துரைசிங்கம்**

*இளைப்பாறிய ஆசிரியை . இராமநாதன் கல்லூரி. சுன்னாகம்*

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் என் பாட்டனார் இந்நிலவுலகில் வாழுங்காலை நான் பிறந்தேனல்லேன். ஆனாலும் அவர் வாழ்க்கையைப் பற்றி என் பெற்றோர் உற்றோர் வாயிலாக அறிந்த சில செய்திகளைக் கொண்டு அன்னாரைப்பற்றி எழுதும் வாய்ப்புக் கிடைத்தமைபற்றி நான் மிக்க மகிழ்வும் பெருமையும் அடைகின்றேன்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரைத் தமிழுலகம் நன்கு அறியும். வாழ்நாள் முழுவதும் இடையறாது உழைத்துத் தமிழன்னைக்குச் சிறப்புச் செய்த ஈழவளநாட்டுப் புலவசிகாமணிகளுள் இவருமொருவராவர். பல புதிய நூல்களை ஆக்கியும் பழைய நூல்களைப் புதுக்கியும் ஏறக்குறைய அறுபது நூல்களைப் பதிப்பித்த அன்னாருக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

என் பாட்டனார் முத்தகக் கவிபாடுவதில் வித்தகராகிய வரகவி. முத்துக்குமாரகவியார் பரம்பரையில் உதித்த சைவசீலராகிய அம்பலவாண பிள்ளையவர்களின் அருந்தவப் புதல்வராவர். தொடக்கக்கல்வி கற்றபின்பே பாட்டனார் அவர்களைத் தகப்பனார் ஆங்கிலப் பயிற்சி பெற மல்லாகம் ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்பினார். ஆங்கு அவர் நான்காம் வகுப்பிற் கல்வி பயிலுங்காலை தமது கற்பலகையில் உள்ள எழுத்தை எச்சில் பூசியழித்த அனாசாரத்தைக் கண்ட பாட்டனாரின் தகப்பனார், மகனை ஆங்கிலப் பாடசாலையினின்றும் நிற்பாட்டி அவ்வூர் வாசியாகிய முருகேச பண்டிதரிடம் தமிழ் கற்க விடுத்தார். இவர் முருகேசு பண்தரிடம் இலக்கண இலக்கியங்களை முறையே கற்றனர். பண்டிதரிடம் கற்றதனோடமையாது ஆறுமுகநாவலர், இணுவில் பஞ்சாட்சர ஐயர், அளவெட்டி கனகசபைப்புலவர், என்போரிடத்துஞ் சென்று இலக்கியங்களிலெழுஞ் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தனர்,

இளம் பராயத்திலேயே "வினைப் பகுபத விளக்கத்தை எத்தனை வருடம் ஆராய்ச்சி செய்து தொகுத்தீர்களோ தெரியவில்லை" என்று "மகாமகோபாத்தியாயர்" சாமிநாதையர் அவர்களே புகழ்ந்திருக்கின்றார்கள். "வினைப்பகுபதம்" என்னும் நூலை இயற்றும்போது புலவரவர்கள் இராப்பகல் சொற்களின் பகுதி, விகுதிகளைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே ஆழ்ந்திருப்பார். எவ் வேலையில் ஈடுபட்டிருந்தாலும் இலக்கணவாராய்ச்சியும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். நண்பர்கள் சூழ்ந்திருக்குஞ் சமயங்களிலும், சிற்சில நேரங்களில் அவர்களோடு சில வார்த்தைகள் பேசுவாரேயன்றி ஏனைய நேரங்களில் தமது ஆராய்ச்சியில் திளைத்துப்போயிருப்பார். ஒரு சனிக்கிழமையன்று உடம்பெல்லாம் எண்ணெய் பூசியவண்ணம் கிணற்றண்டை சென்ற என் பாட்டனார் அரப்பு, எலுமிச்சங்காய் முதலியவற்றைத் தேய்த்தபடி கண்களும் விழித்துப் பார்க்க இயலாத நிலையில், விரைவாக ஓடிவந்து தனது மக்களைக்கொண்டு கடதாசி ஒன்றில் சில சொற்களின் முடிவைக் குறிப்பித்தனர் என்ற நிகழ்ச்சியை என் தகப்பனார் கூறக் கேட்டுச் சுவைத்தேன். சில அபூர்வமான இலக்கண முடிவுகள் பாட்டனாரின் நினைவுக்குத் திடீரென வரும்பொழுது அவற்றைத் தவறவிடாது உடனுக்குடன் குறிக்கும் வழக்கம் இவருக்கு இருந்ததென்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நூல்களின் உரைகளில் உண்டாகும் பிழைகளைக் கண்டுபிடிப்பதில் புலவரவர்களுக்கு இயல்பாகச் சிறந்த வன்மையுண்டு, எத்தகைய நூலினை வாசிக்கும்போதும் பென்சிலால் அவற்றிற் காணும் பிழைகளைத் திருத்தி எழுதிக் குறித்துக் கொண்டே போவார். தாங்காணும் பிழைகளைப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தும் வழக்கமும் இவரிடம் உண்டு. எத்துணைப் பெரும்புலவர்கள் எழுதிய நூல்களிலும் பலதிறப்பட்ட பிழைகளை எடுத்துக்காட்டத் தவறமாட்டார். "நற்றிணை உரைப் பிழைகள்", "சீவகசிந்தாமணிப் பதிப்புப்பிழைகள்" "திருவிளையாடற் புராண உரைப்பிழைகள்" முதலிய பல கண்டனங்களை வரைந்து, தமது நூலாராய்ச்சி வன்மையை யாவரும் மெச்சும்படி பத்திரிகைகளில் வெளியிட்டார். கண்டனங்களாற் பகைமையும் ஏற்படுவதுண்டு. "வேத்துணையோர் பரிபாடல்" என்று பிழைபட எழுதப்பட்ட நூற்பெயரின் சரியான உருவத்தைக் கண்டுபிடித்தவரும் அவரே.

"செந்தமிழ்", "வித்தியாபானு" முதலிய செய்தித்தாள்களுக்கு எழுதிய இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்த பல தமிழ்நாட்டு அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பு பூண்டார். அவர்களுள் செந்தமிழ்ச் செல்வர்களான பாண்டித் துரைத்தேவர், இராகவையங்கார், அம்பலவாண-தேசிகன் சிதம்பரநாத முதலியார், செந்திநாதயோகிகள், முத்தையாபிள்ளை என்போர் முக்கியமானவர்களாவர். இவர்களை நேரிற்கண்டுகளித்தற் பொருட்டும் தலயாத்திரை செய்யும் நோக்கமாகவும் 1909 ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் பிரயாணமாயினர். பாரதநாட்டிற் பல இடங்களுக்குச் சென்று அன்பர்கள் எல்லோருடனும், அளவளாவினர். திருவாவடுறை ஆதீனத்துப் பண்டாரச் சன்னிதியாகிய அம்பலவாணதேசிகர், புலவரவர்களுக்கு நல்லுபசாரஞ் செய்து விலையுயர்ந்த பட்டுக்களையளித்துக் கௌரவித்தனர். அக்காலத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவராய் இருந்த பாண்டித்துரைத் தேவரும் பாட்டனார் அவர்களுக்கு மதிப்புச் செய்தனர். என்பாட்டனார் கற்றவர் சமூகத்துடன் நெருங்கிப் பழக விருப்பமுடையவர். தமது நூல்களைக் கொடுத்தும் மாணவர்களைக் கற்பிக்கும் நற்குணம் படைத்தவர்.

## குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

*சுவாமி விபுலானந்தர் (1911)*

உ
சிவமயம்

கத்தோலிக்க இங்கிலிஸ் பள்ளிக்கூடம்
கல்முனை, மட்டக்களப்பு.
7-9-11.

மகாகனம் பொருந்திய குமாரசுவாமிப்புலவர் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு அதிக தாழ்மையுடன் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்

ஐயா!

அடியேன் ஷேமம். தேவரீருடைய ஷேமாதிசயங்களை அறிய அதிக ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அடியேன் தங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்திருக்கிறேன்.

தயை செய்து தொல்காப்பியப் பொருளதிகாரப் புத்தகம் ஒன்று வீ.பி. பார்சலாக அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்
தங்களன்புள்ள
சா. மயில்வானம் உபாத்தியாயர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்தின் (Modern) உருவாக்கமும் குமாரசுவாமிப் புலவரும் (1855 - 1922)

*கலாநிதி செ. யோகராசா*

*கிழக்குப் பல்கலைக் கழகம்*

தமிழ் இலக்கிய வரலாற்றிலே இருபதாம் நூற்றாண்டு நவீனகாலம் என்று அழைக்கப்படுகின்றது. முன்னைய காலங்களை விட, பிரக்ஞை பூர்வமாக நவீனம் (Modern) பற்றிய உணர்வும் சிந்தனைகளும் இவ்வழி நவீன இலக்கியம் சார்ந்ததும் அதற்குப் பின்புலமாயமைந்ததுமான செயற்பாடுகளும் இடம்பெற்ற காலம் இதுவே. என்னும், இதற்கான ஊற்றுக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே சுரக்கத் தொடங்கிவிட்டன என்பது மனங்கொள்ளத்தக்கது.

மேற்கூறிய மாற்றங்களுக்கு ஆங்கில ஆட்சியின் விளைபேறாக உருவான மேனாட்டு மயவாக்கமே (Westernaization) அடிப்படையாக அமைந்தது. குறிப்பாக ஆங்கிலக் கல்விகற்ற தமிழறிஞர் பலர் ஆங்கில இலக்கிய முயற்சிகளைத் தமிழிற்குக் கொண்டு வருவதில் பேரார்வத்துடன் செயற்பட்டனர் இத்தகையோர் முயற்சியினால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின், முன்னாக நாவல் வடிவமும், சொளற்பா வடிவமும் நாடகமும் அறிமுகமாயின்; அகராதியும் பத்திரிகையும் பாட நூலும் வெளிவந்தன. நவீன உரைநடை உருவாக்கம் நடைபெறத் தொடங்கியது. இத்தியாதி முயற்சிகள் மேலே குறிப்பிட்டது போன்று நவீன கல்வி கற்றவர் சிற்சில துறைகள் ஒரேவழி மரபு வழித் தமிழ்க் கல்வி கற்றவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய மிகச்சிலருள் ஒருவராக சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் திகழ்கின்றார்.

மேற்கூறியவாறு சிந்திக்கும்போது, குமாரசுவாமிப் புலவர் எழுதிய தமிழ்ப் புலவர் சரித்திரம் என்ற நூல் முதலில் கவனிக்கத்தக்கதாகிறது.

தமிழ்ப் புலவர் சரித்திரம் தமிழ் இலக்கிய வரலாற்று உருவாக்கத்துடன் தொடர்புபடுத்தி - அதன் ஒரு பகுதியாக - பார்க்கப்பட வேண்டியதாகும். அதாவது, இன்று நாம் அறிகின்ற "தமிழ்" இலக்கிய வரலாறு என்பது பல படிமுறை வளர்ச்சியைத் தாண்டி வந்துள்ளது. புலவரது வரலாறு எழுதுதல், நூல்களின் வரலாறு எழுதுதல், காலம் பற்றி ஆராய்தல் முதலியன அதன் ஆரம்ப நிலைப்பட்ட முயற்சிகளாகின்றன. தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் முக்கியத்துவம் இத்தகைய பின்புலத்திலேயே அணுகப்படுவது பொருத்தமானது.

6873 cc

தமிழ்ப் புலவர் சரித்திரம் வெளிவருவதற்கு முன்னரே இவ்விடயம் தொடர்பாக சைமன் காசிச் செட்டி என்பார் எழுதிய "தமிழ் புளூராக்" என்ற நூலும் (1859) ஆணல்ட் சதாசிவம் பிள்ளை எழுதிய பாவலர் சரித்திர தீபகம் என்ற நூலும் (1886) வெளிவந்துள்ளன. ஆக, "தமிழ்ப்புலவர்" சரிதம் இவ்விடயம் தொடர்பான மூன்றாவது நூலாகிறது.

"தமிழ்புளூராக்"கில் 197 புலவர்கள் பற்றிப் பேசப்படுகின்றது. பாவலர் சூத்திர தீபகம் 214 புலவர்கள் பற்றிக் கூறுகிறது. "தமிழ்ப் புலவர் சரித்திரம் கூறுவது 175 புலவர்கள் பற்றி மட்டுமே. முன்னைய இரு நூல்களுடன் ஒப்பிடும்போது காலத்தால் பிந்தி வெளிவந்த தமிழ்ப்புலவர் சரித்திரம் முன்னைய நூல்களை விட அதிக புலவர்கள் பற்றியே குறிப்பிட்டிருக்க வேண்டும். பதிலாக, குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையோர் பற்றிக் குறிப்பிட நேர்ந்தமைக்கான காரணம் பற்றி ஊகித்து அறிய முடியாதுள்ளது. அதே வேளையில் முன்னையோர் குறிப்பிட்டிருந்த புலவர்களுள் சிலர் பற்றிக் கூறாது தவிர்த்தமைக்கான காரணம் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

முக்கியமான மேலைத்தேய மொழிகள் சிலவற்றிலே வெளிவந்த வாழ்க்கைச் சரிதங்கள் பற்றி நன்கறியநேர்ந்த சைமன்காசிச் செட்டி தமிழ்ப் புலவர்கள் பற்றித் தாமும் அத்தகைய நூலொன்றினை எழுதத் தூண்டப்பட்டார் என்பதற்கு நூலிற்கு "தமிழ் புளூராக் (Tamil Plutarch) எனப் பெயர் வைத்துக்கொண்டமையே சிறந்த சான்றாகின்றது. (பண்டைக்கிரேக்க, உரோம தேசப் பெரியவர்களின் சரிதங்களை எழுதிப் பெயர்பெற்றவரே புளூராக் (Plutarch) என்பவர். சைமன் காசிச் செட்டியின் "ஆங்கில பாடை கற்றார்க்கன்றி மற்றோர்க்கு... உபயோகப்படாது போயிற்று" என்று கருதியே ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை தமது நூலினை எழுத முற்படுகின்றார். ஆயின் இவர்களுக்கு மாறாக குமாரசுவாமிப் புலவர் தமது நூலினை "வித்தைக் கண் விருப்புடைய பாலகர் பொருட்டு" எழுதுகின்றார் நோக்கம் இதுவாயின் "தமிழ் இலக்கிய வரலாறு மாணவருக்கு கற்பிக்கப்பட வேண்டுமென்ற குமாரசுவாமிப் புலவரின் தீர்க்கதரிசனமான நோக்கு பாராட்டப்பட வேண்டிய-தொன்றன்றோ!

சைமன் காசிச்செட்டி 13 ஈழத்துப் புலவர் பற்றிக்கூற, ஆணல்ட்சதாசிவம் பிள்ளை 69 பேரினைக்குறிப்பிடுகின்றார். குமாரசுவாமிப்புலவர் குறிப்பிடுவதோ 39 பேரினை மட்டுமே எனினும், ஈழத்துப் பூதந்தேவனார் பற்றி முதன் முதலாகக் குறிப்பிடுபவர் குமாரசாமிப் புலவரே.

எவ்வாறாயினும் முன்னையோரை விட காலத்தால் பிற்பட்டவரான அ. குமாரசுவாமிப் புலவருக்கு புலவர் வரலாற்றினை எழுதுவதற்கான தகவல்கள் பெறுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருப்பது இயல்பே. புலவரும் அவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்தியுள்ளார். அவரது பின்வரும் கூற்று இதற்குச் சான்றாகின்றது.

> "இதனை எழுதத் தொடங்கு முன், யாம், இங்கே வழங்கும் பழைய நூலுரை-களையே முதற் கண் அநுசீலனஞ் செய்தோம். பின்னர் ஆங்காங் கெய்திய பாயிரங்கள், தனிநிலைக்கவிகள், புலவர் நாமங்கள் முதலியவைகளையும் ஆராய்ந்தேம் அதன் பின் தொண்டை மண்டல சதகம், புலவர் புராணம், தனிச்செய்யுட் சிந்தாமணி, பாவலர் சரித்திர தீபகம், ஆழ்வார் சரித்திரம், தனிப்பாடற்றிரட்டு முதலியவைகளையும் ஆராய்ந்தோம். அதன் பின் மஹா மகோபாத்தியாயர் வே. சாமிநாதையர்களும் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களும், வேறும் புலவர்கள் பலரும் தத்தம் பிரகடன நூல்களின் முகத்தில் எழுதியிருக்குஞ் சரித்திரங்களையும் சேதுசமஸ்தான வித்துவான் ரா. இராகவையங்காரவர்களும் வேறும் பலருஞ் செந்தமிழ்ச் சஞ்சிகையில் எழுதியிருக்குஞ் சரித்திரங்களையும் பிரத்தியேகமாகப் பிரகடனஞ் செய்த சில சரித்திரங்களையும், பிறவற்றையும் ஆராய்ந்தோம்".

மேலுள்ள பகுதி மரபு வழித்தமிழ்க்கல்வியாளரான குமாரசுவாமிப்புலவரின் ஆராய்ச்சி மனப்பாங்கு மேல்த்தேய ஆய்வாளரின் வழிச்செல்வதை நன்கு வெளிப்படுத்துகின்றதல்லவா?

அது மட்டுமன்று திருத்தம் செய்யும் பொருட்டு அறிஞர் பெருமக்களிடம் தமது நூலினை புலவர் காட்டியுமுள்ளார். இவ்வழி,

> "ஆங்கில திராவிட பண்டிதரும் வித்தியா விநோதருமாய்ச் சென்னை மாநகரில் வசிக்கும் திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பற்பல திருத்தங்கள் கொண்டு துணைபுரிந்தார்கள். ஆசிரிய கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் தென்கோவைக் கந்தையப்-பிள்ளை, புன்னைக்கணேசையர், கொக்குவில் முருகேசையர், தெல்லிச் சின்னத்தம்பி-யையர், இளவாலைச் சங்கரப்பிள்ளை, உபாயத்தியாயர் வண்ணைக் கிருஷ்ணபிள்ளை, என்னும் இவர்களும் திருத்தமும் பிறவுமாகச் சில சில துணைபுரிந்தார்கள்..."

என்று குறிப்பிடுவது கவனத்திற்குரியது முன்னைய நூலாசிரியர்களது ஆய்வு மனப்பாங்கும் மேற் கூறிய விதங்களில் சுடர் விட்டிருக்கக்கூடும் ஆயினும் அவர்களது நூல்களிலிருந்து அவை பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடியவில்லை. அது எவ்வாறாயினும் சுற்று முன் குறிப்பிட்டிருப்பது போன்று மரபு வழித்தமிழ்க் கல்வி கற்ற அறிஞரொருவரிடத்தில் இத்தியாதிபண்பினைக் காண்பது எளிதானதன்று. தாம் கவனத்திற் கொடுத்துள்ள புலவர்களது காலம் பற்றி நுணுகி நோக்குவது அவசியமென்பதிலும் காலம் பற்றித் தெளிவது கடினமான தென்பதிலும் குமாரசுவாமி புலவர்க்குத் தெளிவும் திடமும் இருந்துள்ளது.

"பண்டைக் காலப்புலவர்கள் பலர் அறம் பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பயன்களைத் திறம்பெறக் கூறலையன்றிக் காலங்கூறலை மேலாகக் கொண்டிலர். ஆதலாற் புலவர்கள் காலங்களை நிரூபணஞ் செய்து நிச்சயித்தல் அருங்குறைத்து"

என்று குறிப்பிடும் குமாரசுவாமி புலவர் முற்பட்ட காலப் புலவர்கள் சிலர் பற்றி மட்டுமன்றி, சில நூல்கள் பற்றிக்காணப்படும் காலம் பற்றிய ஐயங்களையும் தமது நூல் முன்னுரையில் விரிவாக எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது!

பாவலர் சரித்திர தீபகத்துடன் தமிழ்ப் புலவர் சரித்திரத்தை ஒப்பிட்டு நோக்கும்போது தமிழ்ப்புலவர் சரித்திரத்திலே சில சிறப்பியல்புகளை அவதானிக்க முடிகின்றது. இவற்றுளொன்று, முக்கியமான புலவர்கள் சிலர் பற்றி, ஆணல்ட்சதாசிவம்பிள்ளை சுருக்கமாகவும் பாடல் சான்றுகள் தராமலும் கூறிச் செல்வது. பதிலாக, குமாரசுவாமிப் புலவர் விரிவாகவும் தெளிவாகவும் கூறிச் செல்வது (பார்க்க: அரச கேசரி)

பிறிதொன்று, பல்லவர் காலத்திற்கு முற்பட்ட புலவர்கள் பற்றிய விவரங்களை குமாரசுவாமிப் புலவர் தருவதாகும். எ-டு: வெள்ளிவீதியார்; இளங்கோவடிகள்; காரைக்காலம்மையார் (அக்காலங்களுக்குரிய நூல்கள் ஆணல்ட் சதாசிவம் பிள்ளை காலத்தில் பதிப்பிக்கப்படவில்லை என்பதையும் கவனத்திலெடுப்பதவசியமே)

மேற்கூறியவை தவிர, தொடர்ந்து தமிழ்ப் புலவர் சரித்திரத்தை முன்னைய நூல்களுடன் விரிவாக ஒப்பிட்டு ஆழமாக அணுகும் போது வேறு பல சிறப்பியல்புகளும் புலப்படவாய்ப்புள்ளது.

நிற்க இனி, குமாரசுவாமிப் புலவரது அகராதி முயற்சிகள் பற்றி அவதானிப்போம்.

"இலக்கியச் சொல்லகராதி (1914) என்பதே குமாரசுவாமிப் புலவர் வெளியிட்ட அகராதியாகும். இராமாயணம் மகாபாரதம், கலித்தொகை சிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களிலுள்ள பெயர்ச் சொற்கள் இந்நூலினுள்ளே பெரும்பாலும் தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவாறு நோக்கும்போது இலக்கியச் சொல்லகராதி புதிய அகராதி வகை சார்ந்து முதன் முயற்சியாகிறது எனினும் தமிழ் நாட்டு அகராதியியல் ஆய்வுகள் இது பற்றி எதுவும் குறிப்பிட்டிருப்பதாகக் கூறுதற்கில்லை (எடுத்துக்காட்டாக, பெ. மாதையனின் அகராதியியல் - தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997)

தவிர, c.w. கதிரவேற்பிள்ளை தொகுக்க முற்பட்ட தமிழ்ச்சொல் அகராதி (1904) தமிழ் அகராதி வரிசையில் முக்கியமானதொன்று "தமிழ் ஒருமொழி அகராதி வரலாற்றில் சிறப்பான பதிவமைப்புடன் வெளிவந்த இவ்வகராதி பல பதிவுக் கூறுகளையும் கொண்டது. சொல் மூலம் தருதல் மேற்கோள் அமைத்தல் எனும் மரபு இவ்வகராதியில் பின்பற்றப்பட்டுள்ளது. ஒரு பொருட் பல சொற்களை மட்டுமே பொருட்சொல்லாய்த் தந்த அகராதி மரபிலிருந்து வேறுபட்டுப் பெயர்கள் பலவற்றுக்கும் விளக்கச் சொற்பொருள் அளிக்கப்பட்டுள்ளது" (அகராதியியல் ப. 59) மேலும், "திராவிட மொழியியல் நன்கு வளர்ச்சியடையாத அக்காலத்தில் அவர் வடமொழிச் சொற்கள் எல்லாவற்றையுமே தமிழ் அகராதியில் சேர்க்க முனைந்தார். மருத்துவம், இராசயனம், அளவையியல் சைவசித்ததாந்தம், வேதாந்தம் தத்துவம் அலங்காரம் சோதிடம் முதலிய பல துறைக் கலைச் சொற்களை அவர் தேடித்தொகுத்தார். இத்தகைய அகராதி உருவாக்கத்திற்குப் பேருதவி புரிந்தோருள் குமாரசுவாமிப் புலவருக்கு முக்கிய இடமுளதென்பதே எமது கவனத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை அரசாங்கம் 1903ல் ஓர் தமிழ் அகராதியைத் தொகுத்தற்கு வண. J.S. சாண்ட்லர் எனும் பாதிரியார் தலைமையில் ஓர் சபையை நியமித்தது. அச்சபை அகராதியின் மாதிரி பிரதியொன்றை யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பியிருந்தது. யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கம் அப்பிரதியை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலவரை வேண்டியது." புலவர் அப்பிரதியின் காணப்பட்ட பிழைகளைத் திரட்டி 4-4-1913 இல் நடந்த சங்கக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். சங்கக்கூட்டத்திற்குச் சமூகமளித்த ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, எஸ். டபிள்யூ. குமாரசுவாமி முதலியோர் புவலருடைய ஆழ்ந்த மதிநுட்பத்தையும் ஆராய்ச்சித் திறனையும் வியந்து அவர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றினர். தீர்மானம் வண. சாண்டலருக்கு அனுப்பப்பட்டது. அவர் யாழ்ப்பாணம் வந்து.. புலவரைப் பலமுறை சந்தித்து அகராதி விஷயமாகக் கலந்தாலோசனை செய்தார். புலவர் அகராதியிலுள்ள குறைபாடுகளையும் அகராதி அமைய வேண்டிய முறையையும் அவருக்கு எடுத்துக் கூறினர்." (குமாரசுவாமிப்புலவர் வரலாறு - கு. முத்துக் குமாரசுவாமிபிள்ளை, பக் 69 - 70)

கல்விசார் தமிழ்ப்பாட நூல் வெளியீட்டு முயற்சியிலும் ஏறத்தாழ 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் 20ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஈழத்திற்கு முக்கிய இடமுள்ளது. குமாரசுவாமிப் புலவர்ரெழுதிய பாட நூல்களுக்கும. குறிப்பிடத்தக்கதொரு இடமுண்டு இ∴து இரு விதங்களில் அமையக்கூடியது ஒன்று, முக்கியமான வடமொழி நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தமை (எ-டு: சிசுபால சரிதம் - 1921; இதோபதேசம் - 1920 இரகுவமிச சரிதாமிர்தம் - 1922) மற்றொன்று இத்தகைய நூல்களின் சிறப்பான உரை நடை (எ-டு: கண்ணகி கதை - 1900;)

இறுதியாகக் கவனிக்கப்படவேண்டிய தொரு விடயம் நவீன தமிழ் உரை நடை வளர்ச்சியிலும் வரலாற்றிலும் - குமாரசுவாமிப் புலவர் தடம்பதித்திருப்பது சார்ந்தது. அதாவது; நவீன தமிழ் உரை நடை உருவாக்கமென்பது பல அறிஞர்கள், எழுத்தாளர்களுடன் தொடர்புபட்டுள்ள தொன்று ஈழத்தைப் பொறுத்தவரையிலே ஆறுமுகநாவலர் தொடக்கம் பலர் இவ்வழி சிறப்பிடம் பெற்றுள்ளனர். இத்தகையோர் வரிசையில் குமாரசுவாமிப் புலவரும் அடங்ககுகின்றார். பாடநூல், உரை நூல், கண்டனம், கட்டுரைகள் முதலான பல வகை முயற்சிகளிலுமீடுபட்ட குமாரசுவாமிப்புலவர் எடுத்துக்கொண்ட விடயத்திற்கும், வாசகருமேற்றவாறு வெவ்வேறுபட்ட உரை நடைகளைக் கையாண்டுள்ளார்; இரண்டொரு உதாரணங்களை மட்டும் இவ்விடத்தில் தருகின்றோம்.

> "தூதுவன் சொல்லிய வார்த்தைகளைக் காதுகளிலே மடுத்த கதன், பலராமன், நிடதன், யதாசித்து முதலிய கண்ணபிரான் பக்கவீரர் யாவரும், சண்டவாயுவாலே வீசப்பட்டு மண்டலம் அழியவருங்கடல் போலப் பொங்கி நிமிர்ந்து பொள்ளெனக் கிளர்ந்து, தொடையிலே அடித்து வாயையும் கடித்துக் கோபங் கொண்டனர். கதன் என்னுங் காவலன் கோகுகளை உயர்த்திக் கொம்மென எழுகையிலே, வாகுவலயங்கள் தெறிக்க, வழுவிக் கதுமென வீழ்ந்த பதுமராகம என்னும் திவ்விய மணியின் செய் காந்தி, கோப வெந்தீயின் கொழுந்துபோல எழுந்தது. பலராமர் தமது வெண்ணிற மேனியைக் கோபத்தினாலே செந்நிறமாக்கி, அட்டகாசத்தினாலே முட்டவெளிப்பட்ட பற்களின் பிரகாசத்தினாற் பின்னும் தமது வெண்ணிறமாக்கினர்."
>
> - சிசுபால சரிதம்

> "இவரூர் யாழ்ப்பாணத்துள்ள உடுப்பிட்டி குலம் வேளாளர் குலம், சமயம் சைவம் காலம் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இவர் நீதிபதி கதிரைவேற்பிள்ளைக்குத் தந்தையார் இலக்கியலக்கணங்கள் நன்கு கற்றவர்..."
>
> - தமிழ்ப் புலவர் சரித்திரம்.

> "உன் "சைவ கண்டனம்" கண்டனம் ஒருவர்யேனும் பிழையற எழுதவறியாது, சைவ நூலுமறியாது, "காபர் நீமர் முதலிய சொல் விளம்பி விட்டுக் கொண்டு வெளிப்பட்ட நீயா சைவ தூஷணஞ் செய்யத் துணிந்தாய் உன் பத்திரிகையிலுள்ள பொய், குறளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுஞ்சொல் முதலிய இழிமொழிகளே உன்யோக்கியதையை யாவருக்கும் இனிது விளக்கி விட்டன..."

-சைவ கண்டன பரீகரணம்.

"என்றான் என்றவுடனே கண்ணகியுந்துயரில் மிதந்தாள் தன் வசமிழந்தாள். பின்னர் எழுந்தாள் ஐயோ, என் கணவா! என் கணவா! என்றாள் எங்கே போயினை! எங்கே போயினை! என்றாள் ஆ என்றாள் அழுதாள் புலம்பினாள் அடுத்தபெண்ணை நோக்கினாள்...."

கண்ணகி.

குமாரசுவாமிப் புலவரின் உரை நடை பற்றிக் குறிப்பிடும் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, "குமாரசுவாமிப் புலவரின் இத்தகைய உரைநடைத் தன்மையை அவரது மாணவர்களான கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலியோரிடம் காணலாம். பண்டித மணியின் அழகான உரை கடையின் ஊற்றுக் காலாகக் குமாரசுவாமிப் புலவரைக் கொள்ளலாம் போலத் தெரிகின்றது (மரபு வழித்தமிழ்ப் புலமையாளர்கள், பக் 68-69) என்று கூறுவார்.

சுருங்கக் கூறின் தமிழில் நவீனத்தின் உருவாக்கத்திலே குமாரசுவாமிப் புலவரின் பங்கு எத்தகையதென்பது மேற்கூறியவற்றிலிருந்து நன்கு புலப்படுகின்றமை கண்கூடு. இத்தியாதி முயற்சிகளில் வேறு பல அறிஞர்களுக்கும் பங்குண்டென்பது துண்மை. எனினும், அவர்களுள் பெரும் பாலானோர் நவீன - ஆங்கிலக்கல்வி வழி வந்தோராயிருக்க, குமாரசுவாமிப் புலவர் மரபு வழித்தமிழ்க்கல்வி வழி வந்தோராகின்றார் என்பதே கவனத்திற்குரியது. தமது காலத்தில் தம்போன்ற புலவர் பலரும் (எ-டு: உடுப்பிட்டி சிவ சம்புப் புலவர்) நவீனத்தைப் பொறுத்த வகையில் தொலை தூரத்தில் நிற்க, குமாரசுவாமிப் புலவர் மட்டுமே அதற்கு அண்மையில் வந்திருந்தார் என்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியதே!


**உசாத்துணை நூல்கள்**

- குமாரசுவாமிப் புலவர், சுன்னாகம், அ. தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916) சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில்
- செல்வநாயகம், வி, தமிழ் உரை நடை வரலாறு (1957) சாரதா விலாஸ பிரஸ், கும்பகோணம்
- முத்துக்குமாரசுவாமி, கு. குமாரசுவாமிப்புலவர் வரலாறு (1970), சுன்னாகம்.
- பூலோக சிங்கம், பொ (1970) தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள், கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம், கண்டி.
- சதாசிவம்பிள்ளை, அ, பாவலர் சரித்திர தீபகம் பகுதி I பதிப்பாசிரியர் கலாநிதி. பொ. பூலோகசிங்கம் (2001) கொழும்புத்தமிழ்ச் சங்கம், கொழும்பு சதாசிவப்பிள்ளை, அ. பாவலர் சரித்திர தீபகம் பகுதி II , மே.கு.நூ.
- மாதையன், ஸ. அகராதியியல், (1997) தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- ஈழத்து மரபு வழித் தமிழ்ப் புலமையாளர்கள் (2002) பண்பாட்டுத்திணைக்களம், வடக்கு / கிழக்குமாகாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசுவாமிப்புலவர் : தமிழின் நவீனமயப்பாட்டின் பங்காளி

## யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையை அடிப்படையாகக்கொண்ட ஒரு முன்மொழிவு

க.இரகுபரன்,
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபின் முக்கிய ஆளுமைகளுள் ஒன்றாக உணரப்படுபவர். தம்காலத்தில் தமிழ் கூறு நல்லுலகில் தமிழ்ப் புலமைக்கு ஓர் உரைகல்லாக விளங்கியவர். தமிழ்மொழி, வடமொழிகளில் இருந்த புலமையைவிட அவரிடம் இயல்பாகவே வாய்திருந்த நுண்ணறிவே அவரது புலமை விகசிப்புக்கான பிரதான அடிப்படையாக அமைந்தது எனலாம்.

கற்பித்தல், நூலியற்றுதல், கவிபுனைதல், கட்டுரை வரைதல், கண்டனந்தீட்டுதல், மொழிபெயர்த்தல், நூற்பதிப்பு, பாடபேத ஆய்வு, அகராதி தயாரித்தல், உரை எழுதல், புராண படனஞ்செய்தல், பிரசங்கஞ் செய்தல் என, பல துறைகளிற் காலூன்றியவர் குமாரசுவாமிப் புலவர். அவர் எழுதிய நூல்கள், உரைகள், கட்டுரைகள் என்பவற்றை நுணுகி நோக்கும்போது தனித்துவமான இரு அமிசங்கள் முனைப்புற்று நிற்பதை இனங்காணலாம். ஒன்று, அவரது ஆராய்ச்சி மனப்பான்மை; அடுத்தது, அவற்றுட் காணப்படும் எளிமை.

புலவர் எழுதிய நூல்களுள் வினைப்பகுபத விளக்கம், இலக்கண சந்திரிகை என்பவற்றிலும் செந்தமிழ் முதலான பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகள் பலவற்றிலும் அவரது ஆராய்ச்சி நுட்பம் முனைப்புற்று நிற்கக் காணலாம். 'வினைப்பகுபத விளக்கமானது "நன்னூலிலுள்ள "நடவாமடி சீ" என்னுஞ் சூத்திரத்தை அநுசரித்துப் பல வினைப்பகுபதங்களையும், வினையடியாகப் பிறந்த பல பெயர்ப் பகுபதங்களையும் பகுதி விகுதிகாட்டி முடித்துச் செல்வது. நன்னூல் முதலிய இலக்கணங்களிற் காணாதனவாய் விளங்கும் பல முடிவுகளின் நுணுக்கமும் அரியனவாய பகுபதங்களுக்கு சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய பழைய இலக்கியப் பிரமாணங்களும் அர்த்தங்களும் இந்நூலகத்துக் காணப்படுகிறது." இவ்வாறே இங்கு குறிப்பிடப்பட்ட பிறவும் தற்புதுமையுடையனவாய் அவரது ஆராய்ச்சி உணர்வைப் புலப்படுத்தி நிற்பன.

குமாரசுவாமிப் புலவரது நூல்களில் தமிழ்ப்புலவர் சரித்திரம், சிசுபால சரித்திரம், இரகுவமிச சரிதாமிர்தம், இதோபதேசம், கண்ணகி கதை என்பன அவரது நடைச் சிறப்பு - எளிமைப்பாடு - சிறப்புற அமைந்து விளங்குவன. வேறு வகையிற் கூறுவதாயின் தமிழை நவீனமயப்படுத்துவதில் நாவலர் வழியில் தொடர்ந்து சென்றவர்களுள் முக்கியமான ஒருவராகப் புலவரை அடையாளப்படுத்தி நிற்பன. அவை "செவ்விய நடையில் எழுதப் பெற்றுள்ளது; பாடசாலை மாணவர் உபயோகிக்கத் தக்கது" என்றவாறான பாராட்டுதல்களைப் பெற்றன. இங்கு குறிப்பிடப்பட்ட ஆக்கங்களும் இவைபோன்ற பிறவும் புலவரால் மாணவப்பருவத்தினரை நோக்கி எழுதப்பட்டனவே. அதனால் இந்நூல்கள் கல்வியியலில் அக்கறை காட்டிய ஒருவராகவும் புலவரை இனங்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அவ்வாறாக, இலக்கண நூல்கள் சிலவற்றுக்குப் புலவர் எழுதிய புத்துரைகளோவெனில் மேற்படி இரு பண்புகளும் சமாந்தரமாய்த் துலங்க அமைந்தனவாய் விளங்கக் காணலாம். தண்டியலங்காரப் புத்துரை, அகப்பொருள் விளக்கப்புத்துரை யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை என்னும் அத்தகு நூல்களுள் யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையை அடிப்படையாகக் கொண்டு புலவர்தம் ஆய்வு மனப்பான்மையையும் எளிமையாக்கற் சிறப்பையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாம். அதற்கு முன்பாக யாப்பருங்கலக்காரிகை பற்றியும் அதன் பழைய உரைபற்றியும் அறிதல் நன்று.

யாப்பருங்கலக்காரிகை அமுதசாகரர் என்னும் சமணமுனிவர் ஒருவரால் கி.பி. 10 ஆம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டதொரு யாப்பிலக்கண நூலாகும். அவர் யாப்பருங்கலம் என்னும் பெயரிலான ஒரு யாப்பிலக்கண நூலையும் எழுதினார். அந்த "யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாய்ச் செய்யப்பெற்றதே" யாப்பருங்கலக் காரிகையாகும்.

> "அகத்தியனாராற் செய்யப்பட்ட அகத்தியத்தில் செய்யுளிலக்கணம் பரந்து கிடந்ததென்றும் அதனைத் தொல்காப்பியர் சுருங்கச் செய்தமையின் அதன் அருமை நோக்கிப் பல்காப்பியர் பகுத்துக் கூறினாரென்றும் நச்சினார்க்கினியர் கூறுவர். ஆசிரியர் பல்காப்பியருக்கு முன் பல்காயனார் முதலாயினாரும், அவரின் பிற்காலத்துக் காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவினயர், நக்கீரர், நற்றத்தனார், மயேச்சுரர் முதலாயினாரும் செய்யுளிலக்கணம் செய்தனர். யாப்பியல், சங்கயாப்பு, பாட்டியன் மரபு முதலிய நூல்களும் இவர்கள் காலத்திலேயே தோற்றினபோலும். இவற்றுள் தொல்காப்பியமொழிய எஞ்சியவெல்லாம் இறந்தொழிந்தன. தொல்காப்பியமும் இப்போது மிகச் சிறுபான்மையாயன்றி எடுத்தாளப்படுவதில்லை. பிற்காலத்துச் சமணர்களாற் செய்யப்பட்ட யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையுமே இப்போது வழக்கின் கண்ணுள்ளன. இவற்றுள்ளும் யாப்பிலக்கணம் கற்போரால் பெரும்பாலும் கற்கப்படுவது காரிகை ஒன்றுமே."

யாப்பருங்கலக்காரிகைக்கு குணசாகரர் என்பவரால் எழுதப்பட்ட விருத்தியுரை ஒன்று உண்டு. அவருரையைத் தழுவி எழுந்த சிற்றுரைகள் சிலவும் உள்ளன.

> "இவ்வுரைகளெல்லாம் நிரனிறைப் பொருள்கோளமையக் கூறிய மூலபாடம்போலவே இலக்கண விதிகளும் எடுத்துக்காட்டும் அணிமை பெறாது செல்கின்றன. சில பாகங்கள் மூலபாடத்தை விடுத்துரைத்தற் கியையாது விஷயத்தை மாத்திரம் முடிதுச் செல்கின்றன. விடுத்துரைத்தல் சொற்றொறும் பொருளுரைத்தல்; சில பாகங்கள் ஆசிரியர் போக்கினையும் நோக்கினையும் நோக்காது வேறு வழியிற் செல்கின்றன."

என்றுகண்ட புலவர் காலத்துக்கேற்ற வகையில் விடயத்தை மிகச் சுருக்கமாக - அதேவேளை மிகத் தெளிவாக விளக்குவதாய புத்துரையைச் செய்தார். உரை சுருக்கமாயும் தெளிவாயும் அமைதற்கு அவர் கையாண்ட உத்திகள் அவரது மதிநுட்பத்தைக் காட்டுவன.

குமாரசுவாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகைக்கு 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் (விகாரிவருடம்) ஒரு புத்துரையை எழுதி வெளியிட்டார். அதன்போது எழுதிய "உபநியாச"த்தில் (முகவுரையில்) தாம் புத்துரை எழுதியதற்கான காரணத்தையும் தமது புத்துரை அமையும் முறைமையையும் பற்றிக் கூறுவதாவது:

> "இந்நூலுக்குக் குணசாகரர் கூறியவுரை மிக விரிந்தும் காந்தோறுத் பிரகடனஞ் செய்வோராற் பிழைபாடுற்றுச் சில திரிந்தும், பலவுறழ்ந்தும் கற்போர் யாவர்க்கும் நற்பயனாகாது கார்க்கசியமாயிற்று! அங்ஙனமாகாது யாவர்க்கும் உபயோகமாக யாழ்ப்பாணத்' தமிழ்கச்சங்க'ப் புலவர் சிலவர் அவ்வுரையைப் புதிதாக்கி அச்சிடு-வித்தல் ஆவசியகம் என விரும்பியபடி மற்றை யாப்பிலக்கண நூலுரைகளோடும், பழைய படிச்சந்தங்கள் பலவற்றோடும் சேர்த்துப் பார்த்துச் சிலவற்றைத் திருத்தியும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுள்ள உரைகள் சிலவற்றை ஈண்டுக் கொணர்ந்து வேண்டுழிப் பொருத்தியும், விதிகளிற் சிலவற்றைப் விரித்து விளக்கியும், அதிகமான சிலவற்றைப் பிரித்து விளக்கியும், அடிகளையுஞ் சீர்களையும் வேறு வேறாகத் துலக்கியும், அவ்வவ் விதிகளோடு அவ்வவ்வுரைகளையும் உதாரணங்களையும் கூறுகூறாக உறுத்தியும், விதிகளின் முன்னே விடயநாமங்களை நிறுத்தியும், புலப்பாடுடைய உதாரணங்களை இன்ன நூலெனக் காட்டியும், புலப்பாடில்லாத சிலவற்றிற்குப் பிரதியாக நலப்பாடுடைய சிலவற்றைக் காட்டியும், புலப்பாடுடைய சிலவற்றிற்குப் பிரதியாக நலப்பாடுடைய சிலவற்றைக் கூட்டியும், அருத்தமும் இடமும் அறியப்படாது ஐயுறவிற்கிடனாய்த் திருத்தம் பொருந்த வாராதவைகளை இருந்தவாறு விடுத்தும், இன்னும் வேண்டுவன பலவற்றை ஆண்டாண்டு படுத்தும் ஒரு புத்திரை போலாக்கி நம் புத்திக்குப் புலப்பட்டவாறு முடித்தேம்"

புலவரது "உபநியாசத்தின் இப்பகுதி புத்துரையைச் செம்மையாக ஆக்குவதிற் புலவர் காட்டிய கரிசனையை - எடுத்துகொண்ட முயற்சியை - மாத்திரமன்றி தமது புத்துரையில் அவர் அதிகம் திருப்திப்படவில்லை என்பதையும் உணர்த்துவதாயுள்ளமை அவதானிக்கத் தக்கது. அத்தகைய திருப்தியீனங் காரணமாக அப் புத்துரையை மேலும் புதுக்கி 1908 ஆம் ஆண்டு வெளிப்படுத்தினார். அது முன்னையதைவிட மிகச் சுருக்கமும் தெளிவும் கனதியும் உடைய "புத்தம் புத்துரையாக அமைந்தது.

உரை சுருக்கமாக அமைவதற்கு புலவர் கையாண்ட உத்திகள் விவேகமானவை. உதாரணத்திற்கு ஒன்றை நோக்கலாம்.

யாப்பருங்கலக் காரிகையின் முதலாவது இயலான உறுப்பியலின் முதலாவது காரிகை செய்யுட்கு உறுப்பாகும் எழுத்துக்கள் பற்றி விபரிப்பது. அதுவருமாறு:

"குறில் நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தமெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த அளவும் அசைக்குறுப் பாவனவே."

(கட்டளைக் கலித்துறை)

காரிகைச் செய்யுளாயமைந்த இந்நூற்பாவில் எடுத்துக் கொண்ட விடயத்தை விளக்கும் பகுதி,

குறில் நெடில் ஆவி குறுகிய மூவுயிர் அய்த மெய்யே
(மறுவறு) மூவினம் (மைதீர்) உயிர்மெய்..............................
.................................................................
(அறிஞர் உரைத்த) அளவும் அசைக்குலுப் பாவனவே.

என்னும் இவ்வளவுமே ஏனைய யாவும் (கட்டளைக் கலித்துறைச்) செய்யுளமைப்பு முடிவுற அமைதற்காக இட்டுக் கட்டியவைகளே.

அவ்விட்டுக்கட்டு மகடூமுன்னிலையாய் அமைவது. அதற்கும் எடுத்துக்கொண்ட விடயத்துக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. (வேறு சில இலக்கிய, இலக்கண நூல்களிலும் இத்தகைய தன்மை உண்டு; உ+ம்; வீரசோழியம்) மேற்படி செய்யுட் பகுதியில் அடைப்புக் குறியுட் காட்டப்பட்டிருக்கும் "மறுவறு", "அறிஞர் உரைத்த" என்னும் அடைமொழிகள் கூட அத்தகையனவே. ஆகையால் எஞ்சிய பகுதிக்கு மாத்திரம் உரைசெய்யின் எடுத்துக் கொண்ட காரியம் நிறைவு பெறும். எனவே குமாரசுவாமிப்புலவர் அவற்றுக்கெல்லாம் உரை எழுதுவதைத் தவிர்த்துக் கொண்டார். ஆனால் பழைய உரைகாரராகிய குணசாகரரோவெனில் இட்டுக்கட்டாகிய மகடூ முன்னிலையையும் ஒரு பொருட்டாகக் கொண்டு விரிந்த வியாக்கியானம் பண்ணியிருக்கிறார்.

"மதிமருட்டும் சிறுநுதல் பேரமர்க்கண் செய்யவாய் ஐய நுண்ணிடையாய்!"
என்பது மகடூஉ முன்னிலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும் அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய் உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும் கைப்பறா பேய்ச்சுரையின் காய் (நாலடியார்) எனப் பிறரும் "தடங்கண்ணாய்" என்று மகடூஉ முன்னிலை சொன்னார் உளரெனக்கொள்க. "மதி என்றது ஈண்டுப் பிறையை அஃது "இருகோட் டொருமதி எழில்பெறமிலைச்சினை (திருவெழுகூற்-அடி-5) என்றாற்போற் கொள்க. அல்லதூஉம், அறிவினை மயக்கும் சிறுநுதல் முதலாகிய உறுப்புக்களை உடையாய் எனலுமாம்."

உண்மையில், இங்கே, "இது மகடூஉ முன்னிலை" என்பதை மாத்திரம் குறிப்பிட்டு நேரே விடயத்துக்குச் செல்வதே உசிதமானது. ஏனைய விளக்கமெல்லாம் "பயனில்சொல் பாராட்டுத"லாகவே கொள்ளத்தக்கன. அதற்கும் மேலாக, விடயத்தைக் கற்கவருவோரின் எண்ணம் வேறுவேறு விடயங்களிற் சிதறும்படியாகச் செய்யவல்லன அவை. பின்னரும் காரிகை தோறும் மகடூஉ முன்னிலைகள் வருமிடங்களிலெல்லாம் இவ்வாறாக, குணசாகரர் வியாக்கியானிக்கவில்லையாயினும் "இது மகடூஉ முன்னிலை" என்று குறித்தபடியே செல்கிறார். பொருட் சிறப்பற்ற அடைமொழிகளுக்கும் விளக்கம் செய்து செல்கிறார். குமாரசுவாமிப் புலவரோவெனில் தமது "உபக்கிர மணிகை" (முன்னுரை) யிலே "மகடூஉ முன்னிலைகளுக்கும் அடைமொழிகளுக்கும் உரை கூறப்படவில்லை" என்று குறித்த அளவில் விடயத்தைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

மகடூஉ முன்னிலை, அடைமொழி தவிர இலக்கண விதிகூறும் பகுதிகளுக்கு உரை செய்வதிலும் குமாரசுவாமிப்புலவர் விவேகத்தோடு சிக்கனமாகவே நடந்து கொள்கிறார். மேற்படி காரிகை, செய்யுளுக்கு உறுப்பாக அமையும் எழுத்துக்கள் எவை என்பதையே கூறுகின்றது. அதிற் கூறப்படும் எழுத்து வகையும் அவ்வவற்றின் தன்மையும் இலக்கண நூல்களின் எழுத்ததிகாரங்களிலே மிக விரிவாகக் கூறப்பட்ட விடயங்களே; அன்றியும் யாப்பிலக்கணம் கற்கவருவோர் யாவரும் மரபு முறைப்படி எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் முதலானவற்றைப் படித்துவிட்டு வருபவர்களே; ஆகையால் குமாரசுவாமிப் புலவர்,

"எழுத்திலக்கணமும் பிறவும் கற்றவரே யாப்பிலக்கணமும் கற்கப்புகுவார் என்னும் இயைபு நோக்கி இவ்வெழுத்துக்களின் விரிவு ஈண்டுக் கூறப்படவில்லை. வேண்டுவார் நன்னூல் சின்னூல் முதலியவைகளிற் பார்த்துணரக் கடவர் (சின்னூல் -நேமிநாதம்)."

என்ற அளவில் நிறுத்திக்கொண்டார்.

ஆனால் குணசாகரரோ வெனில் நன்னூல், சின்னூல்களின் விருத்தியுரைகளுக்கு நிகராக எழுத்துக்கள் பற்றி வியாக்கியானித்துள்ளார். இவற்றால் குணசாகரர் யாப்பருங்கலக்காரிகை உறுப்பியலின் முதலாவது காரிகைக்கு எழுதிய உரை ஏறக்குறையப் பதினொரு பக்கங்களில் அமைய, அக்காரிகைக்குக் குமாரசுவாமிப்புலவர் எழுதிய உரையோவெனில் (அதே அளவான) இரண்டு பக்கத்துக்கு உள்ளாக முடிந்தது. அன்றியும் எழுத்துக்கள் பற்றிய குணசாகரரது விரிவுரை எழுத்திலக்கண அறிவோடு யாப்பிலக்கணம் கற்கப் புகுவோரின் காலத்தை விரயமாக்குவதோடு யாப்பிலக்கணத்தை அறியவேண்டும் என்பதிலுள்ள அவர்களது ஆர்வத்தின் வேகத்துக்கு இடையூறாகிச் சலிப்பை ஏற்படுத்துவதாயும் உள்ளமை கருதத்தக்கது.

மேற்படி காரிகைக்கான உரையில், குணசாகரர், முன்னைய இலக்கண நூலார் கூறிய எழுத்திலக்கணங்களை விரித்துரைத்தாரேயன்றி தாமாக நுட்பமான விடயம் எதனையும் புதிதாகக் கூறினாரில்லை. ஆனால் குமாரசுவாமிப்புலவர், தாம் எடுத்துக்கொண்ட இரண்டு பக்கத்துக்குள்ளாகவே ஆய்வு நுட்பத்தோடு கூடிய விடயங்களையும் எடுத்துரைத்தார். "எழுத்துக்கள், செய்யுளின் அடிப்படை உறுப்பாகிய அசைக்கு உறுப்பாவன" என்பதே மேற்படி காரிகை கூறும் வெளிப்படையான செய்தி. ஆனால் குமாரசுவாமிப்புலவர், எவ்வெவ்வெழுத்துக்கள் எவ்வாறெவ்வாறு அசைக்கு உறுப்பாகின்றன என்ற நுட்பத்தையும், எழுத்துக்கள் செய்யுளுறுப்பான அசைகளை ஆக்கும் அளவில் மாத்திரம் நிற்பதில்லை, செய்யுறுக்கான தொடை, இசை முதலியவற்றுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாக நிற்பனவும் எழுத்துக்களே என்ற நுட்பத்தையும் "உரையிற்கோடல்" என்னும் உத்தியால் எடுத்துரைத்துச் செல்வது அவரது ஆராய்ச்சி மனப்பான்மையைப் புலப்படுத்தி நிற்பதாம்.

"குற்றெழுத்து நெட்டெழுத்து என்னும் இரண்டுமே அசைகளை ஆக்குதற்கண் யாண்டும் உறுப்பாவன. இவற்றோடு சேர்த்து ஒற்றெழுத்துக்களும் ஒருவாற்றானாவன. குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஐகாரக்குறுக்கமும், ஆய்தவெழுத்தும், அளபெடையெழுத்தும் ஓரோவழி அசைகட்கு உறுப்பாவன. அவற்றுள்ளே குற்றியலிகரமும், குற்றியலுகரமும், அளபெடையுயிரும் சீரும் தளையும் சிதைவழி ஒற்றேபோன்று முன்னர்ச் சேர்ந்து நின்றும், சிதையாவழித் தாமே ஒலித்து நின்றும் உறுப்பாகின்றன. ஐகாரக்குறுக்கம் சிதைவழிக் குறில்போன்றும் சிதையாவழி நெடில் போன்றும் உறுப்பாகின்றது. ஆய்த வெழுத்துச் சிதைவழிக் குற்றுயிர் போன்றும் சிதையாவழி ஒற்றே போன்று முன்னர்ச் சேர்ந்தும் உறுப்பாகின்றது. ஒற்றளபெடை ஒரு மாத்திரை ஒலித்து உறுப்பாகின்றது. இவற்றிற்கெல்லாம் எழுத்தின் குணமாய் நிற்கும் மாத்திரையே காரணமென்க. மாத்திரையின்றி அசைகளை ஆக்குமாறில்லை.

"உயிரெழுத்தும் உயிர் மெய்யெழுத்தும், வல்லெழுத்தும், மெல்லெழுத்தும் இடையெழுத்தும் தொடைக்கும், தொடையோடசையாய் நின்று இசைக்கும், உறுப்பாவன. இவைகளை எதுகைத் தொடை, சித்திரவண்ணத்தொடை, வல்லிசை வண்ணத்தொடை முதலியன நோக்கி உணர்க."

யாப்பருங்கலக்காரிகை, இலக்கணச் செய்திகளையும் உதாரண வாய்பாடு, உதாரணச் செய்யுள் என்வற்றையும் நிரல்நிறையாகவே கூறிச் செல்கின்றது. குணசாகரரும் காரிகைச் செய்யுள்கள் எவ்வாறு நிரல்நிறையாக அமைகின்றனவோ அதே நிரற்படியே தமது உரையையும் அமைத்துக்கொண்டார். நூலும் குணசாகரரது உரையும் விடயங்களை நிரல் நிறையாகக் கூறிச்செல்லும் முறைமையானது விடயத்தை விளங்கிக் கொள்வதில் சிரமத்தையே ஏற்படுத்துகின்றது. குமாரசுவாமிப் புலவரோவெனில் அந்நிரல்நிறை முறையை மாற்றி இலக்கணச்செய்திகளை தனித்தனியே பிரித்து அவற்றுக்கான உதாரண வாய்பாடு முதலானவற்றை அவ்வவற்றின் அருகருகே உடனுக்குடன் கூறிச்செல்வதன் மூலம் மிகுந்த எளிமைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளார். அதில் புலவரது நுண்மாண் நுழைபுலம் நன்கு புலனாகின்றது எனலாம். யாப்பருங்கலக் காரிகை உறுப்பியலின் இரண்டாம் காரிகைக்கு குணசாகரரும் புலவரும் உரை எழுதும் முறைமையை ஒப்பிடுவதன் மூலம் அதனை விளங்கிக் கொள்ளலாம். குறித்த அக்காரிகை வருமாறு:

குறிலே நெடிலே குறிலினை எனனக் குறிநெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் தோளியு தாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

இக்காரிகைக்கு குணசாகரர்,

"குறிலே நெடிலே குறிலினை ஏனைக் குறில் நெடிலே நெறியே வரினும் நிரந்தொற்று அடுப்பினும் நேர் நிரை என்று அறி" என்பது, குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்று அடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்று அடுத்து வரினும் நேரசையாம்; குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும் குறில் இணைந்து ஒற்று அடுத்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறில் நெடில் இணைந்து ஒற்று அடுத்து வரினும் நிரையசையாம் என்றவாறு...

என்று தொடங்கி, காரிகையில் சொற்கள் அமைத்து கிடக்கும் ஒழுங்கிலேயே பொருள் சொல்லிச் செல்கிறார். ஆனால் குமாரசுவாமிப்புலவர் மிக நுட்பமாக, தெளிவுபட, விடயத்துக்கேற்ப, கொண்டுகூட்டி, தனித்தனியே இலக்கணச் செய்திகளைச் சொல்லிச் செல்கிறார். மேற்படி காரிகையின் முற்பகுதி, நேரசை நிரையசை பற்றிய செய்திகளை நிரல் நிறையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில் நெடிலே
நெறியே வரினும் நிரத்து ஒற்று அடுப்பினும் நேர் நிரை என்று
அறி............................................".

என்று கூற, குமாரசுவாமிப் புலவர் அவற்றைத் தனிப்படுத்தி நேரசை, நிரையசை என்று தனித்தனித் தலைப்பிட்டுப் பிரித்துக் கூறுகிறார். முதலில் நேரசை என்ற தலைப்பின் கீழ் மேற்படி காரிகைப் பகுதியைக் கொண்டு கூட்டி, நேரசை பற்றிய செய்தியை,

"குறிலே நெடிலே நெறியே வரினும் நிரந்து
ஒற்று அடுப்பினும் நேர் என்று அறி"

எனப் பிரித்து வைத்துக்கொண்டு, அதனை விளக்கி, பின், உரிய உதாரண வாய்பாடுகளை (ஆ; ழி; வெள்; வேல்) தந்து, அதன்பின் உரிய உதாரணச் செய்யுளையும் தந்து, விடயத்தைத் தெளிவுபடுத்துகிறார். பின், நிரையசை என்ற தலைப்பின் கீழ், மேற்படி காரிகைப் பகுதியைக் கொண்டு கூட்டி,

குறிலிணை ஏனைக் குறில் நெடிலே நெறியேவரினும்
நிரைந்து ஒற்றடுப்பினும் நிரை என்று அறி:-

என அமைத்துக் கொண்டு முன்பு நேரசைக்குச் செய்தவாறே தெளிவான விளக்கம், உதாரண வாய்பாடு, உதாரணச் செய்யுள் என்பவற்றைத் தருகிறார். மேற்படி காரிகையின் பிற்பகுதியான.

..........................................................
..........................................................
............. வேய் புரையும் மென்தோளி) உதாரணம் ஆழிவெள்வேல்
வெறி(யே) சுறா நிறம் (விண்டோய்) விளாம் என்று வேண்டுவரே.

என்பதிலுள்ளவை உதாரண வாய்ப்பாடுகளே. (அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டவை மகடூஉ முன்னிலையும் அடைமொழி முதலானவையுமாம்) அவற்றையும் நேரசை நிரையசை என்ற தனித்தனித் தலைப்பின் கீழ்க் கூறப்பட்ட இலக்கணச் செய்திகளையடுத்து ஆங்காங்கே உரிய உபதலைப்போடு (உதாரணவாய்பாடு; உதாரணம்) உரிய உடத்தில் தருவதன் மூலம் இப்பகுதிக்கு உரை எழுத வேண்டிய தேவையையே தவிர்த்துக் கொண்டார். இவற்றால் குமாரசுவாமிப் புலவரின் உரையில் வார்த்தைகளின் தேவை குறைந்தது; மாறாக, விளக்கம் மிகுந்தது. உரிய உரிய உபதலைப்புக்களையும் நவீன குறியீடுகளையும் கையாண்டதன் மூலமே வார்த்தைகள் சுருங்கின. உதாரண வாய்பாடு பற்றிக் கூறும் மேற்படி காரிகைப் பகுதிக்கு குணசாகரா பின்வருமாறு நெடிய வாக்கிய அமைப்பிலே உரை எழுதுகிறார்:

"உதாரணம், ஆ ழி வெள்வேல் வெளியே சுறா நிறம் விண் தோய் விளாம் என்று வேண்டுவரே என்பது நேரசைக்கு உதாரணம் ஆழி, வெள், வேல் எனவும் சுறா, நிறம், விளாம் எனவும் சொல்லுவர் புலவர் என்றவாறு."

ஆனால், குமாரசுவாமிப்புலவரோவெனில் நேரசைக்குரிய உதாரண வாய்பாடுகளை நேரசை என்ற தலைப்பின் கீழான இலக்கணச் செய்திகளை அடுத்தும் நிரையசைக்குரிய உதாரண வாய்பாடுகளை நிரையசை என்ற தலைப்பின் கீழான இலக்கணச் செய்திகளை அடுத்தும் உதாரண வாய்ப்பாடு என்று உபதலைப்பிட்டு அடையாளக் குறிகளுடன் சுருங்கவும் விளங்கவும் தருகிறார்:

உ+ம்

1. ஆ ----> நெடிலானாய நேரசை
2. ழி ----> குறிலானாய நேரசை
3. வெள் ----> குறிலொற்றடுத்தாய நேரசை
4. வேல் ----> நெடிலொற்றடுத்தாய நேரசை

நிரையசைக்கான உதாரணங்களையும் இவ்வாறே அமைத்துக் கொண்டார். குமாரசுவாமிப்புலவர் அசைகளுக்கு நெடியாலானது, குறிலாலானது, குறில் ஒற்றடுத்து ஆனது, நெடில் ஒற்றடுத்து ஆனது எனச் செய்யும் விளக்கம் போன்ற எதனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசாகரர் உரையில் வெளிப்படையாகப் பெற முடியாது ஊகித்தே பெறவேண்டியுள்ளது என்பதும் கருதத்தக்கதே.

குமாரசுவாமிப் புலவரின் உயிரைற் காணத்தக்க மற்றொரு சிறப்பம்சம், கலைச் சொற்களுக்கு அவர் தரும் விளக்கங்கள் எனலாம். சில உதாரணங்கள்:

நேரசை:-

"தனியெழுத்தாய் அசைக்கப்பட்டு வருதலால் இது நேரசை எனப்பட்டது. நேர் - தனிமை. இதற்'குத் தனியசை என்றும் பெயருண்டு."

நிரையசை:-

"இணையெழுத்தாய் அசைக்கப்பட்டு வருதலால் இது நிரையசை எனப்பட்டது. இண்யசை என்றும் இதற்கும் பெயருண்டு. இணைதலெனினும் நிரைதலெனினும் ஒக்கும்.

தளை:-

சீரொடு சீர்புணரச் சேர்ந்தியற்றும் அடியிலே சீர்களின் இடைநின்று இசைத் தொடர்ச்சியுற அவைகளைப் பிணிப்பது தளையாகும். தளை யெனினும் பத்தமெனினும் ஒக்கும்.

வெண்பா:-

"வெண்டளையும் அளவடியும் பெற்றுச் செப்பலிசையுடையதாய் வரும் செய்யுள் வெண்பா எனப்படும். வெண்பா என்பது வெண்ணிறம் போன்ற இயல்புடைமை பற்றி வந்த ஒப்பினாகிய பெயர். இயல்பாவது வெண்ணிறம் வேறான்று விரவியவழிக் கேடுறுதல் போலப் பிறதளை விரவியவழி இசை கெடுதல்."

குமாரசுவாமிப் புலவரது உரையிற் காணப்பெறும் இத்தகு நுட்ப விளக்கமெதுவும் குணசாகரரது உரையில் இல்லை என்பது அறியத்தக்கது.

குமாரசுவாமிப் புலவரின் உரைத்திறத்தை உணர்த்தும் சான்றுகளாக இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம். கட்டுரை விரிந்துவிடும் என்ற அச்சம் கருதி மிகச் சிலவே எடுத்துக்காட்டப்பட்டன. புலவரின் யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையின் சிறப்பைச் முழுமையுறச் சுருக்கமாக எடுத்துரைக்க வேண்டின், அவ்வுரை வெளிவந்த காலத்தில் "செந்தமிழ்" பத்திரிகையில் "சைவ உதயபானு" பத்திரிகாசிரியர், ஊரெழு சு. சரவண முத்துப் புலவர் எழுதிய "வியப்புரை"யில் அமைந்த பந்தி ஒன்றை மேற்கோளாகத் தருதலே உசிதமானது.

"தொன்னூலெவற்றையும் நன்னராய்ந்து, இக்காலத்துக்கேற்ற புது விதிகளையும் உதாரணங்களையுஞ் சேர்த்து, சுருங்கச் சொல்லன் முதலிய பத்தழகுங் குதிகொள்ளு-மாறமைத்து புத்துரையாகிய ஒரு விருத்தியுரையைப் புலவரவர்கள் இப்பொழுது வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அது பாக்கண் முதலியவற்றின் பெயர்க் காரணங்களைத் தெளிவுற விளக்குகின்றது. விஷயங்களொவ்வொன்றையும் நன்றாகப் பிரித்துக் காட்டுகின்றது. காடின்ய பதங்களின் பொருள்களை விளக்குகின்றது. முன்னுரைகளொன்றினு மில்லாதனவாய், இக்காலத்துள்ளனவாயுள்ள கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா முதலிய பாக்களுக் கிலக்கணங் கூறுகின்றது. முன்னுரைகாரர்களினாலே சேர்க்கப்படாது விலகி நின்ற "தூங்கேந்தடுக்கு" என்னுங் காரிகையையும் அதனுரையாகிய வண்ணங்களினிலக்கணங்களையும் மிக விசிட்டமாக விளக்குகின்றது. படிப்போருள்ளம் பலவற்றினும் சிதறுண்டு பழுதுறாது விஷயத்தை விரைந்து பற்றுமாறு அடைமொழிகட்கும் மகடூஉ முன்னிலை மொழிகட்கும் பொருள் கூறாது விடுத்து, செய்யுட்களையெல்லாம் விஷயத்துக்கிசைய நிறுத்தி புத்துதாரணங்-களையுஞ் சேர்த்து விஷயங்களை நன்றாகத் தெளிவுற விளக்குகின்றது. தன்னை விளக்குவதற்கு வேறோராசிரியனை வேண்டாது கற்போர்க்குத் தானே யாசிரியனா-யமைந்து நீரோட்டம் போன்று செல்கின்றது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றறிந்தார் போற்றும் சுன்னாகத்து மைலணி திருவாளர் அ. குமாரசாமிப்புலவர்

*சி. குஞ்சிதபாதக் குருக்கள்*
*மயிலணி. சுன்னாகம்*

இலங்கையின் வடபால் காங்கேசன் துறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் நடுவனூராக விளங்குவது சுன்னாகத்து மயிலணி. பெயருக்கேற்ற வெள்ளிமலையான் முன் மயிலணியாகக் முருகன் இவ்வூரை அழகுபடுத்துகிறான். சுன்னாகத்து மத்திய றோட்டில் கிழக்குப் பகுதியில் கதிர மலையில் ஒரு சிவனும் அம்பாளும் வீற்றிருந்தருள் புரிகின்றனர். ஊரின் மேற்குப் பகுதியில் ஊரைக் காவல் புரியும் பிள்ளையாரும் ஐயனாரும் வீற்றிருந்தருள் புரிகின்றனர். இப்படியான தேவ கோட்டங்களுடன் விளங்கும் சுன்னாகத்து மயிலணிப்பகுதியில் பண்டுதொட்டு வித்துவப் பரம்பரையினர் இருந்தழகுபடுத்தினர்.

புலவர் முத்துக் குமாருக் கவிராயர் முருகேச பண்டிதர் சங்கர பண்டிதர் முதலியோர் வரிசையில் சுன்னாகம் குமாரசாமிப்புலவரும் விளங்கினார்.

1855ம் ஆண்டு ஜனவரி 18ம் திகதி குமாரசாமிப் புலவர் பிறந்தார். இவர் காலத்து சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் விளங்கினார்கள். குமாரசாமிப்புலவர் முருகேச பண்டிதரிடமும் தமிழ் சம்ஸ்கிருதமும் கற்றுத்தேர்ந்தார். இவரது கல்வி வித்துவத்தை அறிந்த சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இவரை ஏழாலை சைவ வித்தியாசாலைக்கு ஆசிரியராக நியமித்து அப்பாடசாலையை நடத்தினார். பின்பு இவர் நாகநாத பண்டிதரிடம் படித்த நூல்களைத் தமிழ் மொழி பெயர்ப்புக்காக இந்தியா சென்று சி.வை தாமோதரம் பிள்ளை அவர்கள் உதவியுடன் அச்சிட்டு யாழ்வந்தார்.

புலவர் அவர்கள் 1892ம் ஆண்டு சின்னாச்சி அம்மையாரை விவாகம் செய்தார். இவருக்கு விசாலாட்சியம்மை, அம்பலவாண பிள்ளை. முத்துக்குமாரசாமிப்பிள்ளை என்ற மூன்று பிள்ளைகள் இருந்தனர். நீதிபதி கதிரைவேற்பிள்ளை அவர்கள் தொகுத்த தமிழ் அகராதிக்கு மிகவும் உதவியாயிருந்தார். ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபர் த. கைலாச-பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி தலைமை ஆசிரியராகக் கடமை புரிந்தார். மதுரைத் தமிழ் சங்கத்தில் அங்கத்துவராக பாண்டித்துரைத் தேவருடன் நட்புப்பூண்டு செந்தமிழ் என்ற மாத சஞ்சிகைக்கு விடயங்கள் எழுதி உதவினார்.

சென்னையில் விளங்கிய தி.த. கனகசுந்தரம் பிள்ளையுடன் நட்புப் பெற்று, கம்பராமாயண பாலகாண்டம், அகப்பொருளுக்குப் புதிய உரை. யாப்பரும் கலகக்காரிகை, தண்டிய லங்காரம், சாணக்கிய நீதிவெண்பா, ரகுவம்ச சரிதம், சிசுபாலவதம், குபேலா பாக்கியாமை, ராமோதந்தம் முதலிய நூல்களை வசன நடையில் எழுதி வெளியிட்டார்.

மயிலணி முருகன் மீது மிகுந்த பக்தியுடன் கோயில் சமய விஷயங்களிலும் பெரிதும் ஈடுபட்டார்.

இவருடைய மகன் கு. அம்பல வாணபிள்ளை அவர்கள் ஸ்கந்த வரோதயக்கல்லூரியில் ஆசிரியப் பணி செய்து கல்வித்துறையில் விளங்கினார். அத்துடன் கோயில்களிலும் தேவார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் ஓதுவதும் ஓதுவித்தலிலும் சிறந்து விளங்கினார். இவரது தம்பி முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்கள் இந்திய சென்று பட்டதாரியாகப் படித்து கல்விச் சேவை செய்துள்ளார். குமாரசாமிப்புலவர் தம்வாழ்நாளில் தமிழ் படிப்பித்தல் மொழி பெயர்த்தல் கட்டுரை எழுதுதல் பலவற்றில் காலத்தைச் செலவிட்டார்.

அக்காலத்தில் பாடசாலைகள் குறைவு. வித்வான்களிடம் சென்று திண்ணைப் பள்ளிக் கூடமாக தேடித்தேடிப்படிக்க வேண்டும். அப்படியான பலமாணவர்கட்கு தமிழ் சமஸ்கிருதம் கற்பித்து உதவினார். இப்படியாகத் தமிழ் வளர்த்த செம்மல் 25-4-1922 ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். சுன்னாகம் மயிலணி வித்வப் பரம்பரை அலங்கரித்த ஊராகும். இப்பொழுதும் முத்துக்குமாரசாமி பிள்ளையின் மகளான மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களும் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி செய்து இப்பொழுதும் மயிலணிக்கழகு செய்கிறார். இப்பேர்ப்பட்ட செம்மலை நினைவுகூடாக நாம் கடமைப்பட்டுள்ளோம். தமிழ் சங்கத்தில் இவ் நினைவு விழா நடத்தல் சாலச்சிறந்தது.

## குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

**மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை 6—1—05**

ஸ்ரீமத் பிள்ளையவர்கட்குப் பிரிய விஞ்ஞாபனம்

தங்கட்கு நாங்கள் நெடுங்காலமாகக் கடிதம் எழுதாதிருந்தமையைப் பொறுப்பீர்களாக. தாங்கள் செந்தமிழுக்கு எழுதிவரும் அரிய விஷயங்கள் தமிழகம் முழுவதும் நன்கு படித்துப் பாராட்டத் தக்கனவாய் மிளிர்கின்றன. நம் தமிழ்ப்பெருமை வளர்தற்கண் தாங்கள் கொண்டுள்ள முயற்சியளவு வேறெவருங் கொண்டிலர் என்பது இந்நாட்டின் பொது அபிப்பிராயமாகும்.

யான் தேவருடன் சமீபத்தில் சென்னை சென்றிருந்தபோது மகாவித்துவான் ஸ்ரீமத் வே. சாமிநாதையர் அவர்கள் தங்களையும், என்னருமை மைத்துனர் ஸ்ரீமத் இராகவையங்கார் அவர்களையும் "இரண்டு தமிழ் இரத்தினம்" என்று பாராட்டித் தேவர் திருமுன்பு புகழ்ந்தது உண்மையில் அதிசயோந்தியன்று.

யான் தங்களுடன் கடிதமூலம் பழகாதவனாயினும் தங்கள் அருமைப்பாடுகளை நன்குணரு மாற்றல் மட்டில் உடையேனாதலாலும், செந்தமிழ்ப் பத்திரிகையோடு சம்பந்தமுடையே-னாதலாலும், இக்கடிதத்தை வலியத் தங்களுக்கு எழுதத் துணிந்தேன். நம் பத்திரிகையை என்றும் நாங்கள் அபிமானித்து வரவும், எல்லாரோடுங் கொண்ட நட்புரிமை என்றும் பெருகிவரவும் திருவளைச் சிந்திக்கிறேன்.

இங்ஙனம்

**மு. இராகவையங்கார்**

செந்தமிழ் உதவிப் பத்திராதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் ஒரு சங்கப் பலகை

பெ.விஜயரத்தினம்
*தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்*

**சை**வத்தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிப் பெரும்புகழ் படைத்த நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்தவர்களில் சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் ஒருவர். இவரால் யாழ்ப்பாணத்தில் ஏழாலையில் 1876ம் ஆண்டு நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தமது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். திரு. முருகேச பண்டிதர் அவர்கள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக விளங்கினார். இவர் இவ்வித்தியாலயத்தை விட்டு நீங்கிய பின்னர், குமரசுவாமிப்புலவர் அவர்கள் இப்பாடசாலையின், தலைமை ஆசிரியப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் நாவலர் அவர்களால் அமைக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை 1-10-1902ம் ஆண்டு பொறுப்பேற்றார். அப்போது இவருக்கு வேதனமாக மாதம் ரூபா பத்து வழங்கப்பட்டது. பிற்காலத்தில் ரூபா 20 ஆக அதிகரிக்கப்பட்டது. குமாரசாமிப்புலவர் அவர்கள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக 1921ம் ஆண்டுவரை பணியாற்றினார் என்பதை குமாரசுவாமிப் புலவர் சரித்திரம் மூலமாக அறியமுடிகின்றது.

தொல்காப்பியருக்கு பன்னிரெண்டு மாணவர்கள் இருந்தது போன்று, குமாரசுவாமிப்புலவர் அவர்களுக்கும் காவியபாடசாலையில் பன்னிரெண்டு மாணவர்கள் இருந்தனர். பண்டிதர் வ.மு. இரத்தினேஸ்வர ஐயர், இருபாலை வேதாரணிய தேசிகர், காரைநகர் பஞ்சாச்சர ஐயர், புன்னாலைக் கட்டுவன் சி.கணேசையர், மீசாலை பெரிய தோட்டம் குமாரசுவாமி, மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கொக்குவில் முருகேசு ஐயர், பண்டிதர் மருதைனார், நீர்வேலி மயில்வாகனம் பிள்ளை, தெல்லிப்பளை கதிரேசபிள்ளை தாவடி மு. பொன்னம்பலப்பிள்ளை முதலியோர் காவிய பாடசாலையில் இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் ஆவர்.

1922ம் ஆண்டு புலவர் அவர்களுக்கு வாதநோய் ஏற்பட்டதால் முன்னர் போன்று புலவர் அவர்கள் காவிய பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. இதனால் மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக காவிய பாடசாலையை விட்டு விலகினர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களும் தொடர்ந்து புலவர் ஐயா அவர்களின் வீட்டிற்குச் சென்று பாடம் கேட்டு வந்தனர். இறுதியில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் மட்டும் புலவர் ஐயா அவர்களின் உயிர் நீங்கும் வரையும் அவரிடம் பாடம் கேட்டு வந்தார். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் உயர்ச்சிக்குக் காரணமாக குமாரசுவாமிப் புலவர் அவர்கள் விளங்கினார். புலவர் அவர்கள் இதன் உயிர் நாடியாகவும் விளங்கினார். திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் இவ்வித்தியாலயத்தின் முகாமையாளராக விளங்கினார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் பண்டிதமணி அவர்களையும், புலவர் மணி அவர்களையும் காவியப் பாடசாலையில் மாணவர்களாக சேர்ப்பதற்கு முன்னோடியாக விளங்கினார், என்பதை பண்டிதமணி அவர்களும், புலவர்மணி அவர்களும், பல சந்தர்ப்பங்களில் மிகுந்த நன்றி உணர்வோடு கூறியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். வடமொழியிலும், தென்மொழியிலும், ஆழ்ந்த புலமை உள்ளவர். இயல்பாகவே, கவிதை, படைக்கும் ஆற்றல் உள்ளவர். கட்டுரை எழுதுவதிலும், கவிதை இயற்றுவதிலும், ஒப்பாரும், மிக்காரும் இலாத் தனிப் பெருமையோடு விளங்கினார். செந்தமிழ் வளர்ச்சிக்கும், சைவத்திற்கும், அரும் பணி புரிந்தவர் இவர் புலவர் அவர்கள் பல செய்யுள் நூல்களையும், இலக்கண நூல்களையும், உரைநடை நூல்களையும் வெளியிட்டதோடு, அல்லாமல், இலக்கியச் சொல் அகராதி என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

புலவர் ஆரம்பத்தில் இயற்றிய நூல்களுள் பெரும்பாலானவை செய்யுள் வடிவில் அமைந்தவை ஆகும். அவை பதிகம், ஊஞ்சல், சிந்து, இரட்டை மணி மாலை, அட்டகம், கும்பி, என்பனவாகும், அவற்றுள் வதுளைக் கதிரேசன் பதிகம், வதுளைக் கதிரேசன் சிந்து, வதுளைக் கதிரேசன் ஊஞ்சல், மாவைப்பதிகம், மேக தூதக்காரிகை, மாவை இரட்டை மணிமாலை, சாணக்கிய நீதிவெண்பா, இராமோதந்தம், என்பவை குறிப்பிடத்தக்க சில நூல்களாகும்.

புலவர் அவர்களின் உரை நூல்களோ பல அவற்றை எல்லாம் இச்சிறு கட்டுரையில் குறிப்பிடுவது சிரமம் எனினும், ஒரு சிலவற்றையாவது கூறுவது பொருத்தமாகும். திருக்கரசைப் புராணம் பொழிப்புரை, சூடாமணி நிகண்டு முதலாம் இரண்டாம் தொகுதிப் பதப்பொருள், மறையசை அந்தாதி அரும்பத உரை, நீதிநெறி விளக்கப் புத்துரை, இராமாயணம் பால காண்டம் அரும்பத உரை, ஏர் எழுபது பொழிப்புரை, கல்வளை அந்தாதி, முதலியனவையாகும்.

இவருடைய இலக்கண உரைநூல்கள், யாப்பருங்கலப் பொழிப்புரை, வெண்பாப் பாட்டியல் பொழிப்புரை, தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை, அகப் பொருள் விளக்கப் புத்துரை என்பனவாகும். இவற்றைவிட, இலக்கணச் சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம், என்னும் இரண்டு ஆராய்ச்சி நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

கண்ணகிகதை, தமிழ்ப்புலவர் சரித்திரம், இதோபதேசம், சிசுபாலசரிதம் இரகுவமிச சரிதாமிர்தம், போன்ற வசன நூல்களையும் எழுதினார்.

மேலும், இதோபதேசம், நகுலமலைக் குறவஞ்சி நாடகம், யாப்பருங்கலக்காரிகை (பழைய உரை), ஆசாரக்கோவை, ஆத்திசூடி வெண்பா, நான் மணிக் கடிகை, சிவ சேத்திர விளக்கம், உரிச்சொல் நிகண்டு, திருவாதவூரர் புராண மூலம், பழமொழி விளக்கம், ஆகிய பதிப்பு நூல்களையும் எழுதி உள்ளார். சதாசாரக் கவித்திரட்டு, சிவதோத்திரக் கவித்திரட்டு என்பன இவரது தொகுப்பு நூல்களாகும்.

புலவர் அவர்களை ஆறுமுகநாவலர் அவர்கள் பெரிதும் பாரட்டியுள்ளார். தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை ஆறுமுகநாவலர் மூலமாக புலவர் அவர்கள் தெளிவுபடுத்திக் கொண்டார்.

1900ம் ஆண்டில் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தின், ஆலோசகராகவும், பரீட்சகராகவும் குமாரசுவாமிப்புலவர் அவர்கள் விளங்கினார்.

1903ம் ஆண்டு, பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். இதன் உறுப்பினராக இருக்குமாறு, பாண்டித்துரைத் தேவர் அவர்கள், குமாரசுவாமிப்புலவர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தமை, புலவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பெரும் கௌரவமாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறாகத் தம் வாழ்நாள் முழுவதையும், சைவத்திற்கும், செந்தமிழ் மறுமலர்ச்சிக்கும் அர்ப்பணித்த புலவர் அவர்கள் 9.3.1922ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருடைய மறைவு தமிழ் உலகத்திற்குப் பேரிடியாக விளங்கியது. இவரது பிள்ளைகள், உறவினர்கள், மாணவர்கள் நண்பர்கள் அனைவரும் சோகக் கடலில் மூழ்கினர். புலவர் அவர்களின் இறுதிக் கிரிகைகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை இரங்கல் பாக்கள் மூலமும், உரைகள் மூலமும் வெளியிட்டனர். புலவர் அவர்களின் தலைசிறந்த மாணவர்களாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், புலவர்மணி ஏ. பெரியதம்பிள்ளை அவர்களும், பண்டிதர் வ.மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்களும் புலவரின் மறைவு குறித்து இரங்கல் பாக்கள் பாடியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் எனக் கருதுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரின் தமிழ்ப்பணி

*செல்வகௌரி சேனாதிராஜா*
**B.A., Dip in Edu.**

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான செய்யுள் புனைந்தவர்களுள் சுன்னாகத்தைச் சேர்ந்த செந்தமிழ்ச் சிந்தாமணி புலவர் சிரோன்மணி அ. குமாரசுவாமிப் புலவரும் ஒருவர். அன்னார். தமிழ், வடமொழி, ஆங்கிலம், தர்க்கம் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றவர். அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர். நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதியவர். செய்யுள் யாத்தலுடன் அமையாது, மொழிபெயர்ப்பு, அகராதி, பதிப்பு முயற்சி, தொகுப்பு முயற்சி, உரைகள், கண்டனங்கள், புராணபடனம் போன்ற பல்வேறு இலக்கியத்தளங்களிலும் இவரது புலமை விரிவு பெறுகின்றது.

இவ்வாறு எம் தமிழ் அன்னைக்கு மணியாரங்கள் பல சூடிய புலவரவர்களின் வாழ்க்கைப் பின்னணியையும், அவரது பணிகளையும் நோக்குவோம்.

## பிறப்புச் சூழலும், கல்வியும்

"ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் முன்னைய காலப் பிரிவுகளிலும், குறிப்பிடத் தக்கதாகவும், சிறந்ததாகவும் மிளிர்வது பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆகும்.[1]" என்று கலாநிதி பூலோக சிங்கம் கூறுவார்.

ஐரோப்பியர் வருகையின் பின் ஈழத்தில் தமிழ்க் கல்வியானது மரபுவழிக் கல்வியினதும், ஐரோப்பியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியினதும் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது.

இத்தகு பின்னணியில் யாழ்ப்பாணத்தின் பழைய செந்தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்றானதும், செம்பாட்டு நிலப் பண்பு மிக்கதுமான சுன்னாகத்தின் பெருமை பற்றியும், சுன்னாகப் புலவர்கள் பரம்பரை பற்றியும் பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் கூறுவதைக் காணலாம்.

"ஒல்லாந்தர் காலத்தில் அரங்கநாத ஐயர் மகன் வரத பண்டிதர் என்பார் சுன்னாகத்தில் செந்தமிழை வளர்த்ததோடு, சைவசமயத்தையும் நிலைபெறச் செய்துள்ளார்.

"ஐயமின் முந்நூற் றையிரு விருத்தம்
செய்ய செந்தமிழாற் றெறிந்துரை செய்தனன்
கங்கை மாநதி சூழ் காசிமா நகரமும்
பங்கமில் பங்கையப் பைந்துணர் மாலையும்
ஆதி நான் மறை சேரந்தணராணையும்
கோதக லோமதிக் கொடியு மங்குடையோன்
கன்னியங் கமுகிற் கயலிளங் குதிக்கும்
எவயற் சுன்னை நன்னாடன்[2]"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் என்றுமே புலமைப் பெருக்கத்தாற் பொலிவு பெற்று வந்துள்ளது. அங்கே மரபு வழிவந்த நற்றமிழ்ப் புலவர்கள் வரிசையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பரம்பரை பரம்பரையாகவும் புலமை பெற்று வாழ்ந்து வந்துள்ளனர்.

சுன்னாகம் என்றுமே புலவர்களின் பெருக்கத்தாற் பொலிவு பெற்று வந்துள்ளது. அங்கே மரபு வழிவந்த நற்றமிழ்ப் புலவர்கள் வரிசையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் பரம்பரை பரம்பரையாகவும் புலமை பெற்று உயர்ந்துள்ளனர்.

அக்குடும்பத்தின் வழிவந்த அம்பலவாணர் பிள்ளை என்பாரின் மைந்தர்கள் இருவர். மூத்தவர் முத்துக்குமாரக் கவிராயர். இளையவர் சின்னத்தம்பிப்பிள்ளை. இருவருமே இளமை முதற் புலமை பெற்றுப் புகழீட்டியவர்கள்.

கவிராயரின் தம்பியாரான சின்னத்தம்பிப் பிள்ளையின் புதல்வருள் ஒருவர் சிதம்பரம் அம்பலவாணபிள்ளை. இருவருக்கும், சிதம்பர அம்மையாருக்கும் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்காம் ஆண்டு தை மாதத்தில் நன்மகனாக வந்து அவதரித்தார் குமாரசுவாமிப் புலவர்.

புலவர் முதலில் தமது தந்தையாரிடம் தமிழையும், மல்லாகத்திலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம், தமிழ் என்பவற்றையும் கற்றார். பின்னர் இலக்கண இலக்கியங்களில் மகா பண்டிதரான "இலக்கணக் கொட்டர்" சுன்னாகம் முருகேச பண்டிதரிடம் தமிழையும், சமஸ்கிருத பண்டிதராகிய நாகநாத முதலியாரிடம் சமஸ்கிருதத்தையும் முறையாகப் பயின்றார். இதனால் சூடாமணி முதலிய தமிழ் நிகண்டுகளிலும், அமரம் முதலிய சமஸ்கிருத நிகண்டுகளிலும் புலவர் பெரும் பயிற்சியும், ஆட்சியும் உள்ளவரானார். இருமொழி இலக்கணங்களையும், காவியங்களையும் மனனமாகச் சொல்ல வல்லவராகப் புலவரின் படிப்பு அமைந்திருந்தது.

## மரபுவழிக் கல்விப் பாரம்பரியமும் புலவரும்

ஈழத்தில் இலக்கண இலக்கிய வழியிலே, புலமை கனிந்த பரம்பரையைச் சேர்ந்தவர் சின்னத்தம்பிப் புலவர். இதே சமயத்தில் வாழ்ந்த சுன்னாகம் வரதபண்டிதர், மாதகல் மயில்வாகனப் புலவர் ஆகியோர் தலைமறைவிலிருந்த தமிழ்க்கல்வி வழியினர்.

ஒல்லாந்தர் கால முடிவிலும் ஆங்கிலேயர் காலந் தொடக்கத்திலும் வாழ்ந்து இக்கல்வியைத் தொடர வைத்தவர்கள் முத்துக்குமாரக் கவிராயர், இருபாலை சேனாதிராய முதலியார் போன்ற பெரிய ஆசான்கள். முத்துக் குமாரக் கவிராயர் சி.வை. தாமோதரம் பிள்ளையின் ஆசிரியராக விளங்கியவர்.

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், முருகேச பண்டிதர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், கோப்பாய் சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர், புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், மட்டுவில் ம.க. வேற்பிள்ளை, கவிஞர் மகாலிங்கசிவம், வித்துவான் சுப்பையாபிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோர் இக் கல்வி வழித்தோன்றல்கள்.

மேற்படி மரபு வழிப் பாரம்பரியத்தின் வழிவந்த புலவர் தாமும் ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கி அதன் தொடர்ச்சியைப் பேணினார். குமாரசுவாமிப் புலவரின் மாணவர்களுள் புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோமணி கணேசையர், தென்கோவை ச. கந்தையா பிள்ளை, தெல்லிப்பழை வித்துவான் சி. சிவானந்தையர், உடுவில் தமிழ்ப் பண்டிதர் இரத்தினேஸ்வர ஐயர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## ஆசிரியப் பணியில் புலவர்

ஏழாலை சைவ வித்தியாசாலை ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளையினால் 1876ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1878 இல் உதவி ஆசிரியராக அங்கு இணைந்து கொண்ட புலவர் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1902 வரை (23 வருடங்கள்) தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். சிறந்த முறையில் நடைபெற்ற அப்பாடசாலையில் அவரிடம் கற்றவர்களுள் வித்துவான் சிவானந்தையர், வித்துவசிரோமணி கணேசையர் ஆகியோரும் அடங்குவர்.

புலவரது முப்பத்திரண்டாவது வயதில் அவரது தந்தையான அம்பலவாணபிள்ளை இறந்த போது நீர்க்கடன் செலுத்த இந்தியா சென்ற புலவர் அங்கிருந்த பெருந் தமிழ்ப் புலவர்களையும், அறிஞர்களையும் சந்தித்துத் தமிழ்ப்பணிகளை ஆற்றினார். பின்னர் வண்ணார்பண்ணையிலுள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியரானார். கற்றல் கற்பித்தல் முயற்சிகளுக்கு இப்பணி பெரிதும் உதவிற்று.

புலவருடைய நற்குண நற்செயல்கள் மிக உயர்ந்தவை. மாணவரிடம் எவ்வித உதவியையும் அவர் விரும்பியதில்லை. கல்வியில் ஊக்கம் உள்ளவர்களுக்குத் தாமே புத்தகம் முதலியன உதவுவார். வழிதெருக்களிலே தம்மைச் சந்தித்துச் சந்தேகம் கேட்டவர்களது சந்தேகங்களை எல்லாம் ஆற அமர நின்று விளக்குவார் புலவர். அவர்களை "நடமாடும் பல்கலைக்கழகம்" என்று கூறலாம்.

யாழ்ப்பாணம் காவியப் பாடசாலையில் அறிஞர்க்கு அறிஞராக விளங்கிய குமாரசுவாமிப் புலவர் அவர்களே முதன்மை ஆசிரியராகச் செயற்பட்டார். இப்பெரியாரின் நிழலில், அடிச்சுவட்டில் வளர்ந்து உயர்ந்தோர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோர். கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸின் உள்ளம், மாணாக்கரான பிளேட்டோவின் உள்ளத்துடன் ஒன்றித்தல் மூலமே, தத்துவ ஆசிரியர்களது பரம்பரை மேதினியில் உருவாயிற்று. அதே போன்று குமாரசுவாமிப் புலவரின் உள்ளத்துடன் மாணவ மணிகளின் உள்ளங்களும் ஒன்றித்திருந்தன.

புலவரவர்களின் உருவாக்கங்களான பண்டிதமணி, புலவர் மணி இருவரும் தமது பேராசானுக்குச் சூட்டும் புகழ்மாலையிலும், அஞ்சலியிலுமிருந்து நாம் இதனை அவதானிக்கலாம்.

புலவர் அவர்கள் இறைவனடி எய்தியதும் பண்டிதமணி அவர்கள் மனம் குழைந்து ஆக்கிய கவிதை வருமாறு"[3]

செந்தமிழும் ஆரியமுந் தேர்ந்து வீறித்
தேயமெலாம் சென்றிலங்கும் கீர்த்தி ஒன்றே
இந்த நிலமிசையிருப்ப இணையிலாத
எண்ணிப் பல கவி தழைத்த இனிய வாயும்
அந்தமிலாக் கலைகள் பல எழுதி வைத்த
அம்புய நேர் திருக்கரமும் அந்தோ! அந்தோ!
இத்தினத்திற் செந்தழலில் உருகி வீய
யாமிதனைப் பார்த்திருத்தல் என்னே என்னே."

புலவர்மணியின் இரங்கற்பா வருமாறு

"வண்ணத் தமிழுக்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி - கண்மணியென்
சுன்னைக் குமாரசுவாமிப் புலவனடி
சென்னிக் கியான்செய் சிறப்பு [4]"

"புலவர் ஐயா" என்று பண்டிதமணி போற்றிய சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் நினைவு விழாவின் போது பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் புலவரின் வாழ்க்கையையும், நூலாசிரியத் தகைமையையும், அவர்களின் மொழிபெயர்ப்புத் திறமைக்கான வடமொழி அறிவையும், உரைகாணும் ஆற்றலையும், கண்டனந் தீட்டும் வல்லமையையும் பற்றிப் பேசினார். புலவர் அவர்கள் பல நூல்களைப் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பித்த பெருமையையும், மாணாக்கர் பலருக்கு எதனையும் மறைக்காது பாடஞ்சொன்ன பரோபகாரத் தன்மையையும், புலமையாளருக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாற்றாலும் பேருவகையோடு உபகரித்த வள்ளல் தன்மையையும், இலங்கையிலும் இந்தியா-விலும் மகாவித்துவானாய் விளங்கியமையையும் விளக்கி இலக்கிய உரைவிருந்து அளித்தார்.

மேலும், "அவர் சுருங்கக் கூறல் முதலிய அழகுகள் பொருந்த இயற்றிய இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம் என்னும் நூல்கள் அவரின் இருமொழிப் புலமையை ஒருங்கு காட்டுவதுடன் அவர் செய்த சொல்லாராய்ச்சி நெறியானது ஆங்கில மொழி வல்லார் இக்காலத்தில் செய்து வரும் ஆராய்வுகளின் மேலானது" என்றார். குமாரசுவாமிப் புலவரின் "ஆசிரியத்துவம்" இவ்வாறு அவர் தம் மாணாக்கர் வாய்மொழியால் வளம் பெறுவது சிறப்புடையது.

குமாரசுவாமிப்புலவர் வடமொழிப் பயிற்சியிலே ஆழமான தேர்ச்சி பெற்றவராவர். பண்டிதமணியின் இலக்கிய ஆளுமையில் அவரது குரு குமாரசுவாமிப் புலவரின் ஆதிக்கம் கணிசமானதாகும். இது பண்டிதமணியின் இலக்கிய சிருஷ்டியைப் பெரிதும் அகட்டிற்று.

## *நாவலர் வழியில் புலவர்*

குமாரசுவாமிப் புலவர் அவர்கள் ஆறுமுக நாவலரைச் சந்தித்தது முதலாக அவர் தம் காந்தசக்தியால் ஈர்க்கப்பட்டார். புலவரின் ஆற்றலை நாவலரும் கண்டார். உற்சாகப்படுத்தினார். இந்த உற்சாகம் புலவரவர்களை நாவலரைப் பின்தொடருமாறு செய்தது. நாவலரின் பிரசுரங்களைத் தப்பாமற் பெற்று வந்தார். புலவர், நாவலர் எழுதிய வசனங்களையும், கண்டனங்களையும் கருத்தூன்றிப் படித்தார். புலவரின் அறிவு வளர் பிறையாய் வளர்ந்தது.

தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நாவலர் மூலம் நிவர்த்தி செய்து கொண்டார் புலவர். அல்லாமல் தமது படைப்புக்களை அவரிடம் காட்டி, அவர் அபிப்பிராயத்தைக் கேட்பதிலும் ஆர்வமிக்கவராக விளங்கினார்.

நாவலரது மாணாக்கர் பரம்பரையில் நேரடியாக வராதவராயினும் புலவர் அவர்கள் நாவலர் பரம்பரையின் முக்கியத்தருள் ஒருவராகக் கருதப்படுவர். சிலர் புலவர் அவர்களுடன் நாவலர் பரம்பரை முடிந்து விட்டதாகவும் கூறுவர். இதற்குக் காரணம் புலவரவர்கள் செய்த பணிகளாகும்.

வண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையை நாவலரவர்களுக்குப் பின்பு உயர் கல்லிப் பீடமாக உயர்த்திய பெருமையில் புலவரவர்களுக்கு முக்கிய பங்குண்டு. அங்கு நடைபெற்ற காவிய வகுப்பில் உயிர் நாடியாக விளங்கியவர் புலவர் அவர்களே.

புலவர் அவர்கள் (1878-1888) வரை உள்ள காலப்பகுதியில் கிறீஸ்தவ மத கண்டனத்தில் முதல்வராக நின்றவர். ஆரம்ப காலத்தில் சிறந்த சமயப் பிரசங்கியாகவும் விளங்கியவர்.

இத்தகைய பின்னணியில் வந்த குமாரசுவாமிப் புலவரின் தமிழ்ப் பணிகளைப் பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

1) இலக்கண முயற்சிகள்
2) இலக்கிய முயற்சிகள்
3) மொழி பெயர்ப்புக்கள்
4) அகராதி முயற்சி
5) உரை முயற்சிகள்
6) பதிப்பு முயற்சிகள்
7) கண்டனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1) இலக்கண முயற்சிகள்

"தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே தமிழ்நாட்டவருக்கு வழிகாட்டியாயிருக்கின்றனர். தமிழ்நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்தே அறிஞர் தோன்றினர். இவர்களுட் பலர் புதிய இலக்கண நூல்கள் எழுதியும், பழைய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும் சிறந்த தொண்டாற்றினர்.[5]"

ஒரு மொழிக்குச் சிறப்புக் கொடுப்பது இலக்கணம். வயலுக்கு வரம்பும், குளத்திற்கு அணைக்கட்டும் எவ்வாறு அவசியமோ அவ்வாறே மொழிக்கும் இலக்கணம் இன்றியமையாததா-கிறது. இலக்கணம் இல்லாத விடத்து மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர்கெட்ட நிலையை எய்தும். ஆகவே தான் இலக்கணம் ஒரு மொழிக்கு முதுகெலும்பு போலக் கருதப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஈழத்துப் பேரறிஞர் பலர் இதனை நன்கு உணர்ந்திருந்தனர்.[6]" என்று கூறுகிறார் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள்.

இதையே பண்டிதர் க. வீரகத்தி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"புதிய சிந்தனைகளுக்கு உருவம் கொடுத்துப் புது நூல்கள் ஆக்கம் செய்து பழையவற்றை இறந்துபடாமற் காத்து, பழையனவற்றுக்கு உரையும், புத்துரையும் தந்து, உரைகளுக்கு விளக்கம் கண்டு, காலாகலாமாக இலக்கண உரையாளர்களாற் புலமை நோக்கில் பினையப்பட்டு வந்துள்ள பிரச்சினைகட்கு அறுதியான தீர்வு கண்டு புதிய துறை ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டி, அனைத்துக்குமே "அடி" எடுத்துக் கொடுத்து நின்றது ஈழத்து இலக்கண முயற்சியாகும். இவ்வண்ணம் ஏட்டில் இறந்து கொண்டிருந்த பழைய இலக்கண நூல்களைப் புனிதப்படுத்திப் பதிப்பதனால் ஏற்பட்ட அனுபவ அறிவுவளமும் சமுதாய நோக்கில் தடை போட்ட புலமை உந்தலும் பிறமொழித் தொடர்பால் ஏற்பட்ட சிந்தனைத் திருப்பமும் காரணிகளாய் அமையப் புதிய இலக்கண நூல்கள் ஆக்கப்பட்டது.[7]"

இச்சூழ்நிலையில் புலவரின் இலக்கணப் புலமை இரு தளங்களில் பரிணமித்து இருந்ததை அறிய முடிகிறது.

அ) இலக்கண நூல்கள்

ஆ) இலக்கணப் புத்துரைகள்

புலவரின் வடமொழி, தென்மொழி ஆற்றலையும், இலக்கணப் புலமையையும் தமிழ் கூறும் நல்லுகிற்கு முதன் முதல் உணர்த்திய நூல் "இலக்கண சந்திரிகை" (1897) ஆகும். தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் விகாரப்பட்டுத் தோன்றும் வடமொழிகளுக்கு பொருளும், விதியும் அச்சொல் பயின்று வந்த இலக்கியமும் குறிப்பிடப்பட்டமை புலவரின் ஆராய்ச்சித் திறனையே காட்டுகின்றது. எழுத்து மாற்றம், ஒலிமாற்றம், இவற்றினால் ஏற்படும் பொருள் மாற்றம் முதலானவற்றைப் பற்றிப் புலவர் சிந்தித்திருக்கிறார் என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.

குமாரசுவாமிப் புலவரின் மற்றொரு இலக்கண நூலான "வினைப் பகுபத விளக்கம்" (1912) மிக மிக அற்புதமான முயற்சி என்பர். வினைப் பகுதிகளை அறியும் முயற்சியை வீரசோழிய ஆசிரியர் புத்தமித்திரனார் தொடக்கி வைத்தார். நட என்பது முதல் கொல் என்பது ஈறாக 38 தாதுக்களைக் கண்டு பிறவற்றையும் "இவ்வண்ணம் இயற்றிக் கொள்ளே" (வீரசோழியம் - 61) என்பதுடன் நின்று விட்டார் வீரசோழிய ஆசிரியர்.

பின்வந்த நன்னூலார் வடமொழி வினைப்பகுதிகள் அனைத்தையும் இலக்கண நெறியால் பத்து வகைப்படுத்தி உணர்த்திய பாணினி போல் தமிழ் வினைப்பகுதிகள் அனைத்தையும் மொழியிறுதி எழுத்து அடிப்படையில் 23 வகைப்படுத்தினார்.

நன்னூலார் நட, வா, மடி, சீ, முதலாக வகுத்துக் கூறிய நூற்பாவை எடுத்துக் கொண்டு முந்நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட வினையடிகளை எடுத்துக்காட்டி, அவற்றிலிருந்து பிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் வினைகளின் இயல்புகளை ஆராய்ந்து, சிலவற்றிற்குப் பொருள் விளக்கமும் செய்து, உதாரணங்களுடன் காட்டிச் செல்கின்றது வினைப் பகுபத விளக்கம்.

தமிழிலக்கணத் துறையிலே புதிய போக்கில் அமைந்த இந்நூல் மரபு வழி இலக்கணத்தினூடு எவ்வாறு புதியனவற்றை ஏற்பது அல்லது தவிர்ப்பது என்பதை விளக்கி நிற்கின்றது. தவிர்ப்பனவற்றுக்கு மரபு வழியில் இலக்கண விதி காட்டுவதும், ஏற்பவற்றுக்கு மரபு வழி இலக்கணத்தோடு இயைபுபட விதிகாட்டுவதும், விதி ஆக்குவதும், ஆக்கிய விதிகளுக்கு உதாரணமாகப் பண்டைச் சான்றோர் இலக்கியங்களில் வழங்கும் சொற்களைக் காட்டுவதும் புலவரின் இலக்கண ஆராய்ச்சித் திறனைக் காட்டுகின்றன.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இவ்விரு நூல்களைப் பற்றியும் கூறிய கருத்துக்களைக் காணல் நலம்.

"வினைப் பகுபத விளக்கம், இலக்கண சந்திரிகை என்கின்ற அருமந்த நூல்களை இயற்றிய புலவர் அவர்கள் சொல்லாராய்ச்சியில் ஒப்புயர்வில்லாத தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். தமது காலத்துத் தமிழகத்துப் புலவர் அனைவரும் இவ்விசயத்தில் புலவரவர்களுக்குத் தலை வணங்கியவரே ஆவர். சுவாமி வேதாசலம் சொல்லாராய்ச்சி வல்லோருக்கு வழங்கும் பட்டம் புலவரவர்களுக்குப் போதாதென்று எழுதியிருக்கிறார்.[8]"

இது தவிர இவ்விரு நூல்களையும் ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார், சாமிநாதையர் முதலிய தென்னிந்திய அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

இலக்கண ஆய்வு நூல்களை எழுதுவதுடன் மட்டும் நின்றுவிடாத புலவர் அவர்கள் இலக்கணப் புத்துரைகளையும் வரைந்துள்ளார். யாப்பருங்கலப் பொழிப்புரை (1900), வெண்பாப் பாட்டியல் பொழிப்புரை (1900), தண்டியலங்காரப் புத்துரை (1903), யாப்பருங்கலக் காரிகைப் புத்துரை (1912) நம்பி அகப் பொருள் புத்துரை (1912) என்பன அவையாகும். இவ்வுரை நூல்கள் தொடர்பாக ஈழத்திலும், தமிழகத்திலும் பெரும் சர்ச்சைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழறிஞர்கள் இவ்வுரைகளின் சிறப்பைச் "செந்தமிழ்" முதலிய சஞ்சிகைகளிலே எழுதியுள்ளனர்.

குமாரசுவாமிப் புலவர் இலக்கண நூற்பாக்களையும், அவற்றின் உரைகளையும் ஒப்புநோக்கி உரையாசிரியர்கள் இடர்ப்படும் இடங்களைச் சுட்டிக் காட்டியதோடு மூல நூற்பாவிலும், பாடபேதத் திறனாய்வு நெறியிலே சில திருத்தங்களைச் செய்யவும் முற்பட்டிருக்கிறார்.

இந்த வகையில் ஈழத்து இலக்கண வரலாற்றில் சுன்னாகம். அ. குமாரசுவாமிப் புலவருக்கு ஒரு தனியிடம் உண்டு.

## 2) இலக்கிய முயற்சிகள்

குமாரசுவாமிப் புலவரின் இலக்கிய முயற்சிகளை இரு வகையாகப் பகுக்கலாம்.

அ) செய்யுள் இயற்றல்

ஆ) இலக்கிய உரைகள்

மரபு வழித் தமிழ்ப் புலவரான இவர் எல்லா யாப்பு வடிவங்களிலும் செய்யுள்களை எழுதியுள்ளார். பெரும்பாலும் மரபு வழிப் பொருள் மரபிலிருந்து விடுபடாத தன்மையினை இவரது செய்யுள்களில் காணலாம்.

புலவர் ஏறத்தாழ இருபதிற்கும் மேற்பட்ட செய்யுள் நூல்களை எழுதியுள்ளார். இவை பதிகம் நான் மணிமாலை, ஊஞ்சல் எனப் பல்வகைப்படும். இவரது செய்யுள் நூல்களிற் சில வருமாறு

| | |
|---|---|
| சிவதோத்திரத் திரட்டு | ஏகவிருத்த பாரதாதி |
| மாவைப் பதிகம் | அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மாவையிரட்டை மணிமாலை | நகுலேஸ்வரர் ஊஞ்சல் |
| வதுளைக் கதிரேசன் பதிகம் | வதுளைக் கதிரேசன் சிந்து |
| கைலாயபிள்ளையார் ஊஞ்சல் | மிலேச்சமத விகற்பக் கும்மி |

இவற்றிற் பெரும்பாலானவை சமயம் அல்லது தலம் சார்ந்தனவாகக் காணப்படுகின்றன.

புலவரின் செய்யுள் நூல்களுள் "மிலேச்ச மத விகற்பக் கும்மி" குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்று. சுன்னாகம் சங்கர பண்டிதர் இயற்றிய மிலேச்ச மத விகற்பம் என்னும் நூலை "யாவர்க்கும் உபயோகமாகும் பொருட்டுக் கும்மி ரூபமாக இவர் பாடியுள்ளார். புலவரின் ஏனைய செய்யுள் நூல்களில் காண முடியாத நெகிழ்ச்சியை, எளிமையை இந்நூலில் காண முடியும். சாதாரண பொது மக்களைக் கருத்திற் கொண்டு பாடிய புலவரின் காலப் பிரக்ஞை மனங் கொள்ளத் தக்கது.

புலவர் செய்யுள் நூல்களை அமைத்ததுடன், பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். புலவரது தனிப்பாடல்களுள் ஒன்று :

"முந்தேறு கிருதயுக பூபதிமாந் தாதாவு
முடிந்து போனான்
நந்தேறு கடலடைந்த செயராமச் சந்திரனு
நடந்து விட்டான்.
வந்தேறு குருகுலத்துத் தருமன் முதன் மகிபரெலா
மாய்ந்து போனார்
அந்தோவிங் கிவரோடும் போ காதபுவி நின்னொடுதா
னடையுமையா."

## ஆ) இலக்கிய உரைகள்

ஏறத்தாழப் பத்து நூல்கள் வரை இவர் உரை எழுதியுள்ளார். அக்காலத் தமிழறிஞர்களால் பொதுவான மரபோட்டத்துடன் அமைந்தவை" எனப் பாராட்டப்பட்டவை. இதற்கு உதாரணமாகத் தி. கனகசுந்தரம் பிள்ளையுடன் இணைந்து இவர் எழுதிய இராமாயணம் பாலகாண்ட அரும்பத-வுரையைக் குறிப்பிடலாம்.

அக்காலத்து மாணவரின் கல்வித்தேவையைக் கருத்திற் கொண்டு புலவர் எழுதிய புத்துரைகளில் ஒன்று நீதிநெறி விளக்கப் புத்துரை ஆகும்.

இவர் எழுதிய உரைகளிற் சில

திருக்கரைசைப் புராணப் பொழிப்புரை

திருவாதவூரர் புராணம் புத்துரை

மறைசையந்தாதி அரும்பதவுரை

கல்வளையந்தாதிப் பதவுரை

கலைசைச் சிலேடை வெண்பா அரும்பதவுரை

முத்தக பஞ்ச விஞ்சதி குறிப்புரை.

என்பனவாகும். ரகுவம்சத்தின் சில கவிகளுக்கும், சொற்றொடர்களுக்கும் உரை எழுதிய புலவர் அதனை "ரகுவம்சக் கருப்பொருள்" எனும் சிறு நூலாக வெளியிட்டிருந்தார்.

இவ்வுரை நூல்கள் யாவும் புலவரின் பரந்துபட்ட இலக்கிய ஆர்வத்தையும், ஆழ ஆராய்ந்து உரை கூறும் திறனையும் வெளிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3) உரை முயற்சிகள்

கண்ணகி கதை (1900), தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916) சிசுபால சரிதம் (1921), இரகுவம்ச சரிதாமிர்தம் (1930) இதோபதேசம் முதலானவை அவர் எழுதிய உரைநடை நூல்களாகும். இவற்றுட் சிறந்தது சிசுபால சரிதம் ஆகும்.

புலவரது காலத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களைப் பற்றி அறிவதற்கு உதவும் நூல்களாகத் தமிழ் புளூராக் (Tamil Plutarch), பாவலர் சரித்திர தீபகம் (1886) என்பன வெளிவந்திருந்தன. இம் முன்னோடிகளைப் பின்பற்றி 1916 ல் குமாரசுவாமிப் புலவரால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் 182 புலவர்களின் வரலாறு இடம் பெற்றது. அவற்றுள் 39 புலவர்களே ஈழத்தவர்கள். இதன் இரண்டாம் பதிப்பிற் புதிதாகச் சேர்க்கப்பட்ட 26 புலவர்களுள் நால்வர் ஈழத்தவர்

குமாரசாமிப் புலவரின் உரைநடை தனித்த ஆய்வுக்கு உரியது. "வசனநடை கைவந்த வல்லாளரான" நாவலரே புலவரின் உரைநடையை மெச்சினார் என்பது குறிப்பிடத்தக்கது.

> "வினைப் பகுபத விளக்கம்" என்ற நூலின் அணிந்துரையில் "பாரத ராமாயணாதிகளிலும், பண்டைச் சான்றோர் பனுவல்களிலும் பகுபதங்களுள் வைத்துப் பல பாகுபாடுகள் புலப்படும் வழக்கிற் கண்டு வழூஉ எனக் கொண்ட சிலவற்றின் இழுக்கறவும் புலப்பஜம். தழூஉ எனக் கொண்ட சிலவற்றின் ஏக்கறவும் புலப்படும். மரூஉ எனக் கொள்ளப்படுமாறு முதனிலைகளின் இழுக்கறவும் புலப்படும். முதனிலைகளின் முதனிலைகளும் புலப்படும் சிலவாவன சிறக்கணித்தல், ஆமிடை, தறுகண் முதலியன"

எனக் கடின செந்தமிழ் நடையில் இலக்கணக் கல்வி நாடும் பண்டிதர்க்கென எழுதிய புலவர், வித்தைக் கண் விருப்புடைய பாலகர் பொருட்டுத் தாம் எழுதிய "கண்ணகி கதையில் எளிய இலகுவான உரைநடையைப் பயன்படுத்தி உள்ளார். அவ்வுரைநடைப் பகுதி வருமாறு

"என்றவுடனே கண்ணகியுந் துயரில் மிதந்தாள். தன்வசம் இழந்தாள். பின்னர் எழுந்தாள். விழுந்தாள். ஐயோ! என் கணவா! என் கணவா! என்றாள். எங்கே போயினன்! எங்கே போயினன்! என்றாள். ஆ என்றாள். அழுதாள். புலம்பினாள். அடுத்த பெண்களை நோக்கினாள்."

குறியீடுகளைப் பயன்படுத்திப் பொருள் விளங்கச் செய்வதில் நாவலரைப் பின்பற்றிய புலவர், பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதங்களிலும், கட்டுரைகளிலும், கண்டனங்களிலும் வெவ்வேறு விதமான உரைநடையைக் கையாண்டமை ஈங்கு குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணியின் அழகான, ஆற்றொழுக்கான உரைநடைக்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்தவர் புலவரே. பழந்தமிழ் இலக்கியங்களுக்குப் புலவர் எழுதிய உரைநடையில் உரையாசிரியர்களின் செல்வாக்குக் காணப்படுவதையும் நாம் அவதானிக்கலாம்.

## 4) மொழிபெயர்ப்புக்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமயக்கல்வியில் வளர்ச்சியால் ஏற்பட்ட சிறந்த பெறுபேறுகளுள் மொழிபெயர்ப்பும் ஒன்று ஆகும். முன்னைய காலப் பகுதிகளிலும் விட ஆங்கிலேயர் காலத்திலேயே மொழிபெயர்ப்பு நூல்கள் பல தோன்றின.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்,"

பாரதியின் இக்கொள்கையை அடியொற்றிக் குமாரசுவாமிப் புலவர் சாணக்கிய நீதிவெண்பா, மேக தூதக் காரிகை, இராமோதந்தம் எனும் வடமொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இவை செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணக்கிய நீதிவெண்பாவில் பண்டிதர் மகிமை, புத்தர பரிபாலனம், குணமிலான், வஞ்சகன், விலகுந்தூரம், பெருந்துயர், துக்கப்பேறு, ஆபரணம், துன்புறு பகைவர் போன்ற செய்யுள்களை யாத்துள்ளார்.

கருத்துச் செறிவுடனும், அழகு நடையுடனும் அமைந்த அப்பாடல்களிற் சில வருமாறு

புத்திர பரிபாலனம்.

"ஐந்து வயதாகுமட்டும் ஆதரவாய்ப் பேணுகவீர்
ஐந்து வயததன்பி னாகுமட்டும் - மைந்தர்களைக்
கண்டிக்க வீரெட்டுக் காணுமேன் மித்திரன்போற்
கொண்டிடுக வேண்டாங் குறை.[10]"

ஆபரணம்.

"தாரகைகட் காபரணஞ் சற்திரனே சுந்தரஞ்சேர்
நாரியட் காபரணம் நாயகனே - பாருலகுக்
காபரணஞ் செங்கோ லரசனே யாவர்க்கும்
ஆபரணம் கல்வியே யாம்.[11]"

மேகதூதக் காரிகையில் இடம்பெறும் பின்வரும் செய்யுள் புலவரது மொழிபெயர்ப்புத் திறனையும், சொல்லாட்சியையும் ஒருங்கே புலப்படுத்தும்.

"வடிக்கடு வேல் விழி மானே
உனது வடிவினைக் கற்
பொடிகொடு கற்படந் தீட்டி
வணங்கப் புகுந்த என்னை
அடிக்கடி நீர்விட்டு எனது கண்
பார்வை அழிக்கும் அந்தோ
படத்துனைத் தீண்டவும் நல்விதி
இல்லை கொல் பாவியேற்கே."

புலவருக்கு இராமகாதையிலுள்ள ஈடுபாட்டையும், செய்யுள் இயற்றும் திறமையையும் இராமோதந்தத்தின்" பின்வரும் செய்யுள் மெய்ப்பிக்கும்

"வெய்ய ராவணற் கொன்றிட விரைவினில் யாமும்
வையங் காத்திடுந் தசரதன் மைந்தனாய் வருவேம்
பொய்னாமவன் றன்னொடும் போர்புரி காலைத்
துய்ய வானவ ரெமக்கருந் துணைசெயும் பொருட்டு[12]."

தமிழ் மரபு வழுவாதவர்களைப் புலவர் நன்கு மதிப்பவர். அவர் தாம் பாடிய "இராமோதந்தம்" எனும் இறுதியில் "வாழி செந்தமிழ் இலக்கிய இலக்கண வரம்பு" எனக் கூறியுள்ளார். இதனை எதிர்காலத்தில் உள்ளவர்கள் எவ்வாறு தமிழை வளர்க்க வேண்டும் என்பதற்கு அவர் கூறிய புத்திமதியாகவும், எச்சரிக்கையாகவும் கொள்ளலாம்.

## 5. அகராதி முயற்சி

மேனாட்டுப் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தி விட்ட வித்துவக் கிளர்ச்சியினால் நம் நாட்டவரும், அவர்கள் காட்டிய பாதையிற் சென்று அகராதிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வகையில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், வைமண் கதிரைவேற்பிள்ளை, பருத்தித்துறை சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

6873

153296



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகண்டுகளுக்கு உரையெழுதிய அனுபவத்தாலும், இலக்கிய இலக்கணப் பயிற்சியினாலும் புலவர் அகராதி முயற்சியில் ஈடுபட்டாரா் எனலாம். அத்துடன் வைமன் கதிரைவேற்பிள்ளையின் அகராதிப் பணிகளுக்குத் துணை நின்றமையும் இதனைச் செய்யத் தூண்டியிருக்கலாம்.

1914ம் ஆண்டு புலவரவர்களது இலக்கியச் சொல்லகராதி" வெளிவந்தது. இலக்கண இலக்கிய அறிவு பெற்றவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் இவ்வகராதியில் இராமாயணம், மகாபாரதம், கலித்தொகை, சிந்தாமணி முதலிய பழந் தமிழ் நூல்களிலுள்ள பெயர்ச் சொற்களே பெரும்பாலும் தொகுக்கப்பட்டுள்ளன.

புலவர் தாம் சேர்த்துக் கொண்ட புதுச் சொற்களை உடுக் குறியினால் சுட்டிக் காட்டியுள்ளார் என்பதுடன், இலக்கியச் சொல்லகராதி, அகராதி அமைக்கும் முறையியலுடன் அமைந்துள்ளமையும் நோக்கற்பாலது.

குமாரசுவாமிப் புலவரின் சிறப்பான பணியாக மரபு வழித் தமிழ்ப் புலமையாளனான இவர் நவீனத்துவம் அறிமுகம் செய்த அகராதி முயற்சியில் ஈடுபட்டமையைக் குறிப்பிடலாம். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஈழத்து இலக்கியச் சொல்லகராதிக்கும், அதனை ஆக்கிய புலவருக்கும் நிலையான ஓர் இடமுண்டு எனலாம்.

## 6. பதிப்பு முயற்சிகள்

ஆங்கிலேயர் காலத்தில் அச்சகங்கள் பல தோன்றவே பண்டைய நூல்க்ளையும், தம் காலத்து நூல்களையும் ஏடுகளிற் போற்றிப் பேணி வந்த அறிஞர்க்கு அச்சுவாகனம் ஏற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இக்காலத்தில் பதிப்பாசிரியர்கள் பலர் தோன்றி ஈழத்திலும் தமிழகத்திலும் தோன்றினார். அத்தகைய ஒருவரே சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர். இவர் பதிப்பு முயற்சிகளில் மட்டுமன்றி பாடபேத ஆராய்ச்சியிலும் கவனம் செலுத்தினார். கம்பராமாணம் பாலகாண்டப் பதிப்புரை இத்தகைய ஒரு முயற்சியே.

புலவரால் யாப்பருங்கலக் காரிகை,
தண்டியலங்காரம்
அகப்பொருள் விளக்கம்
ஆசாரக் கோவை
நான்மணிக் கடிகை
உரிச்சொளி கண்டு
நகுலமலைக் குறவஞ்சி நாடகம் என்பன பதிப்பிக்கப்பட்டன.

தனது பேரனான முத்துக்குமாரக் கவிராயர் தோத்திர ரூபமாகப் பாடிய பாடல்களைத் திரட்டிய குமாரசுவாமிப் புலவர் "முத்தக பஞ்ச விஞ்சதி" எனும் தலைப்பில் அதனை 1907ல் வெளியிட்டுள்ளார்.

## 7) கண்டனங்கள்

சமயத்தினை நோக்கமாகக் கொண்ட கண்டன நூல்கள் பெருகிய ஆங்கிலேயர் காலப்பிரிவில் பிறிதொரு வகையான கண்டன நூல்களும் தோன்றின. ஈழத்தவர் பலர் இலக்கிய கண்டனங்களிலும் இக்காலப்பிரிவில் ஈடுபட்டு உள்ளனர்.

"தமிழ்த்தாத்தா" எனப் போற்றப்படும் உ.வே. சாமிநாதையரின் "சீவக சிந்தாமணி" முதற் பதிப்பிற் பிழை பல கண்டு நிறுவியவர். குமாரசுவாமிப்புலவர்" சபாபதி நாவலரின் "திராவிடப் பிரகாசிகை" நூலும் புலவரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இலக்கிய சம்பந்தமான இக்கண்டனங்களால் திருத்தங்கள் பல ஏற்பட்டன என்று கூறுவது மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடஞ்ஞரான (தோடம் என்பது வழு, ஞன் - அறிவோன்) முருகேச பண்டிதரிடம் கற்றவரான புலவரும் "தோடஞ்ஞர்" என்றே வழங்கப்பட்டார். புலவரின் "தோடஞ்ஞத்துவம்" பற்றி மறைமலையடிகள் பெரிதும் பாராட்டு வழங்கியுள்ளார்.

இவற்றைத் தவிரக் குமாரசுவாமிப் புலவரவர்கள் உதயதாரகை, இலங்கை நேசன், உதயபானு, இந்துசாதனம், முதலான ஈழத்துப் பத்திரிகைகளிலும், செந்தமிழ், ஞானசாகரம், ஸ்ரீலோகரஞ்சனி, வைசியமித்திரன், தமிழ்மகவு முதலிய தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் புலவர் எழுதிய ஏராளமான கட்டுரைகள், இலக்கிய, இலக்கண சமய வரலாற்றுத் துறை விடயங்கள் பலவற்றை அலசுவனவாய் அமைந்தன. அத்துறைகளில் ஆர்வமுடையாருக்கு இன்றும் சுவை பயப்பனவாய், இரு நூற்றுக்கும் மேற்பட்ட அக்கட்டுரைகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் உள்ள கோயில்களிலும் பாடசாலைகளிலும் புலவர் சமய சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் ஆற்றிய சொற்பொழிவுகள் பொதுமக்கள் மத்தியிற் சமய ஒழுக்கத்தையும் கல்வியறிவையும் வளர்ப்பதில் அவர் கொண்டிருந்த பேரார்வத்தைக் காட்டுவனவாக உள்ளன.

"வித்தைக் கண் விருப்புடைய பாவலர் பொருட்டு புலவர் அவர்கள் தமிழ்ப் புலவர் சரித்திரத்தை 1916 ல் அகர வரிசைப்படி எழுதியுள்ளார்[13]." எனக் கலாநிதி பொ. பூலோகசிங்கம் தெரிவித்துள்ளார். அந்நூலில் ஈழப்புலவர்கள் பற்றிய கிடைத்தற்கரிய தகவல்களும், அவர்களது ஆக்கங்கள் சிலவும் (உதாரணம் வியாக்கிரபாத புராணம்) காணப்படுகின்றன. இதைப் புலவரின் பெரு முயற்சிகளில் ஒன்று என்று குறிப்பிடலாம்.

மேற்படி தனது வாழ்நாளின் இறுதி வரையும் ஓய்வின்றித் தமிழ்ப்பணி புரிந்த புலவரவர்கள் 1922ம் ஆண்டில் தமிழுலகம் துயருற மீளாத்துயில் கொண்டார்.

## உசாத்துணை நூல்கள்


1. 19ம் நூற்றாண்டில் ஈழத்தமிழ் இலக்கியம் - பூபாலசிங்கம் - பொ. கலாநிதி (4வது தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு மலர் - 1974)
2. குலரத்தினம். க.சி. பல்கலைப்புலவர் - செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்
3. பண்டிதமணி நினைவுமலர் - 1989
4. பண்டிதமணி நினைவு மலர் - 1989
5. தமிழியற் சிந்தனை - கலாநிதி சு. வித்தியானந்தன்
6. தமிழியற் சிந்தனை - கலாநிதி சு. வித்தியானந்தன்
7. பண்டிதமணி நினைவு மலர் - 1989
8. பண்டிதமணி நினைவு மலர் - 1989
9. பாரதியார் கவிதைகள்
10. சாணக்கிய நீதி வெண்பா - அ. குமாரசுவாமிப்புலவர்
11. சாணக்கிய நீதி வெண்பா - அ. குமாரசுவாமிப்புலவர்
12. இராமோதந்தம் - அ. குமாரசுவாமிப்புலவர்.
13. தமிழிலக்கியலத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் - பூலோகசிங்கம் - பொ. கலாநிதி
14. ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி - நடராசா - க.செ. டாக்டர்
15. ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு - நடராசா F.X.C. வித்துவான்.


தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாணவர்க்கான கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரை*

# குமாரசுவாமிப்புலவர் ஆற்றிய தமிழ் தொண்டு

செல்வி. வித்தியா குலராஜசிங்கம்
குடத்தனை கிழக்கு, குடத்தனை

கருத்துக்களையும் செவ்வனே பரிமாறிக் கொள்ளத்தக்க மொழியாற்றலையும், மானிடவாழ்வு சுமுகமாய் அமைய உதவும். ஒழுக்க நெறிகளையும் மேற்கொள்ளும் கருமங்களில் நேர்மையான முயற்சியுடைமையும் மாணவர் மத்தியில் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து அதிகமாக இன்று பேசப்படுகிறது. அவை குறித்த ஆர்வமும் அறிவும் துலங்கு குமாரசுவாமிப்புலவரின் வாழ்வும் பணிகளும் பற்றிய சிந்தனை உதவும் என்பதில் ஐயமில்லை.

இன்று நாம் இலங்கைத் தமிழ் வரலாற்றைப் பற்றியும் ஈழத்தமிழிலக்கிய வரலாற்றை பற்றியும் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பற்றியும் பெருமையோடு பேசமுடிகிறதென்றால் அதற்கு உறுதிளித்தவர்கள் சிறப்பாகச் சென்ற நூற்றாண்டிலே இலங்கையில் வாழ்ந்து தமிழ் தொண்டாற்றிய பேரறிஞர்களே ஆவர். அவர்களுள் விதந்து குறிப்பிடத்தக்க ஒருவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் ஆவர்.

1854ம் ஆண்டு சுன்னாகம் என்ற கிராமத்திலே தோன்றி 1922ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டவர் குமாரசுவாமிப்புலவர். தமிழ் வளர்ச்சிக்கும் சைவ மறுமலர்ச்சிக்கும். தீர்க்கமான பெரும் பணிகளை ஆற்றிய ஆறுமுக நாவலருடனும். சி.வை. தாமோதரபிள்ளையுடனும் பழகும் பேறு பெற்றவரான குமாரசுவாமிப்புலவர். அவர்களுடைய பணிகளைத் தொடர்ந்து வளர்த்து அவற்றின் பயனை உறுதிப்படுத்தினார். நாவலர், தாமோதரப்பிள்ளை ஆகியோர் பணியிற் பெரும்பகுதி தமிழ் நாட்டிலே நடைபெற்றது. புலவரது தொண்டு ஈழத்திற் பெரிதும் திகழ்ந்தது.

ஈழத்திலே தோன்றிய பல்வேறு புலமையாளர்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உபகாரியானவர். நாவலர் அவர் விட்டு சென்ற மரபு வழி தமிழ்க் கல்வி பணியைச் செய்தவர்களுள் தலை சிறந்தவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்.

இவர் பண்டிமணி கணபதிப்பிள்ளை புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை இருவருக்கும் நாவலரின் காவிய பாடசாலையில் ஆசிரியராக விளங்கினார். இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வடமொழி ஆகியவற்றிலே மேதையான இவர் தமிழ்ச் சங்க உறுப்பினர். அதன் சஞ்சிகையாகிய செந்தமிழில் பற்பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி தமிழ் நாட்டில் பெரிதும் போற்றப் பெற்றவர்.

இராமோதந்தம், சாணக்கநீதி என்பன இவரின் செய்யுள் நூல்கள் இலக்கண சந்திரிகை, வினை பகுபதவிளக்கம், என்பன இவர் இயற்றிய இலக்கண விளக்க நூல்கள் யாப்பருங்கல காரிகை, அகப்பொருட் விளக்கம், தண்டியலங்காரம் கம்பராமாயணம், பாலகாண்டம் என்பன இவரின் பதிப்புக்கள்.

தமிழ்ப்புலவர் சரித்திரம் என்பது சிறந்த வசன நூலாகும். கதிரைவேற்பிள்ளை அகராதியை தொகுத்தவர்களுள் இவரும் ஒருவராவார். சுன்னாகம் முருகேச பண்டிதர் இவரின் ஆசிரியர் இவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றமிழ் போதன ஆசிரியராகவும் இலக்கண வித்தகர் ஆகவும் புகழையோ, பொருளையோ விரும்பாது தமிழ்ப்பணி செய்தார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் வடமொழிகளையும் துறைபோகக் கற்ற புலவரின் பணி பல துறைகளைச் சார்ந்ததும் பெரும் பரிமாணங்களைக் கொண்டதுமாகும். அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை அவர் இயற்றியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

வதுளைக்கதிரேசன் பதிகம், வதுளைக் கதிரேசன் சிந்து, நகுலேசுரர் ஊஞ்சல், மிலேச்சம் தவிகற்பக கும்மி, மாவையிரட்டை மணிமாலை, கைலாய பிள்ளையார் ஊஞ்சல், சாணக்கிய நீதி வெண்பா முதலியன பல செய்யுள் நூல்கள் புவலருடைய செய்யுள் திறனையும் சமயப் பார்வையும் ஒழுக்க ஆர்வத்தையும் காட்டுவனவாகும்.

திருக்கரைசைப் புராண பொழிப்புரை, மறைசையந்தாதி, அரும்பதவுரை, திருவாதவூரர் புராணப் பொழிப்புரை கல் வளையந்தாதிப் பதவுரை முத்தக விஞ்சதி குறிப்புரை முதலிய உரைநூல்கள் புலவரது பரந்துபட்ட இலக்கிய ஆர்வத்தையும் புலமையையும் மட்டுமன்றி ஆழ ஆராய்ந்து நுணுக்கமாக உரை கூறும் திறனையும் காட்டுவனவாகும்.

யாப்பருங்கல பொழிப்புரை, அகப்பொருள் விளக்கப்புத்துரை, தண்டியலங்காரப் புத்துரை முதலிய இலக்கண சந்திரிகை, வினைபகுபத விளக்கம் ஆகிய இலக்கண ஆய்வு நூல்களும் புலவருக்குத் தமிழ் இலக்கணத்திலும், யாப்பிலும் அணியிலும் இருந்த உன்னதமான புதுமையினை வெளிப்படுத்துவதாகும். ஈழத்தவர்கள் பண்டை மொழி மரபுகளையும் இலக்கண வரம்புகளையும் பேணுவதில் விசேட ஆர்வம் காட்டுவதற்குக் குமாரசுவாமிப்புலவர் போன்றவர்கள் அமைத்த அடித்தளமே காரணமாதல் வேண்டும்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எமது நாட்டில் நடைபெற்ற காரசாரமான மரபுப் போராட்டத்தைத் தமிழிலக்கிய இலக்கண ஆர்வலர்கள் மறந்திருக்க மாட்டார்கள். புதிய மாறுதலுக்கு எதிரான ஒரு பண்டிதர் பரம்பரையே சினமுற்று எழுந்தது. கால கதியிலே ஏற்படும் மாற்றங்களை அப்பண்டிதர்கள் ஒப்ப மறுப்பது கண்டு அவர்களைக் கடிந்தவர்கள் கூட, அப் பண்டிதர்களின் இலக்கண ஆர்வத்தையும் பழமைப் பற்றையும் சந்தேகிக்கவில்லை. குமாரசுவாமிப் புலவர். போன்றவர்களால் வளர்க்கப்பட்ட அந்த ஆர்வமும் பற்றும் தமிழ் இலக்கிய இலக்கண கல்வி ஆழ வேரூன்றவும், வல்லமையோடு வளரவும் காலன்மையினை மறுத்தல் சாலாது.

குமாரசுவாமிப் புலவரது யாப்பிலக்கணப் புலமையினையும் பற்றினையும் பற்றி விதந்து பேசும் வேளையிலும் சாதாரண மக்களைக் கவனத்திற் கொண்டு கும்மிப் பாடல்களையும், சைவ நூல்களையும் இயற்றிய அவரது காலப் பிரக்ஞையினையும் மனதிற் கொள்வது அவசியமாகும்.

வசனநடை கைவந்த வல்லாளரான ஆறுமுக நாவலர் மரபில் நின்ற குமாரசுவாமிப் புலவரும், கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரித்திரம் சிசுபால சரிதம், முதலிய வசன நூல்களை இயற்றி வெளியிட்டார். வினைப்பகுபத விளக்கம் என்ற நூலின் அணிந்துரையிலே புலவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "பாரத ராமாயணங்களிலும் பண்டைச் சான்றோர் பனுவல்களிலும் பகுபதங்களுள் வைத்துப் பல பாகுபாடுகள் புலப்படும் வழக்கிற் கண்டு வமூஉ எனக் கொண்ட சிலவற்றின் இமுக்கறவும் புலப்படும். தமூஉ என கொண்ட சிலவற்றின் இழுக்கறவும் புலப்படும் மமூஉ எனக்கொள்ளுமாறு முதனிலைகளின் இடுக்கறவும் புலப்படும் முதனிலைகளின் முதனிலைகளும் புலப்படும் சிலவாவன சிறக்கணித்தல் உவோவல் அரமிடை, தறுகள் முதலியன"

குமாரசுவாமிப்புலவர் எழுதிய இந்தப் பகுதி இலக்கணக் கல்விநாளும் பண்டிதர்களுக்கென எழுதப்பட்ட நூலிலே கற்றுக் கடினமான செந்தமிழ் நடையில் அமைந்தது. சாதாரண மக்களுக்கெனப் புலவர் எழுதிய கண்ணகி கதை இலகுவான நடையில் அமைந்துள்ளது. பின்வரும் பகுதி அந்நூலிற் காணப்படுவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோழ மண்டலத்திலே காவிரிபூம் பட்டினம் என்றும் நகரத்திலே மாநாயகன் என்றும் பெயருடைய செட்டியொருவன் இருந்தான். அச்செட்டியின் மகளாகிய கண்ணகி என்பவள் பொற்பினால் இலக்குமி என்றும் கற்பினால் அருந்ததி என்றும் கண்டோ ரெல்லாங் கொண்டாடிக் கைகுவித்து வணங்கத் தக்க மிக்க மேன்மையும் நற்குண நற்செய்கைகளும் பெற்றவளாய்ச் சிறப்புற்று வளர்ந்து பன்னிரண்டாம் வயசென்னும் பருவத்தையடைந்தாள். இவளுக்குத் தேவந்தி என்றும் பிராமணப் பெண்ணும் பாங்கியாக விளங்கினாள்"

குமாரசுவாமிப் புலவரின் இப்பகுதி எளிதிற் பொருள் விளங்கத் தக்கதாய் ஆற்றொழுக்குப் போன்ற நடையில் அமைந்தது. தேவைக்கு ஏற்ற உரை நடையினைச் சிறப்பாய் ஆறாம் திறன் கைவந்தவராய்ப் புலவர் விளங்கினார்.

ஆசாசாரக்கோவை, நான் மணிக் கடிகை நகுல மலைக் குறவஞ்சி நாடகம், உரிச் சொளிகண்டு முதலிய பல நூல்களைப் பதிப்பித்த புலவர் சில தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். பண்டைக்கால இலக்கியங்களைப் பயிலுவோருக்குப் பயன்படும் வகையில் இலக்கிய சொல்லகராதி ஒன்றினையும் அவர் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள கோயில்களிலும் பாடசாலைகளிலும் புலவர் சமய சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் ஆற்றிய சொற்பொழிவுகள் பொது மக்கள் மத்தியிற் சமய ஒழுக்கத்தையும் கல்வியறிவையும் வளர்ப்பதில் அவர் கொண்டிருந்த பேரார்வத்தைக் காட்டுவனவாய் அமைந்தன.

உதயதராகை, இலங்கை நேசன், உதயபானு, இந்து சாதனம், முதலான ஈழத்து பத்திரிகைகளிலும், செந்தமிழ் ஸ்ரீலோகரஞ்சினி, ஞானசாகரம், வைசிய மித்திரன், தமிழ் மகவு, முதலிய தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் புலவர் எழுதிய ஏராளமான கட்டுரைகள் இலக்கிய இலக்னண சமய வரலாற்றுத்துறை விடயங்கள் பலவற்றை அலசுவனாய் அமைந்தன. அத் துறைகளில் ஆர்வமுடையாருக்கு இன்றும் சுவை பயப்பனவாய் இரு நூற்றுக்கு மேற்பட்ட இக் கட்டுரைகள் உள்ளன.

கண்டனமெழுவதிலும், புலவர் மிகக் கெட்டிக்காரராயிருந்தார். ஆறுமுகநாவலர், முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர், ஆகியோரிடமும் அக்கலையினைக் கைவரக் கற்ற புலவர் சமய, இலக்கிய, இலக்கணத் துறைகளிற் போலிக் கல்விமான்களையும் போலிக் கொள்கைகளையும் காரசாரமாகக் கண்டித்தார். சபாபதி நாவலர், உ.வே. சாமிநாதையர் போன்றோரும் அவரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

அத்தனைக்கும் கர்வமோ தெரியாததைத் தெரிந்ததாகப் பாவனை பண்ணும் மனப் பான்மையோ புலவருக்குக் கிஞ்சித்தும் கிடையாது. சந்தேகங்களைத் தீர்க்க ஏனைய அறிஞர்களையும் பத்திரிகைகளையும் நாடிய அவரது சிறப்பு விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

சி.வை. தாமோதரப்பிள்ளை தாபித்த ஏழாலைத் தமிழ் வித்தியாசாலையிலும், வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாசாலைகளிலும் நாற்பத்திரண்டு ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த புலவர் பல சிறந்த மாணவர்களை உருவாக்கி எங்கள் நாட்டிற்கு சைவமும் தமிழும் வளர வழிகோலியிருந்தார். அன்னாருடைய மாணவர்களுட் குறிப்பிடத்தக்க பலருட் சிலர் மகாவித்துவான் சி. கணேசையர், வித்துவான் சிவானந்தையர், தென்கோவை பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை புலவர் மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை ஆகியோராவர்.

நாவலர் பாடசாலையில் 1917ம் ஆண்டில் குமாரசுவாமிப்புலவர் தலைமையிற் தாபிக்கப்பட்ட காவிய பாடசாலையிற் கற்றுத் தேறிய கணபதிப் பிள்ளையவர்கள் நாவலர் வழிவரும் மரபுக்கும் நாம் காணக்கூடிய சாட்சியாக இருக்கிறார். என்று கூறுவதில் தவறில்லை. நாவலர் தென்னிந்தியாவிற்குப் போகின்ற காலங்களில் அவருடன் சென்ற பொன்னம்பல பிள்ளையிடம் காவியங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுணர்ந்து சுவைத்தோர் பலராவர். சபாபதி செட்டியார் வீட்டிலே பிள்ளையவர்கள் நடாத்திய இலக்கிய வகுப்புக்கள் பிரச்சித்தம் அது போலவே காவியங்களைக் கற்பதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தோரும் பலராவர் "தணிகைப் புராணம்" திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு முகவுரையில் த.ச. மீனாட்சி சுந்தரப்பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

> இப்போது ஆதீன வெளியீடாக வரும் இப்புராணக் குறிப்புரை என் தமிழாசிரியர்களில் ஒருவரும் இவ்வாதீன வித்து வானுமாகிய ஸ்ரீ சே. ரா சுப்பிரமணியக் கவிராயர் அவர்களிடத்திலும் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடத்திலும் பாடங் கேட்ட படியே எழுதிவைத்திருந்த பெறலரும் சரக்கரையாகிய குறிப்புரைகளாகும்.

"ஸ்ரீ பொன்னோதுவோ மூர்த்திகள் யாழ்ப்பாணத்து ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மருகரும் மாணவர்களாகிய ஸ்ரீ பொன்னம்பல பிள்ளையவர்கள் பால் திருவாவடுதுறை மகாலிங்க பிள்ளையவர்களுடன் கம்பராமயண கேட்பதற்கு முன்னரேயே தணிகைப் புராணம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து பாடங் கேட்டவர்கள். இக் குறிப்புரை எழுதிவைத்த காலம் ஸ்ரீமத் உ.வே. சாமிநாதையர் முதன் முதலாக சீவக சிந்தாமணியைப் பதிப்பித்த கி.பி. 1887ம் ஆண்டின் முன்னரென்று தெரிகின்றது. இனி இத்தணிகைப் புராணத்தை முதன் முதலாக யாழ்ப்பாணத்து ஸ்ரீ சி.வை. தாமோதரப்பிள்ளையவர்கள் 1883ம் ஆண்டிலே அச்சிட்டார்கள்.

நாவலரின் எளிமை நாட்டம் இலக்கண வித்துவான்களையும் வெவ்வேறு அளவில் ஆர்வித்தது. தனது காலத்திலே தமிழ் உலகம் முழுவதிலும் இலக்கணப் பேரறிஞர்களில் ஒருவராகப் போற்றி மதிக்கப்பட்ட சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் (1854 - 1922) பேச்சிலும் எழுத்திலும் இயன்ற அளவு எளிமையும் தெளிவும் இருத்தல் வேண்டுமென்று கூற முற்பட்டதற்கு நாவலரின் முன் உதாரணமே காரணமாகும். 1878ம் ஆண்டு கந்தபுராண விருத்தியுரைகாரரைக் கண்டித்து இலங்கை நேசன் பத்திரிகையில் புலவர் பின்வருமாறு எழுதினார்

> நீங்கள் எத்தனையோ ஆண் சனங்களும் பெண் சனங்களும் புராணங்கேட்டார்கள் நம்பிக்கையோடு வந்து உங்கள் வாய்களையே எதிர்ப்பார்த்திருக்க, நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களையெல்லாம் திரி சொற்களாக மாற்றிச் சொல்கிறீர்கள் "பூ" என்பதற்கு "வீ" என்கிறீர்கள் மறைந்து போயினார் என்பதற்கு அந்தர்த்தமாயினார் என்கிறீர்கள் சித்தியாரின் பல செய்யுள்களையும் அவற்றின் கூடதான வாக்கியமைந்த வியாக்கியாங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள் சில கவிகளுக்கு வேதாந்த சித்தாந்த பிரசங்கஞ் செய்கிறீர்கள் எக்கவிகளிலும் வித்தியா கெம்பீரம் விளங்குகிறீர்கள் எத்தனையோ சனங்கள் "ஏன் இங்கு வந்தோம்" பெருமூச்சு விட நீவிர் ஒரு மூச்சும் விடாமல், வாணன் கோவையையும் திருக்கோவையையும் படிக்கிறீர்கள். இப்படி விருத்தியுரை கூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலுக்காவது இப்படலத்துக்காவது உரையெழுதி வெளிப்படுத்தலாமே.

மேற்கூறிய நியாயமான காலத்தின் தேவையை அறிந்த கண்டனத்திற்கு மறுப்புரைகள் வந்தன. இருபத்து நான்கு வயது இளைஞரான குமாரசுவாமிப் புலவர் எழுதிய கண்டனக் கருத்தை ஆதரித்து நாவலர் அப் பத்திரிகைக்குக் கடிதம் ஒன்று எழுதினார். நாவலருடைய கடிதம் தர்க்கம் புரிந்தவர்களை அடங்கச் செய்தது.

சனோபிகாரம் கருதி இயக்கிய நாவலர் குமாரசுவாமிப்புலவர் போன்றவர்களை உரிய வேளையில் ஊக்கப்படுத்தி வழி நடத்தியமையாலேயே அவர்களும் கல்வித்தானம் சமயப் புனருத்தாரணம் ஆகிய துறைகளில் வருவாய் கருதாது இலட்சிய பற்றுடன் உழைத்தனர்.

நாவலரவர்களுக்குச் சிறிது இளையவர்களாய், நண்பர்களென்றோ, சீடர்களென்றோ, கூறவியலாத வகையில் சிலர் இருந்தனர். இவர்கள் நாவலரை நேரேயறிந்தவர்கள் அவரது பல்வேறு பணிகளாற் கவரப்பட்டவர்கள்; நாவலர் மறைந்த தன் பின் அவர் காட்டிய வழியிற் சென்று சில பல காரியங்களைச் சாதித்தவர்கள். சு. ஏரம்பையர், சி.வை. தாமோதரப்பிள்ளை, சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் காசிவாசி செந்தி நாதையர், சபாபதி நாலவர், அர. முத்துத்தம்பிப்பிள்ளை ச. சபாரத்தின முதலியோர் இப்பிரிவில் அடங்குவர்.

குமாரசுவாமிப்புலவர் யாழ்ப்பாணத்தமிழ் சங்கத்திலும், மதுரை சங்கத்திலும், வித்துவ அங்கத்தினராய் விளங்கினார். 1920ம் ஆண்டு யாழ்ப்பாணம் செந்தமிழ்ச் பரிபாலன சங்கத்தினர் பரிந்துரையின் விளைவாய்ப் புலவருக்கு அரச சன்மானமும் கிடைத்தது. அவர் மறைந்த போது இந்தியாவிலும் இலங்கையிலும் பல பெருமக்களும் பேரறிஞர்களும் கலங்கினர்.

அத்துணைப் பெருமைகளுக்கும் உரியராய்த்திகழ்ந்த குமாரசுவாமிப்புலவர் மிக எளிமையான மனிதர் துன்பப்பட்டு கற்றுத் துன்பங்களோடு பழகி வாழ்ந்தவர்.

அவ்வளவு குறைந்த வருமானத்தோடு சிக்கனமாகக் குடும்பம் நடாத்திய குமாரசுவாமிப்புலவர் தன்மான மிக்கவர். கடன் கேட்க விரும்பாதவர், இலக்கிய, இலக்கண, சமய கல்விப் பணிகளை எத்தகைய நெருக்கடிகளிலும் சாய கல்விப் பணிகளை எத்தகைய நெருக்கடிகளிலும் சாய விடாதவர் வெறும் வாயுபுசார வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காதவர். புலவருக்கு அரச சன்மானம் கிடைத்த போது பாராட்டு விழா நடாத்தி மேளதாளங்களோடு குதிரை வண்டியில் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல நண்பர்கள் விரும்பினர். ஆனால் பல வேலைகள் வீட்டிலிருக்க இரண்டு மூன்று மணிநேரம் முகமன் வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருக்க இல்லாதென்றும் ஆறுமைல் தூரத்துள்ள பாடசாலைக்குத் தினமும் நடந்து செல்பவனை ஒரு நாளைக்கு குதிரை வண்டியில் ஏற்றியிறங்குவதனால் ஒன்றும் வந்து விடாதென்றும் கூறிய புலவர் பாராட்டு விழா பற்றிய யோசனைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

வருமானத்தைப் பெருக்கவும் விளம்பரம் தேடவும் கவர்ச்சி அரசியலுக்குப் பொருந்தவும் பேயாய் அலையும் கலையுலகினரைப் பார்த்தவர்களும் குமாரசுவாமிப் புலவர் வாழ்ந்த வாழ்க்கையினையும் ஆற்றிய அளப்பரிய பணிகளையும் எண்ணிப் பார்பதும் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதும் காலத்தின் தேவை என்பதனை உணர்வார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் புலவரைப் பற்றி ஈழகேசரியிலே எழுதிய கட்டுரையில் இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "காவி வேட்டியாய்க் கிளம்புகின்ற சாமிகள் மாதிரி தமிழ்ப்பாஷையின் பேரால் புகழ் சம்பாதிக்கின்ற எண்ணம் புலவருக்குக் கிடையாது. தமக்கு தாழ்வு வந்த போதும் தம்மாலே தமிழுக்கு தாழ்வு வராமற் பாதுகாப்பதே புலவரவர்கள் வாழ்க்கையின் நோக்கமாயிருந்தது. செல்வாக்குள்ளவர்கள் தமிழுக்குச் செய்யுந் துரோகங்களுக்குப் புலவர் அவர்களின் தலை ஒன்றே தான் தமிழ்நாடு முழுவதிலும் சாய்ந்து கொடாதது.

குமாரசுவாமிப்புலவர் அவர்கள் செய்த தமிழ்ப்புலவர் சரித்திரமும் அவர்களுக்கு முன் சதா சிவம்பிள்ளை இயற்றிய பாவலர் சாஸ்திர தீபமும் புலவர் அவர்களுக்குப் பின் மட்டக்களப்பு புலவர் பூபாலப்பிள்ளை இயற்றிய தமிழ் வரலாறும் படித்து இந்த இலக்கிய வழி விரிவு செய்யற் பாலது. சி.வை. தாமோதரப் பிள்ளையின் உபாத்தியார் தமிழ் வளர்த்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் பாட்டனர். 1922ம் ஆண்டு வரை வாழ்ந்த இவர் புகழையோ பொருளையோ விரும்பாது தமிழ்ப் பணி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவனாய் பண்டிதனாய் பாவலனாய் திகழ்ந்த மாமேதைக்கு ஓர் கவிக்குரல்

ஜெகசோதி சந்திரமோகன்
புலவரின் பூட்டியார் (லண்டன் மாநகரிலிருந்து)

யாழ் செம்மண் சுன்னாகம் பதிமயிலணி
வாழ் செந்தமிழ் நற் புலவனே
பைந் தமிழாள் பெற்ற வெண்முத்தே

அன்னை மொழி சிறப்புற தொண்டாற்றிய
மாணிக்கமே பல கற்ற மேதைகளின்
உதடுகளும் உச்சரித்தன உம் ஒப்பற்ற
நற் தமிழ் உரை நடையை

தாங்கள் விரித்து வைத்த தமிழ்
இலக்கியச் சொல் அகராதிப் பாயில்
துயிலாத நாவலரும் பாவலரும் இல்லை
தமிழ் மொழிக்கு சங்கு நாதமானீர்

தெவிட்டா இலக்கணத்தை தெள்ளு தமிழில்
வடித்து தனிச்சுவை கொடுத்த செம்மல்
மும் மொழியும் கற்றுணர்ந்த ஈழ கேசன்
படைப்புகளில் தூயநற் பண்பை காட்டினீர்

ஆசாரத்தை அனுதினமும் அனுசரித்து எளிமை
பூண்டு வாழ்ந்து காட்டிய அருங்கவி
பாண்டிய மண்ணின் மதுரைத் தமிழ்ச்சங்கம்
உம்நுண் அறிவை கண்டு வியந்தது.

தமிழ் பெருங்கடலில் ஆழ்ந்து நற்சொற்
முத்துக்களால் வெண்பாக்களை சுவைக்க படைத்தீர்
தென் தமிழ் மொழி தன்னை
விழியாக பேணிக் காத்த வள்ளலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம நாதபுர பாஸ்கர சேதுபதி
மகராசாவின் மாண்பு மிகு விருந்தினராய்
சென்றபோது ஈழ மண்டலமே பெருமையுற்றது
அயல்மண்ணில் மணம் பரப்பிய மலரானீர்

புலவர் புகழை தமிழறிஞர் பறைசாற்றிய
போதெல்லாம் யாழ்மண் சிலிர்த்தது தோகை
விரித்தது கொஞ்சு தமிழ் பேசும்
மக்கள் மனதில் இடம் பிடித்தீர்.

மூவேந்தரும் போய் முச்சங்கமும் போய்
பாவேந்தரும் குறைந்து நூலுரைகள் மறைந்து
தமிழ்கல்வி மங்கிவரும் காலத்தில் திடமுடன்
முன்னே வந்து தென்மொழி சிறப்புணர்த்திய
மறத்தமிழ் பாட்டன் புலவர் பெருமான்
குமாரசுவாமிப் பிள்ளை வாழ் என்பேன்

வாழிய தொன் மொழி
வாழிய தென் மொழி
வாழிய செம் மொழி
வாழிய தமிழ் மொழி வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# சுன்னாகம் செந்தமிழ் சிந்தாமணி புலவர் சிரோன்மணி குமாரசுவாமிப் புலவர்

*தியாகராச சர்மா மயூரகிரி சர்மா*
*அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி*

புலவர் சிரோன்மணி குமாரசுவாமிப்புலவரவர்கள் சென்ற நூற்றாண்டின் நடுக்கூற்றிலே பிரமாதீச வருடம் 1854ம் ஆண்டு தை மாதம் 18ம் நாள் பிறந்தார். இவர் சுன்னாகம் மயிலணிப்பதியிற் சிறப்புமிகு குடும்பத்திலே உதித்தார். இவர் தோன்றிய கிராமத்திற்கு மங்காப் புகழ்சேர்த்தார் அவரின் பெயருடன் கிராமத்தின் பெயரையும் இணைத்துக் கூறும் வழக்கு இன்றுவரை நிலைத்துள்ளது. இப்பெரியார் வடமொழியிலும், தென்மொழியிலும் வல்லபெரும் புலவராகவும் கவி எழுதுவதிலும், கட்டுரைகள் எழுதுவதிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும் பெருமை மிக்கவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் வடமொழிச் சான்றோர் பலரும் இவரைப் பாராட்டினார்கள்.

குமாரசுவாமிப்புலவர் அவர்கள் 1922ம் ஆண்டு வரை அறுபத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்து இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களான ஆறுமுக நாவலர், நீர்வேலி சிவசங்கரபண்டிதர், சிறுப்பிட்டி சி.வை. தாமோதரம்பிள்ளை வித்வான் கணேசையர் போன்ற சைவமும், தமிழும் வளர்த்த பெரியார்கள் வரிசையிற் சிறப்பிடம் பெற்றார். குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தமது குலகுருவாகிய வேதாரணியம் நமச்சிவாய தேசிகரிடம் வித்தியாரம்பம் பெற்றுப் பின் மல்லாகம் ஆங்கில பாடசாலையிலும், அதன் பின் சுன்னாகம் முருகேச பண்டிதரிடமும் கல்விகற்றார். மாணவனாயிருந்த காலத்திலேயே சிறந்த தமிழறிவாற்றல் உடையவராகப் புலவர் எனச் செல்லமாக அழைக்கப்படலானார்.

இவர் வடமொழியைப் பன்மொழிப்புலமை மிக்கவரான நாகதாபண்டிதரிடமும், பின் நமசிவாய தேசிகரிடமும் கற்றுத் தெளிந்தார். வித்துவான் கணேசையர் அவர்கள் இப்பெரியாரின் புலமைத்துவத்தைக் கண்டு பெரும் மகிழ்வுடையவராகப் பின்வருமாறு

பாரேறு சுன்னைக் குமாரசுவாமிப் புலவனுக்கே
ஏரே இடுகுறியாகிப் புலவர் எனும் பெயர்தான்
பாரேறு மற்றைப் புலவருக்கு காரணப் பண்புறலாற்
சீரே இடுகுறி காரணமாகித் திகழ்ந்ததுவே. என எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் குமாரசுவாமிப்புலவர் குடும்பத்தினரின் குலதெய்வமாக விளங்கிய மயிலணி முருகனிடம் அளவற்ற பக்தியுடையவராக இருந்தார் புலவர். ஆறுமுகநாவலருடையதொடர்பினால் சைவத் தமிழ்ப் பணியிற் பெருமுயற்சிகளைச் செய்து உயர் நிலை பெற்றார். இவரது நூல்கள் பதிகம், ஊஞ்சல், சிந்து, இரட்டைமணிமாலை, அட்டகம், கும்மி மொழிபெயர்ப்பு எனப் பலதரப்பட்டனவாயிருந்தன.

அக்காலத்தில் வெளிவந்த விஞ்ஞான வர்த்தனி உதயபானு, உதயதாரகை இலக்கண சந்திரிகை ஞானசாகரம் போன்ற பத்திரிகைகளிற்குமாரசுவாமிப்புலவரவர்கள் பல்வேறு ஆக்கங்கள் எழுதிப் பலராலும் பாராட்டப்பெற்றார்.

நாவலர் தொட்ட கிறீஸ்தவமத கண்டனப் பிரசங்கங்களையும், தர்க்கங்களையும், புலவர் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார். பலதரப்பட்ட செய்யுள் நூல்களையும், இலக்கிய உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் இலக்கண நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் தொகுப்பு நூல்களையும் புலவர் அவர்கள் வெளியிட்டு வந்தார்கள். பல ஆலயங்கட்கு ஊஞ்சற்பதிகங்களும் புலவராற் பாடப்பட்டு அச்சிடப்பட்டன.

குமாரசுவாமிப்புலவர் அவர்கள் வெளியிட்ட நூல்கள் பலதரப்பட்டனவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் யாத்த நூல்களிலே செய்யுள் நூல்கள் பல ஊஞ்சற்பாக்களாகவும் மாவை இரட்டை மணிமாலை, மேகதூதக்காரிகை சாணக்கிய நீதிவெண்பா இராமோதந்தம் போன்றனவும் சூடாமணி நிகண்டு, திருக்கரசைப் புராணப் பொழிப்புரை, கலைசைச்சிலேடை வெண்பா, மறைசையந்தாதி, நீதிநெறி விளக்கம், கல்வியந்தாதி போன்றனவும் யாப்பருங்கலகக் காரிகை, வெண்பாப்பாட்டில் அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம் போன்றனவும், தமிழ்ப்புலவர் சரித்திரம், இதோபதேசம், கண்ணகி கதை, இரகுவம்ச சரிதாமிர்தம், ஆசாரக்கோவை, இதோபதேசம், சிவசேஷத்திர விளக்கம், நான்மணிக்கடிகை போன்ற பதிப்பு நூல்களும், குறிப்பிடக்கூடியனவாகும்

மேலும் புலவர் பல்வேறிடங்களுக்கும் சென்று செய்த பிரசங்கங்களும் குறிப்பிடத்தக்கவை-யாகும்.

புலவர் அவர்கள் தம் குருவணக்கத்திலே,

தூயமயிலணிச் சுப்ரமணியனைத் தூநமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர் நாகநாத சபாமணியைக்
காயமொழி மனம் சேர்த்தும் நங்கண்மணிகளன்றே.

எனப் பாடியுள்ள செய்யுள் மூலம் அவருடைய மனம் நன்கு புலனாகின்றது.

நாவலர் பெருமான் இறைபதம் எய்தியமை கேட்ட புலவர்,

கல்விக்களஞ்சியம் கற்றவர்க்கேறு கருணவள்ளல்
சொல்வித்துவப் பிரசாரகன் பூதி துலங்கு மெய்யன்
நல்லைப் பதியினன் ஆறுப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியினன் நடராசன் சேவடிசேர்ந்தனனே

எனவரும் பாடலடிகளால் நாவலர் தம் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார்.

ராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இறந்தமை அறிந்த புலவர் அவர்கள் மனம் நொந்து,

கற்றோருமித்திரரு கல்விகற்க நல்லுதவி
பெற்றோருஞ் சோகம் பெரிதடைந்ததர் - கற்றோருண்
மிக்குயர் தாமோதரவேள் மீளாதமேற்கதியிற்
புக்கடைந்தா னென்றுரைத்த போழ்து          எனவும்

மன்னவருந்தேற மாணாக்கருந்தேறப்
பள்ள தமிழ் நூல் பல நாடிச் - சென்னைச்
சருவகலாசாலையினிற் தாமோதரன்போன்
மருவு தமிழ் யார்வளர்ப்பார் மற்று

எனவும் எடுத்துப் பாடியுள்ளமை புலவர் அவர்களின் திறமையையும், கற்றோர் பெரியோருடன் அவர் கொண்டிருந்த பெருமதிப்பையும் எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

புலவர் அவர்களின் புலமைத்துவமும், வடமொழி தென்மொழி ஆற்றற் சிறப்புக்களும் நாவலர் பற்றிய நூல்களிலும், சி.வை. தாமோதரம் பிள்ளை வாழ்க்கைச்சரித்திரத்திலும், வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களது நினைவுமலர் வெளியீடுகளிலும், மற்றும் ஈழத்துப் புலவர் சரித்திரம், ஈழத்து இலக்கிய வரலாறு, போன்ற பல்வேறு நூல்களிலும் சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டிருப்பதனைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிழை தவிர்

புலவரின் மாணவர் விழிசிட்டி சி. கதிரிப்பிள்ளை
தனது 80வது வயதில் புலவரைப் பற்றிக் கூறியது
தொகுத்துத் தருவது பொ. இரகுபதி

எண்பது வயது நிரம்பிய பண்டிதரை நான் சந்தித்தபொழுது வீட்டிற்கு அண்மையிலிருந்த ஓலைக்கொட்டிலிற் சாய்மனைக் கதிரையில் அமர்ந்திருந்தார். ஆர்வத்துடன் வரவேற்று உரையாடினார். பண்டிதர் அவர்கள் பல ஆண்டுகள் விழிசிட்டிச் சிவஞான வித்தியாசாலையிற் தலைமை ஆசிரியராக இருந்து கல்வி பயிற்றி இளைப்பாறியவர். சிறந்த கல்விமான். பாவலர் துரையப்பாப்பிள்ளையின் உற்ற நண்பர். குமாரசுவாமிப் புலவர் பற்றி அவர் கூறியவற்றை அவரது வாய்மொழியாகவே இங்கு தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது தந்தையாருக்கு இரு ஆண் பிள்ளைகள். நானும் எனது தமையனாரும். அண்ணரைக் கந்தரோடை ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். எனக்குத் தமிழ்க் கல்வி பயிற்றவேண்டும் என்பது தந்தையாரின் ஆசை. 1909 ஆம் ஆண்டு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு நான் சென்ற பொழுது எனக்கு வயசு பதினாறு. நான் போய்ச் சேர்ந்தபொழுது புலவர் இருக்கவில்லை. தலயாத்திரைக்காக இந்தியாவிற்குச் சென்றிருந்தார். அவர் வரும்வரை நாவலர் வித்தியாசாலை முகாமையாளரும் நாவலரின் பெறாமகனுமாகிய கைலாசபிள்ளை அவர்களே வகுப்புக்களை நடத்திவந்தார்.

சில காலஞ் செல்லப் புலவர் திரும்பி வந்துவிட்டார். புலவர் படிப்பில் வலு கவனம். நன்கு படிக்கக்கூடிய பிள்ளைகளிற் பிரியமாக இருப்பார். படிக்காமல் விளையாட்டு விடுபவர்களை அவருக்குப் பிடிக்காது. பாடங்களை நன்கு விளங்கப்படுத்துவதுடன் எத்தனை தடவை கேட்டாலும் சலிக்காமற் சொல்லிக் கொடுப்பார். இலக்கண இலக்கியத்தில் எந்தக்கேள்வி கேட்டாலும் சட்டென்று மறுமொழி கூறிவிடுவார். ஆனால் தெரியாவிட்டால் சமாளிக்கமாட்டார். தெரியவில்லை நாளைக்குப் பார்த்துக்கொண்டு வந்து சொல்லுகிறேன்" என்று கூறுவார்.

புலவர் பிழை விடுபவர்களிற் கவனமாக இருப்பார், வேறு யாராவது பிழை விட்டாற்கூட அவரது மனத்தில் உறுத்திக் கொண்டே இருக்கும். மிகுந்த வருத்தப்படுவார்.

ஒரு சமயம் 1911 என்று நினைக்கிறேன். எனது வீட்டிற்கு அருகிலுள்ள விழிசிட்டி ஞானவைரவர் கோயில் கந்தபுராணப் படிப்பிற்கு அவரை அழைத்து வந்தேன். அன்று தெல்லிப்பழை திரிபாஷா பண்டிதர், கொக்குவிற் கந்தப்பு, நவாலித் தம்பையா, புலவரின் மாணவரும், பிரபல கதாப் பிரசங்கியுமான மாணிக்கத்தியாகராச பண்டிதர் ஆகியோரும் வந்திருந்தனர், "பத்துப் பாடல்களுக்கு மட்டுமே உரை கூறுவேன்" என்ற நிபந்தனையுடன் தான் புலவர் புராண படனத்தைத் தொடங்கினார். பத்துப் பாடல்களுக்கும் உரை கூறி முடிந்ததும் உரையின் அருமையாற் கவரப்பட்ட புன்னாலைக்கட்டுவன் நடராசையர் "நாம் இன்னும் சில பாடல்களுக்குஉரை கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். உடனே புலவர் நகைச்சுவையாக "நாம் இருப்பது புன்னாலைக்கட்டுவன் தானே. நாளைக்கு வீட்டிற்கு வாரும் கூறுவேன்" என்று கூறிவிட்டு அமர்ந்தார். அடுத்து திரிபாஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் புராண படனஞ் செய்ய ஆரம்பித்தார். அவர் தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் என்ற மூன்றும் தெரிந்தவர். புராணபடனம் நடந்து கொண்டிருந்தது. புலவர் அமர்ந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தார். வள்ளியம்மை திருமணப் படலத்திலே ஒரு பாடல் வந்தது.

"காந்தள் போலிய கரத்தினீர்
யானெய்த கணையால் பாய்ந்த சோரியும் பெருமுழக் குறு பருவாயும்
ஒய்ந்த புண்படு மேனியுமாகியோர் ஒருத்தல்
போந்த தோவிவண் புகலுதிர் புகலுதிர் என்றான்"

இப்பாடலுக்கு உரை சொல்லிக்கொண்டு வந்த பண்டிதர் ஓய்ந்த புண்படு மேனியுமாகிய என்ற இடத்தில் ஓய்ந்த என்ற பெயரெச்சத்தை வினையெச்சமாகக்கூறி அதற்கு வினை முதல் காட்டவேண்டு மென்பதற்காக நடை ஓய்ந்த என்று எடுத்து நடை என்பதை வினைமுதலாகக் கூறினார். கேட்டுக்கொண்டிருந்த புலவர் இலேசாகச் சிரித்தார். மறு நாள் பாடசாலையில் "என்னவாம் திரிபாஷா பண்டிதர் ஓய்ந்த என்பது வினையெச்சமாமோ?" என்று கேட்டு வருத்தத்துடன் சிரித்தார். அதன் பின்னர் ஒரு மூன்று மாத காலம்வரை உறுத்திக்கொண்டே இருந்தது. அடிக்கடி இதனைக் கூறுவார்; வருந்துவார்.

நாவலர் வித்தியாசாலைத் தரும பரிபாலகர் கைலாசப்பிள்ளை இந்திய வரலாறு கற்பிப்பதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவரை அமர்த்த வேண்டும் என்று நினைத்து ஒருவரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்தார். கைலாசப்பிள்ளையின் அலுவலகம் உள்ளே இருந்தது. புலவரின் காவிய பாடசாலை வாயிலடியிலே தான் நடைபெறும். பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் எப்படிக் கல்வி பயிற்றுகிறார்கள் என்று பார்ப்பதற்குப் புலவருக்கு ஓர்ஆசை. வந்தவரை வகுப்பினுள் அழைத்து ஆசனம் கொடுத்தார். அப்பொழுது புலவர் சீவகசிந்தாமணி படிப்பித்துக்கொண்டிருந்தார். எங்களைப் பார்த்து ஒரு புத்தகத்தை வந்த ஆசிரியரிடம் கொடுக்கும்படி கூறினார். நாங்கள் படித்துக் கொண்டிருந்தது நாமகள் இலம்பகத்திற் பின் வரும் பாடல்,

"தார்ப்பொலி தருமதத்தன்
        தக்கவா றுரைப்பக்குன் றிற்
கார்த்திகை விளக்கிட்டன்ன
        கடிகமழ் குவளைப்பைந்தார்
போர்த்ததன் னகலமெல்லாம்
        பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடன் மகரப்பேழ்வாய்
        மதனன்மற் றிதனைச்சொன்னான்.

எங்களைப் பரீட்சை பண்ணும் படி ஆசிரியரிடம் புலவர் கேட்டுக் கொண்டார். ஆசிரியருக்குச் சாதாரணமான இப்பாடலே விளங்கவில்லை. தட்டுத் தடுமாறி இதில் என்ன உவமானம் என்று கேட்டார்.நாங்கள் "கார்த்திகை விளக்கிட்டன்ன" என்ற உவமையை விளக்கினோம். அதன் பின்அவர் ஒன்றும் கேட்கவில்லை. பாடல் விளங்கினால் தானே கேள்வி கேட்கலாம். அவருக்கு உடலெல்லாம் வியர்த்து விட்டது. புலவர் உடனே 'அப்ப நீங்கள் மனேஜரிடம் தானே வந்தீர்கள். உள்ளே இருப்பார் போங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டார்.

வித்துவான் சிவானந்தையர் புலவரின் பழைய மாணவர். பிற்காலத்தில் ஏனோ புலவர், அவருடன் அதிக உறவில்லை. அவர் இடையிடையே புலவரிடம் வருவார். சில சமயங்களில் அவருக்குக் கதிரை போடும்படி புலவர் கூறுவார். சில வேளைகளில் ஒன்றும் பேசாது இருந்துவிடுவார். ஒரு நாள் சிவானந்தையர் வந்தபொழுது கம்பராமாயணப் பாடம் நடந்துகொண்டிருந்தது. புலவர் ஐயரிடம் ஒரு பாடலைக்கொடுத்து எழுவாய் பயனிலை கூறும்படி கேட்டுக்கொண்டார். நாட்டுப் படலத்தில் வரும் திணை மயக்கப் பாடல் அது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குற்றபாகு கொழிப்பவர் கோணெறி
கற்றிலாத கருங்கண் நுளைச்சியர்
முற்றில் ஆர முகந்து தம்முன்றிலிற்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே"

இப்பாடலில் கோணெறி என்பதிற் கோள் என்பதற்குக் கொள்ளப்படுவது என்றுபொருள். சிவானந்தையர் கோளாறு எனக் குயுக்தியாகப் பொருள் கொண்டார். புலவர் "பயனிலை எங்கே?" என்று கேட்டார். சிவானந்தையர் தடுமாறினார். உடனே புலவர் சமாளித்துக் கொண்டு" அப்ப ஐயா வரப் போகுதே? சரி வாருங்கோ" என்று கூறிவிட்டார்.

பிழை விடக்கூடாது என்பதிற் புலவர் மிகுந்த கவனமுடையவர். தமது மாணாக்கர்களுக்கு அவர் வற்புறுத்திக் கூறுவதும் இதுவே. புலவர் புராணப் படிப்பிற்குச் செல்லும் பொழுது என்னையும் அழைத்துச் செல்வார்.ஒரு நாள் என்னையும் இன்னொரு மாணவனையும் புராணம் படித்துப் பொருள் சொல்வதற்குக் கல்லாக்கட்டுவனுக்கு அழைத்துச் சென்றார். போகும் வழியிலேயே எம்மைக் கொண்டு அப்புராணப் பகுதியைப் படிக்கவைத்துப் பொருளும் சொல்ல வைத்துவிட்டார். நாம் சரியாகச் சொல்கிறோமா என்பதை ஒத்திகை பார்ப்பதே அவரது நோக்கம். அங்கும் புராணம் படிக்கு முன் பல தடவை பிழை விடக்கூடாது என்று கூறித்தான் அகன்றார். அவர் அடிக்கடி "பிழைவிடக்கூடாது" என்று கூறுவது இன்றும் என் மனசில் உறுத்திக்கொண்டே இருக்கிறது. புலவருடைய மைந்தனார் சமீபத்தில் என்னசை சந்தித்தபொழுது நீங்கள் ஏன் ஒரு புத்தகமும் எழுதாது இருக்கின்றீர்கள்" என்று கேட்டுவிட்டு, "உங்களை என் தந்தையார் தான் பாழாக்கிவிட்டார். அவர் அடிக்கடி பிழை விடக்கூடாது என்று கூறிக்கூறி உங்களுக்குத் தன்னம்பிக்கையே இல்லாமற் போய் விட்டது" என்று நகைச்சுவையாகக் கூறினார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணமெங்கும் நாடகங்கள் நடக்கும். இந்தியாவிலிருந்து நாடகக் குழுக்கள் வந்து முகாமிடும். அவர்கள் நாடக விளம்பரத் தாள்களைத் தெருவிலே வீசிவிட்டுச் செல்வார்கள். புலவர் அவற்றை எடுத்துக் கொண்டு வந்து எங்களுக்கு இலக்கணப் பாடம் நடத்துவார். அவற்றிற் பிழைகள் ஏராளமாக இருப்பதால் "மணற் சோற்றிற் கல்லாய்வ தென்றாலும் இதிலும் இலக்கணம் படிக்கலாம்" என்று கூறுவார்.

புலவர் எனது படிப்பில் மிகுந்த அக்கறை செலுத்தினார். பண்டிதர் தேர்விற் சித்தியெய்திய பின் நான் பாடசாலைக்குப் போகாது விட்ட பொழுது அவர் ஒருநாள் எனது வீட்டிற்கே வந்துவிட்டார். என்னைத் தொடர்ந்து படிக்கும்படி வற்புறுத்திக் கூறிவிட்டுத்தான் அகன்றார்.

நான் வண்ணார் பண்ணையிற் சைவம் ஒருவரின் வீட்டிலே தங்கியிருந்து படித்தேன். பிற்காலத்திற் புகை வண்டியிற் போய் வந்தது முண்டு. பாடசாலை முடிந்த பின் புலவருடன் சேர்ந்து மல்லாகம் வரை நடந்து வரும் வாய்ப்புக் கிடைத்தது. வழி முழுவதும் பாடம் சொல்லிக்கொண்டும் பாடல் இயற்றிக்கொண்டும் வந்தார் புலவர். புலவருடன் ஒரு நாள்நடந்து வந்தாலே பல பாடங்கள் கற்றுவிடலாம்.

மேலான சொன்மல ராலுனை யர்ச்சிக்க வேண்டுகிறேன்
கீலால மாமதி கொன்றை புனைந்த கிளர்சடையாய்
தோலாலன மாமறை இன்னமுங் காணாச் சுடர்க்கொழுந்தே
நாலாம் முனிவர்க்கு ஞானத்தைக் காட்டிய நற்குருவே.

வாமத் திருமுகமும் வண்டரள மென்னகையும்
தாமக் கருங்குழலுஞ் சார்ந்தமைந்து - வாமத்தின்
கண்ணமர்ந்த தேவியுடன் கண்டுதொழக் கூர்மைதருங்
கண்ணிரண்டு வேண்டுகின்றேன் காண்.

(நன்றி — சங்கமம் செப். ஒக். 1974)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் பெருமானின் தமிழ்த் தொண்டு

க. குருமூர்த்தி

*கண்ணலிங்கேசுரர் கோவில், வட்டுக்கோட்டை*

புலவர் என்னுஞ் சொல், காரணப் பெயராய்ப் புலவர்கள் பலரையும் கருதுமாயினும் சிறப்புப் பற்றிச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் பெருமானையே கருதும். கம்பர் முதலிய பெரும் புலவர்களையும் அது அங்ஙனம் கருவதில்லை. ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவர், உ.வே. சாமிநாதையர் பெருமான் முதலியவர்கள் இங்ஙனமே குமாரசுவாமிப் புலவர்களைக் கூறுவார்கள்.

இக்குமாரசுவாமிப் புலவர்கள் கி.பி. 1855-ம் ஆண்டு பிரமாதீச வருஷம் தை மாதம் சுன்னாகம் அம்பலவாணபிள்ளை அவர்களுக்கும் சிதம்பர அம்மையாருக்கும் புதல்வராக அவதரித்தார். இவரது சந்ததியே முத்துக்குமார கவிராசர் முதலிய பல புலவர்களைக் கொண்டது.

இவர், இளம் வயதிலே ஸ்ரீ பூ. முருகேச பண்டிதரிடம் நன்னூல், விருத்தியுரை, அகப்பொருள், வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும்; இராமாயணம், கந்தபுராணம், முல்லையந்தாதி, சேது புராணம் முதலிய இலக்கிய நூல்களையும் கற்றுக்கொண்டார். அன்றியும், ஸ்ரீ நாகநாத பண்டிதரிடம் வடமொழியிலே இதோபதேசம், சிசுபாலவதம், இரகுவம்மிசம், மேக தூதம் முதலிய காவியங்களையும் சித்தாந்தகௌமுதி, விருத்தரத்தநாகரம், காவியாதரிசம் முதலிய வியாகரண நூல்களையும் கற்றுக்கொண்டார். இவர் இளமையிலே இயற்கையிலே அமைந்த மதிநுட்பத்தையும், கல்வியால் வந்த நூல் நுட்பத்தையும் கொண்டிருந்தார்.

இளம் வயதிலேயே பத்தியரூபமாகவும், கத்தியரூபமாகவும் நூல்கள் இயற்றும் வன்மை இவருக்கிருந்தது. சிறந்த தமிழறிஞர்களாகிய நாவலர் பெருமான், சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர், ராகவையங்கார் முதலியவர்கள் இவரது புலமையைப் பெரிதும் மதித்தார்கள். சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர்களாயிருந்த க. சதாசிவப்பிள்ளை, ச. பொன்னம்பலபிள்ளை என்பவர்கள் இவரியற்றிய இலக்கண நூலுரைகளையும் இலக்கிய நூலுரைகளையும் நன்கு மதித்து தங்கள் பொருளைக் கொண்டு பதிப்பித்து அதன் ஊதியத்தை இவருக்குக் கொடுத்து வந்தார்கள். சி.வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை என்பவர்கள் இவரைக் கொண்டு கடினமான இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் மாணவர்களுக்குப் போதிப்பித்தார்கள். கனகசுந்தரம் பிள்ளை, திருவிளங்கம் பிள்ளை முதலிய புலவர்கள் இவரிடம் இலக்கண, இலக்கிய, தருக்க, சமய விஷயங்களில் தமக்கிருந்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுவார்கள். இவர், புலவர்களுக்கும் புலமைகொடுப்பவராய் விளங்கினார். இவரிடம் சிறிது காலம் கற்றவர்களும் பெரும்புலமை பெற்று விளங்கினார்கள். இவரியற்றிய யாப்பருங்கலக் காரிகையுரை, தண்டியலங்காரவுரை முதலிய நூல்கள் இல்லையாயின் தமிழணங்கு ஊமையாகவேயிருப்பள். இவர் புகழையேனும் பொருளையேனும் விரும்பியவரல்லர். நெடுங்காலமாக உரையில்லாமல் இருந்த சூடாமணி நிகண்டு பன்னிரண்டாம் தொகுதிக்கு உரையியற்றினார். அதனைச் சுவாமிநாத பண்டிதரும், பொன்னம்பலப்பிள்ளையும் பதிப்பித்து வெளியிட்டார்கள். தாம் பல நூல்களையும் ஆராய்ந்து இயற்றிய உரையாயினும் தமது பெயர் வெளிவருதலை இவர் விரும்பவில்லை. சிவஞானபோதத்தின் உரையாகிய சிவஞானபாடியத்தின் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்கள் அழிந்து விட்டமையின் சுவாமிநாத பண்டிதர் விரும்பியவாறு அதனை இவரே பூர்த்தி செய்தனர். கல்வளையந்தாதியின் சிறப்புப்பாயிரமாகிய "செம்பொற்கு வட்டினிற் பாரதம் தீட்டிய கோட்டினன்" என்னும் செய்யுள் இவராலேயே பாடப்பட்டது. தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்து இளம் பூரணருரையையும், யாப்பருங் கலத்தின் விருத்தியுரையையும் த. கைலாசபிள்ளை இவரைக் கொண்டு பரிசோதிப்பித்து அச்சிட விரும்பிக் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தார்கள். இவரை உசாத்துணையாக வைத்தே அவர் வடமொழியில் ஞானப்பிரகாச முனிவரியற்றிய சித்தாந்த நூல்களை அச்சிட்டனர். இவரியற்றிய நூலின் சிறிது பாகத்தை வாசிப்பினும் ஒருவன் பல நூல்களைக் கற்றவனைப்போல அறிவைப் பெறுவான்.

நான் பதினான்காம் வயதுடையனாகவும் கல்வியருமை தெரியாதவனாகவும் இருந்த காலத்தில் இவரிடம் கற்கும் பேறு எனக்குக் கிட்டியது. கல்வியில் ஆசையூட்டி மாணாக்கன் எவ்வகையாகப் பொருளை உள்ளத்திற் கொள்ளுவானோ அவ்வகையாகப் போதிக்கும் வன்மையிவருக்கிருந்தமையின், முழுமகனாகிய என்னையும் தமது மாணாக்கனாக அங்கீகரித்தார். சொல்லித்தரும் பொருள்களை மறந்து விடும் இயற்கையையுடைய எனக்கு இவர் தமது புத்தி சாதுரியத்தாற் போதித்து வந்தார். தமிழறிஞர்கள் சந்தேகந் தீர்க்க வருங்காலத்தில் தமது மாணாக்களை ஏவியே பதிலளிப்பார். தணிகைப் புராணத்தில் வரும் "செங்கை தாடி தலைக்குயமானனம்" என்னும் பாகம் தாமரை மலரின் உவமேயப் பொருள்களைக் கொண்டது. அறிஞரொருவர் தாடியும் தலையும் தாமரை மலருக்கு உவமேயப் பொருள்களாகுமா என்று வினவினார். புலவர் பெருமான் மாணாக்கரொருவரைப் பார்க்க அவர், "தாள் (காலும்), திதலைக்குயம் (தேமல் பொருந்திய முலையும்), ஆனனம் (முகமும்) என்று பொருள் கூறி, பின்பு தாள் + திதலைக்குயம் என்பன தாடிதலைக்குயம் என்று புணர்ந்தன என்றார். வந்த தமிழறிஞர் மாணாக்கனின் கல்வித் திறனைக் கண்டு தலை குனிந்தார். சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைவராகிய த. கைலாசபிள்ளையவர்கள் தாம் நேராக இவருக்கு வேதனம் கொடுப்பதில்லை. இவர் பொருளை விரும்பாது தமிழ் விருத்தியைக் கருதிக் கற்பிப்பவராதலின் இவருக்குக் கொடுக்கும் வேதனத்தை இவரது மாணாக்கரொருவரிடம் கொடுத்து அவர் மூலமாகக் கொடுப்பார். அதனையும் இவர் அவரது மனம் மகிழ்ச்சியடைவதற்காகவே ஏற்று வந்தார். பொருளை விரும்பி ஏற்றவரல்லர். அச்சிட்ட நூல்களில் உள்ள பிழைகள் இவரது மனக்கண்ணுக்கும் ஊனக்கண்ணுக்கும் தப்புவதில்லை. இவர் அப்பிழைகளைக் கண்டு, அடையும் இகழ்ச்சி நகையின் காட்சி என் மனத்தையின்றும் விட்டு நீங்கவில்லை. இவர் வைத்திருக்கும் புத்தகங்களில் அச்சிட்ட நூல்களிலுள்ள பிழைகளைக் குறித்திருப்பார். அதனைப் பார்ப்பதற்கு எனக்கு மிக ஆசையுண்டு. இவர் செல்லும் பொழுது இவரது உள்ளங்காலில் பெரிய முள்ளொன்று ஆழமாக ஏறிவிட்டது. உடனே அதனை இழுப்பதற்குக் குனிந்து எனது கையை நீட்டினேன், முட்குற்றிய நோவால் வருந்தியவராயினும் எனது கையைத் தமது பாதங்களைத் தொடாதவாறு கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். நான் இவரது உள்ளக்கருத்தை ஒருவாறு அறிந்து கொண்டேன். இவர் ஒரு குணக்குன்று. மறதி, துரபிமானம் முதலியன இல்லாதவர். மாணாக்கர்கள் வடமொழி, தென்மொழி நூல்களையும் சித்தாந்த நூல்களையும் கற்றுச் சைவசமயாசாரமுள்ளவர்களாய் நன்கு வாழவேண்டுமென்று இவர் அவாக்கொண்டிருந்தார். எனக்கு வடமொழியிலே இதோபதேசம், இரகுவம்மிசம், சத்த சங்கிரகம் முதலிய நூல்களையும் தமிழ் நூல்களையும் போதித்தவர் இவரே. இரகுவம்மிசம், நைடதம், காதம்பரி முதலிய நூல்களை வடமொழிக்கருத்தும் நயமும் பொருந்துமாறு தமிழ் நடையிற் செய்த புலவர்களைப்போல் இவர் மொழி பெயர்த்துச் செய்யுள் ரூபமாகச் செய்த மேக தூதக் காரிகையும், சாணக்கிய நீதி வெண்பா முதலியனவும் வசனரூபமாகச் செய்த சிசுபால சரிதம், இரகுவம்மிசம் முதலியனவும் அறிஞர்களாற் பாராட்டப்படுவன-வாகும். இவர் சொற்களுக்கும், தொகை நிலைத்தொடர்களுக்கும் பொருள் கூறுதலில் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், லிங்காபட்டர் போன்றவர். இவர் அரிய இலக்கண விஷயங்களைத் திரட்டி இலக்கண சந்திரிகை, வினைப்பகுபதவிளக்கம் என்னும் நூல்களைச் செய்தனர். இவர் வாயினாற் கூறிய அரிய பொருள்களை ஞாபகத்தில் வைத்திருந்து நூல்கள் எழுதுவதாயின் பெரிய நூல்கள் பலவற்றை எழுதி விடலாம். அவைகளை என்னுடன் கற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் முதன் மாணாக்கரிலக்-கணம் பொருந்தியவராதலின் நன்கு கிரகித்துக் கொண்டார். இவர் பொருள்களை சாவதானமாக வைத்திருப்பவர். புத்தகங்கள், பணம் முதலியவற்றைச் சால்வையில் கட்டி வைத்துக் கொள்வார். உணவுச் சுகத்தை விரும்பாதவர். சரீர அலங்காரத்தை விரும்பாதவர். சாமானிய வாழ்க்கையுடையவர். சேர். பொன். இராமநாதரவர்கள் இவரை அழைப்பித்து இவரிடம் தமக்கிருந்த இலக்கண இலக்கிய சந்தேகங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்துக் கொண்டு தமது காலேஜில் பண்டிதராக இருக்கும்படி வேண்டினார். உயர்வாகிய நூல்களைத் தருமமாகப் போதிக்கும் இவர் அதற்கு இசையவில்லை.

மாணாக்கரை இலக்கணச் சூத்திரங்களையும், நிகண்டையும், இலக்கியத்திற் சுவையுள்ள பகுதிகளையும் மனனம் பண்ணவேண்டும் என்று இவர் கட்டளையிடுவார். அப்படி மனனம் பண்ணாதவர்களை இவர் கண்டிப்பார். வரவுக்கு அதிகமாகச் செலவு செய்தல் கூடாது என்னும் எண்ணமுடையவராதலின் தமது வரவு செலவை ஒரு கணக்குப் புத்தகத்தில் எழுதிக்கொள்ளுவார். புத்தகசாலை அதிபர் ஒருவரிடம் தாம் இயற்றிய புத்தகம் ஒன்றை அச்சிடுமாறு இவர் கேட்டார். அவ்வதிபர் அச்சியந்திரசாலையில் வேறு வேலை இருப்பதாகவும் பின் அச்சிடுவதாகவும் கூறினார். அதனைக் கேட்ட புலவர், "நீர் விருப்பமானால் அச்சிடலாம், விருப்பமில்லா விட்டால் அச்சிடாமல் விட்டு விடலாம்" என்று கூறினார். இவரது நூல் பின்னர் அச்சிடப்பட்டு விற்று இலாபம் தரத் தொடங்கியதும், அப்புத்தகசாலை அதிபர் வெட்கப்பட்டார். புகையிரத நிலையம் முதலிய பொது நிலையங்களுக்கு உலாவச் செல்லும் இயற்கையும் இவருக்குண்டு, விலையுயர்ந்த வேட்டி, சால்வை, ஆபரணங்களை இவர் அணிய விரும்பார். விஞ்ஞான வர்த்தனி, செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் இவர் எழுதிய விஷயங்களைத் திரட்டி வெளியிடல் தமிழ் மக்களது கடமை. அவை அறிவை வளர்ப்பன. இவரும் கைலாசபிள்ளையும் ஈருடலும் ஒருயிருமாகிய இரட்டைப் புலவர்கள். வட - மொழி, தென்மொழியிரண்டையும் கரை கண்டவர்கள். நான் இவரிடம் கற்கச் சென்ற பொழுது கீழ்வகுப்புக்களிற் கற்காதவாறு தடுத்து தங்களிடமே கற்குமாறு இவர் கட்டளையிட்டார். நான் முதலிற் சென்றபொழுது இவரிடம் ஒரு மாணாக்கரே கற்றனர். இவரிடம் மருதூரந்தாரியிலுள்ள "கண்டீரவந்தங்கு காட்டிருவீருங் கதிர்மறைவுங் கண்டீர்" என்னுஞ் செய்யுளை அம்மாணாக்கர் பாடங்கேட்டுக் கொண்டிருந்தார். என்னையிவர் அம்மாணாக்கரோடு இருக்குமாறு கட்டளையிட்டு, அச்செய்யுளின் பதவுரையைக் கூறி, இச்செய்யுள் உடன் போக்கின் கண் நற்றாயிரங்கல் என்னுந் துறையமைந்தது; "காடாகு முல்லை கல்லாங் குறிஞ்சி" என்னுஞ் செய்யுளையும் "போக்கெல்லாம் பாலை புணர்தனறுங் குறிஞ்சி" என்னுஞ் செய்யுளையும், "கூதிரும்பாமமும் பின்பனியும் கொள் குறிஞ்சி" என்னுஞ் செய்யுளையும் மனனம் பண்ணுமாறு கட்டளையிட்டு அவைகளைத் தமது வாயினாற் சொன்னார். நாங்கள் எழுதிக்கொண்டோம். பின்னர் அகப்பொருளின் சாரமாகச் சிலவசனங்கள் கூறி, பின்பு என்னை நோக்கி, "உமது வம்மிசத்திலிருந்த கார்த்திகேய ஐயர் நாவலர் பெருமானுடன் கற்றவர். இருவரும் சிவன் கோயிலிற் பிரசங்கம் செய்தவர்கள். ஒருநாள் கார்த்திகேய ஐயர் பிரசங்கம் செய்யும்பொழுது தந்ததாவன விதி கூறும்பொழுது இத்தனை அங்குலக் கோலால் என்று கூறுவதற்கு மாறாக இத்தனை முழக்கோலாற் பற்றுலக்கல் வேண்டும் என்றார். சபையிலிருந்தவர்கள் சிரிக்கத் தொடங்கி விட்டார்கள்" என்று கூறி நீரும் அவரைப்போற் கற்கவேண்டும் என்றார். நாவலர் பாடசாலையில். நாங்கள் படித்த அறைக்கு அடுத்த அறையில் பொன்னம்பல தேசிகர் என்பவர் மனைவியுடன் வசித்து வந்தார். அவர் ஒருநாள் திரிகையில் ஒரு பொருளையிட்டு நெரித்துக் கொண்டிருந்தார். இவர் என்னை நோக்கித் தேசிகர் நெரிப்பது பயறா உழுந்தா என்றார். "தெரியாது" என்றேன். சத்தத்தின் வித்தியாசத்தை அறிந்த இவர் பயறுதான் நெரிக்கப்படுகிறது என்று கூறித் தேசிகரைக் கூப்பிட்டு விசாரிக்க அவர் பயறு பழக வேண்டும் என்று கூறினார்.

இவரைப் போலவே இவரது புதல்வர்களாகிய அம்பலவாண பிள்ளையும், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையும் தமிழார்வமுடையவர்களாய் இவரது நூல்களையும் பிற நூல்களையும் அச்சிற் பதிப்பித்துத் தமிழுலகத்துக்கு அளித்து வருகின்றார்கள். இவர்களுள் முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை சிந்தைக்கும் செவிக்கும் இனிய செய்யுள்களால் பல பிரபந்தங்களை இயற்றி வெளியிட்டுள்ளார்கள்.

துர்மதி வருஷம் தமக்குச் சிவபதமடையும் காலம் நெருங்குவதை அறிந்த இவர் சிதம்பரநாத சாஸ்திரிகளிடம் இன்னும் வடமொழி நூல்களைக் கற்றுத் தமிழ் நூல்களை ஆராய்ந்து நல்வாழ்வெய்துக என்று ஆசீர்வாதஞ் செய்து மாசி மாதம் அச்சிவபதத்தை அடைந்தனர். தமிழன்னையும் துன்பத்தாற் புலம்பி அழுதாள். இப்படிப்பட்ட பெரியோர்களோடு நெருங்கிப் பழகுவதால் மனிதப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே என்று நானும் மனம் வருந்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிஞர் போற்றிய பெரும் புலவன்

**அ. பஞ்சாட்சரம்**

குமாரசாமிப்புலவரவர்கள், கல்விமான்களைக் கொண்ட பரம்பரையில் வந்தவர்கள். தமிழ்தந்த தமோதரம்பிள்ளையவர்களது ஆசிரியரும், முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி" என்ற பிரசித்தி பெற்ற பாடலைப் பாடியவருமான சுன்னாகம் முத்துக்குமார கவியாரயரின் தம்பியார் சின்னத்தம்பி அவர்களது மகன் அம்பலவாண பிள்ளையினதும் சிதம்பரம் அம்மையாரினதும் தவப்புதல்வராக 1854-ம் ஆண்டு பிரமாதீச வருடம் தை மாதம் 18 - ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அவதரித்தார்கள். 1922-ம் ஆண்டு துன்மதி வருடம் மாசி மாதம் 25-ந் தேதி புதன்கிழமை இரவு (பூர்வபட்சத்திதி, திருவாதிரை நட்சத்திரம்) மூன்றரைமணியளவில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள். புலவர் அவர்கள், இவ்வுலகில் வாழ்ந்த காலம் 68 வருஷங்கள் 1 மாதம் 8 நாட்கள் ஆகும்.

ஈழத்தில், ஆறுமுகநாவலர், நீர்வேலிச்சிவசங்கர பண்டிதர், மாயாவாததும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை, உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் முதலானோரும், வடக்கே சாமிநாதையர், பாண்டித்துரைதேவர், திரு. மு. ரா. அருணாசலக்கவிராயர், திரு. நாராயண ஐயங்கார், திரு.மு. இராக வையங்கார் போன்ற பிரபலஸ்தர்களும் வாழ்ந்த காலத்திலேயே ஸ்ரீமத் குமாரசாமிப்புலவரவர்களும் வாழ்ந்தார்கள்.

கல்வி வல்லுனர்களான, பூ.முருகேசபண்டிதர், சு. நாகநாத பண்டிதர் ஆகியோரிடம் கற்கும் வாய்ப்புப் புலவரவர்களுக்குக் கிடைத்தது. நாவலரின் நன்மதிப்புக்கும் பாத்திரரானார். புலவரவர்கள். நாவலரவர் பெருமானின் பிரசங்கங்கள் எங்கெங்கு நடக்குமோ, அங்கங்கெல்லாம் ஸ்ரீமத் குமாரசாமிப் புலவரவர்களையும் காணலாம்.

சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களால் தாபிக்கப்பெற்ற ஏழாலைச்சைவ வித்தியா-சாலையிலும், நாவலர் பெருமானால் தாபிக்கப்பெற்ற வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், புலவரர்வர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், புலவரவர்களிடம் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தோர் பலராவர். தெல்லி பழைச் சிவானந்தையர், வண்ணார் பண்ணை மாணிக்கத் தியாகராச பண்டிதர், ஏழாலை வி. தம்பையபிள்ளை, உடுவில் வ.மு. இரத்தினேசுவர ஐயர், தென் கோவை. ச. கந்தைய பிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், புலவர்மணி ஏ. பெரிய தம்பி-ப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்போர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

புலவரவர்கள் 1909-ம் ஆண்டு மதுரைக்குச் சென்ற போது மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய பொ. பாண்டித்துரை தேவர் அவர்களால் வரவேற்கப்பட்டார்கள். அப்போது, மதுரைத்தமிழ்ச் சங்க வித்துவான்களாகிய மு.ரா. அருணாசலக்கவிராயர், திரு. மு. இராகவையங்கார் திரு. நாராயண ஐயங்கார் முதலியோடும் புலவர் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

ஸ்ரீமத் குமாரசுவாமிப்புலவரவர்கள் பிரசித்தி பெற்றிருந்த காலத்தில், திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக இருந்தவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். தேசிகரவர்கள் புலவரிடத்து மதிப்பும் அன்பும் பூண்டவர். 1909-ம் ஆண்டில், தேசிகரவர்களைத் திருவாவடுதுறையிற் சந்திக்கும் வாய்ப்புப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஏற்பட்டது. ஒரு நாள் முழுவதும் இலக்கண இலக்கிய சமயசம்பந்தமான விஷயங்கள் பற்றி உரையாடல்கள் நிகழ்ந்தன.

தேசிகரவர்கள், புலவரவர்களின் கல்வியறிவை மெச்சி, திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் விலையுயர்ந்த இரு பட்டுப் பீதாம்பரங்களை அளித்துக்கெளரவித்தார்கள். அப்பொழுது புலரவர்களுக்கு வயசு ஐம்பத்தைந்து.

புலவரவர்கள் செய்த நூல்களுள் இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் போன்றவை மிகவும் பிரசித்தமானவை. புலவரவர்கள் செய்த இன்னும் பல பல நூல்களை மொழிபெயர்த்தார்கள். புலவரவர்கள் நூல்களுக்கு அளித்திருந்த சிறப்புப்பாயிரங்கள் பல. சென்னைத்தமிழகராதி வருவதற்கு மூலகாரணமாயிருந்தார்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் 1917ம் ஆண்டு தொடங்கிப் புலவரவர்களது இறுதி மூச்சுவரை புலவரவரிடம் பாடம் கேட்டவர்.

புலவரவர்களது ஞாபகம் தோன்றும் போதெல்லாம் பண்டிதமணி அவர்கள் சுன்னாகம் ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவர் என்னுடைய ஆசிரியர். என் தந்தையார் செய்த தவத்தினால் எனக்கு இந்தப் பயன் சித்தித்தது. 1917ம் ஆண்டு கார்த்திகை மாசந் தொடக்கம் புலவர் பெருமானின் இறுதி மூச்சுவரை அம்மகானை யான் பிரிந்ததில்லை. நிழலைப் போலத் தொடர்ந்தேன். அவரது ஆவி உடலைவிட்டுப் பிரியும் போது அருகிலேயே இருந்தேன். அது நடந்தது ஓர் இரவு. மறுநாள் ஈமக்கிரியை நடந்தது. மயானத்தில் புலவரர்களின் பூதவுடலுக்குத் தீ மூட்டப் பட்டது.

"செந்தமிழும் ஆரியமும் தேர்ந்து வீறித்தேயமெலாம் சென்றிலகும் சீர்த்தி ஒன்றே இந்தநில மிசையிருப்ப இணையிலாத எண்ணில் பல கவிதழைக்கு இனிய வாயும் அந்தமிலாக் கலைகள் பல எழுதி வைத்த அம்புயநேர் திருக்கரமும் அந்தோ! அந்தோ! இந்தனத்திற் செந்தழலில் உருகி வீயயாமிதனைப் பார்த்திருத்தல் என்னே! என்னே! என்று என்னை அறியாமலே பாடினேன். அதன்மேல் அழுதுகொண்டு என் இருப்பிடஞ் சென்றேன். அந்தத் தினத்தை என்றும் நான் மறந்ததில்லை" என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புலவர் பிறந்தபோது"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் அவர்கள் - என்னுடைய ஆசிரியர். அவர் கல்வி, அறிவு, ஒழுக்கம் மூன்றும் எனக்கு ஆசிரியராகக் கிடைத்தமை, என் தந்தையார் செய்து வைத்த தவத்தின் பேறு என்பதே என் திடமான கருத்து. 1917ம் ஆண்டு, கார்த்திகை மாசந் தொடக்கம், புலவர் பெருமானின் இறுதிமூச்சுவரை, அம்மகானை, நான் பிரிந்ததில்லை. அவரது ஆவி, உடலை விட்டுப் பிரியும் போது அவர் அருகிலேயே இருந்தேன். அது நடந்தது ஒரு இரவு, மறு நாள், ஈமக்கிரியை நடந்தது. அதன்மேல் அழுது கொண்டு என் இருப்பிடஞ்சென்றேன். அந்தத் தினத்தை, என்றும் நான் மறந்ததில்லை.

புலவர் அவர்கள் பிறந்தது, 1854ம் ஆண்டு பிரமாதீச வருஷம் தை மாசம் 18ந் தேதி ஞாயிற்றுக் கிழமை. மறைந்தது 1922 ம் ஆண்டு மாசிமாசம் 25ந் தேதி புதன்கிழமை.

புலவர் பிறந்த 1854 ம் ஆண்டுப்புலமை நிலைமையை ஆராய்ந்து கொள்வது அறிவுக்கு விருந்து செய்வதாயிருக்கும். "புலவர் பிறந்த காலத்துப் புலமை" என்பதை, முதலாம் அத்தியாயமாகக் கொண்டு, புதிய முறையில் புலவருக்கு ஒரு சரித்திரம் எழுதினால் என்ன என்று, என்மனம் கற்பனை செய்து கொண்டிருக்கின்றது. குறித்த முதலாம் அத்தியாயத்தை, ஒருவாறு எழுதி முடித்து விட்டேன். அவ்வத்தியாயத்தின் குறிப்புரையாக "புலவர் பிறந்தபோது" என்றதலையங்கத்தில், இவ்வுரையை நடத்த எண்ணினேன்.

புலவருக்கு ஊர் சுன்னாகம். புலவரின் பாட்டனார், தமிழ் தந்த சி.வை. தாமோதரம் பிள்ளையின் ஆசிரியர் ஆகிய முத்துக்குமார கவிராஜர். அவர் பாடிய மிகப் பிரசித்தமான தொருபாட்டு "முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி என்று தொடங்கும் பாட்டு கவிராயர் சிறப்பித்த சுன்னாகத்தில் நின்று நாவலர் பிறந்த நல்ல ஊர் ஆகிய நல்லூரைச் சிறிது நோக்குவோம். புலவர் பிறந்த ஆண்டாகிய 1854 ல் நாவலருக்கு வயசு 32 தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது.

நாவலர் எழுதிய, "சைவ தூஷண பரிகாரம்" என்ற பிரசித்த பெற்ற நூல், தூஷித்தவர்களும் மதித்த அந்த நூல் மேற்குறிப்பட்ட ஆண்டிலேதான் வெளிவந்தது. மகாபாரத யுத்த முனையில், அபிமன்யு போல் ஆறுமுகநாவலர் விளங்கினார். இங்கிலாந்தில் வெளியிட்ட, வெஸ்லியன் மெதடிக் அறிக்கை, இந்தச் சைவ தூண பரிகாரத்தை, "முதல்தரமான மூளை தான் எழுதியிருக்க முடியும் என்கின்றது. நாவலர் 1847ம் ஆண்டு, டிசம்பர் 31 ந் தேதி, மாலை தொடக்கம் தம்மைச் சைவத்துக்கும், தமிழுக்கும் வெளிப்பட அர்ப்பணித்துக் கொண்டு பள்ளிக்கூடம் கட்டுதல், பாலபாடம் எழுதப், படிப்பித்தல், பிரசங்கஞ் செய்தல், முதலிய பல முகமான துறைகளில், ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட நாவலரை, 1870 ல் நமது புலவர் சந்தித்தார். அப்பால், நிகழ்ச்சியைப் புலவரொடொத்த வயசியனரும், நாவலரின் தமையனார் புத்திருமான த. கைலாசபிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

"சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரை, முதன் முதல் நான் கண்டது, நாவலரையாவின் மாளிகையிலாகும். இவர், 1870ம் ஆண்டு முதல், நாவலரையா அவர்கள், இருக்குமளவும், அங்கே அடிக்கடி வந்து, இலக்கண இலக்கிய தருக்கம் முதலியவைகளிலே, தமக்குள்ள, சந்தேகங்களைக் கேட்டலையும், இவருடைய விவேகத்தைக் கண்டு, ஐயா, அவர்கள், வியந்து தெரியாதவற்றை, விளங்கப்படுத்திச் சொல்லிக்கொடுத்தலையுங் கண்டதனால், இவரிடத்திலே, எனக்கொரு பிரிதியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பும் உண்டாயின. அந்த நட்பு, அக்கால முதல் குன்றாதுவரவா வளர்ந்து கொண்டே வந்தது. அந்த நட்பினாலும், இவருடைய புலமைப்பெருமையினாலும், இவரை யாழ்ப்பாணம் சைவப்பிகாச விருத்தியா-சாலையில் தலைமை யாசிரியராகயிருக்கும்படி வைத்துக் கொண்டேன்." இக்கூற்றுக் கணேசையா எழுதிய, குமாரசாமிப் புலவர் சரித்திர முகவுரையில் வருகின்றது.

1870 தொடக்கம், எங்கே நாவலர் பிரசங்கஞ் செய்தாலும், அங்கே, நமது புலவரைக்காணலாம். தமக்கிணையில்லாத நாவலரால், கல்வி கேள்விகளில், மேம்படும்பாக்கியம், புலவருக்குக் கிடைத்தது. நாவலருக்கு வலக்கையாய் இருந்தவர் சங்கரபண்டிதர் சம்ஸ்கிருதத்தில் மகாமேதை. புலவர் பிறந்த 1854 ல் சங்கர பண்டிதருக்கு வயது 24. இவர் சுன்னாகத்தில் பிறந்து வளர்ந்தவர். புலவர் வீட்டுக்கு அயல் வீட்டினர். புலவரின் உறவினர். இங்ஙனமாயின் கல்வித் தொடர்புபற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இனி நாவலரிடமும், பண்டிதரிடமும் புலவரை ஆற்றுபடுத்தியவர்களை, ஏற்ற பக்குவஞ் செய்து வைத்தவர்களை சிந்திப்போம்.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருக்குப், "புலவர் பிறந்த போது, வயசு 25. இவர் கவிபாடும் புலமையில் முத்துக்குமாரவிராயருக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தக்கவர். நாவலரால் புலவர் என்று பாராட்டப்பட்டவர். இவர் மாணவர். முருகேச பண்டிதர். இவர், சங்கர பண்டிதருக்கும் மாணவர். இவரை இலக்கணக் கொட்டர் என்று சொல்லுவது வழக்கம் ஒரு முறை, பிரசித்தி பெற்ற தியாகராகச் செட்டியார். சென்னையில் திறமையான பண்டிதர் ஒருவரைத் தெரிவு செய்யும்படி, ஒரு பரீட்சை நடத்தினார், அதில் முருகேச பண்டிதரும் ஒரு பரிசஷார்த்தி முருகேச பண்டிதர் பரீஷை வினாக்களுக்கு, விடையெழுதாமல், வினாக்களில் உள்ள இலக்கணப் பிழைகளை, எழுதிக் கொடுத்துச் செட்டியாரின் பாராட்டையும், பண்டித உத்தியோகத்தையும் ஒருங்கு பெற்றார். இந்த முருகேச பண்டிதருக்குப் புலவர் பிறந்த போது வயசு 24 முருகேச பண்டிதருக்கும், ஊர் சுன்னாகம். இவரே, புலவருக்கு இளமைத் தமிழ் ஆசிரியர்.

புலவரின், சம்ஸ்கிருத ஆரம்ப ஆசிரியர், நாகநாத பண்டிதர். இவரைச் சங்கரபண்டிதருக்கும், ஆசிரியர் என்றுங் கூறலாம். இவருக்கு ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம், சிங்களம், கன்னடம், தெலுங்கு என்னும் ஆறுபாஷைகளில் ஆற்றல் உண்டு. புலவர் பிறந்தபோது, நாககாதபண்டிதருக்கு வயது 30. பண்டிதர், அரசாங்க உத்தியோகத்தர். அவருக்கும் ஊர் சுன்னாகம். புலவரின் உறவினர்.

புலவரின் தந்தை வழி, முத்துக்குமார கவிராயர்வழி, தாய்வழி, நாகநாத பண்டிதர் வழி. தொடக்க ஆசிரியர் இலக்கணக்கொட்டர் ஆகிய முருகேச பண்டிதர். சங்கர பண்டிதர், அயலினர்; உறவினர். நாவலர், புலவர் பின்பற்றும் அன்புக்குரு. இந்நிலையில் புலவரின் தமிழ் விருத்தி சம்ஸ்கிருத விருத்தி எப்படியிருக்கும்?

காசிவாசி செந்திநாதையர், சமய அறிவில் மிக மேலானவர். அவருக்குச் சமய சாத்திரகுரு, இணுவில் நடராசையர். நடராசையர், நாவலரிடம் கிரமமாகச் சித்தியார் பாடங்கேட்டவர், நமது புலவர், நடராசையர் 1846ல் நாவலரிடம் படிக்கத் தொடங்கியவர். ஆகவே 1954ல் வளர்ந்தவராயிருப்பர். குமாரசாமிப் புலவர் சரித்திரத்தில் "புலவர் பிறந்த காலத்துப்புலமை" என்ற முதலத்தியாயத்தை வைத்து கொண்டு, எடுத்ததொரு சுருக்கம் இது.

நாவலருக்குப் பிறகு, தத்தம் துறைகளில், தமக்கிணையின்றிப் பிரகாசித்தவர்களில், மூவரை இங்கே குறிப்பிடலாம். அவர்கள் புலவர் பிறக்கும் போது, கலைவளர் இளம்பிறைகள். அவர்களுள் ஒருவர், கலைநிறை மதியமாய்த், தமது கலா கிரணத்தைப் புலவர் பிறக்கும் போதே, உமிழத் தொடங்கிவிட்டார். அந்தப் பூரணமதியம், நாவலர் மருகரும் மாணவருமான வித்வசிரோமணி பொன்னம்பல பிள்ளையேயாம். இலக்கிய இரசனையே, பிள்ளையின் வடிவம் 1854ம் ஆண்டில் பொன்னம்பலபிள்ளைக்கு வயசு 18. மற்றொருவர் சபாபதிநாவலர். அவ்வாண்டில் அவருக்கு வயசு 9. மூன்றாவது பிறை-காசிவாசி செந்திநாதையர். அவருக்கு, அப்போது வயது 6. இங்கே குறிப்பிட்ட மும்மணிகளின் ஒளியும், நமது புலவரின் புலமை விளக்குச் சுடரொளி காணுதற்குப் பலவகையில் உபகாரமாய என்பது, குறிப்பிடத்-தக்கது.

***நன்றி — வானொலி மஞ்சரி. நவம்பர் 1970***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

## சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்)

கந்தப்பச்செட்டித்தெரு,
பிலவங்க வருடம் மார்கழிமாதம் ௺ தேதி

அன்புள்ள ஐயா,

தாங்கள் என்னை ஒருவாற்றானும் அறியீர்களாயினும் தங்கள் தமிழறிவு மாட்சிவளனும் குணநலனும் ஒருங்கு அறிந்திருக்கின்றேனாதலால் அம்முறை கடைப்பிடித்துத் தங்கள்பால் நட்புரிமை பெறவேண்டி மற்றிந்த ஆப்தலிகிதம் வரைவதற்குத் துணிவு கொண்டேன். தமிழ்ப்புலவர் தம்முள் ஒருமைப்பாடுடையராதலின்றிக் கலாம் விளைத்தொற்றுமை சிதைக்கின்றார் என்று உலகம் பழிக்கின்றமையாற்றான் அப்பழிப்புரையொழியுமாறு தங்களையொத்த நல்லறிவுடைய நன்மக்களிடைக் கேண்மை பாராட்டுதலையே கடப்பாடாகக் கொள்ளும் ஒழுகலாறுடையேன். ஆதலால் இவன் யாரோ புதுவன் என்றிகழாது என் வேண்டுகோளுக்கிணங்கி என்னோடு நட்புரிமை பாராட்டுவீர்களென்று பிரார்த்திக்கிறேன். எனது நட்புரிமைக் குறியாக யான் இயற்றிய திருவொற்றியூர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக்காஞ்சியாக்கம், சிவபஸ்ம வைபவம் முதலியவற்றைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன், இவற்றுள் இறுதியில் நின்ற புஸ்தகம் ஈண்டுள்ள வைஷ்ணவர் திருநீற்றின் மேற்புறங் கூறும் நியாயமிலாபாச உரையொற்றிக் காட்டிப் பரிசுத்த மக்கள் திருநீற்றின் பெருமை புலப்படுத்திச் சாதாரண சனங்கட்கும் விளங்குமாறுரை நடையைச் சிறிது நெகிழ்த்தி எழுதிப் பெருந்திரளான அன்பர் கூட்டத்தினிடையிலுபந்நியசித்துச் சம்பந்தத்தில் வெளியிடப்பட்டதொன்று. ஏனையவற்றின் வரலாறு அவ்வந்நூன் முகவுரையிலினிது காணக்கிடக்கும். இந்நூல்கள் முழுவதும் தாங்கள் சிறிதளவு சிரமமெடுத்துக்கொண்டு படித்துத் தங்கள் அபிப்பிராயத்தை உரைநடையிலெழுதித் தருமாறு வேண்டுகிறேன். அது நிற்க.

சித்தாந்த சைவப்பிரசாரத்தின் பொருட்டு "ஞான சாகரம்" எனப் பெரிய மாதாந்தப் பத்திரிகை ஒன்று பிரகடனஞ் செய்யச் சித்தஞ் செய்து கொண்டிருக்கின்றேன். முதற் பத்திரிகைக்கு வேண்டும் விஷயங்கள் எழுதிமுடிந்து அச்சிடப்படுகின்றன. பத்திரிகை நிகழும் பில வருட தைமாதம் பூசநட்சத்திர சுபதினத்தன்று வெளிவரும். என்னுடைய சகோதரர்களாகிய தமிழ்ப்புவலர்கள் எல்லாரும் இதனை ஆதரித்து உபகரிப்பார்கள். தங்களதுத் தமோபகாரத்தையும் எதிர்பார்க்கிறேன். இரண்டாவது பத்திரிகைக்குத் தாங்களேதேனும் அரிய விஷயம் எழுதி உபகரித்தல் வேண்டும். இன்னும் தங்களால் செய்யக்கிடக்கும் உதவிகளை எல்லாம் வரையாது செய்யப்படுமென்று பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கிறேன். தங்கள் தேகாரோக்கியத்தையும் பிற விசேடங்களையும் குறிப்பிட்டுப் பிரதிலிகிதம் விடுக்குமாறு வேண்டும்.

தங்களன்புள்ள

6873cc

நா. வேதாசலம்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் வித்துவசிரோமணி அ. குமாரசாமிப்புலவர்களின் கல்விப் புலமையை வாழ்த்திச் சென்னை மாவட்ட அரசவைக்கவிஞர் நாமக்கல் வே. ராமலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய கவிகள்

தரை கண்ட மொழிகளிலே தலை சிறந்த
மொழியாகும் தமிழின் வேலை
கரைகண்ட பேரறிஞன் கடின நடை
நூல்களுக்கு எளிமையான
உரை கண்ட ஆசிரியன் உபதேசஞ்
செய்வதிலும் உயர்ந்த ஆசான்
நரை கண்ட முதுபுலவன் சுன்னாகக்
குமாரசாமி நாமம் வாழ்க.

தென்மொழிக்குத் துணையாகும் தெய்வட
மொழியதிலும் தேர்ச்சிமிக்கோன்
நன்மொழியாம் உலகெங்கும் நடமாடும்
ஆங்கிலமும் அதுபோன்றுள்ள
பன்மொழியும் பலர் பயில வேண்டுமென்ற
பரந்தமனப் பான்மையினான்
இன்மொழியால் எவ்வவர்க்கும் இதமுரைக்கும்
இயல் புடையான் குமாரசாமி

அன்புடையான் பண்புடையான் ஆற்றல் மிக்கான்;
ஆராய்ச்சி புரிவதிலே அயராநெஞ்சன்
முன்பறியாப் புதுமுறையில் முனைந்தாராய்ந்து
முத்தமிழின் மெய்ச்சிறப்பை முழுதுங்கண்டான்;
மன்பதைகள் தமிழினிப்பை மாந்தும் வண்ணம்
மணம் வீசும் பல நூல்கள் மலரச் செய்தான்;
துன்பறியா உழைப்பாளன் குமாரசாமிப்
புலவன் புகழ் தமிழரிடைத் துலங்கி வாழும்.

*முக்கவிகள் இயற்றிய காலம் 15 — 3 — 1970*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHUNNAKAM KUMARASWAMY PULAVAR

Kumaraswamy Pulavar belongs to the galaxy of Tamil scholars of Jaffna, who contributed in abundant measure to the revival of Tamil literature during the later half of the nineteenth century. Besides being a poet, he was the author of a number of invaluable commentaries. The natural genius of the Pulavar found a congenial environment for blossoming in a home, haloed with piety and scholarship.

Kumaraswamy Pulavar was born in Chunnakam on January 18, 1855. His parents were Ampalavanapillai and Sithamparavammai. His grandfather, Varakavi Muthucumaru Kavirayar was a Tamil poet, and a scholar of repute, who counted among his pupils S.V. Thamotharampillai. The pulavar's father, Ampalavanapillai, was a devout Hindu, who recited himself and invited other, to recite the Puranas in his home, as was the practice in all orthodox Hindu homes, in those days.

Young Kumaraswamy received his elementary education at the Mallakam English School. Later, he studied Tamil literature and grammar under Pandithasikamany Murugesu and Sankrit under Naganatha Pandithar.

In 1878, S.V. Thamotharampillai appointed Kumaraswamy Pulavar as the Head Master of the Eralai Saiva Vidyasalai. While serving as Head Master of the school, Kumarasway Pulavar began writing articles of literary interest to Uthayapanu, vingnanavarthani and Ilankainesan. His poetic genius found expression in a number of works during this period. Some of them are:-

*வதுளைக் கதிரேசன் பதிகம் (1884), வதுளை மாணிக்கவிநாயகர் பதிகம் (1884), துணைவைப் பதிகம் (1888), அத்தியடி விநாயகரூஞ்சல் (1897), ஏக விருத்தபாரதாதி (1896), மேகதூதக் காரிகை (1896), மாவைப் பதிகம் (1900).*

The works he edited with commentaries during this period include

*அரும்பதவுரை, யாப்பருங்கலப் பொழிப்புரை, திருக்கரசைப் புராணப் பொழிப்புரை, சூடாமணி நிகண்டுப் பதப்பொருள்.*

Kumaraswamy Pulavar was of great help to K. Kathairavetpillai in the compilation of his Dictionary.

In 1886, the Pulavar went to Madras to get Naganatha Pandithar's "Hitopadeasa" published. He was also desirous of meeting S.V. Thamotharampillai. His father, Ampalavanapillai, passed away in the same year In 1892, the Pulavar married



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sinnachchiammai, daughter of Mylvaganampillai, the famous physician. He was blessed with three children, Visaladchiammai, Ampalavanapillai and Muthucumaraswamippillai.

At the request of T. Kailasapillai, Manager of Arumuganavalar Saivapragasa Vidyasalai, he accepted the Head Mastership of the school in 1902.

Pandithurai Thevar, who organised the Madura Tamil Sangam, invited Kumaraswamy Pulavar to be a member of the Sangam, giving him thereby an opportunity of participating in the activities of the Sangam. The Pulavar made regular contributions to "Senthamil" the monthly journal of the Sangam.

At the height of his glory, the Pulavar suffered the greatest loss in his life in the death of his beloved wife, in 1907. In 1909 he went to India and was received with great regard and affection by Pandithurai Thevar, Tiruvavaduturai Athena Pandara Sannithi and others. He became acquainted with T.T. Kanagasundrampillai and they published commentaries on Balakandam (Kamba Ramayanam) and Akapporul, in collaboration.

Among the commetaries of the Pulavar, intended in particular for / student are *நீதிநெறி விளக்கப் புத்துரை (1902), தண்டியலங்காலப் புத்துரை (1904), யாப்பருங்கலக் காரிகைப் புத்துரை,* and *வினைப்பகுபத விளக்கம் (1912).*

His later works include *இலக்கியச் சொல்லகராதி (1914) தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916), இதோதேசம் (1920), சிவதோத்திர கலித்திரட்டு (1918), சிசுபால சரிதம் (1921), இராமோதந்தம் (1922)* and *இரகுவமிச சரிதாமிர்தம் (1922).*

On the 25th of January, 1922, the Pulavar sought refuge at the Foot that grants enternal bliss to all.

If the great Arumuga Navalar himself had praised the poetic genius of Kumaraswami Pulavar, it would look impertinent for another to attempt an assessment of it. The best tribute one can pay to the Pulavar is to study his works and live up to his ideals.

**The Co-operatorல் *வெளிவந்தது***
***(31.01.1964)***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாவடுதுறை குருமகாசன்னிதானம்
## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
## திருமுகம் நோக்கி நோக்கி
## சுன்னாகம் ஸ்ரீலங்கா அ. குமாரசுவாமிப் புலவர்
## பாடியனுப்பிய விஞய விஞ்ஞாபனக் கவிகள்

### முதற்பா

திங்களணி செஞ்சடிலன் சேவடிகள் சிந்திப்பாம்
இங்குவரு மூறகற்று மென்று.

### விருத்தம்

முத்திதருங் கோமுத்தி முதலாய நகர்களுறை முதல்வர் கோயில்
நித்தியதை மித்தியங்கள் வழுவாது நடாத்திவரு நியம சீலன்
தத்துவஞ் சொல் பதிநூல்கள் பலவாய்ந்து மெய்யுணருஞ் சாதுசங்க
சித்தி பொலி யருட்குரவர் சிகாமணியம் பலவாணன் திருத்ததாள் போற்றி

### கட்டளைக் கலித்துறை

தேவார மாதி யருட்செல்வர் தந்த திருமுறைகள்
நாவார வோதிக் குசையினுங் கூரிய நன்மதியாற்
பாவாணர் போற்ற வரும்பொரு ளாய்ந்து பகர்ந்து மகிழ்
கோவே நமோநம வம்பல வாண குருமணியே.

தேவாதிதேவ னிடைமரு தீசன் றிருவருளும்
நாவா லடிக ளுரைசெய்யு மாசியு நண்ணுமென்றால்
ஓவாம லிங்குக் குறையொன்று சேர்வது முண்டு கொல்லோ
கோவே யருள்பொழி யம்பலவாண குருமணியே

### முதலாம் திருமுகம்

அன்றே விடுத்த திருமுக நோக்கி யகமகிழ்ந்தேன்
ஒன்றோ விபூதிப் பிரசாரமுங் கிடைத் துய்தி பெற்றேன்
மன்றா ரடிகள் வழுவாத் தியான மருவு குணக்
குன்றே துறைசியி அம்பலவாண குருமணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டகம் திருமுகம்

கற்றார் தொழுமத்தி யார்ச்சுன் மேவுங் கடவுளுக்குப்
பற்றேறு வாசந்தி கோற்சவ ஞாபந் பத்திரமும்
பெற்றேன் மகாலிங்க தேவன் திருவருட் பேறதன்றோ
வற்றா வருள் செறி யம்பல வாண வரமணியே

அன்றே யடிக திருமுகம் வந்தபி னார்வமொழி
இன்றே யெழுதுது மின்றே யெழுதுது மென்று பன்னாள்
சென்றே யொழிந்த செயல் பல நேர்ந்த திறமதனால்
குன்றா யருள்பொழி யம்பலவாண குருமணியே.

ஆவடு தண்டுறை யாதீன மேவு யருட்குருவாய்த்
தேவதலங்களுஞ் சைவ நெறிகளுஞ் செந்தமிழுங்
காவல் புரிந்திடு மம்பல வாண கலாநிதிக்குப்
பூவுறு நாரென வென் புன் கவியும் பொருந்துகவே

விருதமர் கோகழி யம்பல வியன் குருவின்
அரிதுணர் கல்வியை ஞானத்தை யீகையை யாடகப்பொன்
பொருதிரு மேனியை நற்சிவ வேடப் பொலிவை நெஞ்சிற்
கருதுறுஞ் சுன்னைக் குமாரசுவாமி கவியிவையே

*"புலவரகம்"*
*மயிலணி, சுன்னாகம்*
*சாதாரண வருஷம் தை 1910*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பேரில் சாமகவிகள்

## சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை பாடியவை

சார்வரியின் மார்கழியிற் சார்பதினெண் டேதிசெவ்வாய்
சார் வுறுமுன் னேகர தசியாரல் - பேர்பரவுந்
தாமோ தரநாம சாதுசன சங்க நிதி
நாமோ தரனடிசேர் நாள்

கற்றோரும் மித்திரருங் கல்விகற்க நல்லுதவி
பெற்றோருஞ் சோகம் பெரிதடைந்தார் - கற்றோருண்
மிக்குயர் தா மோதரவேண் மீளாத மேற்கதியிற்
புக்கடைந்தா னென்றுரைத்த போழ்து.

சென்னை நகர் சென்று சிறந்தவதி காரதர
மன்னவனா யோங்கு மலை விளக்காய் - மன்னியசீர்த்
தக்கோனைத் தாமோ தரனையறி யாரறியார்
தக்கோ ரெல்லமறிவார் தாம்.

மன்னவருந் தேற மாணாக்கருந் தேறப்
பன்னு தமிழ்நூல் பலநாட்டிச் - சென்னைச்
சருவுகலா சாலையினிற் றாமோ தரன்போன்
மருவுதமிழ் யார்வளர்ப்பார் மற்று.

தொல்காப் பியமெங்கே சூளா மணிமுதலாம்
தொல்காப்பிய மெங்கே தொன்னூல்கள் - பல்குமோ
தாமோ தரவள்ளல் தந்திலனே லச்சினிடை
நிலைக்கு மாறெங்கே நன்கு.

### மன்னைக்காஞ்சி

பாவலன்மன் னாங்கிலய பண்டிதன்மன் செந்தமிழ்க்குங்
காவலன்மன் யார்க்குமுப காரகன் மன் - பூவுலகோர்
மித்திரன் மன் வித்தகண்மன் வேதாந்த சித்தாந்த
தத்துவந்தேர் தாமோ தரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

பாடுங் கவியிற் பழந்தமிழ் நூற்பரி பாலனத்திற்
கூடும் வலியி லறிவிற் பொறையிற் குண நிறைவிற்
றேடும் புகழி லதிகார மேன்மையிற் சீரியாயார்
நீடும் புவியினிற் ருமோதரற்கு நிகர் சொலவே

தேரும் புலவர் தகுநூல் பரந்து சிறந்திலங்கை
யூரும் பரந்துறு சென்னை யரசினுக் குள்ளவெலாப்
பாரும் பரந்துயர் தாமோ தரனென்று பாடநின்ற
பேரும் புகழு மழிவதன் றூழி பெயரினுமே

ஏட்டிலிருந்த வருந்தமிழ் நூல்க ளெனைப்புவலுந்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குபு செந்தமிழ் சேர்
நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திர னண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தசைத்தோ புலவர்கள் பாடுதற்கே

சாரளர் மாமணி கற்றோர் சபையிற் கனகமணி
பாராளு மன்னர் சிகாமணி சைவம் பதிந்தமணி
பேராளர் கண்மணி யாழ்ப்பாண தேசம் பிறந்தமணி
வாரா நெறிமணி தாமோ தரமணி வையகத்தே.

## வெண்பா

சகத் துயர்ந்த தீதென்றே சாதித்துச் சைவ
மகத்துவஞ் சொற் றீசன் பலர்த்தா - கைத்திருத்திப்
பூசை புரிந்து நிதம் போற்றியதா மோதரனை
பாசதர னஞ்சானோ பார்த்து.

எத்தனையோ மித்திரரும் மில்லாளுந் தம்பியரும்
புத்திரருஞ் சோகம் புகுந்தரற்ற - முத்தியுற்றான்
மன்னுஞ் சிறுவை வயிரவநா தன்புதல்வன்
தன்னனைய தாமோ தரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவரியற்றிய நூல்களின் அட்டவணை

## செய்யுள் நூல்கள்

1. வதுளைக்கதிரேசன் பதிகம் *(1884)*
2. வதுளைக்கதிரேசன் சிந்து *(1884)*
3. வதுளைக்கதிரேசன் ஊஞ்சல் *(1884)*
4. வதுளை மாணிக்க விநாயகர் பதிகம் *(1884)*
5. துணைவை அரசடி விநாயகர் பதிகம் *(1887)*
6. துணைவைச்சண்முகர் ஊஞ்சல் *(1887)*
7. துணைவை அரசடி வைரவர் தோத்திரம் *(1887)*
8. மிலேச்சமதவிகற்பக் கும்மி *(1888)*
9. மாவைப்பதிகம் *(1892)*
10. மாவையிரட்டைமணிமாலை *(1892)*
11. மேகதூதக் காரிகை *(1896)*
12. நகுலேசுரர் ஊஞ்சல் *(1896)*
13. ஏகவிருத்தபாரதம் முதலியன *(1896)*
14. அத்தியடி விநாயகரூஞ்சல் *(1897)*
15. அமராவதிபூதூர் பாலவிநாயகர் பதிகம் *(1897)*
16. ரகலாயபழள்ரளயார் ஊஞ்சல் *(1904)*
17. கோப்பாய் வெள்ளெருவை விநாயகரூஞ்சல் *1905)*
18. விளிசிட்டி பொற்கலந்தம்பை வைரவர் ஊஞ்சல் *(1912)*
19. சாணக்கிய நீதி வெண்பா *(1914)*
20. தெல்லிப்பழை தில்லையிட்டி அம்மன் ஊஞ்சல் *(1915)*
21. பன்னாலை வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் *(1916)*
22. இராமோதந்தம் *(1921)*
23. அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் *(1921)*

## உரை நூல்கள் (இலக்கியம்)

24. திருக்கரைசைப் புராணம் பொழிப்புரை *(1890)*
25. சூடாமணிநிகண்டு 1-ம் தொகுதிபதப்பொருள் *(1895)*
26. சூடாமணி நிகண்டு 2-ம் தொகுதிபதப்பொருள் *(1900)*
27. சூடாமணிநிகண்டு முதலைந்து தொகுதி *(1900)*
28. இரகுவமிசக்கருப்பொருள் *(1900)*
29. கலைசைச்சிலேடை வெண்பா அரும்பதவுரை *(1901)*
30. மறைசையந்தாதி அரும்பதவுரை *(1901)*
31. நீதிநெறிவிளக்கப்புத்துரை *(1904)*
32. திருவாதவூரர் புராணப்புத்துரை *(1904)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. முத்தகபஞ்சவிஞ்சதி குறிப்புரை *(1909)*
34. இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை *(1918)*
35. ஏரெழுபது பொழிப்புரை *(1920)*
36. கல்வயைந்தாதி பதவுரை *(1921)*

## உரை நூல்கள் (இலக்கணம்)

37. யாப்பருங்கலப் பொழிப்புரை *(1900)*
38. வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை *(1900)*
39. தண்டியலங்காரப்புத்துரை *(1903)*
40. யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை *(1908)*
41. அகப்பொருள் விளக்கப்புத்துரை *(1912)*

## இலக்கண ஆராய்ச்சி நூல்கள்

42. இலக்கண சந்திரிகை *(1897)*
43. வினைப்பகுபதவிளக்கம் *(1913)*

## வசன நூல்கள்

44. கண்ணகி கதை *(1900)*
45. தமிழ்ப்புலவர் சரித்திரம் *(1916)*
46. இதோபதேசம் *(1920)*
47. சிசுபாலசரிதம் *(1921)*
48. இரகுவமிச சரிதாமிர்தம் *(1922)*

## பதிப்பு நூல்கள்

49. இதோபதேசம் (மொழி பெயர்ப்பு) *(1886)*
50. நகுலமலைக்குறவஞ்சி நாடகம் *(1895)*
51. யாப்பருங்கலக்காரிகை (பழையவுரை) *(1900)*
52. ஆசாரக்கோவை *(1900)*
53. நான்மணிக்கடிகை *(1900)*
54. ஆத்திசூடி வெண்பா *(1901)*
55. சிவஷேத்திர விளக்கம் *(1901)*
56. உரிச்சொனி கண்டு *(1902)*
57. திருவாதவூரர் புராண மூலம் *(1902)*
58. பழமொழி விளக்கம் *(1903)*

153296

## தொகுப்பு நூல்கள்

59. சதாசாரக் கவித் திரட்டு *(1901)*
60. சிவத்தோத்திரத் திரட்டு *(1911)*

6873 CC

## அகராதி

61. இலக்கியச் சொல்லகராதி *(1915)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னை நகர் வாசன்
குமாரசுவாமிப் புலவர் அவர்கள்
செம் மண்ணில் செந்தமிழ்
செழித் தோங்கி வளரவே
இலக்கணமும் இலக்கியமும்
செம்மையுற செதுக்கலானார்
வடமொழியின் அரிய நூல்களை
அருந்தமிழில் மொழி பெயர்த்தார்
அன்னாரின் வெண்பாக்களின்
சொற் சுவையும் பொருட் சுவையும்
நுகர்ந்து உணர்ந்தோர் பலர்
அன்னை மொழிக்கு பட்டை
தீட்டிய சிற்பி ஆவார்.
தென் மொழியோடு வடமொழியும்
ஆங்கிலமும் கசடற கற்று
உணர்ந்த புலவர் அவர்
ஆழ்கடல் சூழ் இலங்கையின்
தமிழ் அன்பர்கள் ஏழ் கடல்
தாண்டியும் புலவர் பெருமானை 150வது
ஆண்டின் நிறைவை நினைவு கூர்ந்து வாழ்த்துவோம்.

— சண்முகி —

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org